உ

# சிந்தனைக் களஞ்சியம்

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

அரிமைக்கு
அன்பளிப்பு

## சான்றிதழ்

1952ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 29ஆந் திகதி வெளியான இலங்கை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் உதவி நன்கொடை பெறும் தன் மொழிப் பாடசாலைகளுக்கும் இருபாஷைப் பாடசாலைகளுக்கும் ஆங்கில பாடசாலைகளுக்குமான ஒழுங்குச் சட்டத்தின் 19 (ஏ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதற்கமைய இப் புத்தகம் ஒரு நூல் நிலையத்துக்குரிய புத்தகமாக உபயோகித்தற்கு மகா வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

W. A. D. சரத்குமார
செயலாளர்,
கல்விநூற் பிரசுர ஆலோசனைச் சபை.

கல்விநூற் பிரசுர ஆலோசனைச் சபை,
மலாய் வீதி, கொழும்பு 2,
20-09-1979.

உ

# சிந்தனைக் களஞ்சியம்

ஆக்கியோன் :

இலக்கிய கலாநிதி,

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
பாராட்டுவிழாச் சபை வெளியீடு — 3

14-8-1978

முதலாம் பதிப்பு

விலை : ரூபா 12-00

அச்சுப்பதிவு ;
திருமகள் அழுத்தகம்
சுன்னுகம்

பதிப்புரிமை ஆக்கியோனுக்குரியது

# வெளியீட்டுரை

இலங்கைப் பல்கலைக்கழகம் பண்டிதர் ஐயா அவர்களுக்கு 'இலக்கிய கலாநிதி'ப் பட்டம் வழங்கியதையடுத்து, 'பண்டிதமணி அவர்களது கட்டுரைகள் ஏன் முடங்கிக் கிடக்கின்றன? அவை ஏன் அச்சுவாகனமேறவில்லை? தமிழுலகு பயன்படப் பண்டிதர் ஐயா ஜீவந்தராய் இருக்கும் போதே அக் கட்டுரைகளைத் தொகுத்துப் பல நூல்களாக வெளியிடுவது நல்லது' என்ற உணர்ச்சிமிக்க ஓர் அபிப்பிராயம் எங்கும் அடிபடத் தொடங்கியது.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர் சங்க வெளியீடுகளாகச் சமயக்கட்டுரைகள், இலக்கிய வழி (திருத்தப்பதிப்பு) என்பன வெளிவந்தன. காகித விலையேற்றத்தினாலும், பண்டிதர் ஐயா அவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்பட்டிருந்தமையினாலும் புத்தகம் வெளியிடும் வேலை சிறிதுகாலம் தடைப்பட்டது.

பண்டிதர் ஐயாவின் கட்டுரைகளைத் தொகுத்து ஏன் புத்தகமாக வெளியிடாது வைத்திருக்கிறீர்கள் என்று பலரும் கேட்ட கேள்வி, இந்தச் சந்தர்ப்பத்திலாவது சூட்டோடு சூடாக ஒரு புத்தகத்தையேனும் ஐயா அவர்களின் எண்பதாவது வயது நிறைவையொட்டி வெளியிடத்தான் வேண்டும் என்ற உற்சாகத்தை ஊட்டியது. குறித்த உற்சாகத்தின் வளர்ச்சியே 'சிந்தனைக் களஞ்சியம்' என்ற இக்கட்டுரைத் தொகுதி.

குறித்த இக்கட்டுரைத் தொகுதியை அச்சிடுவதற்குப் பல முன்னேற்பாடுகளைத் துரிதமாகச் செய்யவேண்டியதாயிருந்தது.

கட்டுரையின் மூலப் பிரதிகளை நன்கு ஆராய்ந்து பார்த்துப் பிரதி செய்வதற்கு முன்வந்தவர்கள் வேலணையூர் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை அவர்களும், நீர்வேலி ஆசிரியர் இ. சிதம்பரப்பிள்ளை அவர்களுமாவர். இருவரும் இத்துறையில் நன்கு ஈடுபட்டிருக்காதுவிட்டால் இந்நூலே

வெளிவந்திருக்கமுடியாது. காலத்துக் காலம் பத்திரிகை களில் வந்த கட்டுரைகளை இருவரும் வெகு வேகமாகப் பிரதிசெய்துகொடுத்தார்கள்.

குறித்த இலக்கிய கலாநிதிப் பட்டத்தினையும், பண்டிதர் ஐயாவின் எண்பது வயதுப் பூர்த்தியையும் ஒட்டி, 'சிந்தனைக் களஞ்சியம்' என்ற தலைப்பில் முதலில் ஒரு தொகுதியை வெளியிடுவதென்று பாராட்டு விழாச் சபை தீர்மானித்தது.

மிகவும் குறுகிய காலத்திற் சிறந்தவிதமாக அச்சிட்டு உதவ முன்வந்தனர் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர். திருமகள் அழுத்தக முகாமையாளர் திரு. சோ. இராசரத்தினம் அவர்களுக்கும், அச்சமைப்பு முதல்வர் திரு. செ. சின்னத்துரை அவர்களுக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் எமது விசேட நன்றி. அச்சுவேலை நடக்கும்போது மூலப் பிரதிகளுடன் ஒத்துப் பார்த்துத் திருத்துவதில் அயராது உழைத்தவர் சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலை முகாமையாளர் திரு. மு. சபாரத்தினம் அவர்கள். அதற்கு வெகு உதவியாக இருந்தவர் திரு. சி. சதாசிவம். இன்னும் பலர் பல்வேறு வகைகளில் உதவிபுரிந்திருக்கிறார்கள். சம்பந்தப் பட்ட அனைவருக்கும், விசேடமாக இக்கட்டுரைத் தொகுதியை வெளியிட அநுமதியளித்த பண்டிதர் ஐயா அவர்களுக்கும் பாராட்டுவிழாச் சபை நன்றி கூறுகின்றது.

முப்பது கட்டுரைகளைத் தாங்கிவரும் இந்நூல் தமிழார்வலர்களுக்குப் பெரிதும் பயன்படும்என்பது நம்பிக்கை. பண்டிதர் ஐயாவின் ஏனைய கட்டுரைகளையும் நூல்வடிவில் வெளியிட இப் பாராட்டுவிழாச் சபை தொடர்ந்தும் பணி புரிய எல்லாம்வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்திப் போமாக.

**அ. பஞ்சாட்சரம்**
காரியதரிசி
இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
பாராட்டுவிழாச் சபை

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்,
14-8-1978.

# சிந்தனைக் களஞ்சியம்

**சிந்தனைகளின் சாரம்:**

1. **வள்ளுவர் :**

i. முகந்துகொண்ட ஊழால் உண்டாகும் பற்றுக்களை அநுபவிக்கும் முறையில் அனுபவித்தல் இல்லறம்; அதே சமயம் விடுபடவேண்டியவைகள் விடுபடுகிற முறையில் விடுபடுதல் துறவு. இருவகை அறத்தாலும் விளையும் பயன் மனமாசின்மை. இதனை வலியுறுத்தும் அறன்வலியுறுத்தல் அறத்துப் பாலுக்குப் பாயிரம்.

ii. அறம் கைவந்த மனந் தூயர்களே, காணப்படும் உலகப் பொருளின் இயல்பை உள்ளவாறு உணர வல்லவர்கள். அரசும் அங்கமுமாகிய ஏழும் உலகப் பொருளை விசாரிக்கும் ஏழு முகம். ஏழு முகத்தாலும் தீராதவைகளை முடிந்தமுடிபாகத் தீர்க்கும் பெருமையுடையோர் நீத்தார். 'சுவை ஒளி' என்ற குறளை நினைவு கூர்க. இதனால் நீத்தார் பெருமை பொருட்பாலுக்குப் பாயிரமாயிற்று.

iii. காமத்துப்பால் அருட்பால்; அதுவே காமிக்கற் பாலது. அருள் மழை பக்குவம் உளதாயவழித் தானே இறங்குவது; வான்மழைபோல. இவ் வாற்றால் காமத்துப்பாலின் பாயிரம் வான்சிறப்பு.

iv. முப்பாலுக்கும் அப்பாலாய், மூவகைப் பாயிரத்துக்கும் பாயிரமாய் முதற்கண் மிளிர்வது எதுவோ அதனை வள்ளுவர் தந்த விளக்கில் தரிசித்து, வாழ்த்தி வணங்குவோமாக.

2. தமிழ் :

'அன்பினைந்திணைக் களவியல் என்னுதலிற்றோ வெனின் தமிழ் நுதலிற்று' என்பது நக்கீரர்வழி வந்த தொரு வசனம். தமிழ், பொருளாகிய உயிர் குடிபோய தொருகாலத்தில் எழுந்தது அவ்வசனம்.

களவு நிலை அறம் பொருள் கைவந்தவழி வருவது; இன்பத்தையும் வீட்டையும் எளிதில் தருவது.

புருஷார்த்தம் நான்கையும் அடக்கிய நான்கன் சுருக்கம் களவு. நான்கன் மத்திய புள்ளி களவு.

களவு நிலை கைகூடற்பாலது.

3. வான்மீகிதானே :

வான்மீகியில் பெருமதிப்புடையவராகிய கம்பர், வான்மீகி எவ்வாறு பாடியிருப்பார் என்று கற்பனை பண்ணியதே கம்பராமாயணம்.

4. வடுவடு நுண்ணயிர் :

ஒவ்வொரு பாட்டும் அவ்வப் பாட்டில் வரும் சிறப்புச் சொற்றொடரால் வழங்குவது பதிற்றுப்பத்தின் உயர் தனிச் சிறப்பு.

ஆறும் பத்தில் முதற் பாட்டு 'வடுவடு நுண்ணயிர்'. வடு + அடு + நுண்மை + அயிர் எனப் பதச்சேதஞ் செய்க.

வடு—(கடற்கரையில்) நண்டு நடந்த அடிச்சுவடு. அதனை நுண்ணயிர் அடுதல் செய்து விடுகின்றது. அயிர் – மணற் சிறு துகள். அது ஊதையால் ஊதப் பெற்று, வடுவை அடுகின்றது. அடுதல் மூடி மறைத் தல். ஊதை – மெல்லென்ற இளங்காற்று.

மறைசை அந்தாதியில், 'வரம்பில் நண்டூதையால் வெயில் காய்'கின்றது. இது மருத நில நண்டு (தமிழ்),

வரம்பிகவாது, வடு விளையாது வெயில் காய்கின்றது. காயட்டும். அந்நண்டு தமிழ் உள்ள அளவும் வாழ்க; நீடு வாழ்க.

இற்றை ஞான்றை ஞெண்டுகள், சான்றோர் சென்ற அடிச்சுவட்டை 'வடு' என்றெண்ணிப் போலும், செயிரால் அடுதல் செய்து விடுகின்றன.

இச்செயிர், பாண்டிமாதேவி உயிரொடு சென்றான்; கோவலன் தேவி 'செயிர்' ஒடு வந்தாள் என்ற இடத்துச், செயிரைப் பயிர்செய்து வளர்க்கும் போலும்.

இன்னோரன்ன 'செயிர்'மணி ஞெண்டுகள் ஆழ்க.

'செயிர்' கோபம் குற்றம் என்றெல்லாம் பொருள்படும்.

5. சீவகசிந்தாமணி:

சீவகன் துறவு, சார்புணர்ந்து சார்புகெட வந்த துறவன்று. எட்டாத பழம் புளித்த நரித் துறவு.

சிந்தாமணியின் அழகுகள் உயிரற்ற பிண அணிகள். அவ்வணிகளைச் சுவைப்பது நாய் எலும்பைச் சுவைப் பது போலும்.

6. இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்:

(i) a. பாண்டியன் தட்டானுல் ஏமாந்தான். 'புருட்டசை' 'காஷியஸ்' கூட்டம் ஏமாற்றியது. பாண்டியன் நீதிக்குக் கண்ணீர் வடிக்கின்றோம். 'தென்னவன் தீதிலன்' 'தேவர்கோன் தன்மனை நல் விருந் தாயினன்' என்று கண்ணகியே பாராட்டுகின்றாள்.

b. 'புருட்டஸி'ல் கட்டி நடத்திய நீதி என்ன ஆயிற்று? அவனுக்கு ஏதும் பயன் செய்ததா?

(ii) a. சகுனி, கூனி என்போரின் சாதுரியப் பேச்சும் அப்பாத்திரங்களில் உண்டாகும் ரசனையும் அறிந்தவை;

6. 'மாக் அன்ரனி'யின் சாதுரியப் பேச்சும் அவன் பாலுண்டாகும் ரசனையும் எவ்வாறு நுகரப்படுகின்றன? வினை யாதோ! வல்லார் விமர்சனம் செய்க.

7. **நெய்தல்:**

அன்பினைந்திணையில் ஒன்ருகிய நெய்தல் ஒழுக்கத்துக்குக் கடலும் கடல் சார்ந்த இடமும் முக்கியம். நெய்தல் - இரங்குதல். மகா புனிதரான தலைவர் புன்புலால் மத்தியில் புலாலனைந்துகொண்டிருக்குந் தன்னை எப்படி அணுகமுடியுமென்று புலம்பிப் புலம்பித் தன்னை இழக்கின்ருள் தலைவி.

ஒரு வீரன், வீரத்தையே பொருள்செய்து, தன்னை இழந்து பொருகின்ருன். அவன் நிலை தும்பை. அது நெய்தலுக்குப் புறம்.

என்புருகிப் பாடிய திருவாசகம் நெய்தல்.

8. **பூர்வமீமாம்சையும் பாடாணும்:**

அறிவுலகமாகிய ஞானகாண்டத்தை ஆராய்ந்தது பிரமமீமாம்சை. ஞானத்துக்கு ஆதாரமான கன்மத்தை ஆராய்ந்தது பூர்வமீமாம்சை.

அறிவின் குழவியாகிய அன்புத் திணை எனப்படும் அகத்திணையின் மூல முளை கைக்கிளை. அதற்கு ஆதாரமான புறத்திணை பாடாண்டிணை. பதிற்றுப்பத்துப் பாடாண்டிணை. பாடத்தக்க ஆண்மகனின் ஒழுகலாறு என்பது பொருள்.

அன்பின் முளையாகிய கைக்கிளைக்கு ஆதாரமான பாடாண்டிணைக்கும், ஞானத்துக்கு ஆதாரமான பூர்வ மீமாம்சைக்கும் தொடர்பும் பொருத்தமும் காண்க.

9. **நளன் தூது நாடகம்:**

நளன் முதல் வள்ளல். காதலை வள்ளன்மை செய்தவன். தேவர்கள் பொருட்டுத் தன் காதலிபால் தூது நடந்தவன்.

10. ஆரியமும் தமிழும்:

ஆரியம் அறிவை வெளிப்படுத்துவது; தமிழ் அன்பை வெளிப்படுத்துவது. அறிவுநடை தந்தை. அன்புநடை தாய்.

11. சங்கத் தமிழ்:

'பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப'

— தொல். பொருள் சூத்திரம்

பொய்யும் வழுவும் தோன்றுங் காலத்தில் கட்டுப் பாடுகள் உண்டாகின்றன என்பது கருத்து.

சத்திய யுகங்களில் தமிழைக் காக்கச் சங்கம் என்று ஒன்று வேண்டியதில்லை யாகலாம். அவ்வாறே, பொய்யும் வழுவும் மலிந்த காலத்திலும் சங்கம் வேண்டியதில்லை யாகலாம். சங்கம் தானுகவே ஒடுங்கும்.

அன்பினைந்திணைக் களவியல் தோன்றிய காரணம் விசாரிக்கற்பாலது.

12. சங்கத் தமிழுக்குப் பிறகு:

சமண பௌத்தம் தலைதூக்கின; அறம் புற மாயது. காமம் வெறுங் காதலாயிற்று. டாக்டர் ஐயர் அவர்கள் சமண பௌத்த காவியங்களை அச்சு வாகனமேற்றி விழா எடுத்தார்கள்.

(i) பத்துப்பாட்டு. எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்று ஒரு வாய்பாடு தோன்றியது.

(ii) சிலப்பதிகாரச் செங்குட்டுவன் பதிற்றுப்பத்துச் செங்குட்டுவன் ஆயினுன்.

(iii) கூலவாணிகன் சாத்தன் சங்கத்துச் சீத்தலைச் சாத்தனுர் ஆயினுன்.

(iv) சமண பௌத்த புலவர்களைச் சங்கத்துப் புலவர் ஆக்கிவிட்டார்

டாக்டர் ஐயர்.

13. **தாடலைப்பட்டார் மணிவாசகனுர்:**

மனசில் ஒரு பரமாணு அளவு துர்நசை பிறந்தாலும், அது ஒரு பிறப்புக்கு வித்தாய்விடும்.

கைலாச வாசியாகிய குடமுழாநந்தீசர் இந்திரச் செல்வத்தை ஒரு கணம் ஒரு சிறிது வியப்புற்றதுண்டு. அக்கணமே கைலாசத்தினீங்கி, மணிவாசகராய் இந்திரச் செல்வத்தோடு கூடிய பிரதம மந்திரியாயினுர்; தவ விசேடத்தால் எடுத்த பிறப்பிலேயே நெய்தல் பாடி அழுது அழுது தாள் தலைப்பட்டார்.

14. **கலியுகம் 1ஆந் திகதி:**

காலம் உணர்ச்சியைத் தன்வசம் செய்வது. தவத்தாலன்றி அதனை வெல்லுதல் அரிது. கலியில் மிக மிக அரிது. கலி ஐயாயிரத்தின் மேல் தர்மத்தின் சாயலின் சாயலையே காண்டல் அரிது.

15. **கந்தபுராணம் வைதிக சைவ பொக்கிஷம்:**

வேதத்தை வகுத்தவர், வேதாந்த சூத்திரஞ் செய்தவர் வியாசர். இப்படிப்பட்ட வியாசர் வேதாகமம் வல்ல சனற்குமார முனிவரிடம் புராணங் கேட்டார். புராணங் கேட்டற்குக் குருமரபு இன்றியமையாதது.

சமஸ்த சாத்திர ஒருமைப்பாடு கந்தபுராணம்.

'இந்தியாவிலே வித்துவான்கள் சைவசமய குருமார் முதலியோருள்ளுங் கந்தபுராண முதலியன அறிந்தவர்

சிலர்; இத்தேசத்திலே பெண்களுள்ளும் அவை யறியாதார் இலர்' — நாவலர் வாக்கு.

இதனை இக்காலம் சிந்திக்குமா!

16. காரைக்கால் அம்மையார்:

அகலிகை சீதை மந்தோதரி தாரை திரௌபதி பஞ்ச கன்னிகைகள். கணவர்களுக்கூடாக ஆத்ம நாயகனுக்கு ஆட்பட்டவர்கள்; (தாரை வியாழன் மனைவி) பெண்மை யுலகத்துக்கு அப்பாற்பட்டவர்கள்; அப் பெண்மை உலகத்தின் வணக்கத்துக்குரியவர்கள்.

காரைக்காற்பிராட்டியார் பஞ்ச கன்னிகைகளுக்கு அப்பாற்பட்டவர். அவர்களின் வணக்கத்துக்குரியவர்.

தந்தைபால் தாயுடன் செல்லுதல் முன்னமே முற்றுப்பெற்றவர். 'வாசி யருளி யவை' என்ற திருவருட்பாடலுக்கு இலக்கியமானவர்.

'பிறந்து மொழி பயிலுங்' காலத்திலேயே ஆன்ம நாயகனுக்கு ஆட்பட்டவர்.

அம்மையப்பர்களின் மடித்தலத்தி லமர்ந்து, அம்மை ஊட்ட ஞானப்பாலுண்ட, அபர சுப்பிரமணியரான சம்பந்தப்பிள்ளை, காரைக்காற் பிராட்டி தலையால் நடந்த புனித தலத்தில், தம் திருவடியைப் பதிக்கக் கூசுவாராயின், பிராட்டியின் பெருமை எம்மனோர்க் கெட்டுவதாமோ! நாவலர் பெருமான் சூசனம் செய்ய அஞ்சினர். காரைக்காலம்மையார் மகத்துவம் இவ்வாறிருக்க:

* * *

"சேக்கிழார் என்ன சமாதானங் கூறினும் காரைக்காலம்மையாருடைய வாழ்க்கையின் பிற்பகுதி தமிழருடைய மரபுக்கு மாறுபட்டதுதான்" (85ஆம்

பக்கம்) என்கின்றது 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்கின்ற புத்தகம். சிலம்புச் செல்வர் ம. பொ. சி. புனைந்தது அப்புத்தகம்.

காரைக்காற் பிராட்டியைச் சேக்கிழாரோடு தூக்கி வீசிய அந்த மனிதருக்கு, நித்திய கன்னிகை யான சீதாபிராட்டி எம்மாத்திரம்!

கண்ணகி தெய்வ நிலையில், தான் படு குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டபோதும், மனிதக் கண்ணகியை அந்த மனிதர் சீதை தலைமேல் வைத்துப் பாராட்டுகின்றார்.

இந்நிலையில் இதோ சிலப்பதிகாரவிழா என்றொரு கவிக்குரல் காற்றில் பரவுகின்றது; புத்தரே இங்கே கால்வைப்பாரா என்றேங்குகின்ற ஈழத்திலும் பரவு கின்றது. சீதாபிராட்டி பிறந்த ஈழம் இந்த ஈழம்.

சாரத்தின் அருகில் சக்கை இந்த அபரகாண்டம்.

17. எது சமயம்:

திருவருள், 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை'; எடுக்கும் பெய்வளை.

எந்தச் சமயம் எல்லாச் சமயமும் இருப்பது நீதி என்று காணுகின்றதோ, அந்தச் சமயம் மெய்ச் சமயம். அது எல்லாச் சமயமுமாய், அதே சமயத்தில் வேறாயுமிருக்கும்.

18. தருமத்துக்குத் தவணையில்லை:

வீட்டுத் தொல்லை பொறுக்க முடியாத ஒருவர், துறவி ஒருவரை அடைந்து, தான் வந்த காரணத் தையுஞ் சொல்லி, தத்துவ ஞானோபதேசம் செய்யும்படி கேட்டார். அந்தத் துறவி, 'வீட்டுத் தொல்லைகளை நீக்கிக்கொண்டு வாரும்' என்று சொல்லி வந்தவரைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

19. **அர்த்தந் தெரிந்தவர்களின் தர்மமே வேறு :**

அபிமந்யு சூழ்ச்சி வலையுள் அகப்பட்டு, அபாயச் சங்கு ஊதினன். அது கேட்கவேண்டியவர்களுக்குக் கேளாதவாறு, தன் சங்கை ஊதிக் கெடுத்துவிட்டான் கண்ணன்.

பாண்டவர்கள் அழுதுபுரண்டார்கள்; கண்ணனுக்கு அழுகை வரவில்லை.

கண்ணன் அர்த்தந் தெரிந்தவன்; அதற்குமேலே காம தளத்தில் நின்றவன்.

20. **தர்மார்த்தத் தம்பதிகள் :**

கண்ணனின் சகபாடி குசேலர். குசேலர் குடும்பத்தில் 29 ஆத்மாக்கள். சிறிது பெரிது காண முடியாத 27 பிள்ளைகள். குடிசையில் எறும்புக்கும் ஒரு தானியம் அகப்படாது. வறுமையின் எல்லை. ஆயினும் சுசீலை தர்மத்தின் எல்லை. கணவர் அர்த்தத்தின் எல்லை. ஒருநாள் கண்ணன் ஒருபிடி அவறின்முன். பிள்ளைகள் இந்திரச் செல்வத்தில் முழுகினர்கள். குசேலர் அஞ்சினர். குசேலோபாக்கியானம் கம்பரே மதிக்கத் தக்கது. அபர கம்பர் பாடியது.

21. **மக்கட்பண்பு தமிழ்ப்பண்பு :**

ஒருநாளிரவு ஒருவருக்கு நித்திரை வரவில்லை. பண்பு குடிபோன இந்த உலகம் உருண்டு கடலில் ஆழ்ந்து விடும் என்று அவர் அஞ்சினர். அதனல் அவருக்கு நித்திரை வரவில்லை. உருண்டு புரண்டு கொண்டு கிடந்து தொலைந்தார். ஆனல், இரவு நாலு மணிக்கு அயர்ந்து நித்திரையாய் விட்டார். எப்படி நித்திரை கிடைத்தது என்று கேட்டபோது, மகாத்துமா என்ற பண்புள்ள மனிதர் இருப்பதால், உலகம் உருண்டு கடலில் அமிழ்ந்திப் பாழ்போகாதென்ற எண்ணம் உதயமானதாம்; அதனல் உறக்கம் வாய்த்தது என்ருர்.

22. **திருமுறையும் நமது நிலையும்;**

அருள் உலகு திருமுறை உலகு. அறத்தின் மூல வேர் தர்மம். தர்மத்திற் காலூன்றி ஸ்திரப்பட்டவர்கள், திருமுறை உலகைச் சென்று சேர்வார்கள்.

23. **திருமுறைக்கு முன்:**

அறிவின் விளைவு அன்பு. அறிவு விசாரத்துக்கு வடக்கும், அன்பு விசாரத்துக்குத் தெற்கும் ஏற்றவை. வடக்கே அறிவு விசாரஞ் செய்த அகத்தியர், அன்பை விசாரிக்கத் தெற்கே வந்தார்.

உலகு இருள் மூடியபோதும், சிலருடைய தவ விசேடத்தால், திருமுறை உதயமானது.

24. **திருமுறைப் பயன்:**

சங்கத் தமிழ் அன்புத் தமிழ். திருமுறை அருட்டமிழ்; அதில் திரண்டது சிவஞானபோதம்.

இயக்குவோனை முன்னிட்டு, ஆத்மா தன் வேகம் அடங்கி, அவனைப் பின்தொடர்ந்து இயங்கும் இயக்கம் சமயத் தொடக்கம்; வளர்ச்சி.

25. **நாவலர் நீதிமான்:**

அதிபாதகமாகிய தேவத் திரவியாபகாரம் முதலிய பல பாதகங்களுஞ் செய்கிற போலிச் சைவர்கள், அதிபாதகத்திற் ருழ்ந்த—அதிபாதக துல்லியத்திற் ருழ்ந்த—மகா பாதகத்திற்ருழ்ந்த—மகாபாதக துல்லியத்திற்ருழ்ந்த—உபபாதகத்திற் ருழ்ந்த—உபபாதக துல்லியத்துள் ஒன்ருகிய புலாலுண்டல் செய்யுஞ் சூத்திரரில் உயர்ந்தவர்கள்தாமோ! கெட்டி! கெட்டி! (துல்லியம்-ஒத்தது).

26. வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை :

உரைநயம் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு கிளர்ந்து கொண்டிருக்கும். முன்சொன்னதொரு உரைநயத்தை மீண்டும் அப்படியே ஒப்பிக்கும் பழக்கம், வழக்கம் பொன்னம்பலபிள்ளைக்கில்லை. ஊர்நடுவிலே உலாவித் திரிவதொருபயன்தருங் கற்பகம் பொன்னம்பலபிள்ளை.

இரசிக வலம்புரிகள் சூழ
நடுவண் வீற்றிருக்கும்
பஞ்சாமிர்த பாஞ்ச சந்நியம்
பொன்னம்பலபிள்ளை.

27. புலவர்பெருமான் (சுன்னுகம் அ. கு. அவர்கள்):

எனக்கு வயசு 19. ஆறு மாசம் வரை இலக்கணம் ஏன் படிப்பதென்பது புலப்படவில்லை. பாரதப் பாடல்கள் படித்த இலக்கணப் பயிற்சிக்கே உபயோகிக்கப்பட்டன. மொழித்திறத்தின் முட்டறுத்தல் என்ற முயற்சியே முதலில் நடந்தது. யாவையும் மனனம்பண்ணி ஒப்பிக்கவேண்டும்.

ஆறு மாசத்தின்பின் புலவர் பெருமானைத் தெய்வம் என்று வணங்குவதொரு நிலை உண்டானது. எந்தத் தமிழ் நூலையும் கடின இலக்கணங்களையும் படிக்க முடியும் என்ற ஒரு விழிப்புநிலை கைவந்தது.

பூனைக்குட்டி நிலை மாறிக் குரங்குக் குட்டி நிலை நேர்ந்தது.

புலவர் அவர்களைத் தொடராமலிருக்க முடியாமை உண்டானது. 'வலம்புரி முத்தின்' என்று தொடங்குந்

தொல்காப்பியப் பாயிரத்துக்கு இலக்கியமானவர் புலவர் பெருமான்.

28 அளவெட்டி தந்த அறிவுச் செல்வம்:

கருவிலே திரு அமைந்தவர் உப அதிபர் திரு. பொ. கை. அவர்கள். அந்தக்கரணங்கள் விருத்தி யெய்தியவர்கள் அவர்கள்.

'அகத்துக் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்' என்பது திருமந்திரம். அகக்கண்முன் முகக்கண் படு குருடு. அகக்கண் வெளித்தவர்கள் அவர்கள்.

29. பிராசீனர் நவீனர் வகுத்த சமயங்கள்:

உமாபதிசிவாசாரியார் மாயாவாதத்திலும் பார்க்க சிவாத்துவிதத்துக்கு அதிகம் சிறப்புக் கொடுக்க வில்லை.

இரண்டும் அண்ணனும் தம்பியும்.

உமாபதி சிவாசாரியாருக்கு உலகாயதம் முதல் சிவாத்துவிதம் இறுதியாக அதற்கு மேலே (சுத்த) சைவ வாதமுஞ் சேர்ந்து, அகச்சமயம் ஒழிந்த எல் லாம் புறச்சமயமே. அகச்சமயம் எவை?

30. பாரத தர்மம்:

பதி உயிர்க்குயிர். அநாதியிலேயே பதி பசுவோ டத்துவிதப்பட்டிருக்கின்றது. பதி அத்துவிதப்பட் டிருத்தல்போலப் பசுவும் பதியோடத்துவிதப்பட வேண்டியது, அத்துவிதப்படுகின்றிலது. ஒரு காலத் தில் அத்துவிதப்படலாம். ஆகவே, பதியத்துவிதம் அநாதி; பசு அத்துவிதம் ஆதி.

அவன் தானுய் அத்துவித மானபடி மாசகன்று தான் அவனுய் அத்துவிதம் ஆகுநா ளெந்நாளோ.

அவன்—பதி. தான் – பசு. மாசகன்ற வழித் தான் அவனும். அந்நிலை பரமுத்தியாம்.

*    *    *

---

— நன்றிக் கடன் —

ஆத்மீகச் செல்வர்களான உப அதிபர் திரு. பொ. கை. அவர்களின் சந்நிதி என் சிந்தனைக்கு ஊற்ருயிருந்தது.

' தமிழ்ச் சாறு '
பருகி
ஏப்பம் எழுந்து
சிந்தனைகளைக் கரு உயிர்க்கச் செய்தவர்கள்
'தினகரன்' முன்னுள் ஆசிரியர்
திரு. V. K. P. நாதன் அவர்கள்

---

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
14-8-78.

**சி. கணபதிப்பிள்ளை**

உ

சிவமயம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | வெளியீட்டுரை ... ... | iii |
| | முன்னுரை ... ... | v |
| 1. | வள்ளுவர் வாழ்க்கை விளக்கு ... | 1 |
| 2. | தமிழ் ... ... ... | 14 |
| 3. | வான்மீகிதானே ... ... | 29 |
| 4. | வடுவடு நுண்ணயிர் ... ... | 42 |
| 5. | சீவகசிந்தாமணி ... ... | 58 |
| 6. | இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும் | 68 |
| 7. | நெய்தல் ... ... ... | 74 |
| 8. | பூர்வமீமாம்சையும் புறத்திணையிற் பாடாணும் | 82 |
| 9. | நளன் தூது நாடகம்.. ...... ... | 90 |
| 10. | ஆரியமுந் தமிழும் ... ... | 96 |
| 11. | சங்கத் தமிழ் ... ... | 100 |
| 12. | சங்ககாலத்துக்குப் பிறகு ... | 107 |
| 13. | தாடலைப்பட்டார் மணிவாசகனுர் ... | 113 |
| 14. | கலியுகம் 1ஆந் திகதி ... ... | 128 |
| 15. | கந்தபுராணம் வைதிக சைவ பொக்கிஷம் | 131 |
| 16. | காரைக்கால் அம்மையார் ... | 142 |
| 17. | எது சமயம் .... ... | 156 |
| 18. | தர்மத்துக்குத் தவணையில்லை ... | 167 |
| 19. | அர்த்தந் தெரிந்தவர்களின் தர்மமே வேறு | 173 |
| 20. | தர்மார்த்தத் தம்பதிகள் ... ... | 178 |
| 21. | மக்கட் பண்பு என்னும் தமிழ்ப்பண்பு .. | 183 |

| | | பக்கம் |
|---|---|---|
| 22. | திருமுறையும் நமது நிலையும் ... | 187 |
| 23. | திருமுறைக்குமுன் ... ... | 194 |
| 24. | திருமுறைப் பயன் ... ... | 201 |
| 25. | நாவலர் நீதிமான் ... ... | 210 |
| 26. | வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை | 217 |
| 27. | புலவர் பெருமான் திரு. அ. கு. அவர்கள் | 222 |
| 28. | அளவெட்டி தந்த அறிவுச் செல்வம் ... | 232 |
| 29. | பிராசீனர் நவீனர் வகுத்த சமயங்கள் ... | 240 |
| 30. | பாரத தர்மம் ... ... ... | 247 |

உ

# வள்ளுவர் வாழ்க்கை விளக்கு

"அறம்தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல்தீ தண்டு — குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு."

திருவள்ளுவ நாயனார் இந்த வையகத்தில் வாழுகின்ற மக்களுக்கு ஒரு விளக்கை ஏற்றி உபகரித்திருக்கின்றார். இந்த விளக்குக்கு உள்ளிருள் நீக்கும் விளக்கு என்று பெயர். புற இருளை நீக்கும் விளக்கினின்றும் இது வேறானது. இது அக இருள் நீக்குவது. இந்த விளக்கிற்கு அறம் தகளி; பொருள் திரி; இன்பம் நெய்; செம்மையாகிய சொற்கள் தீப்பிழம்பு; தண்டு குறட்பா.

வையத்து வாழ்பவர்கள் 'வாழ்வாங்கு வாழவேண்டும்'. வாழ்வாங்கு வாழ்தலாவது, வாழவேண்டிய இயற்கை நெறியில் வாழ்தல். அஃதாவது சான்றோர் கண்ட—

அவர்கள் காட்டிய — நெறியில் முறை பிறழாது வாழ்தல். உண்மை எதுவோ நன்மை எதுவோ, அந்த உண்மையை நன்மையை நாடி அவற்றை அடையும்பொருட்டு வாழுதலே வாழ்வாங்கு வாழ்தல் என்றுங் கூறலாம். அப்படி வாழ்வாங்கு வாழ்பவன், 'வானுறையுந் தெய் வத்துள் வைக்கப்படும்.' மண்ணுலகத்தானே எனினும் அவன் விண்ணுலகத்தவனேயாவன். அவன் மனிதர்களுக் குள் தேவன்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்வாங்கு வாழ்ந்து தேவன் ஆகவேண்டியவன். வாழ்வாங்கு வாழும் முறையை அறி யாமையால் இழிந்த விலங்காய்த் தடுமாறுகின்றான். அவன் கண்கள் விழித்தபடியே குருடுபட்டுப் போயின. அவன் அறியாமையாகிய இருளில் தடுமாறுகின்றான். கோல் கொடுத்துதவ எத்தனையோ குருடர்கள் முன்வருகின் றார்கள். பாவம்! குருடனுக்குக் குருடன் உதவுவதெப்படி? குருடன் குருடனுக்கு உதவுவது இருவரும் குழி விழுவது.

'குருடுங் குருடுங்
குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங்
குழிவிழு மாறே.'

என்பது திருமந்திரம்.

குருடில்லாத பார்வையுள்ளவன்தான் குருடனுக்கு வழிகாட்ட முடியும். இருளில் இருளாற் குருடுபட்டுத் தடுமாறும் மனிதனுக்கு ஒளியில் ஒளியாற் பார்வை விளங் கும் மனிதன் ஒருவனேதான் ஒரு விளக்கை உதவி வழி செய்ய முடியும்.

தன்னையே அறியாது இந்த உலக இருளிலே தடுமாறு கின்ற மனிதனுக்குத் திருவள்ளுவ நாயனார் ஏற்றி உதவிய விளக்குக்கு அறம் தகளி. அந்தத் தகளியில் ஒரு அகல் ஊழ்; மற்றொரு அகல் இல்லறம்; வேறொன்று துறவறம்.

திருவள்ளுவர் திருக்குறள் முப்பால்; முப்பாலில் முதற் பால் அறத்துப்பால்; அறத்துப்பாலின் இறுதி அதிகாரம் ஊழ்.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்'

ஒருவனுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணமாய் உயர்வு தாழ்வுகளின் இயல்பை அறிதற்கு உரை கல்லா யிருப்பது அவன் செய்துவைத்த—செய்கின்ற செயலே. செயல் முயற்சியென்றும் கருமம் என்றும் சொல்லப்படும். நமது கர்மங்களை ஆராய்ந்தால் நமது வாழ்க்கையின் காரணம் இனிது புலனாகும். கர்மங்களை ஆராய்தலாவது ஊழை ஆராய்வது. வேதாங்கங்களில் ஒன்று சோதிடம். அது ஊழை ஆராய்தற்கு உபகாரமானது. ஊழ் நமது சம்பாத்தியத்தின் பயன்.

ஊழ் இருவகை: ஒன்று ஆகூழ்; மற்றது போகூழ்; ஆகூழில் முயற்சியின்றியே காரியம் சித்திக்கும். ஆங்காலம் மெய் வருந்த வேண்டாம். போகூழில் முயற்சிக்குப் பயன் அத்தியற்பமாயிருக்கும் ஊழின் வழியிலேதான் மனிதனின் பற்றுக்கள் நடக்கும். பற்றுக்களை அடக்கமுடியாது. 'அடக்கு அடக்கென்பர் அறிவிலார்'—திருமந்திரம். அறிவாளிகள் ஊழை விசாரித்தறிந்துகொண்டு, பற்றுக்களை அடக்காமல் அவை தாமே அடங்கும்படி பற்றுக்களை வழி நடத்துவர். அதற்குத் தருமம் என்று பெயர். தருமமாவது, கருமம் இருந்தபடியை அறிந்து பற்றுக்கள் அடங்கும் முறையில் அடங்க நடப்பது. கருமத்தை வழி செய்வது தருமம். ஆசிரமங்களில் குரு சிரேட்டர்கள் தம்மை அணுகியவர்களுக்குச் செய்துவைக்கின்ற உபகாரம் ஒவ்வொருவருடைய தருமத்தையும் அறியச்செய்வதே. அதற்குத்தான் ஆசிரமக் கல்வி என்று பெயர். கலாசாலைகளிலிருந்து புறப்பட்டுச் செய்வது இன்னதென்று தெரியாமல் திகைப்பதற்குக் காரணமான கல்விக்குக் கல்வி என்று பெயர் இல்லை.

குரவர்கள் பற்றுக்களை அநுபவிக்கின்ற முறையில் அநுபவிக்கும்படி பணிப்பார்கள். பற்றுக்களை அநுபவிக் கிற முறையில் அநுபவிப்பதற்கு இல்லறம் என்று பெயர். தர்மந் தெரிந்த ஒருவன், தன் தர்மத்துக்கு மாறுபடாத வகையில் பற்றுக்கள் அடங்கும் முறையில் ஒரு சகதர்மிணி யைப் பெறுவான். சகதர்மிணி என்றால் தர்மத்தை நடத்து தற்கு உறுதுணையானவள் என்பது பொருள். சகதர்மிணிக்கு நல்ல தமிழ் வாழ்க்கைத் துணை.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.'

புணர்ச்சி – ஒரு தேயத்தினராதல். பழகுதல் – பல காற் கண்டு பயிலுதல். இந்த இரண்டும் இருவருடைய இணைந்த வாழ்வுக்குப் பிரதானமானவையல்ல. முக்கிய காரணம் உணர்ச்சி. ஒரு தர்மத்தில் உணர்ச்சி ஒன்று பட்டவர்களே இணைந்து வாழ்தற்குரியவர்கள். அவர்கள் நடத்துந் தர்மம் இல்லற தர்மம்.

'வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' என்பது வள்ளு வர் வாக்கு. 'வளத்தக்காள்' ஆவாள், கணவனது அறிவு வளத்துக்கு இயைந்தவாறு நடப்பவள். அறிவு வளத்தில் செல்வம் முதலிய எல்லா வளங்களும் அடங்கும்.

தர்மமே குறிக்கோளாகப் பற்றுக்கள் அடங்கும் முறை யில் அடங்குவதால், விடவேண்டியவைகள் மெல்லமெல்லத் தாமே விடுபடும். பற்றுக்கள் விடுகிறமுறையில் விடுபடு தற்குத் துறவறம் என்று பெயர்.

'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.'

எவன் எதிலிருந்து எதிலிருந்து விடுபடுகிற முறையில் விடுபடுகின்றானோ, பின் விட்டவிட்ட அதனால் அதனால், விடுபடவேண்டியதை விட்டதன் பொருட்டு, அவன் வருந்துவதில்லை.

நளன் கானகத்திற் காரிருளிற் காரிகையைக் கை விட்டான். அலறி அலறிக் கைவிட்டான். அது துறவறம் அன்று. அது சனிக்கோளாறு. மனைவி மக்களைத் துயிலவைத்துவிட்டு ஓடுவது துறவன்று. அது தர்மவிரோதம். இயல்பாக அமைந்த சுற்றச்சூழலில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டு மென்பதிலேதான் தர்மந் தங்கியிருக்கிறது. தன்னைப் பற்றுக்கோடாக நம்பியிருப்பவர்களைத் தவிக்கச்செய்வது தர்மக்கேடு. தர்மந்தான் எல்லாவகையான நன்மைகளுக்கும் மூலவேர். அது கெட்டுவிட்டால் யாதொன்றுஞ் சித்திக்காது. மனைவி மக்களைக் கைவிட்டோடுவது துறவென்று நினைப்பது பெரிய தவறு; தவறுகளை—அழுக்குகளைத் துறப்பதே துறவு.

மனைவி மக்களைக் கைவிட்டோடுகிறவர்களைத் 'தூரத்துக்குப் போகிறீர்களா? சற்றே நில்லுங்கள்' என்று கைபுடைத்து அழைக்கின்றார் திருவள்ளுவநாயனார்.

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்'

என்பது அவர் அழைத்துரைக்கும் உரை. தமக்கமைந்த இல்வாழ்க்கையை ஆற்றுகிற முறையில் ஆற்றினால் அடைய வேண்டுவது, தானே வந்தடையுமே. இல்லறந்தானே நல்லறமாயிருக்க அதனைக் கைவிடுவது அறமாகாதே; அறத்துக்குப் புறமாகுமே.

இல்லற நெறியில் நிற்பானொருவன் அதனை ஆற்றுகிற நெறியில் ஆற்றாமல், ஓடுகிற ஒரு ஆறு இருந்தால் அந்த ஆறு அறத்துக்கு விரோதமான புறத்தாறே. அந்தப் புறத்தாற்றில் பெறக்கடவ தொன்றுமில்லையே என்கின்றார் திருவள்ளுவர்.

பற்றுக்களைப் பெறுகிற முறையிற் பெறுவது இல்லறம்; விடுகிற முறையில் விடுவது துறவறம். இரண்டும் இருபுரிக் கயிறு. இரண்டுஞ் சேர்ந்ததே அறம். இல்லறம் பெரிதா துறவறம் பெரிதா என்பது கருத்தற்ற பேச்சு.

ஊழ் என்ற தளத்தில் ஒருவர் அநுட்டிக்கும் அறம் இருவகையாய் அமைந்திருக்கின்றது. இல்லறந்தான் துறவுக்கு வழி. பற்றுக்களை அநுபவிக்கிற முறையில் அநுபவிப்பது ஆகிய இல்லறத்தினுலேதான் துறவு கைகூடும். பற்றுக்களை அப்படியே அடக்கி வைத்துக்கொண்டு துறக்க முயல்வது பயனற்ற முயற்சி. அப்படியானதொரு முயற்சியை அருச்சுனன் மேற்கொண்டபொழுது, கண்ணன் தடுத்து, பற்றுக்களை அநுபவிக்கிற முறையில் அநுபவிக்கச் செய்ததே கீதை; அஃதாவது கண்ணன் காட்டிய வழி!

பெறுகிற முறையிற் பெறுகிறவன் விடவேண்டியவைகளை விடுகிற முறையில் விட்டு அந்தக்கரணங்கள் அமைதியடைந்து தூய்மை எய்துவான். அந்தக்கரணங்களுட் சிறந்தது மனம். அதுதான் ஐம்புலன்களுக்கும் மூலம். அது தூய்மையாதலே காரியசித்தி. ஊழில் முளைகொள்ளுகின்ற இல்லறமுந் துறவறமுமான அறத்துக்குப் பயன் மனந் தூய்மைப்படுதலே.

'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்' என்பது வள்ளுவர் வாக்கு: அறத்துக்கு அடி ஊழ்; முடி மனத் தூய்மை.

அறங் கைவந்து மனந் தூய்மை அடைந்தவர்கள் பொருள்களின் உண்மை இயல்புகளை அறிவார்கள். அறங் கைவந்ததனுல் ஒருவன் வீடுபேறடைவதில்லை. மனந் தூய்மைப்பட்டுப் பொருள்களை உணரவல்லன் ஆவன். பற்றுக்களைச் சாந்திசெய்வதே அறம். சர்வகலாசாலைப் பிரவேச பரீக்ஷை போன்றது அறம். உலகம் என்ருல் என்ன? என்ற கேள்விக்கு விடையை அறங்கைவந்தவர்கள் தாம் அறியமுடியும்.

இருவர் சிறுவர்கள்—ஆண்பிள்ளைகள்; ஒருநாள் இருளில் வழிநடக்கின்ருர்கள். வழியில் ஒரு பெரிய பாம்பு சுருண்டு கிடந்து நன்ருக உறங்குகின்றது. இருவரில் ஒரு ஆண்பிள்ளை பாம்பைக் கண்டு பயந்து நடுநடுங்கி ஓடிப்போய்

மறைந்தான். மற்றையவன் சிறிதே சிந்தித்தான். நெருப் பெழுப்பிப் பயஞ்செய்த பாம்பை உற்று நோக்கினன். அது ஒரு கயிறு. அந்தப் பாம்பு விட்ட கயிற்றை அவன் எடுத்துச்சென்று பசுக் கட்டி மேய்க்கிறான். பயந்தோடின வனே பாம்பு பாம்பென்று ஊர்முழுதுஞ் சொல்லி அவ் வழியிற் செல்லுதல் ஒண்ணதென்று உபந்நியாசந்தொடங்கி அலேகின்றான். ஊர் அவன் பொய்யை மெய் என்று நம்பி அந்த வழியை வெகுகாலங் கைவிட்டுவிட்டது. ஆனல் அந்தப் பாம்போ பசுக்கட்டி மேய்க்கின்றது.

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும்'

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.'

'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' என் கின்றது திருவாசகம். இந்தச் சரீரம் நாம் வசிப்பதொரு பூமியே. முன்னிலேயாய்க் கிடக்கின்ற உலகத்தையும், தன்னிலேயா யிருக்கின்ற இந்த உடம்பையுங் கண்டவுடன் 'பாம்பு பாம்பு' என்று சொல்லிக்கொண்டு ஓட்டமெடுப் பது கூடாது. கண்டதுங் கேட்டதுமான பாம்புகளே யெல்லாம் வைத்துக்கொண்டு பாம்புகளின் மூல உண்மை என்ன? என்று ஆராய்ந்து அறிவதே அறிவு; அதுவே உய்யும் நெறி. கடவுள் நாம் உய்யும்பொருட்டே உலக மாகிய பாம்புகளேத் தந்திருக்கின்றார்.

அறங்கைவந்தவர்களான மனந்தூயர்கள் 'இந்த உலகம் எங்கிருந்து வந்தது? எங்கே போய் ஒடுங்கும்'? என்று ஆராய்கின்றார்கள். திருவள்ளுவர், அரசன் முதற் குடிகள் ஈருன மக்கள், காணப்பட்ட இந்த உலகத்தை எவ்வாறு காணவேண்டும்? எவ்வாறு தீண்டவேண்டும்? என்று பொருட்பாலில் வழிகாட்டியிருக்கின்றார். மக்கள் கண்ட கேட்ட பொருளே வைத்துக்கொண்டு அதன்மூலம் மெய்ப்பொருளே அறிதற்கு வழிசெய்திருக்கின்றார். மெய்ப் பொருளேக் காணவேண்டிய மகன், காணப்பட்ட பொருள்க

ளோடு எவ்வாறு கலந்துகொள்ளுவதென்பதை வரையறைசெய்து தெரிவித்திருக்கின்றார் அவர். உலகத்துள் ஒருபொருளை அடையவேண்டியவனுக்கு, அப் பொருளிலும் பார்க்க அடையும் வழியே பிரதானம். வழி சித்தித்தாற் பொருள் தானே சித்திக்கும். மெய்ப்பொருள் சித்திக்கும்.

அரசனும் அங்கங்களுமாகப் பொருட்பால் ஏழு பிரிவு... அங்கங்கள் அமைச்சு அரண் பொருள் படை நட்பு குடி என ஆறுவகைப்படும்.

அரசும் அங்கமுமாகிய ஏழும் காணப்பட்ட உலகப் பொருள்களை விசாரிக்கும் ஏழு முகம்; ஏழு நெறி.

'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்'

என்பது காணப்படும் பொருள்பற்றிய ஒரு பொது விதி. நீதிக்கும் பிறர் நம்பால் வைக்கும் அன்புக்கும் பாதகமான பொருள் வரவைத் தீண்டவுங்கூடாது என்பது கருத்து.

'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்' என்பது மற்றொரு பொருளாதார விதி. பிறர் கண்ணீர் வடிக்கத் தேடுகின்ற பொருள், ஒரு நாளைக்குத், தேடினவர் கண்ணீர் பெருக்க, 'வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தையும் கொண்டு செல்வது போல' இருந்த பொருளையுங்கொண்டு சென்று விடும்.

அறிவாளிகள் தம்பாலகப்பட்ட நிதிகளை நீட்டி நீதி செய்வார்கள். நீதியைக் குறுக்கி நிதி செய்தால் ஓயாமல் அழ நேரும்.

இப்படிப்பட்ட பொருளியல்பு ஏழு முகமாய் ஆராய்ந்த வழியுந் தீராது. அது எப்படிப்பட்டவர்களையும் மயக்க வல்லது. ஆகையினாலே முடிந்த முடிபாக எட்டாவதொரு வகையும் திருவள்ளுவ நாயனாரால் அருளப்பட்டிருக்கின்றது; அதுதான் நீத்தார் பெருமை; உலகத்தைத் துறந்

தவர்கள் தாம் உலகமாகிய பொருளியல்பை உள்ளவாறு உணரவும் உணர்த்தவும் வல்லவர்கள், பொருளை எட்டாவ தான நீத்தார் முகமாக நோக்குவதே முடிந்த முடிபு. இராமன் என்ற பொருளின் இரகசிய இயல்பைத் தந்தையும் சக்கரவர்த்தியுமான தசரதனால் ஒரு சமயம் அறிய முடியவில்லை. விசுவாமித்திரர் இராமனைத் தரும்படி கேட்கத் தசரதன் மறுகினான்; மறுத்துவிட்டான் என்றே சொல்லலாம். அந்தச் சந்தர்ப்பத்தில் நீத்தாரான வசிட்டர் இராமன் என்ற பொருள் (இருந்து) பிரகாசிக்க வேண்டிய இடம், விசுவாமித்திரர் ஆகிய இடம் என்பதை அறிவுறுத்தினார். அரசனாகிய தசரதன் நீத்தாராகிய வசிட்டர் முகமாகத்தான் இராமன் என்ற பொருளியல்பை உள்ளவாறறிந்தான். பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைப்பதுபோல், வைக்காமல் இராமனை யாவரிடம் ஒப்பிக்க வேண்டுமோ, அவரிடம் ஒப்பித்தான். தசரதன் புத்திர நிதியை ஸ்திரநிதி செய்தான்.

அறன் வலியுறுத்தல் அறத்துப் பாலுக்குப் பயனாய்ப் பாயிரமாய் அமைந்திருப்பது போல், நீத்தார் பெருமை பொருட்பாலுக்குப் பயனாய்ப் பாயிரமாய் அமைந்திருக்கின்றது.

அறத்துப் பாலில் மரண பரியந்தம் நினைவில் இருக்க வேண்டிய குறள், 'மனத்துக்கண் மாசிலனாதல், அனைத்தறன்' என்ற குறள். அவ்வாறே நீத்தார் பெருமையில் நினைவில் இருத்த வேண்டிய குறள்,

"சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு"

என்ற குறள்; உலகத்தை உள்ளவாறறிந்தவர்கள் நீத்தார்கள் என்பது அதன் கருத்து. உலகத்தை வழிப்படுத்தற் குரியவர்கள் நீத்தார்களே. அரசன் நீத்தார் வழிபட்ட வழியன்றி உலகத்தை வழிசெய்யமாட்டான்.

நீத்தார் முகமாக எவன் ஒருவன் உலகப் பொருள்களை நோக்குவானே அவனே மெய்ப்பொருளை நோக்குதற்கு அருகன். உலகம் அவனுக்குப் பாம்பு விடுதல் முடியாது. அவன் பாம்பு விடுகிற கயிற்றைக் கண்டுபிடித்து விடுவான். அவனுக்குக் கயிறு 'கயிறு விடுதல்' நடவாது, அவன் மெய்ப்பொருளைக் காணுவான். அவனைப் பொருள் என்றால் என்ன என்று கேட்டால் அப்படி ஒரு பண்டமில்லைப் பொருள் என்றால் அது அருளே. அருள்தான் மெய்யான பொருள்; நித்தியமான பொருள்; சம்பாதிக்க வேண்டிய பொருள் என்பான்.

விசுவாமித்திரர் பிறப்பால் க்ஷத்திரியர். அவர் ஒரு நாள் நீத்தாராகிய வசிட்டரைக் கண்டார். அவரைக் கண்டதும் இராச்சியம் பொருளன்று; அருளே பொருள் என்பதை உணர்ந்தார். அருளைத் தேடித் தாமும் நீத்தார் ஆயினர்.

'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள'

அருட் செல்வமே பெறற்பாலது; காமிக்கற்பாலது, காமித்தல்—விரும்புதல். திருவள்ளுவரில் காமத்துப்பால், அருள் நிதியைக் காமிக்கும் வகை பேசுகின்றது. திருவாசகத்தின் முடிந்த முடிபு திருக்கோவையார். அது பேசுவதுங் காமத்துப்பாலே.

'பல்காற் பழகினுந் தெரியா உளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்'

என்பது இலக்கணக் கொத்து. தொல்காப்பியத்தின் இறுதி அதிகாரம் பொருளதிகாரம். அது ஒன்பது இயல் கொண்டது. நடுவண் அமைந்த ஐந்தாவது இயல் பொருளியல்; பொருள் அகம், புறம் என இரு வகைப்படும். முதலிரண்டு இயலும் அந்த வகையை ஆராய்ந்திருக்கின்

றன. அகம் அன்பு. அதுவே இன்பம். புறம் இன்பத்துக்கு ஆதாரம். அது அறமும் பொருளுமாயிருக்கும். அறமும் பொருளும் என்ற இடத்திற் பொருள் வேறு. பொருளதிகாரம் என்ற இடத்திற் பொருள் வேறு. பொருளதிகாரம் பேசும் பொருள் அறம் பொருள் இன்பம் மூன்றும் அடங்கியது.

பொருளின் இரு வகையில் ஒன்றாகிய அகம், களவு, கற்பு என்று இரு வகைப்படும். அந்த இரண்டும் பொருளதிகாரத்தில் மூன்றும் நான்காம் இயல்களில் ஆராயப் பட்டிருக்கின்றன. அந்தக் களவுங் கற்பும் திருவள்ளுவரிற் காமத்துப்பாலில் அடங்கும்.

காமத்துப்பால் ஆண்பால், பெண்பால் இரண்டும் அல்லாத பால் என மூன்று வகை. களவுங் கற்பும் ஆண் பாலும் பெண்பாலுமாயிருக்கும். களவாவது பொய்ப் பொருளை விடாமலிருந்துகொண்டே மெய்ப்பொருளை ஆள விரும்புதல். ஆள விரும்புதலினாலே அது ஆண்பாலெனப் படலாம்.

ஒரு உண்மை கிடைத்தால் அந்த உண்மைக்கு நாம் கருவியாகி அதனால் நாம் ஆளப்பட வேண்டும். அங்ஙனம் ஆகாமல், நமது இச்சைகளின் பொருட்டு அந்த உண்மையை உபயோகித்தல் அடாது. எனக்கு இது செய் தால் நான் இது தருவேன் என்று அருளைக் கேட்டலாகாது. அருள் கைக்கூலி வாங்குகிற பழக்கம் இல்லாதது, மற்றொருவரால் ஆளப்படாதது. ஆள நினைப்பது அடாத தொன்றாயினும் அருள் என்று ஒன்று உண்டு என்று காண்பது பெரிய காரியம். ஆசையினாலே களவாகிய ஆண்பால் நிலை சாதாரணமானதன்று. அது கனிந்து பெண்மை பிறக்க வேண்டும். பெண்பால் அருளால் ஆளப்படல் வேண்டும். அருள்தான் பரிபூரண நீதி. அதற்குத் தலை வணங்க வேண்டும். அதுதான் கற்புநிலை. 'கற்பெனப் படுவது களவின் வழித்தே' என்பது அகப்பொருட் சூத்திரம்.

'பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மாநுடத் தியல்பின்
வணங்குகின்றார்.' என்பது திருவாசகம்.

உலக பந்தங்களை அறுத்த மெய்யடியார்கள் பெண்மை பிறந்து அடிமை செய்கின்றார்கள் என்பது கருத்து.

ஒரு மகான், தம்மை 'மீளா அடிமை' செய்யவேண்டு மென்று அருளை வேண்டுகின்றார். அதுதான் நீதி வழுவா நெறி முறையில் தம்மை இட்டுக்கொள்ளுதல்.

இங்ஙனம் மெய்ப்பொருளை அறிந்து ஆண்பாலாய்ப் பின் பெண்பால் ஆனவர்கள், அவ்வளவிலும் அமையாமல் அப்பால் மற்றொரு பால் ஆகின்றார்கள். அந்தப் பால் காமத்துப்பாலில் மூன்றாவது பால். அது ஆண்பாலும் பெண்பாலும் அல்லாத பால்; அதனை அத்துவிதப் பால் என்னும் பெயராற் குறிக்கலாம். அருட்பாலில் ஆத்மா கரைந்து ஒன்றுபடுகின்ற பால் அந்தப்பால். அருளுக்குத் தாள் என்று பெயர். ஆத்மா தலையைத் தாளுடன் சேர்த்துத் தாடலைப் பருகின்ற பால் அந்த அத்துவிதப்பால்.

(தாடலை = தாள் + தலை)
(ட = ள் + த)
(ட் = ள் + த்)

'ட்' ஒன்றுமாகாமல் இரண்டுமாகாமல் அத்துவிதப் பட்டு நிற்கின்றது. ஆத்மா அருளுடன் அத்துவிதப்பட்ட நிலையை அறிவதே முடிந்த நிலை; முத்தி நிலை. அந்த நிலை கைகூடுமோ என்று வாயூறுகின்றது; காமத்துப் பாலின் இறுதித்தொடர்

'கூடி முயங்கப் பெறின்' என்பது அந்தத் தொடர்.

ஆத்மா அருளைக் கூடி முயங்கும் முயக்கமே மெய்ம் முயக்கம். முயக்கம்-புணர்ச்சி. அது 'புணர்ந்தாற் புணருந்

தொறும் புதிது' என்கின்றது திருக்கோவையார். புணர்ந் தாற் புணருந் தொறும் புதிது எதுவோ அதுவே பேரின்பம்.

'அகரமுதல' என்று 'அ'கரத்திற் ெறாடங்கி 'முயங்கப் பெறின்' என 'ன'கரத்திற் பூர்த்தியாகின்றது திருக்குறள். அகரமுதல் னகர விறுவாயான தமிழ் எழுத்துக்களாற் சொல்லவேண்டிய தமிழை வள்ளுவர் வழங்கியிருக்கின்றார் என்ற கருத்தில், தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை ஒரு பாட்டுப் பாடியிருக்கின்றார்.

அறத்துப்பால் பொருட்பாலுக்கு முறையே அறன் வலியுறுத்தல் நீத்தார் பெருமை பாயிரம் ஆதல் போலக் காமத்துப் பாலின் பாயிரம் வான் சிறப்பு. காமத்துப் பால் அருட்பால். அது வானத்துப் பால். வான் பாலாகிய வான் சிறப்பில் வைத்துத்தான் அது சிந்திக்கற்பாலது. அருண்மழை பக்குவம் உளதாய வழித்தானே இறங்குவது; வான் மழை போல.

* * *

அறமும் பொருளும் காமமுமாகிய தகளியுந் திரியும் நெய்யுஞ் சேர்ந்த, வள்ளுவர் விளக்கு மனித வாழ்க்கை யின் விளக்கு. உலக இருளைப் போக்கி, ஆதிபகவனாகிய முதலைத் தரிசிப்பிக்கும் விளக்கு வள்ளுவர் ஏற்றிய திரு விளக்கு.

மனக் கவலையைப் போக்கிக் கற்றதனாலாய பயனை வழங்குவது வள்ளுவர் ஏற்றிய திருக்குறள் விளக்கு.

உ

# தமிழ்

வள்ளிநாயகிக்கு, பண்டைநல் தவ விசேஷத்தினுலே முருகப் பெருமான் காட்சி யளிக்கிறுர்; முதுமைக்குப் பேரெல்லையான பழுத்த கிழவடிவத்தில் காட்சி யளிக்கின்றுர்.

அந்தக் கிழவடிவத்தைக் கண்டதும் வள்ளிநாயகியின் கரணங்கள் வசம் இழந்து உருகத் தொடங்கிவிட்டன. காந்தம் இரும்பை ஈர்ப்பது போல, அந்தக் கிழவடிவம் கன்னிகையான வள்ளிநாயகியை ஈர்க்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்திலே வள்ளிநாயகி எந்த ஐம்புல வேடர்களுக்கு மத்தியிலே உடன் வாழ்ந்தாரோ, அந்த வேடர்கள் ஒருங்கு திரண்டு வருகின்றுர்கள்: அவர்கள் கிளர்ந்து வர, கிழவடிவம் ஒரு பெரு வேங்கை மரமாய் மாறுகிறது. வேதமுடன் ஆகம புராணங்கள் வேறு முள கலைகளெல்லாம் அடியும், கிளையும், இலையும், தளிருமாய்,

அந்த வேங்கை மேலும், அந்த வள்ளிமானை ஈர்க்கின்றது. வேடர்கள் புதுவது தோன்றிய வேங்கையை — முதலுளின்றி, திடீரென வளர்ந்து ஓங்குகின்ற வேங்கையை — நோக்கி ஆச்சரியப்பட்டு வள்ளியை வினவுகின்றார்கள். வள்ளி நாயகியும், 'பத்தா பூலோகம்' என்ற முறையில் தானும் ஆச்சரியப்பட்டு,

'முந்தை நாளில்லாதொன்று புதுவது முளைத்தது' என்கின்றாள். வள்ளி மெல்லிய கள்ளி ஆகின்றாள். வள்ளி நாயகிக்குப் பயின்ற பந்துக்களை விடவும் முடியவில்லை; வேங்கையை விடவும் முடியவில்லை.

* * *

கற்றறிந்தோரேத்துங் கலித்தொகையிலே ஒருவன் இல்லிரே – ஓ வீட்டுக்காரரே 'உண்ணுநீர் வேட்டேன்.' கடுந்தாகமா யிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு வருகிறான். அன்னை—ஒரு தாய்—தன் மகளை நோக்கி 'அடர் பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய் உண்ணு நீர் ஊட்டிவா', அந்தப் பாத்திரத்திலுல் நீர் வார்த்து அவனுக்குத் தாகசாந்தி செய்து வா என்கின்றாள். மகள் புறத்தே உண்ணு நீர் ஊட்டச் செல்கின்றாள். அவன் தாகசாந்தி செய்யவில்லை. கைகளில் அவள் வார்க்கும் நீரை மெல்ல ஒழுகவிடுகின்றான். 'வளை முன்கை பற்றி நலிய' அவளை வளையலணிந்த கையைப் பற்றி நலிகின்றான். மோகசாந்தி செய்ய முயல்கிறான். 'அன்னாய் இவனொருவன்' என்று அவள் ஆர்ப்பாட்டம் செய்கின்றாள். அந்த அன்னை சி. வை. தாமோதரம்பிள்ளை கண்ணீர் பெருக்கிக்கொண்டு கலித்தொகை ஏடுதேடி ஓடுமாறு போலத் தண்ணீர் வார்க்குமிடத்துக்கு ஓடுகிறாள். 'என்ன! என்ன!' என்கிறாள். அப்பொழுது அந்த மகள், அன்னாய், பாவம்! 'உண்ணு நீர் விக்கினான்' என்கின்றாள். கையைப் பற்றிய கதையைக் கைகழுவிச் சொல்லுகின்றாள். வள்ளி போலக் கள்ளியாகின்றாள். அந்த மகளை அன்னை நம்பி, 'புறம்பு அழித்து நீவ' அந்தக் காளையின் முதுகைத் தடவி—தைவந்து—அவன் விக்கல் போக்குகின்றாள்.

அந்த மகளின் மனசை, அக்காளே யாகிய காந்தம் ஈர்க்கின்றது. ஆனால் அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்து அகலிடத்தார் ஆசாரத்தைத் துறந்து முழுதும் அவனைத் தொடர அம்மகளால் முடியவில்லை. அன்பு அங்கும் இங்கும் பிரிநிலைப்பட்டு, வள்ளி நிலையில் அம்மகள் ஊசலாடுகின்றாள். வள்ளிநாயகியின் உள்ள நிலையை, கலித்தொகைப் புலவன் ஒரு பெண்ணில் வைத்துக் கற்பனை செய்து காணுகின்றான்.

அருச்சுனனுக்கு சிஷ்டனான கிருஷ்ண பரமாத்மாவைத் தொடராமலிருக்கவும் முடியவில்லை. துரியோதனனதி பந்துக் களைப் பாணந்தொடுத்து உதறவும் முடியவில்லை, அங்கும் இங்கும் அவன் இருதயம் ஊசலாடினது; அகலிடத்தார் ஆசாரத்தைத் துறக்கமாட்டாமல், திருவாசக பரிபாஷை யில் போதார் அமளியின் மேல் நின்றும் புரளமாட்டாமல் களவு நிலைப்பட்டது.

இந்த அருச்சுன நிலைக்கு—கலித்தொகையிற் கண்ட கன்னிகை நிலைக்கு—வள்ளிநாயகி நிலைக்குக் களவு நிலை என்று பெயர். களவு நிலை யென்றால் பிரபஞ்ச தொந்தங் களை விடவும் முடியாமல் கண்ட உண்மையைத் தொட ராமலிருக்கவும் முடியாமல் அன்பு அங்கும் இங்கும் பிரி நிலைப்பட்டு நிற்கும்நிலை. இது பாலை நிலை என்றும் வெம்சுர நிலை என்றும் வருணிக்கப்படும்.

இந்தக் களவு நிலைக்கு வழக்கத்திற் கேட்கின்ற 'களவு' என்ற சொற்பொருள் கொண்டு கருத்துப் பண்ணக்கூடாது. ஈசுவரனே உள்ளங்கவர் கள்வன். வையத்துள் வாழ் வாங்கு வாழுகின்ற உத்தம மனித வாழ்க்கையிலே மிக மிக உயர்ந்த மகோந்நத நிலை இந்தக் களவு நிலை.

புண்ணிய விசேஷத்தினாலே அறிவு விசாரங்களினாலே சற்சனர் சகவாசத்தினாலே ஒருவனுக்கு அந்தக்கரணங்கள் தூய்மைப்படலாம். அந்தக்கரணங்கள் தூய்மைப்படுகின்

றவன்—மனத்துக்கண் மாசில்லாதவன், அறங் கைவந்தவன் ஆகின்றான். அப்படிப்பட்டவன் வாழ்க்கை வழியில் இருபத்தைந்து கல் நடந்தவன். அப்படிப்பட்டவன் மேலும் நடவாமல் இருக்கமாட்டான். அவனுக்குப் பொருள் விசாரம் எழுந்துவிடும். பொருளல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள் நீங்கத் தொடங்கிவிடும். பொய் இது மெய் இது என்று தெரியும்; இந்த நிலையில் அவன் பொருள் கைவந்தவன் ஆகின்றான். வாழ்க்கை வழியில் ஐம்பதாவது கல்லை அடைந்துவிட்டான்.

பொருள் கைவந்து, ஒருவனுக்குப் பொய்யிது மெய்யிது என்று தெரியலாம். ஆனால் பொய்யை விடவும் மெய்யைத் தொடரவும் முடியாமை தோன்றலாம். பொய் கெட்டு மெய்யாதல் எளிதன்று.

பொய் இது மெய் இது என்று தெரிந்தவன்—அறங் கைவந்து அதற்குமேலே பொருளுங் கைவந்தவன் — வாழ்க்கையிலே ஐம்பதாவது கல்லை அடைந்தவன், மேலும் நடக்க முயன்று மெய்யைத் தொடருவோமென்று சித்தஞ் செய்து, இனிப் பொய்யை விட்டுவிடுவோம் என்று கருதி ஒரு காலைத் தூக்கும்போது பொய்யை விடவும் மெய்யைத் தொடரவும் முடியாமல் அவன் இருதயத்தில் — வாழ்க்கைவழியில் அந்தக் களவு நிலை முளைகொண்டு விடுகின்றது.

தெய்வம் என்பதோர் சித்தம் ஒரு பக்கம், 'சுற்றமென்னும் தொல்பசுக் குழாங்கள்' மற்றப் பக்கம். பதி ஒருபுறம் பாசம் ஒருபுறம். இருதயம் ஊசல்படுகின்றது. இது களவு முளைகொண்ட நிலை.

இந்தக் களவு சற்றே முதிர்ந்து ஒரு தளிர் விடுமேயானால் அந்தத் தளிருக்கு உடன்போக்கு நிலை என்று பெயர். பொய்யைக் கைவிட்டு அன்பு ஒருமுகப்பட்டு மெய்யைத் தொடருகின்ற நிலை உடன் போக்கு நிலை.

பொய் கெட்டு மெய்யாகின்ற நிலை. இந்த உடன்போக்கு நிலைக்குக் கற்புநிலை என்பது மற்ருெரு பெயர். களவுநிலையில் நின்ற அருச்சுனன், அடுத்த பிறப்பில் கண்ணப்பர் ஆனுன். அன்பு ஒருமுகப்பட்டது. கண்டறியாத தொன்றைக் கண்ணப்பர் கண்டார். அவ்வளவுதான். அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தார். அகன்ருர் அகலிடத்தார் ஆசாரத்தை. தன்னை மறந்தார், தன்னுமங் கெட்டார், தலைப்பட்டார். பொய்கெட்டு மெய்யானுர். காய் கனி ஆவதுபோல, முந்திய பிறப்பிற் களவு நிலை இந்தப் பிறப்பிற் கற்பு நிலை ஆயிற்று.

'கற்பெனப் படுவது களவின் வழித்தே'. காயின்றிக் கனியில்லை. அதுபோலக் களவின்றிக் கற்பில்லை. களவின் முதிர்ச்சி—கற்பு.

இந்தக் கற்புநிலைக்கு வேறு பெயர் இன்பநிலை. இந்த இன்பநிலை—மெய்யைத் தொடரும் நிலை—பரிபூரணப் பட்டவன், வாழ்க்கை வழியில் எழுபத்தைந்தாவது கல்லை அடைந்தவன் ஆகின்ருன். அப்பால் நூருவது கல் வீடு.

வாழ்க்கை வழி அறம் பொருள் இன்பம் வீடு. அரும்பு மலர் காய் கனி. இவை புருஷார்த்தம். மனிதன் அடைய வேண்டியவை. மத்தியில் முளைப்பது களவு. அறம் பொருள் கைவந்தவனுக்குப் பொருள் இறுதியிலே இன்பத் தொடக்கத்திலே முளைப்பது களவு.

வாழ்க்கையிலே களவுநிலை அடைவது வெகு கஷ்டம். சிவனொளிபாத மலையின் உச்சிக்கு ஏறுவது வெகு கஷ்டம். ஏறிவிட்டால் இன்பத்தில் முழுகலாம். துள்ளித்துள்ளி வீடுசேரலாம். அறமும் பொருளுங் கைவந்து களவு முளை கொண்டுவிட்டால் இன்பமும் வீடும் தாமே சித்திக்கும்.

ஆகவே மனிதன் களவை அடையக்கடவன்.

களவென்றால் அறம் பொருள் கைவந்த வழி வருவது: இன்பத்தையும் வீட்டையும் எளிதில் தருவது. புருஷார்த்தம் நான்கையும் அடக்கிய நான்கன் சுருக்கம் களவு. நான்கன் மத்தி களவு; புருஷார்த்த குருத்துவ மையம் (Centre of gravity) களவு. மனித வாழ்க்கையின் இந்தக் களவிலேதான் பரிசுத்தமான தமிழ்—அகத்தமிழ்—ஆரம்பிக்கின்றது; சிரசு உதயம் ஆகின்றது. ஒரு பெண் என்றைக்கு அன்பை ஒருமுகப்படுத்திக் காதலன் அகத்தை நோக்குகின்றாளோ, அன்றைக்கே அவள் அகத்துக்காரி ஆகின்றாள். முன்னெல்லாம் காதலன் அகத்துக்குப் புறத்துக்காரி.

களவு புள்ளியிலிருந்து இன்பமாய் வீடாய் நடக்குந் தமிழ் அகத்தமிழ்; களவை நோக்கி அறமாய்ப் பொருளாய் வருந் தமிழ் புறத்தமிழ்.

தமிழ் இரண்டு வகை. அகத்தமிழ் புறத்தமிழ். இரண்டன் சுருக்கம் களவுதமிழ். களவுதமிழ் என்றால் களவை நோக்குந் தமிழுமாம்; களவிலிருந்து அப்பால் நோக்குந் தமிழுமாம். களவை நோக்குந் தமிழ் புறத்தமிழ்; களவிலிருந்து அப்பால் நோக்குந் தமிழ் அகத்தமிழ். அகமும் புறமும் களவில் அடங்கும்.

ஆகவே தமிழ் என்னுதலிற்றோவெனின் களவு நுதலிற்று; முன்னும் பின்னும் நோக்குகின்ற அன்புக் களவு.

* * *

களவுதமிழின் புற இதழ் அறம் பொருள்; அக இதழ் இன்பம் வீடு. இந்தத் தமிழ் நிலையைப் புலவர் பெருமான் நக்கீரதேவர் ஒரு சிறு தொடரில் விளக்குகின்றார்.

"பலவுடல் நன்னர்நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே."

முதலில், நெஞ்சம், வஞ்சம் கெட்டு, 'நன்னர் நெஞ்சம்' ஆதல்வேண்டும். மனத்துக்கண் மாசிலனாதல் வேண்டும். அங்ஙனம் ஆகவே அறங் கைவரும். அறங்

கைவரப் பொருள் அல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள் மெல்லமெல்ல நீங்கும். அந்நிலையிலே, நன்னர் நெஞ்சம்; 'பல உடல் நெஞ்சம்' ஆகும். உடலுதல்-வெறுத்தல்; பொருள் அல்லன பலவற்றையும் வெறுத்தல். இந்த வெறுப்பு — பொருள் கைவந்தவர்களுக்குப் பொய்ப் பொருளில் உண்டாகும் வெறுப்பு.

திருவள்ளுவரிலே பொருட்பாலின் இறுதி வார்த்தை 'எற்றுக்குரியர் கயவர்'. திருவாசகத் தேனிலே இறுதி வார்த்தை, 'செம்மைநல மறியாத சிதடர்', 'முத்தி நெறி யறியாத மூர்க்கர்'. இவ் வார்த்தைகள், மருணீங்கிய காலத்திலே பொய்ப்பொருளிற் கொண்ட வெறுப்பைக் காட்டும் வார்த்தைகள். இவ்வாறு வெறுப்புப் பிறந்தவர்களை அப்பாலே மெய்ப்பொருள் — இரும்பைக் காந்தம் இழுப்பதுபோலே இழுக்கும்; மருட்டும்.

'இருட்டறை மூலையி லிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே.'

என்பது திருமந்திரம்.

இருட்டறை மூலையிலிருந்த குமரி - பொய்ப் பொருளுடன் கலந்து கரந்து கிடந்த மெய்ப்பொருள். குருட்டுக் கிழவன் — அறம் பொருள் தெரியாதவன். குருடு நீங்கித் தன்மேல் மருளும்படி மெய்ப்பொருள் மருட்டும். எப்பொழுது ஒருவன் மெய்ப்பொருளில் மருளுகின்றானோ, அன்பு செய்கின்றானோ அப்பொழுதுதான் அவன் குருடு கழிந்து கண் விழிக்கின்றான்.

இந்த நிலையிலே, அவனுடைய பல உடல் நன்னர் நெஞ்சத்திலே 'இன்னசை வாய்க்கும்' இனிய இச்சை - மெய்ப்பொருளாகிய இன்பத்தில் இச்சை உண்டாகும். இன்னசையாகிய இன்பக் காட்சிகள் கிளர்ந்தெழும்.

'எற்றுக் குரியர் கயவர்' என்ற குறளுக்கு அடுத்த குறள்,

'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு'

காமத்துப்பால் ஆரம்பம்.

'செம்மை நலமறியாத சிதடர்' என்ற திருவாசகத்துக்கு அடுத்த அருள் வாசகம் 'திருவளர் தாமரை' திருக்கோவை ஆரம்பம்.

திருவள்ளுவரிலே காமத்துப்பால் ஆரம்பமும், திருக்கோவை ஆரம்பமும் அசத்தியத்தை உதறித்தள்ளும் ஒருவனே, சத்தியம் சத்தி வடிவிலே மருட்டுவதைக் காட்டுகின்றன. இரண்டு ஆரம்பமும் இன்னசைக் காட்சிகள், பல உடல் நன்னர் நெஞ்சத்திலே தோன்றுகின்ற இன்பக் காட்சிகள்.

இந்த இன்பக் காட்சியிலேதான்—இனிய மருட்டிலே தான்—அகத்தமிழ் ஆரம்பம். 'இனிப் பிரமத்தை அறிய இச்சை' என்று இந்த இடத்திலேதான் வியாசபகவான் பிரமசூத்திரம் ஆரம்பிக்கிறார். இங்கேதான் ஒரு மனிதன் சுத்தத் தமிழன் ஆகின்றான். அப்பால் 'முன்னியவினை' ஆகிய வீடு சித்திக்கின்றான். தமிழன் என்றொரு சாதியில்லை. எவனுந் தமிழன் ஆகலாம். எப்படி ஒருவன் ஆரியன் ஆகவேண்டுமோ அப்படியே தமிழன் ஆகவும் வேண்டும். பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியன்தானே தண்ணார் தமிழ் அளிக்குந் தண்பாண்டி நாட்டானும் ஆகின்றான்.

கும்பகர்ணன் சாதியில் ராக்ஷசன்; அவன் அறிவு இராமனை மதித்தது. ஊன் பொதி அண்ணனுக்கு உருகியது. யுத்த முனையிலே அவன் அன்பு பிரிநிலைப்பட்டு நின்றது; அவன் தமிழன் ஆனான்; களவு தமிழன்.

விபீஷணன் இளமை தொட்டே 'ஊனைக் காவல் கைவிட்டு' அறிவு வழியில் அன்பு ஒருமுகப்பட்டு நின்ருன். சந்தர்ப்பம் வாய்த்தது. ஆன்ம நாயகனையே தொடர்ந்தான். கற்புத் தமிழன் ஆனுன்.

விபீஷணன் அகத் தமிழன்; கும்பகர்ணன் புறத் தமிழன்; இருவரும் களவு தமிழரே—கும்பகர்ணன் களவு நோக்கிய தமிழன்; விபீஷணன் களவிலிருந்து வீடு நோக்கிய தமிழன். தமிழர் என்று சொல்லுகிறவர்கள் எல்லாருந் தமிழரல்லர். மனிதன் தமிழன் ஆக வேண்டும்.

எவனுடைய வாழ்க்கை களவு புள்ளியை நோக்கி நடக்கின்றதோ, மேலும் நடக்குமோ அவன் தமிழன்.

களவு நுதலியது தமிழ்; களவு நுதலியோன் தமிழன்.

* * *

தமிழ், தமிழன் இயல்பு இப்படி இருக்க,

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் ஒரு சமயம் ஒரு பாண்டியன் அப்பொழுதைய தமிழை உற்று நோக்கினுன். அவன் முகம் வெளிறிற்று. தமிழ் வெறும் எழுத்துக்களும் சொற்கூட்டங்களுமாய்க் கிடந்தது. தமிழ் நுதலிய களவு, தமிழிலிருந்து களவு போய்விட்டது. தோலிருக்கிறது. சுளை இல்லை.

சம்பவம்! பன்னிரண்டு ஆண்டுகள் தமிழ்நாட்டில் மழையில்லை. பெரிய பஞ்சம்! தமிழில் களவு சொன்ன புலவர்களெல்லாம் வேறு இடங்களுக்குப் போய்விட்டார்கள். பிறகு மழை பெய்தது. நாடு செழித்தது. பாண்டியன் புலவர்களைத் தேடினுன். எழுத்து வல்லவர்கள் வந்தார்கள். சொல் விற்பன்னர்கள் வந்தார்கள். பொருள் தெரிந்தவர்கள், எழுத்துக்கள் சொற்களுக்கும் மனித உணர்ச்சிக்கும் தொடர்பு காணுகிறவர்கள். தமிழிலே களவு சொல்லுகிறவர்கள் திரும்பி வரவில்லை. அந்தப் பரம்பரையே அழிந்துவிட்டது.

வெறும் எழுத்துச் சொற்கூட்டங்களினாலே என்ன பிரயோசனம்! உயிர் நீங்கிய உடம்பு எதற்கு! என்று பாண்டியன் கவலைகூர்ந்து தவங்கிடந்தான். கடவுள் அருளினாலே களவியல் என்ற இலக்கணம் கிடைத்தது.

களவியல் என்றால் தமிழிலே சொல்லவேண்டிய களவைப்பற்றிச் சொல்லுகிற பொருளிலக்கணம்.

பிறகு அந்தப் பாண்டியன் எழுத்துச்சொற் புலவர்களை அழைத்து, களவியலைக் காட்டி, நீங்கள் சொல்லுந் தமிழில் இனி இந்தக் களவு வரவேண்டுமென்று போதிக்க நேர்ந்தது.

தமிழ் என்னுதலிற்றோவெனின், களவு நுதலிற்று என்ற காலம் போய், களவியலைக் காட்டி, 'களவியல் என்னுதலிற்றோவெனின் தமிழ் நுதலிற்று' என்று சொல்ல நேர்ந்தது, இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் ஒரு பாண்டிய அரசனுக்கு. இந்தக் கதையைச் சொன்னவர் கடைச்சங்கத்துப் புலவர்பெருமானான நக்கீரதேவர். இந்தக் கதையை, தமிழ்நாடு என்று ஒரு நாடு இன்னும் இருந்து சிந்திப்பதுண்டானால், மூன்று சீர்திருத்தங்கள் அத்தியாவசியகம் என்று படலாம்.

முதலாவது: களவியல் தோன்றிய காலந்தொட்டுத் தோன்றிய—சங்கத்தில் ஆராயாத—இற்றைவரை உள்ள தமிழில் களவு உள்ளது எது? இல்லாதது எது? என்று பரிசோதிக்கவேண்டியது; தமிழ் வேதமாகிய திருக்குறளில் உரைத்து, களவியற் கண்கொண்டு இது தீர்க்கத்தக்கது. 'தொன்மையவாம் எலவையும் நன்றாகா இன்று தோன்றும் நூலெலவையும் தீதாகா.' 2000 வயசுள்ள தமிழ் தீதும் ஆகலாம்; இன்றைக்குப் பிறந்த தமிழ் நன்றும் ஆகலாம். நன்றும் தீதும் ஆராயாதவழி—பலர்—அநேகர் மலடுகறக்க நேரும்.

இரண்டாவது: களவல்லாத தமிழ் களவாகச் சங்கத்தமிழோடு கலந்து, பசுத்தோல் போர்த்திக்கொண்டுமிருக்கலாம். அப்படிப்பட்ட பகட்டுத் தமிழை—காக்காய்ப்

பொன்னை—ஆய்ந்து கண்டுபிடித்து—அதற்குரிய தானத்தில் வைக்கவேண்டும். இது நீதியும் தர்மமுமாயிருக்கும். இது செய்யாவழி, வரிசையறியாது, செக்குக்கும் சிவலிங்கத்துக்கும் பேதந் தெரியாமல் தடுமாற்றம் நடந்துகொண்டிருக்கும். செக்கே மேலாக மதிக்கவும் படும்.

மூன்றுவது; இக்கால உலகத்தை நடத்துகின்ற சினிமாக்கள்—பத்திரிகைகள்—புத்தகங்கள்—கவிதைகள்—கதைகள்—கலைகள் என்றித் தொடக்கத்தவைகள்—எப்படிப்பட்ட கருத்து - உணர்ச்சி உடையனவாயிருக்கவேண்டும் என்பது. இவைகள் தமிழ்க் களவுக்கு வழிசெய்யாது போனாலும், இருக்கிற அறிவையாவது பழுதுபண்ணுமல், இருந்தபடி இருக்கவைக்குமோ—விட்டுவைக்குமோ—என்று அறிஞர்கள் தீர யோசித்து அத்தியாவசியகம் தீர்க்க வேண்டியவைகள்.

ஒரு உதாரணம்: பரிசுத்த அன்புருவத்துக்குக் கண்ணப்பருக்கு மேலே ஒருவரைத் தமிழுலகு அறியாது. ஞானத்தின் திருவுரு ஆகிய சம்பந்தப்பெருமான் முதலிய சமய குரவர்களே கண்ணப்பரைச் சிரமேற்கொண்டு துதிக்கின்றுர்கள். கச்சியப்பர் கண்ணப்பர் பூசைக்கு ஒப்பு கண்ணப்பர்தான் என்கிருர். சேக்கிழார் பெருமான் கண்ணப்பரின் செருப்படியிற் பொடிபடிந்த மரங்கள், கொடிகள், செடிகள், புனித வஸ்துக்கள் என்று போற்றுகின்றுர். அகம் பிரமம் என்கின்ற சங்கரரே அதனை மறந்து கண்ணப்பரின் வாய்க்கலச வழிபாட்டுக்குக் கசிந்து உருகுகின்றுர். கண்ணப்பரைப்பற்றிய உணர்ச்சி அண்ட முகட்டுக்கும் அப்பால் வைத்துப் போற்றப்படுகின்றது. இப்படிப்பட்ட ஒப்புயர்வில்லாத உணர்ச்சி இன்று என்ன செய்யப்படுகின்றது!

'கண்ணப்பன் பூசைகொளுங்
கடவுள்திருக் கோயிலிலே
நண்ணக்கூடாதோ நாங்கள்
நடையில்வர லாகாதோ'

கண்ணப்பனில் நாங்கள் குறைந்த புள்ளிகளா? கண்ணப்பன் கால் வைத்த இடத்திலே நாம் ஏன் கால்வைக்கக் கூடாது? கண்ணப்பருக்குக் கீழே ஒரு ஆள் இருக்க முடியாதென்ற உணர்ச்சியைத் தருகின்றது இக் கவிதை. இப்படிப்பட்ட உணர்ச்சி கலை செய்யப்படுமானல் 'அடியார்க்கும் அடியேன்' ஆகிறது போய் அடியார்களெல்லாம் நமக்கு அடிமையாதல் வரும்.

ஒரு விஞ்ஞான கிருஷ்ணன் அரைகுறை ஆராய்ச்சியில் ஒரு உஷ்ண கிரணத்தை நமது கையில் தந்தால் நமது வீடுவாசல் என்ன பாடுபடும்! சாம்பர் ஆகாதா? அதனினும் ஆயிரம் கோடி மடங்கு தீமை பயக்கும் ஒரு பிறழ்ந்த உணர்ச்சி.

பள்ளத்துப் பள்ளன் எங்குஏடி போட்டான்
பள்ளம் பார்த்துப் பயிர்செய்யப் போட்டான்.

இந்தக் கிராம கவிதை சாதாரண பொழுதுபோக்கு உணர்ச்சியை மாத்திரந்தான் தரலாம். ஆனல் ஒரு உயரிய கண்ணப்ப உணர்ச்சியைத் தலைகீழ்செய்து பாழ்படுத்தும் உணர்ச்சியைத் தரவே தராது.

கண்ணப்பன் எச்சில்கொளும்
கடவுள்திருக் கோயிலிலே
என்னெச்சில் ஏற்காதோ
யான்புகைத்த லாகாதோ

என்று ஒரு வீடிக் கவிதையை ஒருவன் பாடி நிந்தனை செய்தால், படத்தில் நடித்தால் அவன் கழுத்தை ஒரு சாதாரண கிராமவாசி ஒடிக்கலாம். கிராமவாசி கூட அருவருத்து ஒதுக்கும் உணர்ச்சி இன்று உயர்தர கவிதைக் கலையென்று போற்றப்படுகின்றது; தமிழ்நாடு போற்றுகின்றது! வீடு தேடிப் பொன்னுடை போர்த்துகின்றது! சர்வகலாசாலைகள் வரவேற்கின்றன! 'வால் எங்கே?' கேட்க ஒரு காளமேகம் இல்லை!

'அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
அன்பொடு சிவாயஎன அருள்நீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்புளக மூரவுரை குழறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை ஆடிப்
பொருவில்கந் தாசுகந் தாஎன்று பாடிக்
கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர ஒளிகாணுக் கண்ணென்ன கண்ணே'

என்ற உருகுகின்ற ஒரு கவிஞனும் தமிழ் வழங்கும் நாட்டிலே ஒரு மூலையில் முடங்கி மடங்கி மூச்சுத் திணறுகின்றனே. இந்தக் கவிதையில் பாழான தலைகீழ் உணர்ச்சி உண்டா? இதற்கு ஒரு சிதர்ந்த சிற்றுடைதானும் இல்லையா? இதைக் கேட்டுக் கன்னியாயில் உள்ள சப்த கூபங்களுள்,

' கவிபாடிப் பரிசுபெறுன் மனம்போல ஒன்று'

கோபங்கொண்டு கொதிக்காதா!
அந்தக் கொதிப்பு,

'செஞ்செவே செருமுகத் தமர்செயுந் திறனிலா
வஞ்சர்தீ வினையினால் மானமா மணியிழந்து
அஞ்சினர் நெஞ்சுபோ லென்றும்ஆ றுதரோ''

நேருக்கு நேர் விற்போரோ சொற்போரோ நிகழ்த்தும் மதுகையில்லாத பேடிகளின் தீய சூழ்ச்சிகளினாலே சில சந்தர்ப்பத்தில் மானிகள் தமது மான மணியை இழந்து போகலாம். அங்ஙனம் இழக்க நேர்ந்த மானிகளின் மனம் என்றாயினும் ஆறுமா? அந்த வெப்பம் ஒரு அசோகவனத்தைச் சோக வனஞ் செய்யுமே!

நூற்றெட்டுயுகம் சூரபத்மாவின் ஆட்சியின்கீழ் இருந்தமையால், மானம் போய் மதிகெட்டுவிட்டோம், என்கின்றார்கள் தேவர்கள். இது கந்தபுராணம்.

சூரபத்மாவின் ஆட்சிக்காலத்திலே, இந்தப் பூமியிலே, கருவூரிலே ஒரு முசுகுந்தச் சக்கரவர்த்தி சிவபூசை செய்து கொண்டு பகல் நட்சத்திரம் போல யாரும் அறியாத பிரகாரம் ஒதுங்கி வாழ்ந்துவந்தார். இந்தக் கலியுகம் 50050க்கு மேலே போயும் ஒரு கோயமுத்தூரிலே சேக்கிழார் இல்லம் ஒன்றிலே, ஒரு மனிதர், தொண்டர்கள் பெருமையை நினைந்து நெக்குருகிநெக்குருகி விம்மி விம்மி யழுது கொண்டு இன்றைக்கும் இருக்கின்றார். கலி 7500 வரை இடையிடையே காரியந் தெரிந்தவர்கள் ஒதுங்கி வாழ்ந்து வருவார்களென்று மகாபாரதத் தொடரில் கர்ண பரம்பரைக் கதையும் இருக்கிறது. அங்கும் சரி இங்கும் சரி கலிக்கு ஒதுங்கிய பெரியோர்கள்—விரல் மடித் தெண்ணத்தக்க ஒரு சிலர்—உயிர் வாழலாம். அவர் வழிநின்று தமிழ் கேட்கத் தமிழ் நாடு முன் வருமா? தமிழ் எங்கே? பகிரங்கத் தமிழ்நாடு எங்கே?

ஒருமுறை ஒரு மகான் 'எண்ணம் எப்படிச் சொல் உருவம் எடுக்கின்றது' என்று வினவிக்கொண்டு, பொருளுக்கும் சொல்லுக்கும் சம்பந்தம் தெரிந்தவன் எவனோ அவன் தான் வியாகரணந் தெரிந்தவன். அப்படிப்பட்டவன்தான் பூர்வமீமாம்சை படிக்கலாம். பூர்வமீமாம்சை வேள்வியைப் பற்றிச் சொல்லுவது. வேள்வியென்றால் பொருளுக்கும் பொருளுக்கும் சம்பந்தம். எந்தப் பொருளை எந்தப் பொருளோடு சேர்க்கவேண்டுமோ அந்தப் பொருளை அதற்குரிய பொருளோடு சேர்ப்பதேயென்றார். அப்பொழுது நான் மரம் போலத் திகைத்தேன். அப்பால் ஐம்பதெழுத்தும் ஐந்தெழுத்தாமே என்ற எழுத்துப் பேச்சு எழுந்தது. அப்பொழுது எனக்குத் தோன்றியது இது:-

வடமொழியுஞ் சரி, தமிழ்மொழியுஞ் சரி, அவைகள் உலக வியவகார விரிவுக்கோ, சினிமாவுக்கோ, ஒன்றே முக்கால் ரூபா ஹாஸ்யத்துக்கோ உரிய பாஷைகள் அல்ல, அவை வேறு பண்டங்கள். உலக வியவகாரங்களுக்கு வேறு பாஷைகளை உபயோகிப்பதே நல்லது. எழுத்துக்களைச் சுருக்கிப் புணர்ச்சிகளைச் சிதைத்தல் அநர்த்தம்,

தமிழ் பற்றி மூன்று சீர்திருத்தங்கள் மேற்குறிப்பிடப் பட்டன. அவை இனிச் சாத்தியமாவது சந்தேகத்திற் சந்தேகம். சந்தேகமின்றித் தெட்டத் தெளிவாகச் சொல்லக்கூடியது ஒன்றே ஒன்றுதான்.

தமிழ் இப்பொழுதைய போக்கிற் போகிறதானால், இதே போக்குத்தான் வளர்ச்சி செய்யப்படுகிறதானால், மனித வாழ்க்கை வெறுஞ் சூனியமாய்விடும். அதுதான் அந்த ஒன்று.

இருள்தரும் உலகத்தே இங்கிலி சுருவாகி
மருள்தரு கலிகாலம் மயல்செய்யும் அதனாலே
அருமறை நெறிபோக அறமது புறமாகக்
குருடுஒரு குருடுக்குக் குழிவழி செயுமன்றே.

---

கடவுள் ஒருவர் இருக்கிறார்.
கடவுள் எங்கும் இருக்கிறார்.
கடவுள் எல்லாம் அறிவார்.
கடவுள் எல்லாம் வல்லவர்.
கடவுள் இரக்கம் உடையவர்.
கடவுள் நம்மைக் காக்கிறார்.
கடவுளை ஒருகாலமும் மறவாதே.
கடவுளை எந்நாளும் வணங்கு.

— நாவலர்

உ

# வான்மீகிநானே!

இராமன்: "இது ஒன்றுதான் என் மனத்தை மிகவும் வருத்து கின்றது; என்னிடத்தில் நேராக என் தந்தையார் 'பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து வைக்க வேண்டும்' என்று ஏன் சொல்லக்கூடாது?

"எதற்காக அவர் தலைகுனிந்து தரையில் தாரை யாகக் கண்ணீர் வடிக்கவேண்டும்?"

கைகேயி: "தாமதிக்காமற் சீக்கிரங் காட்டிற்குப் போ: அரசர் வெட்கத்தினுல் உன்னிடத்திற் பேசுதற்கு மனம் எழாமல் இருக்கின்றார். இதற்கு வேறு காரணஞ் சிறிதுமில்லை."

இராமன்: "அம்மா, என்னைப் பொருளாசை கொண்டு உலகத்தில் வாழ்தற்கு எண்ணங் கொண்டவனுக நீர் நினைக்கவேண்டாம். தருமம் என்பதையே எப்பொழு துங் கைப்பற்றியிருக்கின்ற என்னை ரிஷிக்கொப் பானவன் என்றெண்ணுவீர்."

"'பரதனுக்கு அபிஷேகஞ் செய்யவேண்டும்' என்று அரசரிடத்திற் கூறினீர். ஆதலால், என்னிடத்தில் பண்பு உள்ளதாகக் கருதவில்லைப்போலும்."

[''இராமன்... 'தமது நண்பர்கள் துக்கப்பட்டுப் பிராணனை விட்டு விடுவார்களோ!' என்ற அச்சத்தால் ஒருவிதமான விகாரத்தையும் அடையாதிருந்தான்'']

கோசலை: "'அந்தத் தருமப் பிரபுவானவர் (தசரதர்) இன்றைத்தினமே உன்னை இராச்சியத்தில் இளவரசனுகப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கப்போகின்றார்.' [என்று சொல்லி இராமர் இருத்தற்கு ஒரு ஆசனம் இட்டு அவரைப் போசனத்திற்கு அழைக்க, இராமர் வெட்கித் தமது கைகளைக் குவித்துக் கொண்டு ஆசனத்தைத் தொட்டுச் சொல்லலானுர்]

இராமர்: "அம்மா, இப்பொழுது வந்த பயம் இன்னும் நிச்சயமாகத் தெரியாது. இப்பயம் உமக்கும் சீதைக்கும் இலக்ஷ்மணனுக்கும் அதிக துக்கத்தைத் தரும். எனக்கு இந்த ஆசனம் எதற்கு?...... மநுஷ்ய சஞ்சாரமற்ற காட்டில் பதினுன்கு வருஷம் வசிக்கப்போகின்றேன். மகா ராஜர் பரதனுக்கு இளவரசுப் பட்டத்தைக் கொடுத்து என்னைத் தண்டகாரணியத்தில் ரிஷி போல் வசிக்கக் கட்டளையிட்டார். நான் ஜனங்களில்லாத காட்டில், காய்கனிகளைப் புசித்துக்கொண்டு வசிக்கப்போகின்றேன்.''

கோசலை: ''பர்த்தாவினுல் அவமதிக்கப்பட்ட யான் தலைமையை இழந்தேன்; கணவரின் கருத்தைக் கெடுக்கின்றவர்களும், என்னிலும் இளையர்களுமான சக்களத்திகளுடைய மிகக் கொடிய வார்த்தைகளைக் கேட்க வேண்டியவளாகப் போகின்றேனே!.. ... கைகேயியின் வேலைக்காரிகளோடு ஒத்தவளாகச் செய்யப்பட்டேன்; அன்றி, அவர்களுக்குந் தாழ்வான நிலைமையில் கருதப்பட்டேன். இதுவரையில் எனக்கு அடங்கிப் பணி

செய்தவர்களும். பரதன் பட்டத்திற்கு வந்தபின்னர் என்னைப் பார்த்துப் பேசவும்மாட்டார்களே! புதல்வனே, கதியற்ற நான், எப்பொழுதும் மிக்க சினத்தோடு கடிந்துபேசுங் குணமுள்ள கைகேயியினது முகத்தை எவ்வாறு பார்ப்பேன்? உனக்கு உபநயநஞ் செய்தபின்னர் இந்தப் பதினேழு வருஷங்களாக, எப்பொழுது என்னுடைய துக்கம் போகப்போகின்றது; எப்பொழுது உன்னுடைய பட்டாபிஷேகத்தை நான் காணப்போகின்றேன் என்று காத்திருந்தேன்.''

**இலட்சுமணன்:** ''அரசே, மன்மதனுக்கு அடிமைப்பட்டு இவ்வாறு சொல்லிவிட்டால் இராஜநீதியை அறிந்த எவன்தான் அதை ஒரு பொருளாக மனத்தில் எண்ணி அவ்வாறு நடப்பவன்? இராம, இந்த விஷயம் எல்லாருக்குந் தெரியுமுன்னரே நீர் இந்த இராச்சியத்தை எனது துணையால் உமது கைவசப்படுத்திக்கொள்ளுவீர்''

**கோசலை:** ''உன்தம்பி இலக்ஷ்மணன் சொன்னதைக கேட்டாயா? அது உனக்கு நியாயமாயிருந்தால் அவ்வண்ணமே செய். என் சக்களத்தி அநியாயமாகத் தூண்ட, அவளுடைய வார்த்தையைக் கேட்டுக் கொண்டு, என்னைப் பரிதபிக்க விட்டு நீ காட்டிற்குப் போவது நியாயமன்று...... உனக்கு அரசர் எவ்வளவு கொண்டாடத்தக்கவரோ அவ்வளவு நானும் கொண்டாடத்தக்கவளன்றே! இவ்விடத்தை விட்டு நீ காட்டிற்குப் போக நான் விடைகொடுக்கமாட்டேன்.

''இராம, என் சக்களத்திகள் மத்தியில் என்னால் வசிக்க முடியாது, பிதாவின் விருப்பின்படி நடக்க வேண்டுமென்று எண்ணினையேயானால், என்னையும் ஒரு காட்டுப் பெண்மானைப்போலக் காட்டுக்கு அழைத்துப்போ''

**சீதை:** ''தங்களுடைய சுந்தரமான முகம் ஏன் விளங்கவில்லை?

"அபூர்வமான முகத்தின் நிறமும், மகிழ்ச்சியும் காணப்படவில்லையே! இதென்ன?"

இராமன்: "எனது தந்தையார், பரதனுக்கு இளவரசுப் பட்டங் கட்டப்போகிறார். நான், உன்னைப் பார்த்து விட்டு மனித சஞ்சாரமில்லாத காட்டுக்குப் போக வந்தேன். நீ, பரதன்முன் என்னை ஒருபொழுதும் புகழ்ந்து பேசாதே...... பரதன்முன் என் குணங்களை நீ எடுத்துரைக்கவேண்டாம். நீ, பரதனால் விசேஷமாக எண்ணிப் போற்றத்தக்கவளன்று. நெடுங்காலமாக இருந்துவரும் இந்த இளவரசுப் பட்டம் எனது தந்தையாரால் பரதனுக்குக் கொடுக்கப்பட்டது.

"பரதனுக்கு விருப்பமில்லாததை நீயொரு பொழுதுஞ் செய்யாதே!

"நமது தந்தை இப்பொழுது மன்மதன் வலையில் சிக்கியிருக்கிறார்.

"கைகேயியின் வசத்தில் நிற்கும் பரதனும் இராச்சியமடைந்த பிறகு, மிகவுந் துக்கத்தையடைந்த கௌசலையையும் சுமித்திரையையும் நினைக்கவும் மாட்டான். ஆகையால், நீ இவ்விடத்திலிருந்து சுயமாயாவது, அரசனுடைய உதவியினாலாவது ஆர்யையான கௌசலையைப் பாதுகாப்பாய்".

இலட்சுமணன்: "பரதர், நியமம் பூண்டவராய்க் கௌசலைக்குஞ் சுமித்திரைக்கும் மரியாதை செய்வார்; இதில் சந்தேகம் வேண்டாம்".

[இராமர், தமது தாய் தந்தையர் துக்கத்தாற் குழம்பிய மனத்துடன் தம் வழியைத் தொடர்ந்து வருவதைக் கண்டார். தாய் தந்தையர்கள் காலால் நடந்துவருவதைப் பார்க்கச் சகிக்காமல், இரதத்தை வெகு விரைவாக ஓட்டும்படி கட்டளையிட்டார்."]

தசரதர்: "நிறுத்தும்."

இராமர்: "ஓட்டுங்கள், ஓட்டுங்கள்.

"ஆலோசியாமல் இரதத்தை ஓட்டுங்கள்.

"என் சொற்படி ஏன் செய்யவில்லை என்று தசரதர் பழித்தாலும் 'தங்கள் பேச்சுக்...... கேட்கவில்லை' யென்று பதில் சொல்லுவீர்கள்."

கோசலை: [பரதனை நோக்கி] "இராச்சியத்தில் ஆசை யுள்ள உன்னால் பகையற்ற இராச்சியம் அடையப் பட்டது; அதுதானும் கைகேயியின் கொடிய தொழி லால் சடுதியில் அடையப்பட்டது!"

— வான்மீகி

## II

### இனிக் கம்பர்:

இராமன் தசரதச் சக்கரவர்த்தியைத் தேடிக் கைகேயியின் மாளிகையை நோக்கி வருகின்றான். அதனைக்கண்ட கைகேயி,

"நாயகன் உரையான் வாயால் நானிது பகர்வன் என்னுத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்"

'சக்கரவர்த்தி எனக்குத் தந்த வரங்களைத் தமது வாயால் இராமனுக்கு உரைக்கமாட்டார். நானே அந்தக் கைங்கர்யத்தைச் செய்து வைப்பேன்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, இராமன் சக்கரவர்த்தி யைச் சந்திக்காத பிரகாரம் அவனெதிரில் வருகின் முள்; தனது சேடியர்களோடுகூடக் கூடாமல் தனித்து வருகின்றாள். இராமன் கைகேயியைத் தாயென்ற வார்த்தைகளினால் மாத்திரம் சொல்லுகிறவனல்லன்— உண்மையில் பெற்ற தாயாகவே நினைக்கிறவன்—அவ னுக்கு முன்னே ஒரு யமப்பெண்போல வருகின்றாள். இருவருஞ் சந்திக்கின்றார்கள்.

"வந்தவ டன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்
அந்திவந் தடைந்த தாயைக் கண்டஆன் கன்றி னன்னான்."

*விழுந்து நமஸ்காரம் பண்ணி எழுந்து துவண்டு கொண்டு நின்றான். அழகான பவளவாயை ஒருகை பொத்துகின்றது. மற்றொரு கை உடுத்த வஸ்திரத்தை ஒதுக்குகின்றது.*

கைகேயி: *"மைந்தனே! உனக்கு ஒரு வார்த்தை சொல்ல வேண்டியிருக்கின்றது. அது உன் தந்தையால் கட்டளை செய்யப்பட்டிருக்கின்றது. அந்தோ! அதுவும் என்னாலே தான் உனக்கு உணர்த்தவேண்டியுமிருக்கின்றது. என் விதி இப்படியாய்விட்டது.*

இராமன்: *"கட்டளை செய்தவர் தந்தையாகிய சக்கரவர்த்தி! அக்கட்டளையை உரைப்பவர் அன்னையாகிய நீர்! இங்ஙனமாயின், என்னைப்போல அதிர்ஷ்டசாலிகளாய்ப் பிறந்தவர்கள் யார் இருக்கின்றார்கள்? நான் உய்ந்தேன். என் தவத்தினால் வரக்கடவ பயன்கள் வந்துவிட்டன.*

"தந்தையுந் தாயு நீரே தலைநின்றேன் பணிமின் என்றான்"

கைகேயி:

"ஆழிசூ முலக மெல்லாம் பரதனே ஆள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணிய நதிக ளாடி
ஏழிரண் டாண்டின் வாஎன்று இயம்பினன் அரச னென்றாள்."

*ஸ்ரீராமனது திவ்யமான செந்தாமரை வதனம் மலர்ந்து விகசித்தது; இதற்கு முன் எப்பொழுதாவது இப்படி மலர்ந்ததில்லை; இனி எப்பொழுதாவது இப்படி மலரப்போவதுமில்லை. அது மலர்ச்சியின் அந்தத்தை அடைந்து விட்டது.*

"அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா"

*பார வண்டியினின்றும் அவிழ்த்து விட்ட இளங் காளைபோல ஸ்ரீராமன் காட்சியளிக்கின்றான்.*

**இராமன் :**

"மன்னவன் பணியன் றாகில் நும்பணி மறுப்ப னோஎன்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ."

*"அம்மா! நான் வேறு பரதன் வேறா? இருவரும் ஒருவர் தாமே; அதுகிடக்க, சக்கரவர்த்தியின் கட்டளை என்று ஏன் சொல்லவேண்டும்? தங்கள் கட்டளை யாயே இருக்கட்டும்! அதனை மறுத்தற்கு நான் யார்?"*

"மின்னொளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையுங் கொண்டேன்"

*[ஸ்ரீராமன் கோசலையின் மாளிகைக்குப் போகின்றான். "பங்கமில் குணத்து எம்பி பரதனே துங்க மாமுடி சூடுகின்றான்" என்று தன் தாய்க்குச் சந்தோஷம் தெரிவிக்கின்றான் ]*

**கோசலை :** *'நீ மூத்தவன் இவன் இளையவன்' என்கின்ற ஒன்றே அல்லாமல், பரதனில் என்ன குறை இருக்கிறது?*

"நிறை குணத்தவன் நின்னினும் நல்லனால்
குறைவிலன் எனக் கூறினள்."

"நன்று நும்பிக்கு நானிலம் நீகொடுத்து
ஒன்றி வாழுதி ஊழிபல என்றாள்"

*"நீ அவனுக்கு உபகாரியாய் வாழுவாயாக. பரதன் அரசு புரிவது நன்று!*

"மன்னவன் ஏவியது அன்று எனுமை
மகனே உனக்கு அறன்"

"தந்தை சொல் தவறாமைதான் உனக்குத் தர்மம்"

*[இராமன் காட்டுக்குப் போகிற சம்பவத்தை, முனிவர்களின் ஆசிரமத்தில் வாசம் செய்கிற ஒரு புண்ணியம் தனக்கு வாய்த்திருப்பதாக வாய்பாடு மாற்றி மெல்லச் சொல்லுகின்ருன். அதனாலே, கோசலைக்குத் தாங்கவொண்ணுத துக்கம் உண்டாகிறது.]*

**இராமன் :**

"சித்தநீ திகைக் கின்றதென் தேவரும்
ஒத்தமா தவஞ் செய்துஉயர்ந் தாரன்ருே
எத்த னைக்குள ஆண்டுகள் ஈண்டுஅவை
பத்து நாலு பகல்அல வோஎன்ருன்."

*"பதினன்கு வருடம் என்ருல் ஒரு நாலு பத்துப் பகல்கள் தானே! இதற்கு ஏன் திகைக்கவேண்டும்."*

**கோசலை :**

*சக்கரவர்த்தியின் ஆஞ்ஞை அங்ஙனமாயின்,*

*'ஏகல் என்பது யானும் உரைக்கலேன்'*

*'காட்டிற்கு ஏகற்க' என்று நான் தடுக்கமாட்டேன்.*

*[இராமன் வனத்திற்குப் போய்விட்டான். சக்கரவர்த்தி சுவர்க்கம் போய்விட்டார். பரதன் கோசலை கால்களில் விழுந்து புலம்புகின்ருன். அவனுடைய தூய்மையான வார்த்தைகளினுல், கைகேயியின் சூழ்ச்சிகளை அறியாதவன் என்று கோசலை அறிகின்ருள். அதனுல், அவளுக்கு மற்ருெரு சோகம் உண்டாகிறது.]*

"தூய வாசகஞ் சொன்ன தோன்றலைத்
தீய கானகந் திருவின் நீங்கிமுன்
போயி ஞன்வரக் கண்ட பொம்மலாள்
ஆய அன்பினுல் அழுது புல்லினுள்."

*தூய்மையான வார்த்தைகளைப் பரதன் சொன்ஞன். அதனைக் கேட்ட கோசலைக்கு, காட்டுக்குப்*

போன இராமன் திரும்பி வந்துவிட்டான்—அவ்வாறான உணர்ச்சி. அழுது அழுது அவள் பரதனைக் கட்டித் தழுவுகின்றாள்.

'கொம்மை வெம்முலைக் குமுறு பால்உக
விம்மல் விம்மநின்று அழுது வீங்கினாள்'

அவள் உடல் உருகிவிட்டது. முலைகளிலிருந்து பால் குமுறிப் பாய்கின்றது.

கோசலை :

'முன்னை நுங்குல முதலு ளோர்கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்
மன்னர் மன்னவா!'

என்று (பரதனை) வாழ்த்தினாள்.

## III

வான்மீகியின் இராமன் தசரதச் சக்கரவர்த்தியை நேரே கண்டிக்கின்றான், 'எனது தந்தை மன்மதன் வலையில் சிக்கியிருக்கிறார்' என்று நிந்திக்கின்றான்; தசரதர், இராமர் ஏறிச்சென்ற இரதத்தைப் பின் தொடர்ந்து சென்று, 'இரதத்தை நிறுத்துங்கள், என்று தடுக்க, 'ஆலோசியாமல் இரதத்தை ஓட்டுங்கள்' என்கின்றான் இராமன். அன்றி, தன் தந்தையை ''தங்கள் பேச்சுக் கேட்கவில்லையே'' என்று ஏமாற்றும்படி பாகர்களை ஏவுகின்றான். 'இரக்கம் எங்கு உகுத்தாய் என்பால் எப்பிழை கண்டாய் அப்பா!' என்று இனி ஒரு சமயம் வாலி இரங்குவதற்குத் தக்க பாத்திரமாய் இப்பொழுதே இராமன் தோன்றுகின்றான்.

இன்னுங் கைகேயிமீது, ''என்னைப் பொருளாசை கொண்டவனாக நீர் நினைக்கவேண்டாம்'' என்று கோபித்துப் பாய்கின்றான். தன்னைத்தானே புகழுகின்றான்; தன்னைப் பரதனைப்போல நடத்தவில்லையென்று பெரிய

குறைகளுங் கூறப்படுகின்றன. பரதனை இராமன் மதிக்க வில்லை. பரதன் கைகேயி வசப்பட்டு நிற்பான் என்றும், சக்கரவர்த்தியையும், ஏனைய தாய்மார்களையும் சீதையை யும் அவமதிப்பானென்றுங் கருதுகின்ருன்.

தான் சந்திக்கிறவர்களிடமெல்லாம் ''பரதன் அர சாளப் போகின்ருன்; நான் காட்டுக்குப் போகின்றேன்; இது சக்கரவர்த்தியின் கட்டளை'' என்று பெருமூச்சு விடுகின்ருன், இராமனுடைய இருதயம் வெட்கத்திஞலும் துக்கத்திஞலும் நிரம்பியிருக்கின்றது. அவன் தன்னிடந் தோன்றும் விகாரங்களை மறைக்க முயலுகின்ருன். அவ னுடைய அழகான முகம் வாடி வதங்கிக் கறுகறென்று கறுத்து விட்டது. இராமனைக் காட்டுக்குப் போக்கலாம் போலத் தோன்றவில்லை; இதில் கைகேயிக்குப் பெரிய தோல்வி ஏற்பட்டாலும் ஏற்படலாம். இராமன் இலட் சுமணனுக்கு அண்ணஞகத்தான் தோன்றுகின்ருன்.

இனி, வான்மீகியின் கோசலை மகாபாரதத்தில் வரும் காந்தாரி போலத் தோன்றுகின்ருள்; தன் தலைமைப்பதவி போய்விட்டதே என்று புலம்புகின்ருள். சக்கரவர்த்தியின் சத்தியவாக்கை அவள் பொருட்படுத்தவில்லை. தந்தை சொல்லைக் கடக்கும்படி இலட்சுமணன் கொண்டுவந்த பிரேரணையைக் கோசலை மனமுவந்து அநுவதிக்கின்ருள். பரதன் இராச்சிய ஆசை பிடித்தவனென்றும், இராசா வான பிறகு தன்னைப் பொருட்படுத்தமாட்டானென்றுங் கூறுகின்ருள். கைகேயி வெகுகாலந் தொட்டு, பதினேழு வருஷ காலமாகச் சூழ்ச்சி செய்து வந்திருக்கிருள் என்பது கோசலை கருத்து.

## IV

இனிக் கம்பருடைய இராமன் தசரதச் சக்கரவர்த்தியை நேரே சந்திக்கவில்லை; ''ஒன்று உனக்கு உந்தை மைந்த! உரைப்பதோர் உரை உண்டு.'' என்று கைகேயி சொன்ன போது, 'தலைநின்றேன் பணிமின்'! 'மன்னவன் பணி

யன்றாகில் நும்பணி மறுப்பனோ'! என்கின்றான். கைகேயி யிடம் வழக்கமாக எவ்வாறு நடந்திருக்கின்றானோ அவ் வாறே தான் இப்பொழுதும் நடந்திருக்கின்றான். அவள் வார்த்தைகளில் அவன் சந்தேகிக்கவில்லை. சந்தேகிக்க நியாயமும் இல்லை. இதனாலே சக்கரவர்த்தியை இராமன் சந்திக்கவேண்டிய சந்தர்ப்பம் இயற்கையில் இல்லாமலே அமைந்திருக்கின்றது. கம்பருடைய இராமன் இரதத்தில் ஏறிப்போகும்போது, தசரதர் தொடர்ந்து செல்லவில்லை. இராமன் இரக்கமின்றி 'ஓட்டுங்கள்' என்று பாகர்களுக்குக் கட்டளையிடவுமில்லை.

இராமனுக்கு இராச்சியபாரம் பாரமாகத்தானிருந்தது. "தெருளுடை மனத்து மன்னன் ஏவலில் திறம்ப அஞ்சி— இருளுடை உலகந் தாங்கும் இன்னலுக்கு இயைந்து" நின்றவன் இராமன். இப்பொழுது அவனுடைய முகம், 'அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்று' விளங்கு கின்றது. இராமன் பரதனைத் தன்னில் வேறாகக் கருதவில்லை. "பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" என்கின்றான்.

இராமனுக்குக் காடுகளிலே முனிவர்களின் ஆசிரமங் களில் வசிப்பதை எண்ணுந்தோறும் பெருங்களிப்பு உண்டா கின்றது. அதற்குப் பதினான்கு வருடம் போதாமல் இருக் கின்றது. அக் காலத்தைப் 'பத்துநாலு பகலல்லவோ' என்கின்றான்.

இனிக் கோசலை, தந்தை சொல்லைக் கடவாமைதான் உனக்குத் தருமம் என்று இராமனுக்கு உபதேசிக்கின்றாள். பரதனை 'நிறைகுணத்தவன் நின்னினும் நல்லன்—குறை விலன்' என்கின்றாள்.

இராமன் காட்டுக்குப் போய்விட்டான். பரதன் கோசலை காலில் விழுந்து புலம்புகின்றான். அவளுக்கு என்புதோல் போர்த்த உடம்பு அன்புமயமாய்விட்டது. முலைகளிலிருந்து பால் சுரக்கிறது. இராமனில் வேறாகப் பரதனைக் கோசலை கருதவில்லை;

இராமன் காட்டுக்குப் போகிற சம்பவம் மாத்திரங் கோசலையை எரிக்கின்றது. அந்தச் சந்தர்ப்பத்திலே கூட, சக்கரவர்த்தியின் ஆணை அப்படியிருக்குமாயின், "ஏகலென்பது யானும் உரைக்கலேன்" என்கின்றாள். கோசலை தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுபவளாய்த் தோன்றுகின்றாள்.

## V

"தேவ பாடையில் இக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னார்உரை யின்படி நான்தமிழ்ப்
பாவி னாலிஃது உணர்த்திய பண்பரோ"

முந்திய நாவினர் என்றது வான்மீகியை. வான்மீகி உரைத்த உரையின்படி ஒரு அக்ஷரமுந் தவறாமல் அந்தப் படியே தாம் தமிழில் படியெடுத்துப் பாடியதாகக் கம்பர் தலையில் அடித்துச் சத்தியம் பண்ணுகின்றார்.

"வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்"

வான்மீகியின் கவிகள் தீங்கவிகள். அக்கவிகளின் தித்திப்பைத் தேவர்கள்கூடச் செவிகளாரப் பருகுகின்றார்கள்.

"மூங்கையார் பேச லுற்றார் என்னயான் மொழிய லுற்றேன்"

மூங்கையார் — ஊமையார். வான்மீகியின் பாட்டுக்களோடு நோக்க என்னுடைய பாட்டுக்கள் ஊமைப் பாட்டுக்கள். அப்படியிருந்தும் நானும் பாடிப்போட்டேன் என்கின்றார் கம்பர்.

"செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே
நொய்தில் நொய்யசொல் நூற்கலுற் றேன்எனே!"

செய்தவன் — வான்மீகி. அவருடைய வாக்குக்கள் நிலைத்து வழங்குகின்ற தேசத்திலே, எளிதினும் எளிதாகிய சொற்களினாலே, யானும் ஒன்றைச் செய்யத் தொடங்கி விட்டேன்; என் அறியாமை இருந்தபடி என்னே? என்று தம்மைத்தாமே கம்பர் இகழ்ந்து கொள்ளுகின்றார்.

கம்பருடைய வாக்குக்களைப் பார்த்தால், தமக்கும் வான்மீகிக்கும், தமிழ் இராமாயணத்துக்கும் வான்மீகத்துக்கும் இடையில், அணுவுக்கும் மகாமேருவுக்குமுள்ள வேறுபாடு அவருக்குத் தோன்றுகின்றது.

## VI

ஆனால், இங்ஙனமெல்லாம் கம்பராலே பாராட்டப்பட்ட — "திங்களின் செவிக ளாரத் தேவரும் பருகச் செய்த" — வான் மீகிதானே! இங்கே எடுத்துக்கொண்ட இந்த வான்மீகி?

— ஈழகேசரி ஆண்டுமடல் — 1939

---

நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து அன்னம், வஸ்திரம் முதலியவற்றைக் கொடுத்து, உயர்வாகிய இலக்கண விலக்கியங்களையும் சைவசாத்திரங்களையும் கற்பித்தல்வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்.

— நாவலர்

௨

# வடுவடு நுண்ணயிர்

சங்க நூல்கள் பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்கீழ்க் கணக்கு என்று ஒரு பாடம் ஒப்பிக்கப்பட்டு வருகின்றது. சங்க வரலாறு பேசுங் களவியலுரை இக்கூட்டத்தில் எட்டுத்தொகையை மாத்திரம் சங்கநூலென்று ஒப்புக்கொள்ளுகின்றது. பிற்காலத்தில் மணிமேகலை முதலியவைகளையுஞ் சங்க நூலாக்குதற்கு அறிந்தும் அறியாமலும் முயற்சி நடந்திருக்கிறது. சங்கச் செய்யுள்கள் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுபவைகள் எட்டுத்தொகை நூல்களேயாம்.

எட்டுத்தொகையில் ஒன்றாகிய பதிற்றுப்பத்து ஆதியும் அந்தமும் இல்லாதது. முதற்பத்தும் இறுதிப்பத்துஞ் சிதைந்து பதிற்றுப்பத்து எட்டுப்பத்தாய் விட்டது; அதாவது எண்பதாய் விட்டது.

சங்கநூற்செல்வர் பண்டிதர் அருளம்பலவனாரின் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை ஐந்தாம் பத்து முடியவுள்ள

பகுதி முன்னமே வெளிவந்துவிட்டது. இப்பொழுது ஆறும் பத்துத் தொடக்கம் மிகுதியும் முதற்பத்து இறுதிப்பத்துக் களிற் கிடைத்த பகுதியும் வெளிவந்திருக்கின்றன.

* * *

*நண்டுகள் தம் அடிச்சுவடுகள் :—*

ஆறும் பத்தின் முதற்பாட்டு 'வடுவடு நுண்ணயிர்' என்பது. இப்பாட்டுத் 'துளங்கு நீர்' என்று தொடங்கு கிறது. இப்பாட்டில் பல்லாற்றானுந் தலைசிறந்ததொரு தொடர் 'வடுவடு நுண்ணயிர்'. அதனாலே இப் பாட்டுக்கு அத்தொடராலே பெயர் வழங்கப்பட்டது.

"தண்கடற் பரப்பின்
அடும்பம லடைகரை அலவ னாடிய
வடுவடு நுண்ணயிர் ஊதை உஞற்றுந்
தூவிடும் போந்தைப் பொழில் ....."

என்ற பகுதி மேற்குறிப்பிட்ட பாட்டில் வருகின்றது.

கடற்பரப்பின் இடுமணல் அடைகரை அடும்பு என் கின்ற கொடிகளோடு கூடியது. இடுமணல் அலைகள் கொண்டுவந்திட்ட மணல். அவ்வாறாகிய மணல் மிக்க கடலின் கரையிலே ஒரு போந்தைப் பொழில் இருந்த வாறு புனைந்துரை செய்கின்றது குறிப்பிட்ட பகுதி. போந்தை - பனை.

கடலுக்கும் போந்தைப் பொழிலுக்கும் நடுவண் இடு மணற் பரப்பின்மீது, 'வடுவடு நுண்ணயிர்' அமர்ந்திருக் கின்றது. அது, போந்தைப் பொழிலகத்து மணற் பரப் பில் நடத்தலும் ஆம்.

'வடுவடு நுண்ணயிர்' என்பதில் முதற்கண் 'வடு' அலவனாடிய வடு. அலவன் - நண்டு. வடு - சுவடு. அதா வது நண்டு நடந்த அடிச்சுவடு. ஆடுதல் - விளையாடுதலு

மாம்: 'வடுவடு' என்பதில் இறுதிக் கண்ணது 'வடு' அன்று; 'அடு' ஆம். வகரம் உடம்படுமெய். இந்த 'அடு' அடுதல் என்னுந் தொழிற்கண் அடியாய் வருவது.

'வடு' வாகிய சுவட்டினை அடுதலை உஞற்றுவது ஊதை. ஊதை — காற்று மெல்லென ஊதுவது போன்ற சின்னஞ் சிறிய காற்று அது. ஊதுவதனால் ஊதை எனப்பட்டது. 'ஐ' வினைமுதற் பொருண்மை விகுதி, அயிர் — நுண்மணல்.

ஊதை வடுவை அடுதலை அயிரை உஞற்றுவதனால் இயற்றுகின்றதென்க.

கடற்கரை மணற்பரப்பில் நண்டுகள் நடந்து, தம் அடிச்சுவடுகளாகிய வடுக்களைப் பொறித்து வரிசெய்கின் றன. வடுக்களாகிய வரிகளை அடுத்து தோன்றுமே அடு தலைப் புரிந்து, அவ்வாற்றான் வடுவை மெல்ல மெல்ல இல்லையாகச் செய்து விடுகின்றது ஊதை. அதுதான் துண் துகளாய அயிரை உஞற்றுதன் மூலம் அதனைச் செய்கின்றது.

வடுவை அடுவது ஊதையேயாயினும்; அடுதல், அவ் வூதை ஊதி அயிரை உஞற்றுவதானுறுதலின், அடுதல் வினை அயிரின் வினையாயிற்று. 'வடு அடு அயிர்' என்க. அடு காலங்கரந்த பெயரெச்சம், முக்காலப் பொருண் மையும் ஈண்டைக்கு இயையும், என்னை? அடுதல் இயற்கை நிகழ்ச்சியாய் எக்காலத்ததென்று புலஞ்செய்தற்கேலாமையி னென்க.

இனி, உஞற்றுதல் என்பதும் 'அடுதல்' போன்றதோ ரியற்கை நிகழ்ச்சியாம். அயிர் அடாமலடுவது போன்று, அஃது அங்ஙனமாமாறு ஊதை உஞற்றும லுஞற்றுகின்றதென்க.

* * *

**கொடுக்கத் தெரிந்தவர்கள்:**

ஊதை ஊதிப் பருமணல் போக்கி நுண்மணல் செய்ய, அந்நுண்மணலாகிய அயிர் அவ்வூதையின் ஊதுகையா

லுயிர்ப்புற்று வடுவினே அடுதல் செய்கின்றதென்பது. நுண்மை பருமை கூறலாகாமை குறித்தது: கதிரெழு துகளினும் நுண்ணிது பரமாணு. அதனினும் நுண்ணிது அயிர். அதுதான் மலர்களின் மகரந்தம் போல்வதென்க.

அயிர் என்பதே நுண்பொருட்டாதலின், 'நுண்ணயிர்' என்பதில் நுண்மை மிகையாம் பிறவெனின், அற்றன்று. அது நடுநிலே விளக்காய் அடுதலோடும் உஞற்றுதலோடும் இயைந்து அவ்விரு தொழில் நுட்பங்களினியற்கையை இனிது தருதலினென்க.

நுண்ணிதின் அடுதல் செய்யும் அயிரை ஊதை நுண்ணிதில் உஞற்றுமென்பது. நுண்மை தொழில் நுண்மை. நுனித்து நோக்கற்கு மருமையாம் என்றவாறு.

உதை உஞற்றுவது வெற்றயிரன்று; அடுதல் செய்யப் பெயர் தரும் அயிராமென்பது உய்த்துணரற்பாற்று. பெயர்ச்சி உஞற்றுதற்பேறு.

ஊதை அயிரானடுவதனே, எழுத்தாணி எழுதிற்றென்ற வாறு அயிர் அடும் என அயிர்மேலேற்றி, அவ்வாற்ருன், 'அடு அயிர்' என்ற சிறப்பானும்,

அச்சிறப்பைப் பல்லாற்ருனுஞ் சிறப்பிக்கும் 'நுண்' என்ற அடைச் சிறப்பானும்,

இடுமணலழகுக்கு அழகுசெய் சுவடு, வடுவாய், அழிந்து, மற்ருேரழகுதருஉம் உயர்தனிச் சிறப்பானும், இன்னேரன்ன பிறவாற்ருனும் இப்பாட்டுக்கு 'வடுவடு நுண்ணயிர்' என்ற பெயர் ஆயிற்று.

'வடு' அழிதரலினுந் தருஉஞ் சிறப்பாவது, அழிவு செயற்கையாகாது இயற்கையாய் நிகழ்வில் இறப்பில் அழகு செய்வதோடமையாது, எதிர்வில் அழிவு நடந்த இடம் இஃதென்று கருதற்குமரியதோரழகையுந் தருஉஞ் சிறப்பாமென்க.

இளமையும் வளர்ச்சியும் வாய்ந்ததொரு யாக்கைக்கண் உளதாயதோருறு, உதிரமாதி தாதுக்களின் வினைவால் மெல்ல மெல்ல மாய்ந்து இல்லையாய், ஊறு உற்றுழியும் உணர ஏலாதவாறு போதலில் வைத்து ஈண்டைச் சுவடு ஆகிய வடு மாய்ந்து இல்லையாகை உணரற்பாற்று.

கொடுக்கத் தெரிந்தவர்களிடம் இரப்பதினும் ஓர் அழகு உண்டு என்பர் வள்ளுவதேவர். அவ்வாறே அடாமல் வடுவதாகிய அயிர்வடுவை அடும்போதும், அத்தொழில் முற்றும்போதும் உளவாம் அழகுகள் அட்டபின் எதிர்வில் உளதாம் அழகுக்கு எவ்வாற்ருனுங் குறையாவாமென்க.

அலைகளாகிய கைகள் இடுமணற்பரப்பாகிய வெண்டுகிலை விரித்து உலகுக்கு ஆடையாகிய கடலுக்கு ஆடை புனைகின்றன. அலவன்கள் அவ்வாடைமீது, நடந்து, தம் கால்களால், கைபுனைந்தியற்ருக் கவின்பெறு வனப்புக்களை ஆக்குகின்றன. அவ்வனப்புக்களை 'வடு' என்று, அவற்றை அடுதலில் மற்ருெரு வனப்பைப் செய்கின்றது ஊதை உளுற்றும் நுண்ணயிர்.

இவ்வாற்ருல் தன்னியற்கை வனப்பை நுண்ணிதின் உணரவைக்கின்றது 'வடுவடு நுண்ணயிர்.'

அதன் ஆராய்ச்சியுரை கடல்போற் பரந்து, எட்டுத் தொகையில் பதிற்றுப்பத்து ஒழிந்த ஏனைய தொகைகளிலும் பிற இடங்களிலும் இடுமணற்பரப்பில் நண்டுகள் நடந்த இடமெல்லாம் நடந்து, நடைவேறுபாடுகளைக் கண்டு மகிழ்ந்து எத்தனையோ சங்கத்துச் செய்யுள்களைச் சுவை சொட்டச் சொட்ட நுகர வைக்கின்றது. இஃது ஆராய்ச்சி உரையின் தனிச்சிறப்பு.

மேலும் பதிற்றுப்பத்து நண்டின் மூலம் நற்றிணை நண்டு, கற்றறிந்தாரேத்துங் கலித்தொகை நண்டு, அகத்து நண்டு, மற்றும் புறத்து நண்டு, ஐங்குறு நூற்று நண்டு

என்றித்துணை நண்டுகள் நடந்த வழிகளையெல்லாம் எடுத்துக் காட்டி வாயூற வைக்கின்றது அருளம்பலவனாரின் ஆராய்ச்சி உரை. நண்டுகள் நடந்தநடை ஒவ்வொன்றனையும் தனித் தனி எடுத்து இனித்தல் செய்யின் நண்டு இலக்கியம் அனந்த பேதமாம். அது நிற்க.

* * *

**சங்க காலத்து நண்டுகள்:**

இனிச் சங்ககாலத்து நண்டுகளையெல்லாம் ஒருங்கு நுகர்ந்து ஏப்பம் இட்ட பிற்றை ஞான்றைப் பெரும்புல வர்கள்பால் அந்நண்டுகளின் போக்கைச் சிறிது சிந்திப்பாம். யாழ்ப்பாணத்துச் சின்னத்தம்பிப் புலவர் சங்கத்துச் செய் யுள் நண்டுகளை நன்கு நுகர்ந்து அனுபவித்தவர் போலும். அவர் வேதாரணியமாகிய மறைக்காட்டுக்கு அடிக்கடி தலயாத்திரை செய்பவர். ஒருமுறை அத்தலத்துக்குப் போனபோது அவர் வாயிலிருந்து சில நண்டுகள் வழுவி வயல் வரம்பில் வீழ்ந்தன. அப்பொழுது 'வடுவடு நுண் ணயிர்' உளுற்றும் ஊதை அங்கேயும் ஊதியது. அது குளிர்ந்த ஊதை. ஊதை குளிர்காற்றுமாம். குளிர் காற் றினாலே போலும் அந்த நண்டுகள் நடந்து வரிசெய்யாமல் வரம்பில் வரிசையாக இருந்து வெயில் காய்கின்றன. இக் காய்வு இடுமணற்பரப்பிற் சுவடு பொறித்து வடு வைத் தற்கு வாய்ப்பு அளிப்பது போலும். "வயலில், வண்டு தையால் வெயில்காய் மறைக்காடு" என்று ஒரு தொடர் சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய மறைசை அந்தாதியில் வருகின்றது. புலவரின் நண்டு அந்தாதி நண்டேயாயினும், பதிற்றுப்பத்து முதலியவைகளில் வரும் நண்டுகள் போலாகாது, காலமென்னும் பதஞ்செய் கருவியினால் பதப்படுத்தப்பட்டு, கற்றோரும் மற்றோரும் ஒருங்கு நுகர் தற்குரியதாய், கடுநடைப்பட்டதாகாமல் அதே சமயத்தில் வரம்பிகவாமே வரம்பிலமர்ந்திருக்கின்றது. இந்த வரம்பு தரு நண்டு வரும் பாட்டுக்கு, 'நண்டூதையால் வெயில் காய்... ..' என்று தொடங்குந் தொடராலே பெயர்

வைத்தல் சாலும், அதனைச் சங்கத்தமிழ் நண்டுகள் ஒப்புக் கொள்ளும். ஆனால், அது முடியாதவாறு புலவரின் நண்டுப் பயிற்சி விசேடம் போலும், அப்பாட்டில் வரும் ஏனைய தொடர்கள் அத்தொடருக்குச் சற்றும் எடை குறையாமல் அமைந்து மிளிர்கின்றன.

"ஒண்டுதை யுண்புற வீர்மறந் தாரெம தூரர்முன்னாள்
மண்டுதை யாக்கிய சோறீந் திடமகிழ்ந் தார்வயலில்
நண்டுதை யால்வெயில் காய்மறைக் காட்டுறை நாகமணி
வண்டுதை யோதிக்குச் செம்பாதி யாதி மணிவரைக்கே"

என்பது வயல் வரம்பில் நண்டு வெயில்காய்கின்ற மறைசை யந்தாதிப் பாட்டு.

களவு காலத்தில், இளமை நினைவுகளா லிரங்குவா ளொருத்தி, 'அக்காலத்தில் மண் தூதையிலாக்கிய மணற் சோறுகறி உண்டு மகிழ்ந்தவர் அவர்; நமர் அவர்; இப் பொழுது மறந்துவிட்டார். ஒள்ளிய தூதையாகிய கோளாங் கற்களை உண்ணும் புறாக்களே, நீவிர் நாம் மண்சோறு செய்து உண்டு மகிழ்ந்ததை அறிவீரல்லீரோ! அன்று நடந்த அதனை, வண்டூதுகின்ற ஐவகையாக முடிக்கின்ற ஓதியுடைய ளாகிய தேவிக்குச் செம்பாதியை நல்கிய ஆதிவைகும் மறைக்காட்டு மலையில் அவரைச் சந்தித்துச் சொல்லுதல் செய்யீரோ! குளிரால் நலிவுறும் நண்டு போல அந்த வெய்யோரின் வரவு நோக்கி அந்தோ யான் பெரிதும் வருந்து கின்றேன்" என்றிங்ஙனம் புலம்புகின்றாள். இப்பொருளில் வருகின்றது இந்தப் பாட்டு.

இதில் அமைந்த,

(1) "'ஒண்டூதை உண்புறவீர்''
(2) 'மண்டூதை யாக்கிய சோறு'
(3) 'வண்டூதை யோதி'
(4) 'ஒதிக்குச் செம்பாதியாதி'

என்பன சாதாரணமான தொடர்களா? இத்தொடர்கள் ''வண்டூதையால் வெயில்காய் மறைக்காடு' என்ற

தொடரினின்றும் எவ்வாற்ருனும் எடை குறைந்தன வாகாவே. தொடர்கள் சங்ககாலத்து நண்டுப்பயிற்சியால் அமைந்தனவாகலாம்; ஆகுக. அவையனைத்தும் காலத் தொடு பட்டனவாயினும், தமிழ் வரம்பில் இலக்கியத் தேனை இனிது ஒழுக்கி அமைந்து கிடக்கின்றன. கிடக்குக. இவை ஒவ்வொன்றனையுந் தனித்தனி நுகரிற் பெருகு மென்று விடுக்க. நண்டுதந்த பேறுகள் என்று அவைகளை, வைத்து வாழ்த்திவிட்டு அப்பால் நடப்போமாக.

நண்டின் சுவடு வடுவாய்ப் போக அதனை ஊதையின் உதவியால் அடுதல் செய்து, அவ்வடுதலில் அழகு தந்தது அயிர். அடுதல் செய்தலில் மற்ெருரு வடு வினையுமாயின் அயிர் செயிராய் நிந்திக்கப்படும். செயிர்–குற்றம். பதிற்றுப் பத்து அயிர், வடுவை அட்டு, அழகு செய்து சிறப்புற்றது. அதுநிற்க.

**சுவடுகளில் பலவகை:**

சுவடுகளிற் பலவகை உண்டு. அவற்றுள் ஒருவகை மேலே உரைக்கப்பட்டது. மற்ெறுன்று ஆன்றேர் நடந்த அடிச்சுவடு. அது அப்படியே வைத்துப் பேணற்பாலது. இலக்கிய உலகிலே புலவர்கள் சென்ற அடிப்பாடும் அன்ன தேயாம். அடிப்பாடு – வழி.

உரையாசிரியர்கள் புலவர்கள் நடந்த அடிப்பாட்டுக்குச் செயிர்வாராமல் கண்ணுங் கருத்துமாய் அதனைக் காத்து வந்திருக்கின்ருர்கள்.

கடைச்சங்கத்துத் தலைமைப் புலவராகிய நக்கீரனுர் களவியற் பொருள் கண்டவர். அவர் உரையாசிரியர்களுக் கெல்லாம் வழிகாட்டியவர். பிற்றைக் காலத்தவர்களில் பரிமேலழகரும் சிவஞான முனிவரும் உரையாசிரியர்களுக்கு இருகண்கள். யாழ்ப்பாணத்திலே அவர்களைப் பின்பற்றிய வர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் அவர் மருகர் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளையுமாவர். நாவலர் உரை

சொல்லுவதாலும் எழுதுவதாலும் உரைமரபைப் பேணித் திறம்பட வளர்த்தவர். பொன்னம்பலபிள்ளை உரைசொல்லுவதால் அதனை அழகுற வளர்த்தார். நாவலர் செய்த திருமுருகாற்றுப்படையுரை, கோயிற்புராண உரை, சைவ சமயநெறி உரை முதலியவைகள் உரை எழுதுவார்க்கு உரைகற்களாம்.

உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை நாவலருக்கும் வித்துவசிரோமணிக்கும் மாணவர். இருவர் குரவரிடத்திலும் உரை சொல்லும் வித்தையையும் எழுதும் வித்தையையும் நன்கு பயின்றவர் உரையாசிரியர். அவர் திருவாதவூரடிகள் புராணத்துக்கும் அபிராமியந்தாதி, புலியூரந்தாதி என்பவைகளுக்கும் எழுதிய உரையும் தாமியற்றிய ஈழமண்டல சதகத்துக்கு எழுதிய உரையும் இனி வருவார்க்கு மரபு பிறழாத நல்ல வழிகாட்டிகள்; மிகப் புனிதமானவைகள்.

வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையைப் போலப் பதப் பொருள் கூறிச் செய்யுணயங்களைச் சுவை சொட்டச் சொட்ட எடுத்து விரித்துரைப்பவர்கள் முன்னுமில்லைப் பின்னுமில்லை என்பார்கள். யாழ்ப்பாணத்திலே நல்ல முறையில் உரை சொல்லுகிறவர்கள் இருந்தால் அவர்கள் எவ்வகையாலோ பொன்னம்பலபிள்ளையோடு தொடர்பு பட்டவர்களாயே இருப்பார்கள். அவர் புராணங்களுக்கும் காவியங்களுக்கும் கூறிய உரைக்குறிப்புக்கள் உரைநயங்கள் யாழ்ப்பாணம் எங்கும் ஆங்காங்கே பரவியிருந்தன; இருக்கின்றன.

* * *

**கம்பராமாயண உரை நயங்கள்;**

கம்பராமாயணத்துக்கு அவர் சொன்ன உரைநயங்கள், அவர் வழிவந்த உரைக்குறிப்புக்களனைத்துக்குஞ் சிகரம் போன்றவைகள். அவர் கம்பராமாயணத்திற்கு ஆயிரம் முறை வியாக்கியானஞ் செய்திருப்பார். ஒவ்வொரு

முறையும் அவர் செய்யும் வியாக்கியானம், முந்தியமுறை செய்ததில் வேருய்ப் புதிதாய் இனியதாயிருக்கும் என்று வாயூறுவார் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை. பொன்னம் பலபிள்ளை அபர கம்பர். கம்பரின் கற்பனை நயம் பொன்னம் பலபிள்ளைக்குப் புணர்ந்தாற் புணருந்தோறும் புதிது. கம்பராமாயணத்தில் நல்ல சந்தர்ப்பத்தில் வருவதொரு பாட்டுக்குப் பெரிய சபை ஒன்றில் ஒருமுறை வித்துவ சிரோமணி விரிவுரை செய்த உரைநயம் ஒன்று உண்டு என்று வைத்துக்கொள்வோம். வித்துவ உலகம் வியந்து வியந்து பாராட்டியதாயும் அஃது இருக்கலாம். அந்த நயத்தை அவர்தம் மாணவர் அப்படியே ஏட்டில் ஏந்தி எடுத்து, அவர் முன்னிலையில், ஏற்ற செவ்வியறிந்து அதனை வாசித்துக்காட்டுவாராயின் உடனே பிள்ளை அதனைத் தள்ளி விட்டு, அதனின் வேருயதொரு நயத்தை எடுத்துரைத்து இனிக்கச் செய்வார். கம்பராமாயணத்தில் யாதொரு செய்யுளுக்காவது அதன் வியாக்கியானத்தைப் பிள்ளையிடம் முற்றக் கற்றுவிட்டோமென்று பிள்ளையின் மாணவர் கூறுவ தில்லை; அவரிடம் போனுல் புதிது புதிதாக வியாக்கி யானம் வந்துகொண்டிருக்கும் என்பார்கள். அடுத்தநாள் குறித்ததொரு செய்யுளுக்கு எடுத்துரைக்கும் வியாக்கி யானத்தை முதனுள் பிள்ளையே அறிந்திருக்கமாட்டார். பிள்ளையின் வாய் கவிநயஞ் சுரப்பதோர் புதிய நீரூற்று. திருநீலகண்டப்பாணரின் யாழ், பிள்ளையாரின் அருட் பாடலின் கருத்துக்கள் இசைக்கு அடங்காமல் அப்பால் நடப்பதைக் காட்டி நின்றது. அவ்வாறே வித்துவ சிரோ மணி ஒருகாலைக்கொருகால் வேறுபட்டுரைக்கும் வியாக்கி யானம், கம்பரின் கற்பனை நயம் உரைக்கு அடங்காமல் உள்ளத்தை ஊடுருவி நடப்பதைத் தொட்டுக்காட்டுவதா யிருந்தது.

பிள்ளைக்குச் சமையல் பண்ணிக்கொண்டிருந்த ஒருவர் தம்மறிவுக்கு ஏற்றவாறு, பிள்ளை உரை விரிக்கும்போது கேட்டும், பிள்ளையின் மாணவரிடம் வினவியும் குறித்து வைத்திருந்ததோர் உரைக்குறிப்பு இப்பொழுது அண்ணு

மலைச் சர்வகலாசாலையில் அரசு வீற்றிருக்கின்றது. கம்ப ராமாயண மூல பாடத் திருத்தத்துக்கு அவ்வுரைக்குறிப்புப் பேருபகாரம் புரியுமென்று சர்வகலாசாலை நம்புகின்றது.

கம்பராமாயணத்திலே பொன்னம்பலபிள்ளை நடந்த வழி, பிள்ளையின் அடிச்சுவடு, கல்லும் மண்ணும் புல்லும் புதரும் மூடிப் பழுது செய்யாமல் அப்படியே பேணிப் பாது காக்க வேண்டியவை. ஆனால், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை பிறந்த யாழ்ப்பாணத்தில் கம்ப ராமாயணம் இப்பொழுது என்ன பாடுபடுகின்றது!

* * *

**கும்பகர்ணப்படல பாடம்:**

டி. கே. சி. என வழங்குகின்ற சிதம்பரநாத முதலியார் இலக்கிய இரசிகர். அவருக்குக் கம்பராமாயணமென்றால் உணவு வேண்டா. அவருடைய உயிர்ப்புக் கம்பராமாயணம். அவர் ஒருமுறை 'ஒரு நல்ல இலக்கியத்தில் வெறுப்புண் டாக்க வேண்டுமானால், அதனைப் பாட புத்தகமாக்க வேண்டும்" என்றாராம்.

இங்கே ஒருமுறை சியேட்ட வகுப்பு ஒன்றுக்கு இலக்கிய இரசனையை அள்ளிச் சொரிவதாகிய கும்பகர்ணப்படலத் தைப் பாடமாக்கினார்கள். எத்தனையோ இளம் பெண்களும் ஆண்களும் அதனோடு மகா பாரத யுத்தஞ் செய்து, இலக்கிய விஷயத்தில் நவ கும்பகர்ணர்களாய் விட்டார் கள். அடுத்த முறையாக இப்பொழுது கம்பராமாயணத் தின் இருதயமான சுந்தரகாண்டத்திலே காட்சி நிந்தனை என்ற இரு படலங்கள் பாடமாக அவ்வகுப்புக்கு விதி விதித்திருக்கின்றது. ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாய் நின்று நெருப்புப்பொறி பறக்க யுத்தம் புரிகின்றார்கள்.

பாட புத்தகங்களை விதியானது விதித்தது விதிக்க முன்னமே, பாசறைகளாகிய புத்தகக்கடைகள் சங்கநிதி பதுமநிதியாகிய தம் இரு கரங்களையும் நீட்டிச் 'சர்ப்ப! சர்ப்ப!' (சீக்கிரம்! சீக்கிரம்!) என்கின்றன. வித்துவ சர்ப்

பங்கள் ஒன்றை ஒன்று முந்திக்கொண்டும் சீறிக்கொண்டும் அக் கரகமலங்களில் பாய்ந்து வீழ்ந்து கவ்வுகின்றன. மூலம் ஒரு புறம், உரை ஒருபுறம்; உயிர் ஒருபுறம், உடல் ஒரு புறமாக எழுதிக் குவித்துத் தள்ளிவிடுகின்றார்கள். பாசறைகளுக்கும் எழுதித் தள்ளியவர்களுக்கும் அதிர்ஷ்ட தேவதை அருள் புரிகின்றது. பாவம்! பிள்ளைகளைப் பயந்த பெற்றோர்கள் பணத்தை இறைத்துத் தம் பிள்ளைகளைச் சூடுகண்ட பூனைகளாக்குகின்றார்கள்.

ஒரே ஓர் உதாரணம் கேளுங்கள். நிந்தனைப் படலத்துக்கு வாருங்கள். அசோக வனத்திலே அடர்ந்து வளர்ந்ததொரு மரத்தின் கிளையிலே அநுமான் ஒட்டி மறைந்திருக்கின்றான். ஒருமுறை இராமன் ஒட்டிப்பதுங்கிய விதமாக அநுமானும் ஒட்டிப் பதுங்கியிருக்கின்றான். ஏதோ செவ்வி நோக்கியிருக்கின்றான்.

அரக்கியர்கள் அகன்று செல்லுகின்றார்கள். ஒரு பெண்கொடி தனிக்கின்றாள். கொழுகொம்பை இழந்த தனிக்கொடி அக்கொடி. அக்கொடியினெதிரிலே, பத்துத்தலையுள்ளதொரு பாரிய மரம்—நடக்கிறமரம் வந்து நிற்கின்றது. 'பாவம்! அந்தத் கொடி படருதற்கு ஒரு மரம் இல்லையே' என்று அந்த நடைமரம் எண்ணி இரங்கிற்றுப் போலும்! அக் கொடியை அணுகி நிற்கின்றது அந்தமரம்.

"கூசி ஆவி குலைகின்றாள்" அந்த மென் கொடி,

"ஆசையா லுயிர் ஆசு அழிகின்றான்" அந்த மரன்.

இருவர் உயிரும் நிலை குலைகின்றன.

"கூசி ஆவி
குலைவுறு வாளையும்
ஆசையாலுயிர்
ஆசு அழிவானையும்
காசில் கண்ணிணை
சான்றெனக் கண்டனன்"

அநுமான்.

கண்கள் சான்ருயிருக்க அநுமானின் உயிரே அந்தக் காட்சியைக் கண்ணுற்றது. அந்தக் காட்சி அவனுடைய உளத்துக்கப்பாலே உயிரையே ஊடுருவியது.

அந்த நேரத்தில் அந்தக் காட்சியைக் கண்ணுற்றபோது ஒட்டிப் பதுங்கியிருந்த அநுமானின் மனநிலை எப்படியிருக்கும்! கற்பனை செய்வோம் வம்மின்கள்!

திரௌபதியின் துகிலைத் துச்சாதனன் தொடுகிற சமயம், மாருதியாகிய வீமனின் கை எதனைத் தீண்டியது! விஜயன் கண் எதனை நோக்கியது! மற்றைத் தம்பியர் மனசில் என்ன மூண்டது!

"வீமன் கதைமேற் கைவைக்க
விஜயன் சிலைமேல் விழிவைக்கத்
தாமம் புனைதார்த் தம்பியருந்
தத்தம் மனத்திற் சினமூட்ட"

என்ற பாரதத்தை ஞாபகஞ் செய்வோமாக.

* * *

அநுமானின் நிலை விளக்கம்;

இராவணன் கைகளில் ஒரு சிறு விரலே யாகுக; அவ் விரல் அந்தப் பெண் கொடியை அணுகுமேயானுல்; அதனைக் கண்டுகொண்டு அந்த அநுமானுகிய மாருதி மரக்கிளையில் ஒட்டிக்கொண்டேதான் மறைந்தேதான் இருப்பான் கொல்லோ! கெட்டி! கெட்டி!! மாருதி தாவும் மரக்கிளைகள் அந்தச் சிரக்கிளைகள் பத்தும் ஆகாவோ! இராவண மராமரம் என்படுமோ! அஃது இயம்பவும் படுமோ! மாபாரதத்தை இராமாயணத்திற் பார்த்துவிடலாமே! அஃதிருக்கட்டும். இப்பொழுது அநுமான் என்ன செய்வான்? என்ன செய்கின்ருன்? மூலபாடத்தைப் படியுங்கள்; நான்காம் அடியை வாசியுங்கள். கம்பர் என்ன சொல்லுகின்ருர்?

"ஊச லாடல் ஒழிந்த உளத்தினன்"

என்கின்றது பாடபுத்தகப் பதிப்பு ஒன்று.

'கம்பர் ஒரு சமயம் தெருவோரம் ஒன்றில் நின்று, பாகவதர் ஒருவர் கம்பராமாயணப் பிரசங்கம் செய்வதைக் கேட்டு, பாகவதர் வாயில் தம்முடைய சொற்களும் இடையிடையே வருகின்றன என்றார்' என்ற கதை ஞாபகத்துக்கு வருகின்றது. அது கிடக்க.

'கூலிக்கு மாரடிக்கப்போன ஒப்பந்த அநுமான், மரக் கிளையொன்றில் மனநிம்மதியோடு நித்திரை தூங்கிக் கொண்டு தியான யோகத்தில் குந்தியபடியிருந்தான்' என்றுதானே 'ஊசலாடல் ஒழிந்த உளத்தினன்' என்ற பாடத்துக்குப் பயன்பறைதல் வேண்டும்.

மற்றொரு பாடபுத்தகப் பதிப்பு 'ஊசலாட ஒழிந்த உளத்தினன்' என்கின்றது. ஆனால், 'ஊசலாடல் ஒழிந்த' என்பதற்கே உரைவரைகின்றது.

பாடபுத்தகப் பதிப்புக்கள் அனைத்தையும் ஒருங்கு சேர்த்து ஆராய்ச்சி புரிய ஒரு டாக்டர் சாமிநாதையர் கிடைத்தாலோ! இனி எந்த ஐயர்களும் வரமாட்டார்களே. யாரும் எப்படியும் எதுவும் செய்யலாம் போலும்.

பழைய மூலபாடப் பதிப்பு.

"ஊச லாடி உலையும் உளத்தினன்"

என்கின்றது. அது பாடபுத்தகப் பதிப்பு அல்லாதது என்பது மனசிற் பதிக்கற்பாற்று.

'சீதா பிராட்டியை எடுத்துச் சுமந்து அப்பாற் செல்லுவோமா? அஃதின்றேல் இராவணனை உழக்கி அவன் தலைகளைத் திருகித் துவையல் செய்வோமா? எது செய்யத் தக்கது? என்றின்னோரன்ன பிரகாரம் பல்லாற்றான் ஊச

லாடி மனம் உளைந்தபடியே அன்றோ, அநுமான் இருக்கின்றான். அவன் உள உளைவு இங்ஙனமானால், உடல் உளைவு எப்படியிருக்கும்! வாலென்ன செய்யும்! காலென்ன செய்யும்! கைகள் ஒன்றையொன்று பிசைவதோடமையுந் தானே? இந்தச் சமயத்திற் கற்பனை சமுத்திரங்கள் கறுத்தெழுந்து கவிமழையைச் சொரியட்டும்! 'சோ என மாரி' பொழியட்டும்! என்றெல்லாஞ் சிந்தனையுலகிற் சஞ்சரிக்க வைக்கின்றது, 'ஊசலாடி உளையும் உளத்தினன்' என்ற பாடம்; அந்தப் பழைய மூலபாடம்.

பெண் பெற்றவர்கள், பெண்ணோடு உடன் பிறந்தவர்கள், நல்ல மனைவியை உடையவர்கள் ஒரு சீதை தனித்தவளாய்க் கூசி ஆவி குலைந்துகொண்டிருக்குஞ் சமயத்தில் ஓர் ஆஞ்சநேயனைக் கடறுவியவனை, ஊசலாடலொழிந்த உளத்தினனாய்ச் சும்மா குந்தியிருப்ப வைப்பது, இயலாத தொன்றேயாயினும் என்ன செய்வது! இக் காலத்துப் பொருளாதார சாத்திரம், "பணம் வந்திடப் பத்தும் பறக்கலாம்" என்று பாடபேதஞ் செய்து, அவர்களுக்கு ஊன்றுகோலாய் உதவுகின்றது போலும்! இந்த அருமந்த இரகசியத்தைக் காரைநகர் அருளம்பலவனார் அவர்கள் ஏனோ அறிந்து கடைப்பிடிக்கவில்லை! அந்த மனிதர் வாழத் தெரியாதவர்: தெரிந்திருந்தால் வாழ்க்கை முழுவதையும் ஒரு பதிற்றுப்பத்துக்கு அர்ப்பணஞ் செய்து பதினாயிரத்துக்குமேற் கைப்பொருளை இழந்தோ கடன்பட்டோ மனநோய் உடல்நோய்களுக்கு ஆளாதல் இல்லையாமே!

* * *

வேதங்களுக்கு உரைகண்டவராகிய தயானந்த சரஸ்வதி தாமியற்றிய சத்தியார்த்தப் பிரகாசத்தில், மாணவர்கள் படிக்கக்கூடாத புத்தகங்கள் இவையென்று வெளிப்பட வரையறை செய்துகொள்ளவேண்டு மென்று வித்தியா பீடங்களுக்குப் போதனை செய்கின்றார். இந்தப் போதனை பாலுக்குள்ளே கொஞ்சத் தண்ணீர் கலக்கிற காலத்துக்குரியது; தண்ணீருக்குள்ளே கொஞ்சம் பாலோ மாவோ

கலக்கிற காலம் இந்தக் காலம். அவர் போதனை இந்தக் காலத்துக்குப் பொருந்தாது. அதனை மற்றொரு பிரகாரம் மாற்றிப் 'பள்ளிக்கூட வளவுக்குள் எந்தப் புத்தகம் கொண்டுபோகலாம், எந்த உரைக்குறிப்பு உபயோகிக்க லாம், என்று வெளிப்படப் பெயர் குறிப்பிட்டு வரம்பு செய்தல் வேண்டப்படும் காலம் இக்காலம். இப்படி ஒரு வரம்பு செய்தற்கு, நமக்குக் கிடைக்குங் கலாசாரப் பல்கலைக்கழகம் வழிசெய்யும் போலும். அங்கே ஒரு தைவிகப்பலகை அமைந்திருந்தாலோ !

இலக்கியம் எது என்று தீர்ப்பதில் முட்டை போடு கின்ற இக் காலத்திலே, காமஞ் செப்பாது கண்டது மொழிவதற்கு ஒரு கனமாப் பலகையோ கன்மாப் பலகையோ எத்துணை ஆவசியகம்! ஆவசியகம்!!

"வடுவடு நுண்ணயிர்" என்ற தொடர் நமக்குப் பாடபுத்தங்களால் வடுவாராமே பாதுகாப்பு வேண்டு மளவிற்கு விரிந்து ஒருவாறு முற்றுகின்றது.

---

செல்வம் கல்லாதவரைக் கெடுக்கையாலும், வறுமை கற்றோரைக் கெடாமையாலும், கல்லாதவ ரிடத்துண்டாகிய செல்வம், கற்றவரிடத்துண் டாகிய வறுமையினும் மிகத் துன்பம் செய்வதாம்.

— நாவலர்

உ

# சீவக சிந்தாமணி

---

"புன்காஞ்சித் தாதுதன் புறம்புதையக் கிளியெனக்கண்
டன்புகொண் மடப்பெடை அலமந்தாங் ககல்வதனை
என்புருகு குரலழைஇ இருஞ்சிறகர் குலைத்துகுத்துத்
தன்பெடையைக் குயில்தழுவத் தலைவந்த திளவேனில்."

*காஞ்சி மரங்கள் இலைகள் தளிர்கள் தோன்றாமல் புஷ்பித்துப் புஷ்பச் சுமை தாங்காமல் தலைகளை அசைத்துக் குலுங்குகின்றன.*

*புஷ்பங்கள் இந்திர கோபங்களைப் பொடிசெய்தது போன்ற மஞ்சள் வர்ண மகரந்தங்களில் முழுகித் தம் உருவம் தோன்றாமலும் இடையீடுபடாமலும் ஒன்றோடொன்று இணைந்து, பரந்த ஒரு பெரிய மகரந்தப் பரப்பாய்த் திகழுகின்றன.*

*மிருதுவான இளந் தென்றல் தவழுந்தோறும் அம் மகரந்தப் பரப்புத் திரையெறிகின்றது.*

இணைபிரியாத இரண்டு குயில்கள், ஆணும் பெண்ணும், காதலனும் காதலியும், காஞ்சி மரக் கொம்பர் ஒன்றில் இருந்துகொண்டு, விழித்த கண் இமைக்காமல், திரை யெறிகின்ற அந்த மகரந்தப் பரப்பை அனுபவிக்கின்றன. இடையிடையே தம்வயம் இழக்கின்றன. அந்த இயற்கை அழகில் ஒன்றுபட்டாலோ என்று இருதயம் துடிக்கின்றன. ஆண் குயில் தன்னை இழந்தேவிட்டது. தன்னை அறியாமலே அந்த மகரந்தச் சமுத்திரத்தில் முழுகி, உருண்டு புரண்டு, எழுந்து பழையபடி, தன்னிணை பிரியாத பெடையருகில் அமருகின்றது. அதேசமயத்தில் அந்த மகரந்தக் கடலில் இருதயத்தைப் பறிகொடுத்த பெடை, அந்த அற்புத மகரந்த பரவசத்தைத் தன் பிராணநாதனுக்கும் பங்கு செய்து, ஆச்சரியப்படும் முகமாகத் தன் பார்வையைக் கணவன் பக்கல் திருப்பியது.

ஐயோ! அந்தப் பெடை பட்டபாட்டை என்ன என்று பேசுவது! அதன் மனம் கலங்கியது; புத்தி சுழன்றது; இல்லை, பூமி உருண்டது! என்ன! தன் கணவன் இருந்த இடத்தில், தனக்குப் பக்கத்தில், தன்னோடொன்றி, அந் நியமான ஒரு பச்சைப் பசுங்கிளி கொலு இருப்பதா! இன்னும் இருக்கின்றதே!

பெடையின் கற்பு என்னாகும்! உலகம் என்ன நினைக்கும்! இப்பொழுது என்ன நினைக்கிறதோ! பெடையின் சிந் தனைக்கு முற்றுத்தரிப்பு இல்லை! அது வாடியது! சோர்ந்தது! வாய் திறக்கவில்லை! கணவனுடைய மகரந்தஸ்நானத்தை— அற்புத நிறமாற்றத்தை மகரந்தப் பரப்பில் மனசைப் பறிகொடுத்த அது எப்படி அறியும்!

"கிளிஎனக் கண்டு ஆங்கு அகல்வது"

தனக்குப் பக்கத்தே இன்னுங் கொலு இருப்பது சோர மான ஒரு பச்சைக்கிளியென்றே அது தீர்மானித்துவிட்டது. புத்தி சுழன்றுகொண்டே அந்தப் பெடை மேலே மேலே

தாவி, அகலுகின்றது. உலகம் சொல்லுகிறதைச் சொல்லட்டும், அந்தப் பெடை தன் கற்பைப் பேண முயலுகின்றது. அகன்று அகன்று போகின்றது.

இணைபிரியாத பெடை இன்றைக்குப் பிரிவதேனே! இதனை விலக நான் செய்த தவறுதான் யாதோ! ஆண் குயில் சிந்திக்கின்றது. தவறு சிறிதே தெரிகின்றது! தன் பெடையின் கற்பை—தெய்வந் தொழாக்கற்பை, கருத்திஞலன்றி நேருக்குநேர் கண்ணுற் பார்க்கின்றது. பார்த்ததும் எலும்பே வெண்ணெயாய்விட்டது. தனி இனிப்புப் பலகாரம்போலே, அதன் தசை இரத்தம் எலும்பு சிறகு எல்லாம் அன்புப் பண்டாரமாய்க் கசிந்து உருகுகின்றன.

"என்புருகு குரல்அழைஇ"

"அது நான்தான்" என்று வழக்கத்துக்கு மாருன, எலும்பில்லாத அன்பு ஒழுகு குரலில், தன் பெடையை அழைக்கின்றது. முன்பு கேளாத அந்த அன்புக் குரலைக் கேட்டுப் பெடைக்கும் என்பு உருகி ஒடுகின்றது. அதில் என்ன நூதனம்! தெருவிலே நடந்தவர்கள்கூட, வெறுந் தசைப் பிண்டங்களாய் உருகி வழிகின்ருர்கள்.

அந்த ஆண்குயில் பெண்குயிலை அழைத்த குரல்,

"என்புருகு குரல்"

பெண் குயிலுக்கு எலும்பு இல்லை. அப்படியிருந்தும், அந்தப் பெடை இன்னும் மேலே மேலே தாவுகின்றது. எட்டாத கொப்புக்களை எட்டுகின்றது.

தன் கணவன் குரல் ஏன் கிளிக்கு வராது? சொன்னதைச் சொல்லுங் கிளிக்கு ஏன் வராது? என்று நெருப் பெரிகிறது பெண்குயில். இந்த நெருப்பை எப்படியோ, அந்தத் தண்ணீரான ஆண்குயில் அறிந்தேவிட்டது. தன் சரீரத்தைப்பார்த்து அறிந்தேவிட்டது; அறிந்தேவிட்டது. அறிந்தேவிட்டது என்பதெல்லாம் வெறுங் காலதாமதம். அறிந்தது அறிய முன்னமே,

"இருஞ்சிறகர் குலைத்துகுத்து"

தனது பெரிய கரிய சிறகர்களைக் குலைத்து மகரந்தங்களை உதறி உகுத்து பச்சைப் பசிய ஆண் கிளி, கன்னங்கரிய ஆண் குயிலானது.

ஆனது என்று நீட்டுவது பெரிய காலப்போக்கு.

"எவர்தாம் முன் அணைந்தவரென்று இதுகாறும் அறியேம்"

தன் பெடையைக் குயில் தழுவுகின்றது.

"இருவரும் ஒன்ருயினரென்றே அறையுஞ் சுருதி".

இப்பொழுது இரண்டு குயில்கள் இல்லை.

அத்துவிதமான ஏகக் குயில்கள் கூவுகின்றன.

சோலைகள் உருகிக் கள் நீர் (கண்ணீர்) துளிக்கின்றன. சோலைக்குப் புறத்தே யாரோ தலைநீட்டுகின்ருர்கள். மெல்ல மெல்ல எட்டிப் பார்க்கின்ருர்கள். அவர்கள் யாவர்களோ!

"தலைவந்தது இளவேனில்"

இளவேனில் என்கின்ற பட்ட மகிஷி தன் எக்காள வாத்தியங்களான குயில்களை ஏவிப் பின்னே வருகின்ருள்; அழகிய ஒரு பூஞ்சோலையிற் பிரவேசிக்கின்ருள்.

பஞ்சகாவியங்களுள் தலைநின்ற சிந்தாமணியிலே, இந்தச் சிந்தாமணியான இளவேனிலின் வருகை வாயூற ஊற வருணிக்கப்படுகின்றது. சிந்தாமணியின் கதாநாயகஞன சீவகன், இளவேனிலின் இனிய இன்பத்தை நாடி, அட்டமங்கலங்கள்போல எட்டு மனைவியர்கள் புடைசூழ, குழந்தைகள் மழலைமொழி பொழிய, ஏனைய வரிசைகள் யாவையும் நிகழ அழகிய அப்பூஞ் சோலையைத் தேடி வருகின்ருன்.

மான்கள் மயில்களுக்கு மத்தியிலே, அன்னப் பிள்ளைகளைத் தேரைகள் தாலாட்டுகின்ற ஒரு பொய்கைக் கரையிலே, கொடிகளாலான பந்தர் நிழலிலே, பளிக்குப் பாறை ஒன்றன் மேலே சீவகன் வீற்றிருக்கின்றான். பெண்கள் குழந்தைகள் ஏனையோர் ஏற்ற ஏற்ற விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றார்கள். சீவகன் தனக்கெதிரில் நிகழுகின்ற ஒரு விநோதத்தை உற்று நோக்கிக்கொண்டிருக்கின்றான்.

ஆண் குரங்கு ஒன்று ஒரு பலாக்கனியைக் கீறித் தேன் ஒழுக ஒழுக ஒரு சுளையை எடுத்து முன்னமே ஊடியிருந்த தன் பெண் குரங்கின் அண்டை சென்று அன்பு ஒழுக ஒழுக அந்தச்சுளையை நீட்டுகின்றது. பெண்குரங்கு ஊடலை மறந்து வாயூறிக்கொண்டு மெல்ல மெல்ல அணுகுகின்றது. ஆண் குரங்கு அந்த அன்புச் சுளையை அதன் கையிலுங் கொடுக்காமல், அதன் வாய்க்குள் இட்டுத் தன் பேரன்பைப் பெருக்க முனைகின்றது. பலாச்சுளை பெண் குரங்கின் நா நுனியைக் கிட்டிவிட்டது, என்றுகூடச் சொல்லலாம். தேன் ஒரு சொட்டுச் சொட்டியுமிருக்கலாம். பெண் குரங்கின் நா நுனியில் நா ஊறல் சொட்டிக்கொண்டேயிருக்கிறது.

ஐயோ பாவம்! ஒரு கல்லெறி, காவற்காரன் எறிந்த எறி! ஆண் குரங்கின் கையை அதிரச்செய்துவிட்டது. எடுத்த சுளையை மண் சுவைத்தது. பழம் நழுவிக் காவற்காரன் கையிற் சேர்ந்தது. அவன் விலாப் புடைத்தது.

இந்த நூதன நாடகக் காட்சியை விழித்த கண் இமைக்காமலே சீவகன் கண்டான். அவ்வளவுதான். சீவகன் சிந்திக்கின்றான்.

என் தந்தையாகிய சச்சந்த மகாராசாவிடம் மந்திரியாகிய கட்டியங்காரன் இராச்சியத்தைப் பறித்தான். நான் கட்டியங்காரனிடம் பறித்தேன். நான் பறித்தது நீதியேயாயினும், குரங்கினிடம் காவற்காரன் பலாக்கனியைப் பறித்தது போன்று, என்னிலும் வலியவன் ஏன் என்னிடம் பறிக்கக்கூடாது?

"மெலியவர் பெற்ற செல்வம் வேரொடுங் கீழ்ந்து வௌவி
வலியவர் கொண்டு மேலை வரம்பிகந்து அரம்பு செய்யுங்
கலியது பிறவி கண்டாம் காலத்தா லடங்கி நோற்று
நலிவிலா உலக மெய்தல் நல்லதே போலு மென்றான்."

*மெலியவர்களின் செல்வத்தை வலியவர்கள் அபகரிப்பது பெரிய அநியாயம். இது கலிகோலம். இதனைக் கண்ணுக்கு நேரே காணுகிறோம். இப்படிப்பட்ட செல்வங்களைக் கட்டியழுவதிலும் இவற்றைத் துறப்பதே நலம் என்று துறக்கின்றான் சீவகன்.*

"வல்லராயினும் வெல்வதும் மற்றவஃ தில்லோர்
அல்லலாகியே தோற்பதும் இல்லையால் அரனே
தொல்லை யூழ்முறை புணர்த்திடும்."

*நம்மை வருத்த ஒரு வலியவன் வந்தால், அவன் வரவுக்குரிய காரணம் நம்மிடத்திலேயே உள்ளது. வலியவர் மெலியரை வருத்துதல் நியதியன்று. இந்த உண்மையைச் சீவகன் சிந்தித்தவனல்லன். தனது பொருட் செல்வத்தினும் உயர்ந்த அருட்செல்வத்தைக் கண்டு பொருட்செல்வத்தை விட்டவனுமல்லன். பொருட்செல்வத்தை இன்றுபோலென்றும் அனுபவிக்க அவனுக்கு நல்ல விருப்பம். ஆனால், துறக்கிறான். பிறர் பறித்துவிடுவார்களே என்ற பயத்தினாலே துறக்கிறான்.*

*இந்தச் சீவகன்போலவே இந்திரனும் ஒரு தினம்,*

"பற்றலர் சிறுதொழில் பலவும் ஆற்றியே
உற்றதும் அளப்பிலா உகம் ஒளித்ததும்
மற்றத னிடையிடை வந்த தீமையும்
பெற்றிடு துன்பமும் பிறவும் உன்னினான்."

*மீன் சுமந்தது, ஒளித்தோடினது, சுவர்க்க அழிவு, சயந்தன் சிறை, இந்திராணி சோகம் — அநுபவித்த இந்தத் துயர்கள் எல்லாம் சினிமாத் திரைபோல அவன் உள்ளக் கடலில் அலைமோதின.*

உடனே இந்திரன் எழுந்தான்;

"மறுத்தனன் சசியுடன் வைகும் வாழ்க்கையை
வெறுத்தனன் வெறுக்கையை வேந்தி யற்கையும்
செறுத்தனன் தவத்தினுல் சேர்வன் வீடெனுத்
துறத்தலை மேயினன் துறக்க மேயினன்."

பழைய பயத்தினுலே துறவியாகின்றுன் இந்திரன்' புதிய பயத்தினுலே துறவியானவன் சீவகன்.

இந்திரகுமாரன் அருச்சுனன். அவனுக்கும் ஒருமுறை இந்தமாதிரியான ஒரு துறவு — பயத்தினுலன்று — பற்றினுல் வந்தது; யுத்தமுனையில் வந்தது.

புத்தருக்கும் இப்படி ஒரு துறவு வந்தது. அவலக் கவலை கையாறு அழுங்கல் சாக்காடுகளை நினைத்து வந்தது.

நரிக்கும் ஒரு முறை வந்தது திராட்சைப்பழம் எட்டாமல்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்."

இந்த அருமைத் திருக்குறள் துறவுக்கு இலக்கணம். எதிலிருந்து எதிலிருந்து துறவு பூணுகிருனே, பிறகு துறந்த அதனுலே அதனுலே, அதனைத் துறந்ததற்கு அவன் வருந்துவதில்லை. துறப்பது அமலத்தை அன்று; மலத்தை. பந்தங்கள் நித்திரையிற் கைப்பொருள்போல நீங்குவதே துறவு; நீக்குவது துறவன்று.

கண்ணப்பர் கண்டறியாததைக் கண்டார். அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தார். அகன்றுர் அகலிடத்தார் ஆசாரத்தை. உலகத்தை அவர் நீக்கவில்லை. உலகம் நீங்கிவிட்டது. கண்ணப்பருக்கு அது தெரியாது. இராக்காலத்தை நாம் நீக்குவதில்லை.

சீவகன் தொடக்கம் நரியின் துறவு பரியந்தம் இங்கே காட்டிய துறவுகள் பொய்த் துறவுகள்;

மனைவிமக்களோடு கோபித்துக்கொண்டு சிலர் கதிர் காமம் புறப்படுகிறது போன்ற பொய்த்துறவுகள்.

இந்தப் பொய்ம்மைகளை உள்ளீடாக வைத்து இலக்கியம் செய்வதில்லை. எப்பொருள் எத்தன்மைத்தாயினும், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், ஆராயாமல் கண்ட கேட்ட அப்பொருளை அப்படியே வைத்து நூல் செய்தால், அது கவிஞனின் திறமைக்குத் தக்கவாறு ஒரு காவியமாவதன்றி இலக்கியமாகாது.

கண்ட கேட்ட பொருளை வைத்துக்கொண்டே, அப்பொருளின் பொய்ம்மையை வெளிப்படுத்தி, அதன் மூலம் மெய்ப்பொருளைக் காணும்முகமாக நூல் செய்தால் அது இலக்கியமாகும்.

இந்திரனின் பொய்த்துறவை வியாழபகவானின் உபதேச மூலம் புலப்படுத்தி, மெய்த்துறவைக் காணும்முகமாகக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் புராணம் அருளினர். அது இலக்கியம்.

அர்ச்சுனனின் பொய்த்துறவைக் கிருஷ்ண பகவானின் கீதோபதேசமூலம் புலப்படுத்திப் பாரதம் அருளினர் வியாச பகவான். அது இலக்கியம்.

சீவகன் பொய்த் துறவைப் புனைந்து செல்கின்றது சிந்தாமணி. அதனால் அது ஒரு காவியமாவதன்றி இலக்கியமாகாது. உமாபதி சிவாசாரியர் "பொய்யே கட்டிய சிந்தாமணி" யென்று அருளியிருக்கின்றார்.

"சேக்கிழார் சிந்தாமணிப் பயன் தீதென்றே
தூக்கிஉரை செய்திட்டார்'

அது சரிதான்.

"........சோமேசா — நோக்கின்,
பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்"

என்று அநுவதிக்கின்றார், வடமொழி தென்மொழிக் கடலான சிவஞான சுவாமிகள்.

"சடங்கொண்ட – சாத்திரத்தார் சாக்கியர் சமண் சித்தர்" என்பது சம்பந்தப் பெருமான் வாக்கு. புத்த சமண நூல்கள் வெறுஞ் சடங்கள் என்பது அப்பெருமான் திரு உள்ளம்.

சிந்தாமணியின் உள்ளீடு பொய்ம்மையான வெறுஞ் சடமாகவே அதனைப் புனைந்த, இளவேனில் முதலிய அருமந்த வருணனைகள் வெறும் பிண அணிகளாய்ப் போயின. சூர்ப்பனகையின் திருக்கோலாகலமுமாயின.

சிந்தாமணியை உதாரணமாக எடுத்துக்கொண்டு, எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளை ஆராயாது புனைவது காவியம். அப்பொருளை ஆராய்ந்து மெய்ப்பொருளைக் கண்டு புனைவது இலக்கியம்.

என்று சொன்ன இக்கருத்துக்கள் நான் கண்ட புதிய கருத்துக்களுமல்ல, யாழ்ப்பாணக் கருத்துக்களுமல்ல. அக் கருத்துக்கள் சேக்கிழார் முதலிய மகான்களின் கருத்துக்கள்: தாய்நாட்டுக் கருத்துக்கள்; பழைய கருத்துக்கள்.

ஆறுமுகநாவலர் தமிழ்ப்புலமை என்ற கட்டுரையில், இலக்கிய வரிசையில் சிந்தாமணி முதலிய காவியங்களைச் சேர்க்கவில்லை. தமிழ்ப்புலமை நான்காம் பாலபாடத்தில் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

டாக்டர் ஐயர் அவர்கள், உமாபதிசிவத்தின் அருட் பெருமைகளை உணர்ந்தவர்களாயிருந்தும், துரதிர்ஷ்ட வசமாக "பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணியென்றால்

நமக்கென்ன! நாம் விரும்புவது தமிழ்ச்சுவை, சொற்சுவை, பொருட்சுவை" என்று தடித்த எழுத்தில் உரைத்திட்டார்கள்.

தமிழ்த் தாத்தா இப்படி உரைப்பாராயின், பொய்ம்மையில் சுவைகாண்பாராயின், இனித் தாய்நாட்டு நிலையை ஆராய்வதிற் பயனில்லை. பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்குவது புலைமையாமன்றிப் புலமை ஆகாதே. தாய் நாடு செக்குக்கும் சிவலிங்கத்துக்கும் சமரசம் பண்ணிச் சாம்பார் பண்ணுகின்றது. பொருளைப் பற்றிய சிந்தனையற்ற சாதாரண கவிஞனும், தெய்வப் புலவர் திருவள்ளுவரும் இன்றைய தாய்நாட்டுக்கு ஒரு பண்டந்தான்.

இந்த நிலையி லிருந்துகொண்டே, இன்றைய சென்னை மாநகரம், ஏ யாழ்ப்பாணமே! உனது தமிழ் எனக்குப் புரியவேயில்லை யென்று பெரிய பரிகாசஞ் செய்கின்றது. சென்னைமாநகரத்தில் கணீர் என்ற குரலில் ஒரு வீரத்தமிழ்—அமைதியான குரலில் ஒரு அன்புத் தமிழ்—தலைதூக்கி நின்றனவாயின்; அந்த இரண்டு தமிழும் யாழ்ப்பாண சகவாசத்தால் வந்த தமிழே; அவை யாழ்ப்பாணத் தமிழே என்று புதிய சென்னைமாநகருக்கு மிக்க வருத்தத்தோடு புகுத்தவேண்டியிருக்கிறது. அன்றி, ஓ புத்தம் புதிய சென்னைமாநகரமே, உன் சொல் இப்பொழுது நன்கு பிரிகிறது—பெரிய சந்தோஷம்—பொருள் மாத்திரம்தான் பிரிவதில்லை; யாழ்ப்பாணம் அதனைப் புரிவதில்லை" என்று சற்றே தெரிவியாமல் இருக்க முடியவில்லை.

காவியம் வேறு; இலக்கியம் வேறு.

---

"உள்ளது போதும் என்று அமைந்த மனமே
குறைவற்ற களஞ்சியம்."

— நாவலர்

௳

# இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்

*யூலிய சீசர் உரோமாபுரிக்கு அரசன்; மகா பராக்கிரம சாலி; கருமங்களை எண்ணியே துணிவான்; துணிந்தபிறகு, துருவநட்சத்திரம் அசைந்தாலும் அத்துணிபினின்றுந் தான் அசையான்; உயிரிழக்க நேர்ந்தாலும் 'அச்சம்' என்றொரு பண்டம் அவனுக்குத் தெரியாது.*

''அஞ்சினர்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத்
தாடவனுக் கொருமரணம் அவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சினரென் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்குந்
துன்மதிமு டரைக்கண்டாற் புன்னகைசெய் பவன்யான்''

*வீரன் ஒருதரம் இறக்கிறான்; பயங்காளி நூறுமுறை சாகிறான்; என்று சொல்லிச் சீசர் சிரிப்பான்.*

* * *

புருட்டஸ் சீசரின் உற்ற நண்பன்; பெரிய நீதிமான்; நல்லவன்; பரோபகாரி; அவனிடத்திலே ஒரு சிறு குறை; எளிதில் ஏமாந்துபோகக் கூடியவன்.

கஷியஸ் பொல்லாத சகுனி.

* * *

கஷியஸும் அவன் கூட்டத்தாரும் புருட்டஸை ஏமாற்றுகின்றனர்கள். சீசரைக் கொல்வது புண்ணியம் என்று போதிக்கப்படுகிறது. புருட்டஸ் அந்தப் போதனையை அப்படியே நம்புகிறான்; ஒரு 'கோட்சே' யாக மாறுகிறான்.

* * *

பங்குனி மாசத்திலே பட்டப் பகலிலே சீசரின் அத்தாணி மண்டபத்திலே, கஷியஸ், அவனைச் சேர்ந்த சர்ப்பங்கள், நல்ல மனிதனான புருட்டஸ் குழுமி இருக்கிறார்கள்.

சீசர், எதிர்ந்த தடைகளையெல்லாம் உதறித் தள்ளிக் கொண்டு, அந்தப்புரத்திலிருந்து, அத்தாணி மண்டபத்தை நோக்கி,

"மாக மடங்கலும் மால்விடை யும்பொன்
னாகமும் நாகமும் நாண நடந்தான்."

* * *

புருட்டஸ்,

"பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தான்."

* * *

புருட்டஸ்ஸின் கத்தி சீசரின் இருதயத்தைப் பிளந்தது. சீசரின் ஆத்மா, "புருட்டஸ் நீயுமா" என்று சொல்லிக் கொண்டே வானத்தைக் கிழித்தது; வெறுஞ் சரீரம்,

"விஞ்சுவான் மழையின்மே லம்பும்வே லும்படச்
செஞ்செவே செருமுகத் தமர்செய்யுந் திறனிலா
வஞ்சர்தீ வினையினால் மானமா மணியிழந்
தஞ்சினார் நெஞ்சுபோ லென்றுமா றுதரோ."

என்றவாறே, நெஞ்சங் கொதித்துக் கொண்டே, நிலத்தைக் கொழுந்துவிட்டெரியச் செய்தது.

* * *

மாக் அன்ரனி மகா விவேகி; பெரிய வாசாலகன்; சூழ்ச்சிக்காரன்; அகழான்.

அன்ரனி புரூட்டஸ்ஸைப்பற்றி நன்கு அறிவான்; புரூட்டஸ் ஏமாந்துதான் இதனைச் செய்தான் என்று அன்ரனிக்குத் தெரியும். அன்ரனி தன் வாய்வீரத்தை, புரூட்டஸ்ஸின் ஏமாற்றத்தை அவனுக்கே எடுத்துக்காட்டுவதிற் செலவு செய்திருப்பானேயானல்,

எந்தக் கத்தி சீசரின் இருதயத்தைப் பிளந்ததோ, அந்தக் கத்தி கஷியஸ் கூட்டத்தைச் சங்காரஞ் செய்து, எந்தத் தலையோடு கூடிவாழ்ந்ததோ, அந்தத் தலையையும் அக்கினியில் இட்டு, வீரயாகம் செய்திருக்கும். புரூட்டஸ்ஸின் உதிர ஊற்று, சீசரின் இரத்தப் பெருக்கோடு ஒன்றுபட்டு, ரோமாபுரியை மாத்திரமன்றி, இந்த நில உலகத்தையே செம்மை செய்திருக்கும்.

புரூட்டஸ்ஸின் மரணம், பழிக்கஞ்சிய மரணமாய் விலைகொடுத்துப் பெறவேண்டிய வீரமரணமாய், வருங்கால உலகம் மனங் கசிந்து கண்ணீர் சொரிந்து அகமும் முகமும் ஒருங்கு கழுவிப் புனிதமாவதற்கு உபகாரப்பட்டிருக்கும்.

* * *

அந்த அகழானை அன்ரனி அப்படிச் செய்யவில்லை. அந்த வஞ்சகன், பாமர சனங்களுக்கு உருப்போட்டான். அந்தப் பெல்லிப்பேய்கள், புரூட்டஸ்ஸைச் சுற்றி வளைந்து கொண்டன. அற்பர்களிடம் அகப்பட்டு அவமானப்படுதற்கு அஞ்சிப் புரூட்டஸ் தற்கொலை செய்கின்ருன். பாவம்! அவனுக்கு ஒரு துளி கண்ணீர்விட ஆளில்லை. இப்படி மரணத்துக்கு, ஆர்தான் கண்ணைக் கசக்க வருவார்கள்!

புரூட்டஸ் உலக அறிவுக் குறைவினலே அநியாயமாக மரணிக்கின்ருன். அவன்பால் வைத்த நீதி அவனுக்கு உபகரிக்கவில்லை. "பெரிய நன்மையும் ஆபத்தானது" என்று

மேலைப்புலவர் ஒருவர் ஒரு சமயம் சொன்னதுபோல, "நீதி ஆபத்துக்குதவாது; லௌகிக தந்திரந்தான் ஆபத் சகாயன்" என்று சொல்ல வேண்டியும் வந்துவிட்டது.

* * *

இந்தியாவிலே பிரிவினையின் பயனால் விளைந்த முகாரி ராகம் சுரோத்திரேந்தியங்களை எரித்து, உயிரைச் சாம்பர் செய்கின்றது. அந்த இராகத்துக்குக் கலையுலகம் சுரம் வகுத்து, அருமந்த இசைக்கலை பாழ்போகாமல் கண்ணுங் கருத்துமாய் அதனை வளர்க்க முனைகின்றது. கலை வாழ்க.

இந்த முகாரிக்கலைபோலவே அன்ரனியின் பேச்சுக்கலை, இங்கிலிஷ் இலக்கிய பண்டிதர்களின் மத்தியிலே, நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய், வளர்ந்து வருகின்றது. எத்தனையோ பக்தர்கள் அன்ரனியாதற்குத் தவம் கிடக்கிறார்கள். சேர்ச்சில் போன்றவர்கள் தவம் முதிர்ந்து அன்ரனியாய் விட்டார்கள்.

* * *

சன்மார்க்கர்களான தாய் தந்தையர்கள், அன்ரனி போன்ற கபடிகளின் சாதுரியத்தைத், தங்கள் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லுவதில்லை. இது உளநூன் முடிபு. மகாத்மா போன்றவர்கள் என்ன சொல்லுவார்களென்று சிந்தித்துப் பார்க்கலாம்.

* * *

உலகமாகிய குழந்தைக்கு அன்னையும் பிதாவுமாயிருக்கிறான் இலக்கியப் புலவன். அவனுக்குக் குழந்தைகள் மத்தியிலே பேசுங் கதை எது? பேசாக் கதை எது? என்று தெரியும். ஒரு தாய், தன் பிள்ளைக்கு வயிற்றில் பூச்சி வருமென்று அஞ்சி இனிப்பைக் கொடுக்க மறுக்கின்றாள்.

* * *

அன்ரனி அப்படி சொன்னான். அப்படியே புலவருஞ் சொன்னார். நடந்ததை நடந்தபடி சொல்லுவதுதான் புலவன் வேலை என்பது மேலைத்தேசத் தலைவிதியானால், அவ்விஷயத்தில் அந்தப் புலவர் வெற்றிக்குமேல் வெற்றியடைந்தே விட்டார். ஆக்ஷேபம் இல்லை.

பாமர சனங்கள் தமக்கென ஒன்று இன்றி, வாசாலகர்களான வஞ்சகர்களின் வலையிற்பட்டு, அடித்த காற்றுக்கு அசைகிறவர்கள் என்பதைக் காட்டுகிறதுதான் அன்ரனி பேச்சுக்குப் பயன்ஆனுல் ஐயையோ! களவின் மர்மத்தைத் தந்திரமாகக் களவுசெய்து காட்டுவது போலத்தான் அது முடியும். பொய்யின் இயல்பைப் பொய் சொல்லிக் காட்டுவதா! அன்ரனி பேச்சுப் பாமரர்களை பெலஹீனமறிந்து ஏமாற்ற இடந்தருமா? அன்றி, அவர்களியல்புக்கு இரங்க இடந்தருமா? எஞ்சிக்கிடக்கிற இரசம் எது? அன்ரனி பேச்சில் உலகம் என்ன நுகருகின்றது!

சேர்ச்சில் துரை இன்றைக்கு அன்ரனி பேச்சை எவ்வாறு உபயோகிக்கின்ருர்!

* * *

இனி, சற்றே கிழக்கே திரும்புவோம்.

''வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்''

''பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்''

நீ நடந்ததை நடந்தபடி சொல்லு; ஒரு சிறிதும் தீயரசம் பிறக்கக் கூடாது. நீ இல்லாததைக்கூடச் சொல்லு; அது நல்லதாய் யாருக்குமினியதாய் இருக்கவேண்டும்.

* * *

பாண்டியன் நெடுஞ்செழியன் ஒருநாள் புருட்டஸ் ஆக நேர்ந்தது; தட்டான் ஒருவன் ஏமாற்றினுன், ஒரு பாவமும் அறியாத கோவலன் தலை உருண்டது.

இந்த அநியாயத்தைக் கண்ட ஒரு அன்ரனி, பாமர சனங்களுக்கு உருப்போட அவர்களின் அற்பத் தனத்துக் கஞ்சி பாண்டியன் நெடுஞ்செழியன் தற்கொலை செய்து கொள்ளவில்லை; தான் ஏமாந்து செய்த பிழையைச் சரியென்று நினைத்துக்கொண்டு பாண்டியன் நெடுஞ்செழியன்

சாகவில்லை; அப்படிச் சாக அந்த ராச கவிஞன் விடவில்லை; இல்லை! இல்லை! பாண்டியன் நீதி விடவில்லை.

* * *

பாண்டியன் நெடுஞ்செழியன் தன் ஏமாற்றத்தை உணருகிறான். அவன் விஷயத்தில் 'உணருகிறான்' என்று சொல்வதே வெறுங் காலதாசம். உணருகின்ற — உணர்ச்சியிற் பட்ட — அந்தக்ஷணமே பாண்டியன் உயிரை நீத்தான்; பதிவிரதையாகிய அவன் பத்தினியும் உடன் சென்றாள்.

'தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந்தாயினான்'

'வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது.'

* * *

புகழ்ச் சோழர் சேனைகள் எதிரிகளின்மேற் செல்லுகின்றன. எதிரிகள் தலைகள் உருளுகின்றன. ஒரு பாவமும் அறியாத ஒரு அடியாரின் தலையும் சேர்ந்து உருளுகின்றது. அதைக் கண்டதும் புகழ்ச் சோழர், அந்தத் தலையைத் தம் தலைமீதேந்தி, அக்கினியெழுப்புவித்து அதிற் குதிக்கிறார். அக்கினியெழுப்புவிக்கக்கூட நேரமின்றிப் பாண்டியன் நெடுஞ்செழியன் தேவர்கோன் தன்கோயில் நல்விருந்தாயினான்.

* * *

பழிக்கஞ்சிய புகழ்ச் சோழர், நாயனார் வரிசையில் எண்ணப்படுகின்றார். அப்படியானால், பாண்டியன் நெடுஞ்செழியன்..........?

* * *

"புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து"

* * *

இலக்கியரசிகர்களே, வம்மின்கள்! சற்றே கண்ணீர் விடுவோம். புருட்டஸ் மரணத்துக்கு அல்ல; பாண்டியன் நெடுஞ்செழியின் பிரிவுக்கு; உள்ளப் பிரிவுக்கு; ஆபத்சகாய நீதியின் நீளத்துக்கு.

உ

# நெய்தல்

கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல்; அதில் நிகழும் அன்பொழுக்கமும் நெய்தல். நெய்தல் என்றால் இரங்குதல், பிரிவு பாலை. பிரிந்தபின் காத்திருப்பது முல்லை. வரவு நீடித்தபோது நிகழ்வது நெய்தல். அஃதாவது இரங்குதல்; புலம்புதல் என்றுஞ் சொல்லலாம்.

ஆகவே ஐந்திணையில் மூன்றாவதான முல்லையின் பின் நிகழ்வது நெய்தல். முதலாவது குறிஞ்சி.

ஒருத்திக்கு அவள் காதலனின் தலையளியாகிய அன்பே யன்றி, இந்த உலகில் இனி ஒரு பற்றுக்கோடும் இல்லை. பந்தங்களை யெல்லாம் அவள் உதறித்தள்ளிவிட்டாள். அப்படியிருந்தும், பெருங்காயமிட்ட பாண்டம் போன்று, ஏதோ ஒரு குறையாகிய புலாற்பற்று அவள்பாலும் உண்டுபோலும்.

அவனோ மகாபுனிதன். அவள் புலவு தன் புனிதத் தன்மைக்கு இழுக்கு என்று எண்ணிப்போலும்,

"பிரியேன் பிரியில் தரியேன்"

என்று சொல்லிப்போனவன், வருகின்ருனில்லை. பின்னை இனி அவள் செய்யத்தக்கது என்ன! புலம்புகின்ருள்; இரங்கி ஏங்குகின்ருள்.

"ஆடு கின்றிலை; கூத்துடை யான்கழற்கு
அன்பிலை; என்புருகிப்
பாடு கின்றிலை; பதைப்பதுஞ் செய்கிலை;
பணிகிலை; பாதமலர்
சூடு கின்றிலை; சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே!
தேடு கின்றிலை; தெருவுதொ றலைகிலை;
செய்வதொன் றறியேனே"

'துணையிலி பிணநெஞ்சே"

நாளைக்குச் சாகின்ற பிணங்களைக் கட்டியழுது புலால் மணங் கமழுகின்ற மனமே, நீ இன்னும் இவைகளைக் கட்டியழுவாயாஞல், உண்மையான உயிர்த்துணைவனை இழந்தேவிடுவாய்; ஐயோ! அவன் தலையளியை நினைந்து, அலைகின்றதுஞ் செய்கின்ருயில்லையே; என்று புலம்பிய இரக்கங்கள்தாமே மணிவாசகங்கள். இவ்வாறு தலைவனின் தலையாய அன்பை நினைந்து நினைந்து, உளம் நெகிழ்ந்து உருகுகின்ற இரக்கம் நெய்தற்றிணை. அதற்குப் புறம் தும்பைத்திணை.

"கைவேல் களிற்ருெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

ஒரு வீரன் தன்னெதிரில் வருகின்ற களிற்று யானைமீது தன் கைவேலை எறிகின்ருன். அவ்வேல் அதன் மத்தகத்தை ஊடுருவுகின்றது. அவனிடம் அதற்கு எறிய மற்ருெருவேல் இல்லை. அவனே பின்வாங்கியறியாதவன். அந்த நிலையில் அவன் தன் மார்பை நோக்குகின்ருன். நெடுங்காலம் பிள்ளையில்லாது தவமிருந்தவனுக்கு ஒரு ஆண் மகவு பெற்ற

சந்தோஷம் அப்பொழுது அவனுக்கு உண்டாகின்றது. சம்பவம் என்ன என்றால், முன்னொரு வீரன் அவனையெதிர்த்து அவன்மேல் எறிந்த வேல், அவன் மார்பில் ஊடுருவியபடி இருந்தது. அதனைத் தன் அருமைக் குழந்தையை எடுப்பது போல் அந்த மகாவீரன் எடுத்து மகிழுகின்றான். பின் எதிர்ந்த யானைமேல் அதனை எறிகின்றான். ஆபத்துக் காலத்தில் உதவுகின்ற சேமநிதிபோல அது உதவுகின்றது. அவன் மார்பில் முன்னமே தைத்திருந்தது அவனுக்குத் தெரியவில்லை. வீரமே வேண்டித் தன்னை இழந்து பொருகின்ற இந்த நிலை தும்பைத் திணை. தலைவனின் தலையன்மையே பொருளாகக் கருதித் தன்னை இழந்து புலம்பி இரங்குகின்ற நெய்தல் திணைக்குத் தும்பைத்திணை புறமாதல் சாலவும் பொருத்தமானதே.

சர்வலோக நாயகரும் மகாபுனிதருமாகிய கடவுளை அணையும் பொருட்டு அக்கடவுள் அணைதற்குத் தடையாயிருந்த புனிதக் குறைவாகிய புலவை அருவருத்து நாயன்மார் புலம்பி இரங்கிய இரக்கமே பரிசுத்த நெய்தல்.

கடற்கரையிலே காலை நேரத்திலே ஒரு பெண் தன்னந் தனியே இருந்து, தலைவனை நினைந்து கரைகின்றாள்; இரங்குகின்றாள். இந்த இரக்கமாகிய நெய்தல் ஒருவாறு இந்த உலகத்திலே காணத்தக்க நெய்தல். இந்த நெய்தலில் வைத்துப் பரிசுத்த நெய்தல் எப்படியிருக்குமென்பது சிந்தனை செய்யத்தக்கது, அவ்வாறு சிந்தனை செய்த சிந்தனைகளே நெய்தல் திணைபற்றிய பாட்டுக்கள்.

காவிரிப்பூம்பட்டினம் கடற்கரைப் பட்டினம்; கண்ணகி பிறந்த பட்டினம். புகார் என்பது அப்பட்டினத்துக்கு மற்றொரு பெயர். பிரிந்துபோன கணவர் திரும்பிப் புகார் போலும். ஒரு நாள் கண்ணகியைப், பிரிந்துபோன கோவலன் பிறகு திரும்பிப் புகவேயில்லை. அதனாலே, கண்ணகி அழுது புலம்பி வடித்த கண்ணீர்தான் சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்தை நெய்தற் பாட்டென்றே சொல்லிவிடலாம். அது நிற்க.

புகாரின் கடற்கரைச் சிறப்பைப் புகார்ச்சிறுமிகளில் வைத்துப் புகார்வாசிகள் கூற்ருகப் புனைந்த பழைய பாட்டொன்று, புலவர் உள்ளத்தை அள்ளுகின்றது. அப்பாட்டு இது:

'முன்னைத் தஞ்சிற்றில் முழங்கு கடல்ஓதம் மூழ்கிப்போக
அன்னைக் குரைப்பன் அறியரய் கடலேஎன்று அலறிப்பெருந்
தன்மை மடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தம் தயங்குகானல்
புன்னை அரும்பேய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும் புகாரேஎம்மூர்'

புகாரில் உள்ள பரதவச் சிறுமிகளுக்கு முன்றில் கடற்கரை மணல். அவர்கள் அம்மணலில் சிறு வீடு கட்டி விளையாடுகின்ருர்கள். கடற்றிரை அச்சிறுமி களின் விளையாட்டைப் பொருள் செய்யாமல் அடிக்கடி அவர்களுடைய சிறிய இல்லை அழித்து விடுகிறது. ஒரு சிறுமிக்குப் பெரிய கோபம் வந்துவிட்டது. அவள் கடலைப் பார்த்துச் சொல்லுகின்ருள்.

ஏ! கடலே. நீ என்னை அறியாய்! நான் பொறுக்கும் அளவில் பொறுத்துவிட்டேன். இன்னமும் நீ சேட்டை செய்வாயாயின், என் அன்னைக்குச் சொல்லி உன்னை அடக்கி வைப்பேன். இதனை நீ அறிந்துகொள்.

இது ஒரு பரதவச் சிறுமியின் வீரம் வீறுகின்ற கோபப் பேச்சு. அப்பால் அவளுக்கு அழுகை வருகின்றது. அரு மந்த சிற்றில் அலையால் சிதைந்து படுகின்றதே என்று. மேலும் அலைமேலெழுதலால் அந்தச் சிறுமி தளர்நடைப் பட்டு ஓடுகின்ருள். சிறிதே தாமதஞ் செய்தாலும் அது அவளை நனைத்துவிடும் அன்ருே! அப்பொழுது அவள் அணிந்த முத்துமாலைகள் அறுந்து சிதறுகின்றன. சிதறிய முத்தங்களுக்கும் அங்கே பரவியிருக்கின்ற புன்னை அரும்பு களுக்கும் பேதம் தோன்றவில்லை. அதனுல் புத்தம் புதிய வர்கள் புத்தி பேதலிக்கின்ருர்கள். இது கடற்கரைப் பட்டினமான புகாரின் சிறப்பு.

'முன்னைத் தஞ்சிற்றில்.....' என்கின்ற இந்தப் பாட்டைச் சிலப்பதிகாரத்தில் உள்ளதென்று சிலர் நினைக்கின்றார்கள். இது சிலப்பதிகாரத்தில் இல்லை. இது பழைய தொரு பாட்டு. இதுபோன்ற பாட்டுக்கள் சிலப்பதிகாரத்தில் வருகின்றன. ஒன்று வருமாறு:—

'மோது திரையால் மொத்துண்டு போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணன்மேல் வண்டல் உழுதழிப்ப மாழ்கி ஐய
கோதை பரிந்தடைய மென்விரலால் கொண்டோச்சும் குவளை மாலைப்
போது சிறங்களிப்பப் போவார்கண் போகாப் புகாரே எம்மூர்'

கரையை மோதுகின்ற திரைகளோடு மொத்துண்டு வருகின்ற சங்குகள், கடற்கரை மணலை உழுது வரிசெய்கின்றன. அதனாலே சிறுமிகள் கட்டிய சிறு வீடுகளாகிய வண்டல்கள் சிதைந்து மண்ணோடு மண் ஆகின்றன. அதனைப் பொறாது அந்தச் சிறுமிகள், தாமணிந்த குவளைமாலைகளை அறுத்துச் சங்குகளின்மேல் மெல்ல எறிகின்றார்கள். அதனால் சிதறுண்ட குவளைமலர்கள் அங்குமிங்கும் கிடந்து கண்சிமிட்டுகின்றன; சிறங்கணிக்கின்றன. சிறங்கணித்தல் — கண்ணைச் சுருக்கிக் கடைக்கண்ணாற் பார்த்தல். இந்தக் குவளைகளின் கண்சிமிட்டுகை அவ்விடத்துக்குப் புதியவர்களின் கண்களை அங்கேயே தடுத்து வைத்துக் கொள்கின்றன. அவர்கள் குவளைகளைப் பார்க்கக் குவளைகள் அவர்களைப் பார்க்கின்றன. கண்களைக் கண்கள் நோக்குகின்றன. இருவகைக் கண்கள் சந்திக்கின்றன. கடற்கரை இயற்கை இருந்தபடி இது.

கண்களைக் கண்கள் சந்திக்கின்ற கடற்கரையிலே ஒரு பெண் கணவனை நினைந்து ஏங்குகின்றாள். அந்த அபலை தனித்திருந்து கண்ணீர் உகுக்கின்றாள். அவள் உகுக்கின்ற கண்ணீருக்குத்தான் நெய்தல் என்று பெயர்.

ஒரு திணை முதல் கரு உரி என மூன்றாக வகுத்து வர்ணிக்கப்படும். மேல்வந்த வருணனைகள் முதல் கரு

வருணனைகள். உரி வருணனைதான் உயிர் வருணனை. நெய்தல் திணைக்கு உரி நெய்தல். அஃதாவது இரக்கம். அதுதான் கண்ணீர்; அன்புக் கண்ணீர். வருகின்ற பாட்டில் ஒரு பெண்ணின் இரங்குதலாகிய அன்புக் கண்ணீர் பெருகுகின்றது.

"அன்னந் துணையோடு ஆடக் கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் நோக்கி நின்றார் அவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவார் அல்லர்"

ஐயோ, நேற்று நடந்த சம்பவத்தைக் கேளுங்கள்! அன்றொருநாள் புன்னை மரநீழலிலே தாழைகள் சாட்சியாகத் தம்முடைய அருமையை அறியாத என்னைக் கூடிப் பிரிந்துபோனவர்—அவர் ஒப்பில்லாதவர்; ஒருவர். அப்படிப்பட்டவர் நேற்று, இந்தக் கடற்கரையிலே, ஆண் அன்னம் ஒன்று பெண் அன்னத்தோடு கூடி விளையாட, அந்தோ அதனை உற்று நோக்கிக்கொண்டு நின்றார்; அப்படியே உருகிநின்றார். அப்படியான அன்பர் என்னைப் பிரிந்துபோவாரோ, போகார்! போகார்!! அவரைப் பிரிந்ததனால் உண்டான பசிய சுணங்கு, என்னை எவ்வாறு பிரிகின்றிலதோ, அவ்வாறே அவரும் என்னைப் பிரியார்! பிரியார்!! அவர் என் பிரியர்.

"அடையல் குருகே அடையலெங் கானல்
அடையல் குருகே அடையலெங் கானல்
உடைநீர்ச் சேர்ப்பற் குறுநோய் உரையாது
அடையல் குருகே அடையலெங் கானல்."

குருகு – பட்சி. கானல் – கடற்கரை. சேர்ப்பன் – நெய்தல்நிலத் தலைவன். ஓ நாராய் என் பக்கல் வாராதே; என் பக்கல் வாராதே. என் துயரை என் தலைவர்க்கு உரையாமல் என் பக்கல் வாராதே.

இப் பாடல்கள் பிரிவு நீடித்த ஒரு பெண்ணின் அன்புக் கண்ணீர்கள். பிற்காலத்துப் பெண்[illegible]த்தியின் கண்ணீர்

கடிகைமுத்துப் புலவரியற்றிய சமுத்திர விலாசத்தில் வெகு சொற்சித்திரத்தோடு கூடிப் பெருகுகின்றது. அது மணமுள்ளதொரு பொன்மலர். அது வருமாறு;

"உள்ள திருக்கை காணீரே
உறங்கா திருக்கை காணீரே
ஓசைக் கடலைப் பொருமலையே
ஒழியேன் விரகப் பொருமலையே
கள்ள ருதாங் குவளைகளே
கழலுங் கரந்தாங் குவளைகளே
கரையிற் படராத் துப்பிரே
கலந்த துடலத் துப்பிரே
அள்ளல் அளையுங் களிக்கரையே
அழைப்பார் மாதர் களிக்கரையே
ஆறு வகுப்புக் காற்றேனே
ஆழி புடைப்புக் காற்றேனே
வெள்ள மூரும் பானத்தே
விரும்பா திருந்தேன் பானத்தே
வெங்க டேசு ரெட்டனையே
மேவத் தடுக்கும் எட்டனையே."

உள்ள திருக்கைகாள் நீர் – கடலில் உள்ள திருக்கை மீன்களே நீங்கள்,

உறங்கா திருக்கை காணீரே- நான் உறக்கமின்றி இருப்பதைக் காணமாட்டீர்களா?

ஓசைக் கடலைப் பொரும் அலையே - ஓசைபொருந்திய கடலில் ஒன்றோடொன்று பொருகின்ற அலைகளே; ஒழியேன் விரகப் பொருமலை – நான் பிரிவு வருத்தமாகிய விரகப் பொருமலை ஒழிகின்றிலேன்; இதற்கு முற்றுப்புள்ளி இல்லையா?

கள் அருது ஆம் குவளைகளே – தேன் சொட்டுகின்ற குவளைமலர்களே; கழலும் கரந்தாங்கு வளைகள் - கையில் தரித்த என் வளையல்கள், கை மெலிந்து கழலுகின்றனவே.

கரையில் படராத் துப்பீரே - கரை சேராத பவளக் கொடிகளே; கலந்தது உடலத்துப் பீர் - என் உடல் முழுதும் பீர் என்று சொல்லப்படும் பசலை பரந்துவிட்டதே.

அள்ளல் அலையுங் களிக்கரையே - சேறு கலந்த கடற் கரையே; அழைப்பார் மாதர்கள் இக்கரையே - ஐயோ பெண்கள் மன்மதனுரை அழைத்து வருந்தப் போகின் ருர்களே.

ஆறு வகுப்புக் கால் தேனே - ஆறுகால் வண்டே; ஆழி புடைப்புக்கு ஆற்றேன் - சமுத்திர அலைக்கு நான் என் செய்வேன் ?

வெள்ளம் ஊறும் பால் நத்தே — வெண்சங்குகளே; விரும்பாதிருந்தேன் பானத்தே - நான் பால் கூடப் பருகுவ தில்லையே.

வெங்கடேச ரெட்டனே - நான் எட்டியணைத்தற்குரிய திருவேங்கடவனே ; மேவத் தடுக்கும் எட்டு அ(ன்)னே - நான் மேவுதற்கு எட்டுத் தாய்மார்கள் தடை செய்கின் ருர்களே !

சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
சும்மா விடுமா ? என்செய்வேன் ?

---

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

— நாவலர்

௨

# பூர்வமீமாம்சையும் புறத்திணையிற் பாடாணும்

வியாச முனிவரின் சீடர்களுள் ஒருவர் சைமினி. ''அருந்தவனுஞ் சைமினி'' என்கின்றது சிவஞானசித்தியார். தவ விசேடம் படைத்தவரான சைமினி, வேதத்தின் பூர்வகாண்டமான கன்மகாண்டத்தை ஆராய்ந்து ஒரு நூல் செய்திருக்கின்றார். அந்த நூலுக்குப் பூர்வ மீமாம்சை என்று பெயர். அது கரும மீமாம்சை எனவும் படும். மீமாம்சை, ஆராய்ச்சி என்னும் பொருட்டு.

சைமினியின் குருவான வியாசர், வேதத்தின் உத்தர காண்டமான ஞானகாண்டத்தை ஆராய்ந்து ஒரு நூல் செய்திருக்கின்றார். அந்நூலுக்கு உத்தரமீமாம்சை என்று பெயர்.

பிரம மீமாம்சை, பிரம சூத்திரம், வேதாந்த சூத்திரம் என்பன உத்தரமீமாம்சைக்கு வழங்கும் வேறு பெயர்கள்.

இரு மீமாம்சைகளும் மீமாம்சை என்ற பெயராற் குறிப்பிடப்படும். மீமாம்சை இரு பாகங்கள் கொண்ட முழு நூலேயாய் [illegible]ற்பகுதியைக் குரு செய்ய முற்பகுதி

யைச் சீடர்செய்து முற்றியதொரு முழுநூல் மீமாம்சை. இக் கருத்து, "வேதத்தின் உபாங்கங்களுள் ஒன்று மீமாம்சை" என்று ஒருமைப்படுத்துக் கூறுவதனாலுந் தெளிவாம்.

பூர்வமீமாம்சை, "இனி, தருமத்தை அறிய ஆசை" என்று தொடங்குகிறது. இது அதன் முதற்சூத்திரம்.

உத்தர மீமாம்சையாகிய பிரமமீமாம்சை, "இனிப் பிரமத்தை அறிய ஆசை" என்று தொடங்குகிறது. இது அதன் முதற் சூத்திரம்.

பூர்வம் தருமத்தை விசாரிக்க, உத்தரம் பிரமத்தை விசாரிக்கின்றது; விசாரங்களின் தொடர்பை நோக்குங் கால், மீமாம்சை இரு பாகங்கொண்டதொரு முழுநூலேயா மென்பது மேலுந் தெளிவாம்.

ஒன்றோடொன்று மாறில்லாத இரண்டன் தொடர்பை யும் விரித்து விளக்கந் தந்திருக்கிறார் நீலகண்ட சிவா சாரியர். அப்பைய தீக்ஷிதர், நீலகண்டரைப் பாராட்டி நூல் செய்திருக்கின்றார். நீலகண்டரின் அருங் கருத்துக் களை வடமொழியிலிருந்து தமிழ்மொழியில் தந்தவர்கள் குப்பிழான் செய்த தவப்பயனால் அங்கே உதித்த காசி வாசி செந்திநாதையர் அவர்கள்.

பூர்வமீமாம்சை கருமமீமாம்சை எனவும் படுமென மேற்குறிக்கப்பட்டது. கருமத்தைச் சொல்லவந்த மீமாம்சை, தருமத்தில் தொடங்குகிறதென்றுஞ் சொல்லப் பட்டது. கருமமுந் தருமமும் ஒன்றே. செய்யத்தக்கதைச் செய்வதே கருமம். ஆகவே தருமம். தருமத்தை இன்றி யமையாதது கருமம் என்பது கருத்து.

தருமத்திற் றொடங்குகிற இந்தக் கருமமீமாம்சை யானது,

"மனிதருக்கு மோக்ஷத்தில் ஆசையில்லை. அவர்க ளுக்குச் சுகபோகங்களிலேதான் ஆ[illegible] "ஆசையை அடக்

கடக்கென்பர் அறிவிலார்''. அடக்குதல் தவறு. ஆசை தானே அடங்குதல் வேண்டும். சுகபோகங்களை அனுபவித்து அவற்றின் நிலையாமையை அறிந்தபிறகுதான் ஆசை மெல்லமெல்ல அடங்கும். அதற்கு வழி சுகபோகங்களை அனுபவித்தற்குத் தருமவழியிலே கருமம் ஆற்றுவதற்குத் தூண்டுவதேயாம்'' என்கிறது.

தருமத்தை விலகியும் கருமங்களாற்றிச் சுகபோகங்களைப் பெறலாமென்கின்ற உலகாயதக் கொள்கையை மீமாம்சை ஒப்புக்கொள்வதில்லை.

'தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்'.

தன்னிடத்திலே பற்றுள்ளவனுந் தன் உயர்நிலையை விரும்புகின்றவனுமாகிய ஒருவன், மற்றொரு உயிருக்குத் தினைத்துணைத் தீமையுஞ் செய்தலாகாது. மற்றொரு உயிர் வயிறு எரிய வருவதொரு சுகபோகம் உளதாயின், அது ''அழக்கொண்ட வெல்லாம் அழப்போம்'' என்ற முடிபுக்குத்தான் செல்லுவதாயிருக்கும்.

'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.''

ஆகவே, சுகபோகங்களை விரும்பும் மனிதர், தம் நலங் கருதியே பிற உயிருக்கு வருத்தம் நேராமல் தரும வழியில் நின்று கருமங்கள் ஆற்றவேண்டியவர்கள் ஆகின்றார்கள். இதற்குப் பூர்வமீமாம்சையாகிய கருமமீமாம்சை வழி காட்டுகின்றது. 'நிறுத்துவதோர் குணமில்லாதது' அது. மனிதரைச் செல்லும் வழியில் செல்லவைத்து உய்தி கூட்டுவது அது.

இப்படிப்பட்ட பூர்வமீமாம்சை எண்ணிறந்த வேள்விகளை விதிக்கின்றது. வேட்கைகளைப் பெறுகிற முறையிற் பெறுகிறதற்கு வேதவேள்விகளே வழிகள். வேட்கை - விருப்பம்.

இந்தமுறையில் வேட்கைகளை வேள்விசெய்து பெற்ற ஒருவன் ஒருகாலத்தில் "தான் வேட்டவைகள் நிலையற்றவைகள். இந்த வேட்கைகள் விடப்படவேண்டியவைகள்" என்பதை உணர்வன்.

அப்பொழுது அவன் உள்ளம் வேட்கைகளை விடும் நெறியை நாடும். "வேட்கை விடுநெறி வேதாந்தம்" என்பது திருமந்திரம்.

அந்நிலையில், 'பிரமத்தை அறியும் ஆசை' அவனுக்கு உதிக்கும். வியாசர் வகுத்த வேதாந்த சூத்திர நெறியை அவன் நாடுவன். அதற்கு வழிசெய்வது, தருமநெறியாகிய சைமினி வகுத்த கருமமீமாம்சை. அஃதாவது பூர்வ மீமாம்சை.

பழைய க்ஷத்திரியர்களாகிய அரசர்கள் சைமினி வகுத்த பூர்வமீமாம்சையின் வழிநின்று வேதவேள்விகள் செய்து, இஷ்ட போகங்களைத் தரும விரோதமின்றி அடைந்தவர்கள்.

புறநானூற்றிற் புகழப்படும் அரசர்களுள் ஒருவனின் சிறப்புப் பெயர் 'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்பது. வழுதி – பாண்டியன். இவனைப் பாடிய புலவர்,

பெரும, நீ பகைவரை நீறு செய்து ஜயத்தம்பங்கள் நிறுவிய போர்க்களங்கள் பலவோ,

'நால்வேதத்து...... வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்
யாபல கொல்லோ......"

என வினவுகின்றனர்.

யூபம்—வேள்வித்தம்பம். இரு களங்களுக்கும் எண்ணிக்கை குறிப்பது அரிதென்றபடி; அறமும் மறமும் ஒருங்கு புகழ்ந்தவாறு.

தருமவழியில் தவறாது செய்யும் மறப்போர் கேட்பினும் நினைப்பினும் நடுக்குறா உந் தறுகண்மைத்தாயினும் 'பேராண்மை' என்று சான்றோராற் புகழப்படுவதேயாம். 'பேராண்மை என்ப தறுகண்' என்பது தேவர் வாக்கு.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறு தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை மறம்"

எனவும், மேற்காட்டிய பேராண்மை புகழப்படுகின்றது. பூட்கை—குறிக்கோள்.

பகைவரைக் கொன்று குவித்து உதிரக் கடலில் மூழ்கித் திளைக்கும் போர்மறவனாகிய அரசன், போர் நிகழ்ச்சியில் தினைத்தனை தரும விரோதம் தன்னாலே தன் பரிசனத்தாலே நிகழ நேருமேயாயின், அந்தக் கணமே தன் உடலில் உயிர் தரியான், என்பது ஈண்டு சிந்தித்தற்குரியதொன்று.

பதிற்றுப்பத்து என்கின்ற சங்கத் தமிழில் பதின்மர் சேர அரசர்கள் புகழப்படுகின்றார்கள். அவர்களெல்லாம் "சான்றோர் மெய்ம்மறை" என்று பாராட்டுந் தகுதி வாய்ந்தவர்கள். மெய்ம்மறை—கவசம். உடலை மறைப்பது என்னும் பொருட்டு, சான்றோர்களுக்குக் கவசம் போன்றவர்கள் அச்சேர அரசர்கள். அவர்கள் படைகளோ என்றால் 'நிரைய வெள்ளம்'. நிரையம் — நரகம். அறந்திரி பகைவர்களுக்கு அவர்கள் படைகள் நரகசமுத்திரம். அந் நிலையில் அவர்கள் நடுவர்கள். நடுவன் என்பது தருமனாகிய யமனுக்கு மற்றொரு பெயர். குறிப்பிட்ட சேரர்கள், நடுவர்களாய் எந்தச் சந்தர்ப்பத்திலும் நடுவு திறம்பாமையினாலே, அவர்களின் போர்மறம் 'மறம் வீங்கு பல்புகழ்' என்று பாராட்டப்படுகின்றது.

'பாடாண்' என்று தலையங்கத்திற் குறிப்பிட்டது பாடாண் திணையை. இது புறத்திணை ஏழனுள் ஒன்று. திணை என்பதன் பொருள் ஒழுக்கம். ஆண்—ஆண் மகன். பாடு—பாடுதல், பாடத்தக்க ஆண்மகனின் ஒழுக்கம் என்பது பாடாண் திணை என்பதன் பொருள்.

பதிற்றுப்பத்துப் பதின்மர் சேர அரசர் மீது பத்துப் பத்தாகப் பாடிய நூறு பாடல்கள். நூறு பாடல்களும் பாடாண் திணைகள். புலவர்கள் பாடுதற்குரிய ஆடுஉக்களாகிய சேர அரசர்களின் ஒழுகலாறுகள் என்றவாறு.

பாடாண்டிணைப் பொருளவாகிய பதிற்றுப் பத்தைப் பாடியவர்கள் சங்கத்துச் சான்றோராகிய புலவர்கள். அவர்கள் 'பொய்யடிமையில்லாத புலவர்கள்' என்று பாராட்டப்பட்டவர்கள். மெய்க்கு அடிமையானவர்கள். மெய்யைப் பாடாமல் இருக்கமாட்டாதவர்கள்.

சங்கப் புலவர்கள் தமிழை ஆராய்ந்தவர்கள். தமிழ் என்பதற்கு, அன்பு நடை என்று கருத்துக் கூறலாம். வேதந் தமிழ் செய்தவர்கள் சங்கப் புலவர்கள் என்பார்கள். வேதம் அறிவுலகம். அதனை அன்புப் பயிற்சி செய்து அன்பு நடைப்படுத்தியவர்கள் சங்கப் புலவர்கள். வேதப் பொருளை உள்ளம் உருகத் தமிழ் செய்தவர் வள்ளுவர் என்பதனாலும் இஃது உணரப்படும்.

அன்புக்கு அகம் என்பது மற்றொரு பெயர். அகமாகிய அன்பை ஏழுதிணை செய்து ஆராய்ந்தவர்கள் சங்கப் புலவர்கள்.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"

என்பது தொல்காப்பியம்; இடையில் உள்ளவை ஐந்திணை.

இந்த அகமாகிய அன்புத்திணை ஏழுக்கும் ஆதாரமாகிய ஒழுகலாறு புறத்திணை எனப்படும். அவை பாடாண்டிணை முதலாகக் காஞ்சித்திணை இறுவாயாக உள்ளவைகள்,

புறம் பூர்வமீமாம்சை போன்றது. அகம் உத்தர மீமாம்சை போன்றது. தொடர்பும் அவ்வாறே. அகத்துக்குப் புறம் ஆதாரம்.

அன்பு என்கின்ற ஏழுதிணை கொண்ட தாவரத்தின் முளை கைக்கிளை. அந்த முளைக்கு ஆதாரம் பாடாண்டிணை. வித்தைப் பிளந்தெழுகின்ற முளைக்கு அவ்வித்துச் சத்து நல்கி ஆதாரமாய் இருப்பது போன்றது கைக்கிளைக்குப் பாடாண்டிணை.

பதிற்றுப்பத்துச் சேரர்கள் போன்ற அரசர்களின் மறத்திலமைந்த பாடாண்டிணையாகிய நீதியைக் கண்டு பாராட்டப் பயிலுவதிலேதான், அன்பு முளையாகிய கைக்கிளை முளை, முளைகொள்ளுமென்பது சிந்திக்கற்பாலது.

நீதியைக் காண்டல் எளிதன்று. மனுச்சோழர் மகனை முறை செய்தார். அந்த நீதியைக் காணத் தமக்கு முடியாமையால் அமைச்சர்கள் உயிர்நீத்தார்கள். மண்ணவர்கள் அழுதார்கள், விண்ணவர்கள் கண்ணீர் சிந்தவில்லை; புஷ்பாஞ்சலி செய்தார்கள். புலவர் என்பது விண்ணவருக்கு மற்றொரு பெயர்.

சங்கப் புலவர்கள் கண்ட பாடாண்டிணைப் பொருள், மகனை முறைசெய்த மனுநீதியின் ஒளியில் வைத்துச் சிந்திக்கற் பாற்று. சமண சாக்கிய நிழலில் வைத்து நிந்திக்கற் பாலதன்று அப்பொருள்.

தமிழ் அகம் புறம் என இருவகை. அகத்துக்கு ஆதாரம் புறம். புறத்தின் தொடக்கம் பாடாண்டிணை.

அறிவுலகமாகிய வேத உலகு கன்மம், ஞானம் என இருவகை. ஞானத்துக்கு நிமித்தமாகிய ஆதாரம் கன்மம். அதன் தொடக்க கருமம் தருமம். தருமத்திற் றொடங்குகின்ற கன்மத்தை ஆராய்ந்தது பூர்வ மீமாம்சை. ஆகவே, வேத உலகின் தொடக்கம் பூர்வ மீமாம்சை.

இவ்வாற்றால் பூர்வமீமாம்சைக்கும் பாடாண்டிணைக்கும் பொருத்தம் காண்க.

அறிவுலகம் ஞானகாண்டமாகிய பிரமமீமாம்சை; அதன் நிமித்த ஆதாரம் கன்மகாண்டமாகிய பூர்வ மீமாம்சை; பூர்வ மீமாம்சையின் கன்மத் தொடக்கம் தன்மம் (தருமம்).

அன்புலகம் அகத்திணை. அதன் ஆதாரம் புறத்திணை. அகத்திணைத் தொடக்கம் கைக்கிளை. அதன் புற ஆதாரம் பாடாண்டிணை,

அறிவுலக நிமித்த ஆதாரம் தருமம்; அன்புலக மூல ஆதாரம் பாடாண்டிணை.

தேவர் குறளும் திருநான் மறைமுடிபும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

---

கடவுளையும் அவரைவழிபடும் நெறியையும் அதனால் எய்தும் பயனையும், உனக்குப் போதிக்கும் அருள் வடிவாகிய ஆசிரியர் ஒருவரே உன் உயிர்த்துணை; ஆதலால், அவரை ஒரு காலமும் மறவாதே.

— நாவலர்

உ

# நளன் தூது நாடகம்
# என்னும்
# நளன் வள்ளன்மை

---

தருமபுத்திரர்,

" சூதுகொண்டு பொருதழிந்து தோல்வியெய்த வேண்டுமோ

.......................................................

ஏதுகொண்டது அதுநுமக்கு அளிப்பன் "

என்கின்றனர்.

கன்னன்,

" போதுபோகு மாறிருந்து பொருதும்வருதி யென்னவுஞ்
சூதுபோரு மஞ்சியே தொலைந்துளந் துளங்குவாய்
மோதுபோரில் எங்ஙன் உய்தி "

என்று தருமரை நிந்திக்கின்றான். சகுனி துரியோதனாதியர்கள் சிரிக்கின்றார்கள்.

அருச்சுனன்,

"இல்லெடுத்து விரகினேடும் எமையழைத்து மாயைகூர்
வல்லெடுத்து வருதலான் மறுத்தனன் மகீபனுஞ்
சொல்லெடுத்து வைதவாய் துணிப்பன்என்று கன்னன்மேல்
வில்லெடுத்தனன் .........."

தருமர், பழிக்கப்படுபவைகளில் ஒன்ருன சூதாடுதலே மறுத்தால், அது, அவர் எடுத்த வாய்மை, பொறுமை முதலிய தவ ஒழுக்கங்களுக்கு இழுக்கஞ் செய்ததாகாது.

* * *

தருமருக்குப் போலச் சூதாடுதலே மறுப்பதொரு சந்தர்ப்பம், நளனுக்கு, அவன் வாழ்க்கையில் வரவில்லை, வரமுடியாமையினலே வரவில்லை.

நளனைச் சூதாட வருக என்று, இந்த நிலவுலகில் யாராயினும் ஒருவர் கேட்கவில்லை; கேட்க முடியாமை யினலே கேட்கவில்லை.

ஒருநாள் கலிபுருஷனுடைய தூண்டுதலினலே புட்கரன் என்பவன், ஒரு கொடியை மேல் எடுத்துக்கொண்டு, எருது ஒன்றில் ஏறி, நளனை நோக்கி வருகின்ருன். நளன் புட்கரனை எதிர்கொண்டு இன்முகஞ் செய்து இன்சொற் சொல்லு வாணுய்ப் புட்கரனே நீ,

* "எடுத்த கொடி என்ன கொடி என்ன"
"'மிடற்சூது வெல்லுங் கொடி"

என்கின்ருன் புட்கரன். புட்கரன் சொல்லியது அவ் வளவே. அவன் சொல்லியது சொல்லி வாய்மூட முன்னமே, நளன்,

---

* "அடற்கதிர்வேல் மன்னன் அவனேற்றின் முன்போய்
எடுத்தகொடி என்னகொடி என்ன — மிடற்சூது
வெல்லுங் கொடியென்ருன் வெங்கலியால் அங்கவன்மேல்
செல்லுங் கொடியோன் தெரிந்து."

"ஏன்றேம் இதுவாயின்..................

.....................................

சூதாட என்றான்.............."*

புட்கரன் எடுத்த கொடியின் கருத்தை அறிந்த அந்தக் கணமே, புட்கரன் விரும்பியதை அவன் வாய் சோர்ந்து வாடமுன்னமே, நளன் நல்கினான்.

"கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று
இரப்புமோர் ஏர் உடைத்து."

புட்கரன் நளனை இரக்கவில்லை. அவன் இரக்காமலே, குறிப்பறிந்து நல்கினான் நளன். அது அவன் வள்ளன்மை. நளன் போல்வார் முன்னின்று. "இரத்தலும் ஈதலே போலும்."

* * *

முல்லைக்கொடிக்குத் தேரை உதவினான் ஒருவன்; அவன் கடைவள்ளல்; பாரி.

ஆவியோ நிலையிற் கலங்குகின்றது. அந்தச் சமயத்திலும் "யான் செய்த புண்ணியம் அனைத்தும் உதவினேன்" என்றான் ஒருவன்; அவன் இடைவள்ளல்; கன்னன்.

நளன் முதல் வள்ளல், புட்கரனென் றொருவன், தான் விரும்பியதொன்றைக் கேளாமலே, கொடி எடுத்து நிற்க, அவன் விரும்பியதைக் குறிப்பறிந்து நல்குவது முதல் வள்ளலுக்கு ஒரு காரியம் அன்று.

* * *

* "ஏன்றேம் இதுவாயின் மெய்ம்மையே யெம்மோடு
வான்றோய் மடற்றெங்கின் வான்றேறல்—தான்றேக்கி
மீதாடி வாளைவயல் வீழ்ந்துழக்கு நன்னாடன்
சூதாட என்றான் துணிந்து."

ஏன்றல் – ஏற்றுக்கோடல்.

புருஷார்த்தங்களில் அர்த்தம் இரண்டாவது: வள்ளல்கள் தருமங் கைவந்தவர்கள்; அடுத்த படியான அர்த்த சாதகர்கள்; அர்த்தம் — பொருள். நிலையாத பொருள்கொண்டு நிலையாயது சாதிப்பவர்கள் அவர்கள். அர்த்த சாதகர்களாகிய வள்ளல்களுக்கு, இடறுகட்டைகளாய் அவர்களை எதிர்ப்பவைகள் லோபமோகங்கள். இந்த லோபமோகங்கள், காமக் குரோதாதி, அறுவகைப் பகையைச் சேர்ந்தவைகள். லோப மோகங்களை வெல்லுவதே வள்ளல்களின் சாதகம். ஒளியின் ஒழிவு நோக்கி நிற்கும் இருள் போல, வள்ளல்களை வெல்லுதற்குப் பொல்லாத சந்தர்ப்பங்களை நோக்கித் தவங்கிடப்பவைகள் இந்த லோபமோகங்கள்.

* * *

அன்னந் தூது நடந்து அமைகின்றது. நள தமையந்தியரின் காதல் கரை புரளுகின்றது. நளனுடைய ஒவ்வொரு உரோமத் துவாரத்திலும் தமையந்தி கொலுவீற்றிருக்கின்றாள். நளன் சுயம்வர மண்டபத்தை நோக்கி நடக்கின்றான். இடைவழியில் இந்திராதி தேவர்கள் நளனுக்கு ஏவல் கற்பிக்கின்றார்கள். ஏவலை முகம் மலர்ந்து அகம் இனியனாய் ஏற்றுக்கொள்ளுகிறான் நளன். அவன் இருதயத்தில் களங்கத்தின் எதிர்மறையான தூய்மை குடிகொள்ளுகின்றது. அதனாலே அவன் இருதயம் பளிங்கை வெல்லுகின்றது. அந்த இருதயப் பளிங்கிற் குடியிருந்த கோதை * கோதாயினாள். உள்ளீடற்ற கழிவுப் பொருள் கழிவதுபோல இருதயத்திற் குடியிருந்த பொருள் விலகி மறைகின்றது: அப்படி யொருபொருள் ஒரு காலத்திற் குடியிருந்ததென்று அறிந்து கொள்ள இயலாத பிரகாரம் இருதயப் பளிங்கு வில்லிட்டு வென்று, வள்ளன்மை பிர

* "செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட இயல்வீமன் —மங்கைபால்
தூதாக என்றானத் தோகைதன் ஆகத்தாற்
கோதாக வென்றானக் கோ."

காசிக்கின்றது. சுயம்வர மண்டபம் நோக்கி நடந்த — எத்தனையோ தமையந்திகளை உரோமத் துவாரந்தோறுஞ் சுமந்து சென்ற நளன்—நளமகாராஜன், இப்பொழுது தன்னந்தனியனாய், தமையந்தி வசிக்கும் அந்தப் புரம் நோக்கி, ஆரும் அறியாமல் நடக்கின்றான். நளன் தூது நடக்கின்றான். உள்ளும் புறம்பும் நளர்களேயாக, பார்க்கு மிடம் எங்கும் நளர்களையே பார்த்து, நளர்களோடேயே சல்லாபஞ் செய்து, ஒரு கணம் ஒரு உகம் ஆகக் கால வெள்ளத்துள் கரைதுறை காணமல் கலங்கியிருக்கின்றாள் தமையந்தி. அவள் எதிரில் மாசு நீங்கிய புதியதொரு தேஜஸ் பிரகாசிக்கின்றது. பழைய நளர்களைக் காணேம். தமையந்தியின் இருதயப் பளிங்கும் வெறுமையாகின்றது. நளனுடைய தெய்வீக ஒளி அந்தப் பளிங்கையும் பரிசுத்தம் செய்கின்றது போலும். சந்தன மரத்துக்கு எதிரில் நிற்கும் மரமுஞ் சந்தன மரந்தானே. மாசு மறு அற்ற தூய இரு தயங்கள் இரண்டு பேசத் தொடங்குகின்றன.

நளன் பேசுகின்றான்; மணம் பேசுகின்றான்.

"என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை — மென்மாலை
சூட்டுவா யென்றான் றெடையிற்றேன் தும்பிக்கே
ஊட்டுவா னெல்லாம் உரைத்து"

இது நளன் பேசிய திருமணப் பேச்சு. எதிர்ப் பேச்சுப் பேசத் தமையந்திக்கு நா எழவில்லை. வள்ளன்மை ஆகிய தெய்வீக ஒளியின் முன், காதல் மூளை சூனியம் ஆயினது போலும்.

"யாவையுஞ் சத்தெதிர் சூனியம்"

என்கின்றது சிவஞானபோதம்.

* * *

நளன் தூது முற்றி மீளுகின்றான். மீளுகிற போதுதான் தமையந்தியின் நாவில் ஒரு வார்த்தை வருகின்றது.

"அவையத்தே,
சோதிச், செழுந்தரள வெண்குடையாய் தேவர்களும் நீயும்
எழுந்தருள்க என்றாள் எடுத்து."

இதுதான் தமையந்திக்கு அந்தச் சமயத்தில் வரக்கூடியதாயிருந்த வார்த்தை;

* * *

நளன் தூது நாடகம் முடிவுற்றது. இந்திராதி தேவர்கள் ஆசீர்வதிக்கின்றார்கள், வள்ளன்மை வாகை சூடியது.

* * *

காதலையுமா வழங்கினான் ஒரு வள்ளல் என்று வாயூறுகின்றது உலக அரங்கு.

---

நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழிவையாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது;

— நாவலர்

௨

# ஆரியமும் தமிழும்

"மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி ழும்முட னேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே"

**ஆரியமும் தமிழும் தந்தையும் தாயும்.**

'தந்தை தாய்ப் பேண்'

*　　*　　*

**தந்தைக்கும் தாய்க்கும் நோக்கு ஒன்றே.**

"காகத் திருகண்ணுக் கொன்றே மணி"

**ஆரியத்துக்கும் தமிழுக்கும் நோக்கு,**

"அழிந்த சிந்தை அந்தண ளர்க்கு
அறம் பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் முக்க ணதி......"

என்று, "மறைஞான ஞானமுனிவன்" அருளிய 'நற்றமிழில்' அறம், பொருள், இன்பம், வீடு எனப் பேசப்பட்டது.

*  *  *

தந்தைக்கும் தாய்க்கும் நோக்கு ஒன்றாயினும், போக்கு வேறு. தந்தைபோக்கு அறிவுப்போக்கு; அறிந்ததில் ஆராமைப் போக்குத் தாய்போக்கு, அஃதாவது அன்புப் போக்கு. ஆரியம் அறிவு நடை; தமிழ் அன்பு நடை; காரியம் ஒன்றே.

நடைவேறுபட்டதால் பாஷை துவிதப்பட்டது; ஆரியம் தமிழ்; உண்மையில் அத்துவிதம்; ஏகம்,

*  *  *

தந்தை நடை,

வெட்டொன்று துண்டு இரண்டு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

அறிவுக்கனல் சுடர்விட்டெரிகிறது. தாய் நடை, இடையீடு படாத தேனொழுக்கு;

"எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே இனிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக — அபிராம
இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல — வருமாயன்"

அன்பு கசிந்து ஒழுகுகின்றது.

ஆரியம்;

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நிய மின்மையின் அரன்கழல் செலுமே."

*தமிழ்:*

''மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணு மாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னு மருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்''

*அ. i. 'ஆதிபகவன் முதற்றே யுலகு'*

*ii. ''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டு''*

ஆ. i. ''ஒருவனே டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாத லாலே
தருபவன் ஒருவன் வேண்டும் தான் முதல்.........''

ii. ''மானிடப் பிறவி தானும் வகுத்தது மனம்வாக் காயத்
தானிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றே
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ''

* * *

*ஈசுவரன்;*

*ஒருபாதி,*

''பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியன்''

*மற்றொரு பாதி,*

'' நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்சுவை'

* *

சங்கப்புலவர்கள்,

அறிவால் ஆரியர்; அன்பால் தமிழர்.

அகத்தியர்,

காசியில் ஆரியர்; மதுரையில் தமிழர்.

தொல்காப்பியர்,

யமதக்கினி முனிவரின் புதல்வர்; பரசுராமனின் சகோதரன். தனித்தமிழிலக்கணமாகிய தொல் காப்பியஞ் செய்தவர்.

"பல்காற் பழகினும் தெரியா உழவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்"

அதங்கோட் டாசான்.

i. "அறங்கரை நாவில் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசான்"

ii. பாண்டியன் சபையில் தொல்காப்பியங் கேட் டோன்.

* * *

ஆரியமும் தமிழும் ஒரு சாதியார் வழங்கிய இரு வேறு பாஷைகள். ஒன்று ஆண்; ஒன்று பெண். நடை வேறு. பொருள் ஒன்று.

* * *

பொருள் பிறழ நடை பிறழும்; நடை பிறழப் புற்றீசல் போலப் புதிய புதிய பாஷைகள் தோன்றும். அவைதாம் எண்ணில.

* * *

பரிசுத்த பாஷைகள் — மூலபாஷைகள் — இரண்டே. அவை,

"ஆரியமும் தமிழும்"

காரிகையாளர்க்குக் கருணை செய்தானே.

உ

# சங்கத் தமிழ்

---

தமிழ் :

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்ததும் ஒரு உயிர்ப்பு—துடிப்பு—உண்டாகிறது. அது எங்கிருந்து வந்தது? தூண்டியவர் யார்?

உயிர்ப்பைக் கலிப்பு, எழுச்சி, எழுத்து என்றும் வழங்கலாம், நம்மிடை எழுகின்ற எழுச்சியாகிய எழுத்துக்கு முதல் என்னே? அந்த அகரம் யாது? அகரம் போன்றது யாது?

கடலிலே திரைகள் எழுவதுபோலக் கருத்துக்கள், அஃதாவது எண்ணங்கள் நம் வல்லமையைக் கடந்து எழுந்து மடங்குகின்றன. ஒலி வடிவெடுத்து வெளியேயும் வருகின்றன. ஒலியுங் கருத்துந்தானே சொல்லும் பொருளும்.

உலகம் சொல்லும் பொருளுமாயிருக்கிறது. இப்படி இருவகைப்பட்ட உலகத்தை உள்ளேநின்று தூண்டும் முதல் எது?

'ஆதி பகவன் முதற்றே உலகு' என்கின்றது தமிழ் வேதம். சொல்லும் பொருளுமாகிய உலகத்துக்கு ஆதி பகவன் முதல் என்பது கருத்து.

'எழுத்து முதல் அறிவு ஓதிய நூலின் பயன்' என்கின்றார் ஔவையார். நமது மன எழுச்சிகளின் முதலை, அஃதாவது கருத்தாவை அறிதல்தான் கற்றதனாலாய பயன்.

நமது மன எழுச்சிகளுக்கெல்லாம் அவ்வெழுச்சிகளை எழுப்பிக்கொண்டு ஒரு முதல் இருந்தால், அந்த முதலை விசாரித்து, அதன் கருத்தை அறிந்து தானே எழுச்சிகளைப் பயன்படுத்தவேண்டும்; எழுச்சிகளான எழுத்துத் தானே நமக்குப் பிரதான கண்; கண் போற் பேண வேண்டியது. கண்போன்ற எழுச்சிகளான எழுத்தைத் தூண்டுபவன்தானே இறைவன். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவன். எழுச்சிகளின் மூல இரகசியத்தை அறிவிக்க வல்லவர் கடவுள் ஒருவரே. ஆகவே கண்ணாகிய எழுத்தை இறைவனாகிய அதன் முதலின் கருத்தறிந்தே உபயோகிக்க வேண்டும்.

"பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்"

பயனில் சொல் – முதலின் கருத்தறியாது மனிதன் தன் கருத்தினிலே நடத்தும் சொல்.

மகான்கள் முதலின் கருத்தறிந்தே கருத்துக்களைச் சொல்வடிவில் வெளிப்படுத்தி வந்தார்கள். அவர்களுடைய கருத்துக்களுக்குப் பயன் என்று பெயர். அவர்கள் வழங்குகின்ற சொற்கள் பயனுள்ள சொற்கள். "உலகமென்பது

உயர்ந்தோர் மேற்று", 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்ற ஐந்தின், வகை தெரிவான் கட்டே உலகு' உலகம் உயர்ந்தோர் வழியில் நிற்கற்பாலது.

உயர்ந்தோர்கள் வழங்கிய சொல்வடிவங்கள் இரண்டு வகை: ஒன்று ஆரியம்; மற்றது தமிழ்.

"ஆரியமுந் தமிழும் உடனே சொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே"

ஆரியம் காரியத்தை விசாரிப்பது. பொருள் இந்தப்படியை உணர்த்துவது. தமிழ் விசாரித்தறிந்த உண்மைப் பொருளில் அன்பு சுரப்பது. ஆரியம் தந்தை; தமிழ் தாய், ஆணும் பெண்ணும்; அறிவும் அன்பும்.

அறிவுப்பாஷை ஆரியம். அன்புப் பாஷை தமிழ். காரியத்தை அறிய அறிய அன்பு ஊறும். அன்பு ஊற ஊற மேலும் அறிவு விரியும், ஒன்றை ஒன்று இன்றியமையாதது, ஒரு கயிற்றின் இரு புரிகள்.

மகாரிஷிகள் காரியத்தை விசாரிக்கும்போது ஆரியர் விசாரித்ததில் அன்பு செய்யும்போது தமிழர்.

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"
— தேவாரம்,

ஆண்பாகம் ஆரியம், பெண்பாகம் தமிழ். தோடுடைய செவி பெண் பாகம். சம்பந்தர் சொன்னது தமிழ்.

சம்பந்தர் போல்வார் தமிழ் கூறிவந்தார்கள். பெரியோர்கள் வழியில் உலகம் நின்றது. அந்தக் காலத்திலே உலகம் தமிழ் கூறும் நல்லுலகமாயிருந்தது.

சங்கம்:

காலம் நடக்க நடக்கக் கர்மம் முதிர முதிர, மனிதன் முதலின் கருத்தை விசாரியாமலும் இடையிடையே தன்

கருத்தையும் நடத்தத் தொடங்கினன். பயனில் சொல்லும் இடையிடையே புகுதற்கு எத்தனித்தது. மகான்கள் அஞ்சினர்கள். தூய கருத்துக்களை — முதலின் கருத்தறிந்து வருகிற கருத்துக்களைப் பாதுகாத்தற்குச் சங்கங்கள் தாபித்தார்கள். பயன் உள்ள சொற்களாகிய தூய ஆரியம், தூய தமிழ் பாதுகாக்கப்பட்டன. ஆரிய சங்கங்கள், தமிழ்ச் சங்கங்கள் தோன்றின. ஆரிய சங்கத்தில் காரியத்தை விசாரித்த அகத்தியமா முனிவரே தமிழ்ச் சங்கத்தைத் தாபித்து, விசாரித்த காரியத்தில் அன்பைப் பெருக்கினர்; பெருக்க வழிசெய்தார்.

ஒரு நாள் அகத்தியர் ஆரியர்; மற்றொரு நாள் தமிழர். ஜமதக்கினி மகாமுனிவரின் புதல்வர் தொல்காப்பியர். அகத்தியரின் முதல் மாணவர்; தமிழ்மாணவர்.

இடையில் இடையீடுபட்டுந் தொடர்ந்தும் மூன்று தமிழ்ச் சங்கங்கள் தாபிக்கப்பட்டன. சங்கங்களிலே சான்ருேர்கள் குழுமினர்கள். தூய கருத்துக்களின் போக்கு இப்படி இருக்கும் என்று பிரமாண நூல்கள் வகுக்கப் பட்டன. அவற்றுட் பிரதானமானவை அகத்தியம், தொல்காப்பியம். இவை தமிழின் உரை கற்கள்; நூல்கள். இவற்றைக் கண்டுதான் தமிழ் இயம்புவது, சான்ருேர்கள் அகத்திய, தொல்காப்பியங்களை உரைகல்லாக வைத்துத் தமிழாராய்ந்தார்கள்.

ஆத்ம முனைப்பின்றி, அதுவே தாமாய் நின்று, திருவருளால், அருளியவைகளின் உயர்வைக் காட்டுதற்கும், எட்டாத ஐயங்களைத் துணிதற்கும் உபகாரமான ஒரு தெய்வப்பலகையும் திருவருட்குறிப்பாக அச்சங்கத்தில் அமர்ந்திருந்தது.

சங்கத்தவர்கள் சான்ருேர்கள்; பொய்க்கு அடிமையில்லாதவர்கள்; சத்திய சாதகர்கள். சங்கங்களைப் பாண்டிய அரசர்கள் பரிபாலித்து வந்தார்கள். கடைச்சங்க

இறுதிக் காலத்தில் ஒரு முக்கிய சம்பவம் நடந்தது. அச் சம்பவம் கடைச் சங்கத்துத் தலைமைப் புலவரான நக்கீர ரால் உரைக்கப்பட்டது. தமிழைப் பற்றிச் சிந்திப்பவர் களுக்கு இன்றியமையாதது. அதில் ஒரு பகுதி இது:

'அக்காலத்து பாண்டியனுடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. [வற்கடம் — மழையின்மை]. செல்லப் பசி கடுகுதலும் அரசன் சிட்டரையெல்லாங் கூவி, [சிட்டர்க ளாகிய புலவர்களை அழைத்து] "வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; [தக்கமுறையில் உபசரிக்க முடியாத வனுயிருக்கிறேன்]. என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீவிர் போய் நுமக்கு அறிந்தவாறு புக்கு, [ஏற்ற ஏற்ற இடங்களை அடைந்து வாழ்ந்து] நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின்" என்றான்; என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீ ரியாண்டு கழிந்தது [மழையில்லாமலே பன்னிரண்டு வருஷம் கழிந்தது]. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை அரசன் இனி நாடு நாடாயிற்று ஆதலின், நூல் வல்லாரைக் கொணர்க என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல் லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம் என்று வந்தார். [பொருளிலக்கண மரபு தெரிந்தவர்கள் அருகி மறைந்து விட்டார்கள்] வர, அரசனும் புடைபடக் கவன்று, "என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது, பொருளதி காரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறே மெனின் பெற்றும் பெற்றிலேம்," எனச் சொல்லாநிற்ப, [பொருளின்றிய எழுத்துஞ் சொல்லும் பணம் இன்றிய பை போன்றதாம் என்று பாண்டியன் வருந்தினான்] மதுரை ஆலவாயின் அழல்நிறக் கடவுள் சிந்திப்பான். "என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையது ஆகலான்; யாம் அதனைத் தீர்க்கற் பாலம்" என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்: கடவுள் திருவருளினாலே அறுபது சூத்திரங்கொண்ட ஒரு

நூல், பொருளிலக்கண மரபை நெறிப்படுத்துதற்குத் தோன்றியது.

இந்த அறுபது சூத்திரத்துக்கும் களவியல் என்று பெயர். இந்தக் களவியல் வரலாற்றிலிருந்து ஒரு பெரிய சரித்திர உண்மை தோன்றுகின்றது. மனிதன் தன் கருத்துக்களை அசுத்த நெறியில் வழங்கத்தொடங்கினன். பிரமாண நூல்களை அசட்டை செய்தான். சத்தியம் அழிந்தது. தொல்காப்பியம் இடையிடையே அழிவு அடைந்து சிதைந்தது. தூய கருத்துக்களாகிய பொருள்களை மரபு அறிந்து வழிப்படுத்துவார் இல்லையாயினர். அரசன் ஏங்கினன். இறைவன் திருவருளால் களவியல் தோன்றியது இந்தக் களவியல் என்ற பெயரிலிருந்து மனிதனின் கருத்துக்களின் தூய்மை களவுபோகத் தொடங்கியதைத் தெரிந்துகொள்ளலாம். கருத்துக்களின் தூய்மை முழுதுங் களவு போனவர்களுக்குக் கழுவாயில்லை. ஒரு அளவுக்குக் களவுபோய்க்கொண்டிருக்கிறவர்கள், தப்பிக் கற்பு நெறியில் நேர்படுதற்கு உபகாரமானது களவியல் கருத்துக்களை முதல்வன் கருத்தறிந்து நடத்துவது கற்பு. கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை; சொல், முதல்வன் கருத்தறிந்து வழிப்பட்ட சொல். அது களவு நிலையிலிருந்துதான் முதிர்ந்து கனிவது. "கற்பெனப் படுவது களவின் வழித்தே" என்பது களவியற் சூத்திரம்.

களவியல் உதயஞ்செய்ததால் பொருளறிந்து கருத்துக்களை நேர் செய்து, தப்பிப்பிழைத்தவர்கள்—தமிழ் செய்தவர்கள்—எத்தனை பேர்? விரல்மடித்துக் கணக்கிடவேண்டியது அத்தியாவசியகம். களவியல் உதயஞ்செய்ய முன்னமே, கடைச்சங்கம் ஒடுங்குகின்ற காலத்தே திருவள்ளுவர் நூற் பொருளுணர்ந்து முக்காலத்துக்கும் ஏற்றவகையில் முழுத்த நூல் செய்தருளினர். அது தமிழ் வேதமாய் உரைகல்லாய்ச் சுடர்விடுகின்றது. களவியலுக்குப் பின் அருள்வழி நின்றோர் போக, மற்றவர்களில் எத்தனைபேர் களவியல் வழிநின்று தூய கருத்துக்களை வெளியிட்டார்களோ! எத்தனை விரல் மடிக்கலாமோ! பெரிதும் சிந்தித்தல் வேண்டும்.

சங்கங்கள் தலை, இடை, கடைகளாய் வரவரத் தம் நிலை குறைந்து குறைந்து ஒடுங்கின. தூய கருத்துக்களே நிலவிய காலத்தில் எப்படிச் சங்கம் என்று ஒன்று வேண்டா திருந்ததோ, அப்படித்தான் அசுத்தக் கருத்துக்களே நிலவிய காலத்திலே, சங்கம் என்று ஒன்று அவசியமில்லை யாயிற்று; சங்கம் ஒடுங்கியது.

கிராமத்துச் சனங்கள் பசுப்பால் கேட்டால் தருவார் கள்; பணம் பெறமாட்டார்கள். பால் மகாலக்ஷுமி விற்கக் கூடாது என்பார்கள். கிராமம் பட்டினமானதும் கொஞ்சம் கொஞ்சம் உத்தியோக புருஷர்களுக்கு விற்கப் பழகினார்கள். கொஞ்சம் தண்ணீருங் கலக்கப் பழகிக்கொண்டார்கள். பிறகு பட்டினம் நகரமாயிற்று. பாலுக்குள்ளே தண்ணீர் கலப்பதை நிறுத்தி, தண்ணீருக்குள்ளே சற்றே பால் காட்டத் தொடங்கினார்கள். சிலசமயம் பால், மாவின் பாலேயாய் முடிந்தது. இனி, பாலைப் பரிசோதிக்கிற ஒரு சங்கம் இருப்பதிற் பயனில்லை. பாலுக்குள்ளே தண்ணீர் கலக்கிற காலத்திலேயானால் சங்கத்தால் ஏதும் பயன் விளையலாம்.

இந்தப் பாற் சரித்திரத்திலிருந்து ஏன் தமிழ்ச்சங்கம் உண்டானது, ஏன் ஒடுங்கவேண்டி நேர்ந்தது என்பன எளிதில் அறியத்தக்கன.

கடைச்சங்கம் ஒடுங்கியதும் சூரியன் அஸ்தமனமாக நட்சத்திரங்கள் தோன்றுவதுபோலச் சமண புத்த சங்கங் கள் தமிழ்நாடெங்கும் தோன்றின. தமிழ், வேழமுண்ட விளாங்காயானது.

௨

# சங்க காலத்துக்குப் பிறகு...

திருவள்ளுவரிலே முதல் அதிகாரத்திலே "இருள்சேர் இருவினை" என்று ஒரு தொடர் வருகின்றது. மனிதன் நல்வினையுஞ் செய்வான்; தீவினையுஞ் செய்வான். அந்த இரண்டுக்கும் அடிப்படை இருள், அஃதாவது அறியாமை: தன்னை அறியாமை. தன்னை என்பதற்குத் தன் தலைவன்; தன் கருத்துக்கு முதல் என்றும் பொருள் கூறலாம்: தன் + ஐ = தன்னை. மனிதன் தன்னையும் அறியான்; தன் தலைவனையும் அறியான்.

இனி வருகின்ற உலகம் இருள்சேர் இருவினை செய்கின்ற இருள் உலகம் என்பதை அறிவிப்பவர் போன்று, திரிகாலமும் அறிந்த வள்ளுதேவர், அத்தொடரைத் தொடக்கத்திலேயே அமைத்தருளினர் போலும்!

"புத்தரொடு அமணர்கள் அறவுரை புறவுரை" என்பது சம்பந்தப்பெருமான் திருவாக்கு. புத்த சமண அறம் அறத்துச்குப் புறம்; அறம்புறம். சங்கத்துச் சான்

ரோர்கள் சிந்தித்த அறம் வேறு; சங்கத்துக்குப் பிறகு: புத்தர் சமணர்கள் நடத்திய அறம் வேறு, முதல்வன் கருத்தை விசாரியாது மனிதப் புத்தி வழிநடத்திய அறம், புத்த சமண அறம்; புத்த சமணர்கள் முதலில் அறத்தைத் தலைகீழ் செய்தார்கள். நாலடியார் கொழுத்த சமணப் புத்தகம். நாலடியாரில் இல்லறம் இகழப்பட்டது. பொருள் இன்பங்களைப் புறக்கணித்தார்கள். அறத்தின் விளைவுகள் பொருள் இன்பங்கள் என்று அவர்கள் நினைக்கவில்லை. அதனாலே, 'அறம் பொருள் இன்பம், வீடடைதல் நூற் பயன்' என்பது கருத்தற்றதாயிற்று. அதன் வைப்புக் கிரமத்துக்கு ஒரு கருத்தும் இல்லையாய் விட்டது. திருவள்ளுவரிலே காமத்துப்பால், திருச்சிற்றம்பலக் கோவையார், கற்றறிந்தார் ஏத்துங் கலித்தொகை முதலியன மனிதக் காதல் பேசும் வெறும் காமப் பகுதிகளாய் நின்றுவற்றின. இவைகள் ஞானத்தின் பாற்பட்டவைகள் என்பது நக்கீரர் கருத்து. புத்த சமண ஆதிக்கம் தமிழ் நாட்டையும் தமிழையும் படுமோசம் பண்ணியது.

நமக்குப் பல்வேறு லௌகிக உதவிகள் கைம்மாறு கருதாமற் செய்து, நம்முடன் கலந்து, நமது அறிவை நம்மை அறியாமலே தம்வயம் செய்கின்ற அந்நிய தேசத்துக் குரவர்கள்—அவர்களைச் சார்ந்தவர்கள்—இவ்விஷயத்திலே பௌத்த சமணக் குருமார்களிடம் பிச்சை வாங்க வேண்டும்!

பௌத்த சமணக் குருமார்கள் நமக்கு எல்லாக் கலைத் துறைகளிலும் உதவ முன் வந்தார்கள். தமிழில் பெரிய பெரிய வித்துவ சாமர்த்தியம் உள்ளவர்கள் அவர்கள். நிகண்டு வேண்டுமா? இலக்கணங்கள் வேண்டுமா? காவியங்கள் வேண்டுமா? எளிதில் படிக்கத்தக்கமுறையில் இனிக்க இனிக்க எழுதிக்குவித்தார்கள். தேன்குடம் மாதிரி எறும்புகளை இழுத்தார்கள். எல்லாரும் இழுபட்டார்கள். ஒரு காப்புச் செய்யுளாயினும் தம்மதக் கடவுள் காப்பை, மற்றவர்கள் படித்தாலே போதும் என்ற கருத்துள்ளவர்கள், அக்குரவர்கள்.

சங்கத்துச் சான்றோர்களின் செய்யுள் நடையிற் செய்யுள்கள் செய்தார்கள். திருவள்ளுவரில் மேற்பூச்சுப் பூசி மெழுகினார்கள். நாலடியார் போன்றவைகளை வள்ளுவரோடு சேர்த்துச் சங்கநூல் வரிசையில் வைக்க வழிபண்ணினார்கள். பெரிய பெரிய சூழ்ச்சிகள் நடந்தன.

இறையனார் களவியலில் நக்கீரர் உரையிலே, சங்கத்தார் செய்தவைகளில் எட்டுத்தொகை நூல்களின் பெயர்கள் வருகின்றன. நெடுந்தொகை நானூறு; குறுந்தொகை நானூறு ; நற்றிணை நானூறு ; புறநானூறு ; ஐங்குறுநூறு ; பதிற்றுப்பத்து ; நூற்றைம்பது கலி ; ஏழு பரிபாடல் என்பன அப்பெயர்கள். எட்டுத்தொகை என்று இலக்கங் குறிப்பிட்டுப் பெயர்கள் வரவில்லை. பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு என்ற வழக்கு நக்கீரர் உரையில் இல்லை. பிற்காலத்தில் "நற்றிணை நல்ல குறுந்தொகை", "முருகு பொருநாறு", "நாலடி நான்மணி" என்று மூன்று வெண்பாக்கள் பழைய ஏட்டுச் சுவடிகளுட் புகுந்து, பின்பு, டாக்டர் அவர்களின் கைகளுக்கு வந்து, எத்தனையோ திருவிளையாடல்கள் நடத்தி விட்டன. இப்பொழுது சங்கநூல் என்றால் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்று சொல்லுகிற ஒரு மனன வாய்பாடு மேற்கூறிய மூன்று வெண்பாக்களிலிருந்தும் வந்ததேயன்றிச் சங்கத்துச் சான்றோராகிய நக்கீரர் அருளிய சங்கநூல் வரலாற்றிலிருந்து வந்ததன்று.

அறம் பொருள் இன்பங் கண்ட திருவள்ளுவருக்கும் அவற்றைத் தலைகீழ் செய்த நாலடியாருக்கும் என்ன சம்பந்தம்? பதினெண்கீழ்க் கணக்குச் சொன்ன பாட்டு இது :

"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

'இன்னிலை' என்றும் 'கைந்நிலை' என்றும் மூன்றும் நான்காம் வரிகள் தொடங்குகின்றன. அப்பெயர்களில், அஃதாவது 'இன்னிலை' 'கைந்நிலை' என்ற பெயர்களில் புத்தகங்களும் வந்துவிட்டன. அவ்விரு புத்தகங்களையுஞ் சேர்த்தால், பதினெண் கீழ்க்கணக்குச் சொன்ன பாட்டில் பத்தொன்பது புத்தகங்களுக்குக் கணக்கு வரும். பத்தொன்பதிற் பல புத்த சமண புத்தகங்கள். சங்கத்திற் புத்த சமணத்துக்கு இடமேது!

திருமுருகாற்றுப்படை திருவருள் வழி வந்தது. திருமுறையைச் சேர்ந்தது. அருள் வழிப்பட்டதற்கு அரங்கேற்றமில்லை. அதற்கும் ஏனைய ஒன்பதிற்கும் எவ்வகையிலோ தொடர்பு சிருட்டிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வெண்பாக்கள் மூன்றும் சமண சூழ்ச்சிகள் ஆகலாம். சங்கத்திலே ஒரு சீத்தலைச் சாத்தனார்: திருவள்ளுவ பக்தர். மணிமேகலை பாடினவர் ஒரு சாத்தனார்; கடைச் சங்க காலத்துக்குப் பிந்தியவர். முழுப்பெயர் கூல வாணிகன் சாத்தனார். அவர்தம் பெயரைச் சங்கத்தார் சாதியில் வைத்துக்கொண்டதால் அவருக்குப் பெரிய வாய்ப்பு வந்துவிட்டது. டாக்டர் ஐயரும் பிறரும் மணிமேகலை பாடிய கூலவாணிகன் சாத்தனாரை, கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று நீட்டிச் சங்கப்புலவர் ஆக்கி விட்டார்கள். மணிமேகலைக்கு நல்ல அதிர்ஷ்டம்; சங்க நூல் ஆகிவிட்டது. சிலப்பதிகாரம், சிந்தாமணிக்கு இந்த அதிர்ஷ்டம் கொடுத்துவைக்கவில்லை. என்றாலும் டாக்டர் ஐயர் அவர்கள் இரங்கி, அவற்றையும் சங்கநூல் ஆக்கி விட்டார்கள். சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் என்ற நூல், ஐயர் அவர்களின் பத்து உபந்நியாசங்கள் கொண்டது. சென்னை, சர்வகலாசாலை செய்வித்தது. அந்த நூலில் பெரிய பஞ்சகாவியம் சிறிய பஞ்சகாவியம் எல்லாம் சங்க நூல்களே. அறத்துக்குப் புறம்பான சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரங்களுக்கும் டாக்டர் ஐயர் அவர்கள் கைப்பட்ட விசேஷத்தால் நல்லகாலம் ஆய்விட்டது.

பதிற்றுப்பத்தில் ஒரு செங்குட்டுவன் வருகின்றான்: அவனுக்கும் கண்ணகிக்கும் ஒருதொடர்பும் இல்லை. யாரோ ஒரு வீரதீர வித்துவான், பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பத்துக்கும் சிலப்பதிகாரத்துக்குப் போலே ஒவ்வொரு பதிகம் பாடி, ஏடுகளில் இணைத்துவிட்டான். அவைகள் செய்த புண்ணியத்தால் ஐயர் அவர்கள் கைப்பட்டன. அப்படியே பதிற்றுப்பத்துள் பிரவேசித்துவிட்டன. உட் பிரவேசித்த விசேஷத்தால், பதிற்றுப்பத்துச் செங்குட்டுவனுக்கும் சங்ககாலத்துக்குப் பிந்திய கண்ணகிக்கும் சம்பந்தம் உண்டுபட்டுவிட்டது. ஐயர் அவர்கள் நினையாப்பிரகாரம் சம்பந்தம்பண்ணிவிட்டார்கள். பாவம்! பிந்திய கண்ணகிக்கு முந்திய செங்குட்டுவன் கோயில் கட்ட நேர்ந்துவிட்டது!

பவணந்தி ஒரு சமணன். நல்ல முகூர்த்தத்தில் நன்னூல் செய்யப்பட்டது. அது எத்தனையோ இலக்கணங்களையும் விழுங்கித் தொல்காப்பியத்தையும் வழக்கறச் செய்துவிட்டது. நம்மவர்கள் தமக்கென ஒன்று இல்லாதவர்கள் ஆனார்கள். சார்ந்ததன் வண்ணமாய் நடுக்கடலிலே தத்தளிக்கின்றார்கள். நம்மவர்களுக்கு அறம் பொருள் சொல்லுகிறவர்கள் சமண பௌத்தர்களாய்விட்டார்கள். திருவள்ளுவ தேவரையும் சமண பௌத்த பார்வை பார்க்க வேண்டியவரானார்கள். தொல்காப்பிய நூலை உரைகல்லாகக் கொண்ட தமிழ்நாடு, இன்றைக்கு, ஒரு நூல் தோன்றினால், அதை மிலேச்சநாடு ஆகிய பிறநாடு மதிக்க வேண்டும் என்கிறது. சால்பின் இலட்சணம் சான்றாண்மை என்ற அதிகாரத்திலே திருவள்ளுவரில் சொல்லப்பட்டிருக்கின்றது.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண்"

சங்கப்புலவர்கள் சான்றோர்கள். அவர்களுள்ளே சமணர் பௌத்தர்களும் இருந்து தமிழாராய்ந்தார்கள் என்று எழுதிவிட்டுப் போய்விட்டார்கள் டாக்டர் ஐயர் அவர்கள்.

பைத்தியம் பிடித்த குரங்குக்குப் புளித்த காடி செய்கின்ற வேலையை அந்த எழுத்து இன்றைக்குச் செய்கிறது. அகத்தியர், குன்றமெறிந்த குமரவேள், ஆலவாய் அவிர் சடைக் கடவுள் என்போர் சமண பௌத்தர்களையும் வளைத்துத் தலைமைப் புலவர் பதவி வகித்துவிட்டார்கள். பெரிய கெட்டித்தனம்! அவர்கள் தலைமை வகித்தபோது, சுந்தரமூர்த்தி நாயனார் 'பொய்யடிமையில்லாத புலவர்க்கும் அடியேன்' என்று சமண பௌத்தர்களையும் சேர்த்து அவர்களுக்குங் கும்பிடு போடலாந்தானே!

சங்கப் பாடல்களிலே சமண பௌத்த மணமே கிடையாது. அப்படியிருக்கச் சங்கப்புலவர்களிலே சமண பௌத்தர்களும் இருந்தார்களென்பது எட்டுணையும் பொருத்தமற்றது. திருவருளையும் திருவருள் பிரகாசிக்கும் அடியார்களையும் பாடிய சுந்தரர் சமண பௌத்தர்கள் சேர்ந்த ஒரு கூட்டத்தைப் பாடுவாரா? துதிப்பாரா?

இதுவரை சங்க காலத்துக்குப் பிறகு தமிழுக்கு நேர்ந்த கதி பேசப்பட்டது, இப்பொழுது புற்றீசல்போலப் புறப்படுகின்ற புத்தகங்களுக்கும் பொருளிலக்கணத்துக்கும் தொடர்பில்லை. பொருள் இலக்கணம் என்றால் புருஷார்த்தம் என்று கருத்து. புருஷார்த்தம் பேசிய சங்கப்பாடல்களும் சங்கத்துக்குப் பிறகு களவியல் வழி நின்று மரபு பிறழாது செய்தவைகளும் ஏனையவைகளோடு — அறம் பொருள் இன்பப் பிறழ்வுகளோடு — பன்றிகளோடு கூடிய கன்றுகளாய் — மதிப்பிழந்து இன்றைக்குத் தவிக்கின்றன. தொல்காப்பியம், திருவள்ளுவர் என்கின்ற பார்வைகள் [பார்வை—பார்வைமிருகம்] மூலம் அக்கன்றுகளைத் தேடி இனம் காணவல்லார் காண்க.

உ

# தூடலைப்பட்டார் மணிவாசகனார்

---

## I

திருக்கைலாச வருணனை ஒன்று பெரியபுராண முகப்பில் வருகின்றது. இதனை வெள்ளிமலை என்று சொல்வதும் உண்டு. இது அண்ட முகட்டில் மகாமேருமலையின் உச்சியில் உள்ளது. அண்டம் பதினான்கு உலகங்களைக் கொண்டது. ஆக மேலே உள்ள பதினான்காம் உலகம் சத்திய உலகம். அதற்கு மேலே உள்ளது வைகுந்தம். அதற்கு மேலே உள்ளது திருக்கைலாசம். ஒவ்வொரு அண்டத்துக்கும் அண்ட முகட்டில் வைகுந்தமும் அதற்கு மேலே திருக்கைலாசமும் உண்டு. அண்டங்கள் அளவில்லாதன. நாங்கள் இருக்கும் உலகம் பூலோகம். இது கீழிருந்து மேலே எட்டாவது உலகம்; அண்ட மத்தியில் இருக்கின்றது. இந்தப் பூலோகம் ஏழு தீவுகளாக வகுக்கப்படும். அதில் ஒரு தீவு நாவலந்தீவு. அது ஒன்பது வருஷங்கள் கொண்டது. அதில் ஒரு வருஷம் பாரத வருஷம். அதுதான் இந்தப் பூமி. இந்தப் பூமியிலே ஒன்பது கண்டங்கள் உண்டு. அதில் ஒரு கண்டம் பரத கண்டம். அது குமரி கண்டம் எனவும்

படும். அதனைப் புண்ணியம் மிக்க கண்டம் என்று சொல்லுவார்கள். அதிலுள்ள இமயமும் கங்கையும் மிகச் சிறப்பானவை. இமயத்தில் ஒரு பாகத்தில் உள்ள ஒரு மலையைப் பூமியில் உள்ளவர்கள் திருக்கைலாசம் என்று வழங்குகின்றார்கள். அதற்கு யாத்திரை செய்பவர்களும் உண்டு. இந்தத் திருக்கைலாசம் அண்டமுகட்டில் உள்ள திருக்கைலாசக் காட்சியைக் காணுதற்கு உபகாரமான ஒரு இடம். அதனால் இதுவும் திருக்கைலாசம் எனப்படுகின்றது. இது உண்மையான திருக்கைலாசத்தின் சாயலின் சாயல்.

பிரபஞ்சம் நிழற்படம்போல மாயையாகிய திரையில் தோன்றி நின்று மறைவது. மாயையாகிய திரை மூன்று வகை. முதலாவது திரை சுத்தமாயை. அது வெகு பரிசுத்தமானது. வெண்மைகளுள் வைத்து வெண்மையானது அது. அதில் தோன்றி விளங்குவதுதான் அண்டமுகட்டில் உள்ள வெள்ளியங் கைலாசகிரி. இரண்டாவது திரை அசுத்த மாயை. மூன்றுவது திரை பிரகிருதி மாயை. மிக்க அழுக்கோடு கூடியது இது. இந்தப் பூமி இந்தப் பிரகிருதி மாயையில் தோன்றியது. இதில் உள்ள கைலாசம் சுத்தமாயையில் உள்ள கைலாசத்தின் மூன்றுவது தோற்றம்; சாயலின் சாயல். தவவிசேடம் உள்ளவர்கள் இந்தப் பிரகிருதியில் உள்ள கைலாசத்திலிருந்து அந்த உண்மைக் கைலாசத்தைத் தரிசிப்பார்கள். திருநாவுக்கரசு நாயனார் மிகமிகச் சிறந்த தவவிசேடத்தினால், இந்தப் பிரகிருதியிலே மற்றொரு இடமான திருவையாறு என்கின்ற சிவஸ்தலத்திலிருந்துகொண்டே உண்மையான திருக்கைலாசத்தைத் தரிசித்தார்.

திருநாவுக்கரசுநாயனார் தரிசித்த அந்தக் கைலாசத்தை அவர்மீது ஆராத பத்தியிற் பழுத்தவராகிய சேக்கிழார் சுவாமிகள் தமது இருதயத்தில் ஒருகாலத்திலே காணப் பெற்றார். அது செய்யுள் வடிவிற் காட்சியளிக்கின்றது. பின், சேக்கிழார் சுவாமிகளையும், அவர் வணங்குகின்ற திருநாவுக்கரசுநாயனாரையும் வழிபடுதலையே ஒரு பெரும்

பேருகக்கொண்ட ஆறுமுகநாவலர் வசனவடிவில் பெரிய புராண வசன முகப்பிலே, அந்தத் திவ்விய திருக்கைலாசத்தைத் தந்திருக்கின்ருர்.

திருநாவுக்கரசுநாயனுர் தரிசித்த கைலாசத்தை, சேக்கிழார் சுவாமிகளின் இருதயத்திலிருந்து நமக்குத் தந்திருக்கின்ருர் ஆறுமுகநாவலர்.

நாவலர் தந்த திருக்கைலாச வருணனை அநாதிமல முத்தராய் என்று தொடங்குகின்றது. அதில் கைலாச நிலயராகிய கைலாசபதியின் தடத்தத் திருமேனியின் இயல்பு முதற்கண் எடுத்துக் காட்டப்படுகின்றது. ஒரு திருமுகம், முச்சுடர்களாகிய மூன்று திருக்கண்கள், கங்கையும் பிறையும் கூடிய சடைமுடி, குண்டலமும் தோடும் அணிந்த திருச்செவி, காளகண்டம், மான், மழு, அபயம், வரதம் பொருந்திய நான்கு திருக்கரங்கள், விபூதியினுலே உத்தூளிக்கப்பட்ட செம்பவளத் திருமேனி, பூணூலும் என்பு மாலைகளும் புனைந்த திருமார்பு, புலித்தோலை உடுத்த திருவரை, வேதச் சிலம்புகள் ஒலிசெய்கின்ற திருவடி ஆகிய அவயவங்களோடு கூடிய ஸ்ரீகண்ட சரீரம் அந்த வருணனையிற் காட்சியளிக்கின்றது. ஸ்ரீகண்ட உருத்திரர் பிரளயாகலரில் தலைசிறந்து பக்குவம் எய்தியவர். ஐந்தொழில்களையும் இயற்ருதியற்றும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் திருக்கைலாசத்திலே ஸ்ரீகண்ட உருத்திரரை நிலைக்களமாகக் கொண்டு, ஸ்ரீகண்ட சரீர சரீரியாய் ஆன்மாக்களுக்கு நிக்கிரானுக்கிரகங்களைச் செய்துகொண்டிருக்கின்ருர். ஸ்ரீகண்ட சரீர சரீரி என்ருல் ஸ்ரீகண்ட உருத்திரருடைய சரீரத்தைத் தமக்குத் திருமேனியாகக் கொண்டவர் என்பது கருத்து.

இப்படிப்பட்ட ஸ்ரீகண்ட உருத்திரர் எழுந்தருளியிருக்கும் திருக்கைலாசமும், அவர் எழுந்தருளிய ஓலக்கமும் அதன்பிறகு வருணிக்கப்படுகின்றன. 'நானுவித சிகரங்களோடு கூடிய திருக்கைலாசத்திலே செம்பொற் திருக்

கோயிலிலே திவ்ய சிங்காசனத்தின் மேலே அருட்சத்தியும் உலக மாதாவும் ஆகிய பார்ப்பதி தேவியார் தமது இடப் பாகத்தின் மேவ வீற்றிருந்தருளுவர்' என வருணனை முடிகின்றது. இடையிற் பூதர்களுட் பலர் வாத்தியங்களை முழக்க, சிலர் சாமரம் வீச, வேறுபலர் ஆலவட்டம் அசைப்ப, தும்புரு நாரதர் இசை பாட, கணநாதர் ஆனந்த அருவி சொரிய, முனிவர்கள் உபநிடதங்களை எடுத்தோத, தேவர்கள் தத்தங் குறைகளைக் கூற, நந்திதேவர் வேத் திரப்படையுடன் நிற்ப எனத் திருச்சந்நிதி வருணனை வரு கின்றது. இந்த வருணனை மேலே சென்று உச்சநிலையை யடைந்த ஒரு இராகத்தின் சங்கதிகளோடு கூடிய சஞ் சாரம் போன்று மிளிர்கின்றது. பின் அந்த வருணனை மெல்லென்று அவரோகணமாகி 'வீற்றிருந்தருளுவர்' என்று முற்றி அமைகின்றது.

திருக்கைலாச மாட்சியும் ஸ்ரீகண்ட உருத்திரரின் திரு வோலக்கமும் பேசுகின்ற இந்த வருணனை, அந்தத் திருக் கைலாசமே போன்று தனித்ததொரு வசனமாய் அமைந் திருக்கின்றது. திருக்கைலாசமலையில் ஆரோகணஞ் செய் கின்ற ஒருவர் மெல்லென ஏறி உச்சியை அடைந்து சற்றே சஞ்சாரம் செய்து ஆரோகணித்தவாறே மெல் லென்று அவரோகணஞ் செய்து தரையை அடைவதுபோல, அநாதிமல முத்தராய் என்று தொடங்குகின்ற வருணனை யும் சிறிய சிறிய அலைகளாய் மேலே மேலே எழுந்து உச்சியிலே சிறிது உலாப்போந்து பின், ஒழுங்குபட்டதொரு மலைச்சாரலிலே அருவி ஒழுகுவதுபோல் கீழிறங்கி வீற் றிருந்தருளுவர் என்று முடிகின்றது, பெரிய புராண வசன மாகிய மாளிகை முகப்பிலே, செந்தமிழ் வசனமாகிய ஒரு கைலாச கோபுரம் எழுந்து நிற்பதுபோல நிற்கின்றது அந்த ஏக வசன வருணனை.

செய்யுள் நடையிலானால் அந்த வருணனை அநாதிமல முத்தனாய் என்று தொடங்கி 'வீற்றிருந்தருளுவன்' என்று முடிந்திருக்கும். வீற்றிருந்தருளுவர் என்ற தொடரில்

இறுதி ரகரம் வசனநடை பற்றி மரியாதைப் பன்மையில் அவ்வாறு வந்ததேயாயினும் அது உண்மையில் னகரமேயாம். அநாதி என அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது அந்த வசனம். அகரம் முதல் னகரம் இறுவாயான தமிழில் வசனநடை நடக்கும் நடைக்கு உரை ஆணி இது என்பதைக் காட்டுவதாய் அமைந்திருக்கின்றது அந்த வசனம். ஒரு சொல்லுத்தானும் ஒரு அசைதானும் செய்யுள் நடைப்படாமல், இரு நூற்றுக்கு மேற்பட்ட சொற்களையுடையதாய் அமைந்திருக்கின்றது அந்தத் தனிவசனம். அது சொன்னடையாலும், தன்னிடத்துப் பொதிந்த பொருளின் சிறப்பாலும், அப்பொருளைத் தெளிவுபெறக் காட்டும் இயல்பாலும் அவ்வெள்ளியங் கைலாசகிரியே போல் மிளிருகின்றது, தன்பால் அமைந்த பொருள் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்ததாய் அத்தத்துவங்களால் அறியப்படுவதாய் அமைந்தது என்பதனை அறிவிப்பதுபோல் முப்பத்தாறு வரிகளைக் கொண்டதாய் அவ்வாற்றால், ஒரு தெய்வ சம்பத்தாய் அமைந்திருக்கின்றது அந்த வசனம்.

## II

உலகத்துக்குக் கருத்தா யாவர்? 'சிவபெருமான்' என்று தொடங்குகின்ற சைவவினாவிடை முதல் வசனம் ஒரு சிருட்டியை ஆரம்பிக்க, 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என்கின்ற பாலபாட முதல் வசனம் அச்சிருட்டியின் பயனை விளக்க, இந்தத் திருக்கைலாச வருணனை முடிந்த பயனைக் காட்டுவதாய் அமைந்திருக்கின்றது. இவ்வாற்றால் இந்த மூன்று வசனங்களும் வசன மும்மணிகளாய் முத்தமிழ்க் கருவூலங்களாய் விளங்குவதை விரித்து இயற்றமிழ் வசனநடை இருந்தபடியைக் காட்டி ஒரு நூல் எழலாம். இந்த மூன்று வசனங்களும் ஒவ்வொரு மாணவன் மனசிலும், நாவிலும் சதா நடம்புரிய வேண்டியவைகள். அது நிற்க, எடுத்துக்கொண்ட திருக்கைலாசத்துக்கு வருவோம். கற்புடை மகளிர்கள் தெய்வத்தையும் தங்கணவருக் கூடாகவே நோக்கும் இயல்புடையவர்கள்.

அக் கற்புடைய மகளிர் போலவே நாமும் திருநாவுக்கரசு நாயனார் தரிசித்த கைலாசத்தை—நாவலர் தந்த கைலாசத்துக் கூடாகவே காணவேண்டியவர்களா யிருக்கின்றோம். கற்றோரும் மற்றோரும் எளிதிற் காணுதற்கு வழி செய்து கொண்டிருக்கின்றது நாவலர் தந்த செந்தமிழ்த் தனிவசன கைலாசம்.

தூய்மைக்கு உரைகல்லான அந்தக் கைலாசத்திலே, உள்ளும் புறமும் தூயர்களாய் அந்தக் கைலாசம்போல் மாசுமறுவற்றவர்களாய் உள்ளவர்களே கைலாசபதிக்குச் சேவை செய்துகொண்டு வழிபட்டு வருகின்றார்கள். மாசு என்கின்ற களங்கம் இருப்பதனால் சந்திரனே கைலாசத்தை அணுக இயலாது. மாசு நீங்கிய சந்திரன் போன்றவர்களே கைலாசத்தில் வாசஞ் செய்பவர். உபமந்யு முதலிய புனிதர்களாகிய முனிவர்கள் அந்தக் கைலாச மலையின் அடிவாரத்தில் அதனை அகலாது என்றும் இருப்பார்கள்.

'ஒலிதரு கயிலை உயர்கிழ வோனே'

என்று கீர்த்தித் திருவகவலில், கைலாசபதியின் உரிமைப்பாடு துதிக்கப்படுகின்றது. திருமுருகன் 'பழமுதிர் சோலை மலைகிழவோன்'; ஸ்ரீகண்ட பரம சிவன் 'ஒலிதரு கயிலை மலைகிழவோன்.'

திருக்கைலையில் பரிசுத்தமாகிய வேதம் ஒலித்துக் கொண்டேயிருக்கும். பிரபஞ்சம் சத்தமும் அர்த்தமும் என இருவகை. சத்தம் சொல். அர்த்தம் பொருள். பொருட் பிரபஞ்சத்தின் பரிசுத்தமான சுத்த நிலை திருக்கைலாசம். அங்கே ஒலித்துக்கொண்டிருக்கிற வேத ஒலி சொற்பிரபஞ்சத்தின் மூலமான சுத்தநிலை. ஜனகர் முதலிய முனிவர்கள் வேத உண்மைகளைத் திருகைலாசத்துக்குப் போய் அறிவார்கள் என்பது புராணப் பிரசித்தம். திருக்கைலாசத்துக்கு ஒரு பக்கத்தே கல்லால் எனப்படும் ஒரு விருட்சம் உண்டு. அதன் கீழ்த் தட்சிணாமூர்த்தியாய்த் திருக்கைலாசபதி வீற்றிருந்தருளுவர். அவர் முன்னிலையில் முனிவர்கள்

வேத உண்மைகளை அறிவார்கள். திருக்கைலாசத்திலே சேவைசெய்துகொண்டு வாசஞ் செய்பவர்கள் அந்த முனிவர்களிலும் மேலானவர்கள். அவர்களுக்குச் சிவாகமப் பொருளான சிவஞான உபதேசம் நடப்பதுண்டு. ஒரு சமயம் நந்தி கணத்தவர்களுக்குச் சிவஞான உபதேசம் நடந்தது. நந்தி கணத்தவர்களுக்குத் தலைவர் திருநந்தி. அவர் பஞ்சகிருத்திய நடனத்துக்கு மிருதங்கம் வாசிப்பவர். அவர் தலைமையில் உள்ள குழுவினர் ஆயிரக்கணக்கானவர்கள் வாத்தியம் வாசிப்பவர்கள். அவர்களுக்கு ஒரு முறை பாடம் நடக்கின்றது, சிவஞானபோத பாடம்.

'வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன்'

வேதக்காட்சி நூலறிவு. பாச ஞானம் எனப்படும். உபநிடத்துச்சியில் விரித்த போதக் காட்சி பசுஞானம். இந்த இரு ஞானங்களாலும் கடவுள் அறியப்படார். இதற்கு மேலே உள்ள ஞானம் பதிஞானம். அதற்கு மற்றொரு பெயர் சிவஞானபோதம். இதனைச் சுருக்கிச் 'சிவபோதம்' என்றுங் கூறலாம். பசு ஞானம் சீவபோதம் எனவும் படும். சீவபோதத்தாற் சிவத்தைஅறியமுடியாது. சிவபோதத்தால்தான் சிவத்தை அறியலாம். சூரிய கிரணத்தாலேதான் சூரியனை அறியலாம். அதுபோல அவனருளாலேதான் அவனை அறியலாம். சிவபோதமாகிய சிவஞான போத பாடம் நந்தி கணத்தவர்களுக்கு நடக்கின்றது. எல்லாருங் கண்மூடி மௌனமாய்ச் சும்மா இருக்கின்றார்கள். உடல் பொருள் ஆவிகள் ஒப்பிக்கப்பட்டு, சீவன் சிவன் ஆகிற சிவோகம்பாவனையை எல்லாரும் எய்துகின்றார்கள். 'யாவையுஞ் சத்தெதிர் சூனியம்' என்பது சிவஞான போதத்தில் ஒருதொடர். உலகம் சூனியம் ஆகின்றது அவர்களுக்கு. யாவருந் தாடலைப்படுகின்றார். கைலாச மலையில் உள்ள புல்பூண்டுகள் மிருகங்கள் பறவைகள் அனைத்தும் சிவமயம் ஆகின்றன. அந்தச் சமயத்திலே திருக்கைலாசத்தை நோக்கி ஒரு பவனி வருகின்றது. இந்திரன்

கைலாசத்தை நோக்கிப் பவனி வருகின்றான். அவன் சுவர்க்க உலக அதிபதி. சுவர்க்கம் பூலோகத்துக்கு மேலே கீழிலிருந்து ஒன்பதாவது உலகம். அவன் அண்ட முகட்டில் உள்ள திருக்கைலாசத்துக்கு அயிராவத யானையிலே சங்க நிதி பதுமநிதி கற்பகதரு காமதேனு என்கின்ற செல்வங்கள் சேவிக்கப் பவனி வருகின்றான். அவன் யாகாதிபதி. சதமகன் என்பது அவனுக்கு மற்றொரு பெயர். சதம் நூறு. நூறு யாகம் செய்தவன், அந்தப் புண்ணிய விசேடத்தால் இந்திரன் ஆகின்றான். இந்திரன் நூறு யாகத்தோடமைவதில்லை. இந்திரன் ஆன பின்பும் ஆயிரக்கணக்கான வேள்விகளைச் செய்துகொண்டிருப்பவன் இந்திரன். வேட்கை தணிவிடம் வேள்வி என்பது திருமந்திரக்கருத்து. வேட்கையை அடக்குதல் ஆகாது. அது தானே அடங்குதல் வேண்டும். அதற்கு வழிசெய்வது வேள்வி.

'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.'

நாம் நமது உடல் உண்ண உயிர் உண்டதாகப் பாவித்துப் பூரிக்கின்றோம். கண்ணப்பர் உயிர்க்குயிர் உண்ண உயிருண்டதாகப் பாவித்துப் பூரித்தார். அந்தப் பூரிப்பே மேலானது. அந்த நிலை உண்ணாமை பிறந்த நிலை. அதுதான் பிறக்கவேண்டியது. உண்ணாமைதான் உயிர்க்கு நன்று. அது வாய்ப்பது எளிதன்று. அது வந்து வாய்க்கும் வரை உண்ணுதல் செய்யவேண்டியவர்களாய் இருக்கின்றோம். அது செய்யுங்கால் மற்றோர் உயிரைச் செகுக்காமல் செய்தல் இயலாது. சாக பக்ஷணிகளும் அதனைப் பற்றியிருக்கும் சிற்றுயிர்களைச் செகுத்துவிடுகின்றார்கள். ஆதலினால் செகுத்தலினால் வரும் தோஷம் நீங்கும் பொருட்டு வேள்விசெய்து தெய்வங்களைப் பிரீதிசெய்து உண்ண வேண்டியவர்களாகின்றோம். அதுவே விதி. கீரையை உண்ணுவதாயினும் அதற்குரிய யக்ஞம் செய்தே உண்ண வேண்டும். செய்யாதவழி மலத்தைப் புசிப்பதாயிருக்கும் என்கின்றது வேதம்.

எந்த உயிரையும் அது நின்ற உடலிலிருந்தும் மேலான நிலையை அடையச்செய்து, அதன் உடலை உண்ணலாம் என்கின்றது வேதம். வேத வேள்வி உயிர்களின் பந்தங்களை நீக்குமுகத்தால் நன்மை புரிவது. அதன் பலத்தால் இந்திரபதவி கிடைக்கின்றது. இந்திரன் வேதத்திற் சொல்லப்படுகின்ற ஒரு தெய்வம். முப்பத்து முக்கோடி தேவர்கள் இந்திரனை வழிபட்டு இந்திரன்மூலம் மேலான நிலையை எய்துகின்றார்கள். இந்திரன் உண்மை பிறவாதவன். வேள்விமூலம் உண்டுகொண்டே உயர் பதவியிலிருப்பவன். திருக்கைலாசவாசிகள் உண்மை பிறந்து உயர்நிலையை எய்தியவர்கள். அவர்களின் நிலை தனக்கு வாய்க்குமோ என்று வாயூறுகிறவன் அவ்விந்திரன். அவன் வாயூறிக்கொண்டு திருக்கைலாசத்தை நோக்கி வருகின்றான். அந்த வைபவத்தை அங்கு மோன நிலையில் இருப்பவர்கள் பொருள் செய்யவில்லை. ஒருவர் மாத்திரம் அந்த வைபவத்தைச் சற்றே பொருள் செய்துவிட்டார்; அந்த வாழ்க்கையும் பழுதில்லாதது என்று எண்ணிவிட்டார். சிவஞானபோத நேரத்தில் அந்த எண்ணம் அவரைப் பற்றிக்கொண்டது. அவருக்குப் பெயர் குடமுழாநந்தி. நந்தி கணத்தவர்களுள்ளே குடமுழா என்ற வாத்தியத்தை முழக்குபவர் அவர். அந்தக்கணமே அவர் அந்த வகுப்பிலிருந்து வெளியேறவேண்டியவர் ஆனார். கைலாசத்தில் ஒரு சிறு குற்றம் ஒருவரிடம் தோன்றுமாயினும், அது பளிங்குப் பாத்திரத்தில் இட்ட பொருள்போலத் தோன்றும். குற்றம் செய்தவரே ஒப்புக்கொண்டு வெளியேறுவர். ஒரு காலத்தில் சுந்தரர் வாகீசர் இவ்வாறு வெளியேற வேண்டியவர்களானார்கள். வாகீசர்தாம் திருநாவுக்கரசு நாயனார். கைலாசத்தின்கீழ் நெரிபவனை இராவணனுக்குப் புத்திசொன்னவர். சர்வசீவ தயாபரர் தண்டிக்க தாம் அவரிலும் தயை பூண்டவர்போல் புத்திசொன்னது சந்நிதி விரோதமாயிற்று.

'குடமுழநந் தீசனை வாசகனாக் கொண்டார்'

என்பது திருநாவுக்கரசர் வாக்கு. குடமுழநந்தீசர் படிக்கும் போது பராமுகஞ் செய்த குற்றத்தால், அந்த அருட்

செல்வத்திலிருந்துகொண்டே இந்திரனுடைய பொருட் செல்வத்தை மதித்த குற்றத்தால் மாணிக்கவாசகராகப் பூமிக்கு இறங்கவேண்டியவர் ஆயினர்.

திருக்கைலாசத்திலே குற்றம் செய்பவர்களுக் கிட மில்லை.

ஒரு காலத்திலே நூற்றெட்டு யுகம் திருக்கைலாசம் பூட்டப்பட்டிருந்தது. ஒருவரும் அங்கே அணுகமுடியவில்லை. பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்கள் அணுக முடியாமல் அலைந்தார்கள். சூரபத்மா அவர்களை வருத் தினன்: ஆற்ருமல் ஒருமுறை வாயுதேவனை உத்தரவின்றியே உட்புகும்படி பிரமதேவர் ஏவினர். வாயு மெல்ல உள்ளே புகுந்தது. உத்தரவின்றிப் புகுந்த வாயுவை உறுக்கி நல்ல பிரம்படி கொடுத்தார் திருநந்திதேவர். உடனே வாயு தேவன் நந்திதேவரை வணங்கி,

தானவர் தொழவரு தகையில் சூரனல்
மானம தொருவியே வருத்துற் றேய்ந்தனன்
ஆனதொன் றுணர்கிலேன் அறிவு மாழ்கினேன்
ஏனைய தேவரும் இனைய நீரரே'

என்று மன்னிப்பு வேண்டினன்.

சூரபத்மாவின் இராச்சியத்தில் எல்லோருக்கும் விவேகம் குழம்பிவிட்டது. செய்வது தவிர்வது தெரியவில்லை என்கின்றன் வாயுதேவன். அக்காலத்தில் வேதநெறி பிறழ்ந்தமையால் கைலாசத்தை அணுகமுடியாதவர்க ளானர்கள். அந்த உகச்செய்தி அப்படியானல், இந்தக் கலியுகத்தில் ஆங்கிலர் ஆட்சியில் நூற்றைம்பது வருடம் இருந்த எங்கள் செய்தி எப்படியாகும்? இந்தக் காலத்தில் எந்தக் கோயிலிலும் உட்புக எவருக்காயினும் உரிமை இருக்க முடியாது, எல்லாக் கோயிலும் பூட்டப்பட வேண்டியனவே. கோயில் தோறும் பெரும்பாலும் ஒரு பலகை தொங்குகிறது. அதில் வேதாகம விதிப்படி நடை பெறும் கோயில் என்று எழுதப்பட்டிருக்கிறது: விதிக்கு

மாறுக நடக்கும் கோயில் என்பதற்கு அது அடையாளம் போலும். எந்த வேதாகமங்கள் தமக்குப் பிரமாணமென்று எவர்கள் சொல்லுகிறார்களோ அவர்களை அந்த வேதாகமம் உள்ளே நிற்க விடா. தில்லைவாழந்தணர்கள் எந்தப் பதஞ்சலி பத்ததியைக் கொண்டார்களோ, அந்தப் பத்ததிப்படி அவர்கள் நடேசருக்குப் பூசை செய்ய அதிகாரிகள் அல்லர் என்றார் நாவலர். நமக்கு எப்படிக் கோயிலை அணுக உரிமை இல்லையோ, அவ்வாறே கைலையை அணுக அங்கே வசிக்க உரிமை இல்லாதவர் ஆயினார் குடமுழ நந்தீசர்.

## III

கைலாசபதியின் அருட் குறிப்பின் வழி,

'இந்திரச் செல்வம் போல இயைந்துள செல்வம் எய்தி
மந்திரத் தலைமை பூண்ட வண்புகழ் வாத வூரர்
தந்திரத் தொகுதி சூழத் தாரகா கணங்க ளோடும்
அந்தரத் திழிந்து மண்மே லமர்ந்தவெண் மதிய மொத்தார்'

பிரதம மந்திரியானார். தென்னவன் பிரமராயன் என்னும் பட்டமும் கிடைத்தது. இந்திரச் செல்வத்தை அநுபவித்துக்கொண்டிருக்கிறார். கைலாச வாழ்க்கை கனவாய்ப் பழங்கதையாய் ஞாபகத்திலில்லாமல் மறைந்து போனது. பிறப்பு துயில்போன்று பழைமை வாழ்க்கையை மறைத்துவிட்டது, பிரதம மந்திரியார் ஒருநாள் குதிரையிற் சவாரி செய்கின்றார். குதிரை வாங்க மிக்க வரிசைகளோடு குதிரையிற் செல்கின்றார். அன்று இந்திரன் பவனி சென்றதுபோல் பிரதம மந்திரியின் பவனி செல்கின்றது.

குதிரை வாங்கச் சென்றவர்,

'சென்றவழி மாறியொரு தெய்வழி செல்வார்'

ஆயினார். வழி மாறிவிட்டது. அதை யாரும் உணரவில்லை,

'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த
பெய்வளை' திருவிளையாடல் அது.

திருப்பெருந்துறைக்குச் செல்லும் வழியில் பவனி செல்கின்றது, பிரதமமந்திரியார் குதிரைமீது செல்கின்றார். செல்லுகின்றவர் செவியில் ஒரு குரல் பூபாளராகத்தில் ஒலிக்கின்றது; மந்திரியாரை ஒரு மாதாக அக்குரல் விளிக்கின்றது.

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியையாம் பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என் னேஎன்னே
ஈதேஎம் தோழி பரிசேலோர் எம்பாவாய்.'

'பட்ட கட்டையிற் பகற்குருடு பவனிபோகிறது' என்று ஒருவர் கூறியதுபோல், பெண்ணே நீ குதிரையிற் செல்லுகிறாயா? அல்லது துயில் புரிகின்றாயா? உனக்குச் செவியில்லையா? என்று இடித்துரைப்பது போன்றிருந்தது அந்தக் குரல். பவனி அந்தக் குரலின் வழி சென்றது.

மந்திரியார் அங்கே ஒரு திருக்கூட்டத்தைக் கண்டார். ஒரு குருந்தமரம். அதன் நிழலில் ஒரு பரமாசாரியர் வீற்றிருக்கின்றார். அடியார்கள் எல்லாரும் பெண்மை பிறந்து வழிபடுகின்றார்கள்.

'பப்பற வீட்டிருந் துணரும்நின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின்றார்.'

கடவுள் சர்வலோகை நாயகன். ஆன்மாக்கள் நாயகிகள்; பெண்மை பிறக்கவேண்டியவர்கள். சம்பந்தருக்குத் தோணியப்பரைக் கண்டதும் பெண்மை பிறந்தது; உள்ளங்

கவர் கள்வன் என்று பாடினார். அவ்வாறே நமது பிரதம மந்திரிக்கும் நாயகனைக் கண்டதும் பெண்மை பிறந்தது. தன்னை மறந்தார் தன்னாமங் கெட்டார். எல்லாவற்றையும் விட்டார். பெண்மை பிறக்கப்பெற்றார். பழைய ஞாபகம் வந்ததுபோலும்.

'அன் றுவட நீழலில் அமர்ந்தார் நீரே'

என்று தம்முள் வினவினார்.

'மின்னினும் நிலைமை யில்லா விழுப்பொருள் யாவும் வேண்டேன்
உன்னடி அடைந்து நாயேன் உறுபவம் ஒழித்தல் வேண்டும்
என்னையின் றடிமை கொள்வாய் எம்முயிர்க் கிறைவா வென்று
முன்னுற வணங்கி நின்றார் முகமெலாங் கண்ணீர் வார.'

இந்திரச்செல்வத்தை வெறுத்தார். தாடலைப்பட்டார். மற்றொரு கண்ணப்பர் ஆயினார். 'பிரிந்தவர் கூடினாற் பேசவேண்டுமோ.' ஊமையாயினார். இந்நிலையில் பரமாசாரியர் அருள்புரிந்து மறைந்தார்.

'ஒலிதரு கயிலை உயர்கிழ வோன்
பொலிதரு புலியூர்ப் புக்கினி திருந்தான்.'

திருப்பெருந்துறையினீங்கிச் சிதம்பரத்துக் கெழுந்தருளி, மணிவாசகரின் பக்குவம் நோக்கியிருந்தார். அடியார் கூட்டமும் மறைந்தது. மணிவாசகர், பிரிவாற்றாது, அலறினார்.

'கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி ரான்எனைத் தாங்கிக்கொள்ளே.'

கைவிடாதேயென்று நீத்தல் விண்ணப்பம் செய்தார். உள்ளந்தாள் நின்று உச்சிவரை நெஞ்சாய் உருகினார்.

இரங்கினார். ஒரு நெய்தல் தலைவியாயினார். அழுது அழுது கண்ணீர் வடித்தார். அவருடைய உருக்கமே திருவாசகம். தலங்கள் தோறும் தேடினார். வினவினார்.

'கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரை'

என்று பாடிப்பாடி அலைந்தார்; தலங்கள் தோறும் சிவத்துவம் எய்தியவர்கள் இருப்பார்கள். அவர்களை நாயன்மார் காணுகிறவர்கள். கைலையில் ஸ்ரீகண்டர்போல விசேட தலங்களில் சிவத்துவமெய்தியவர்கள் இருப்பார்கள். புனிதர்கள் அவர்களைக் கண்டு பேசுவார்கள். மணிவாசகரும் அவ்வாறே செய்தார். திருவருள் சிதம்பரத்துக்கு இழுத்தது. அங்கே போய் ஒரு இடத்தில் தனிமையாய் இருந்து, தனக்கும் தன்னுயகனுக்கும் உள்ள தொடர்பு எழுதிணையாய்க் களவு கற்பாய் நானூறு துறையாய்க் கிடந்ததனைப் பாடி உருகிக்கொண்டிருந்தார். அன்புத்துறைதான் திருச்சிற்றம்பலக்கோவையார். அது நானூறு துறைக்கும் நானூறு பாடல் கொண்டது. நானூறும் பாட்டில் நாலாம்வரி இது.

'ஊருணி உற்றவர்க்கு ஊரன்மற் றியாவர்க்கும் ஊதியமே'

இதுதான் இறுதி வாக்கு.

அவன் ஊருணி; எல்லார்க்கும் பொது. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிலை பரிபூரணப் பட்டது. இதுவே மறுவில் கற்பு, தெய்வயானை நிலை.

மற்றவர்கள் வாழ்வதில்
மறுப்பில்லாத தொருநிலை சாதாரணமன்று;

நீ பிறரைச் சுமக்கவேண்டாம்; அவர் வாழ்க்கைக்கு மறுப்பில்லாமல் இரு என்கின்றது வேதம். அதுதான் அழுக்காறற்ற நிலை. திருவருள் ஒவ்வொருவருக்கும் வழி காட்டும். அதனோடு ஒத்துச் செல்லவேண்டும்.

ஒரு தலைவி பரிபூரணமாயினவள் ஆயினுந் தன் தலைவன் மற்றொருத்திக்குத் தண்ணளி செய்வதைப் பொறுக்க மாட்டாள். அதுவும் போகவேண்டும். தெய்வயானை, 'பாங்கிவந் துற்றவாறு நன்றெனப் பரிவுகூர்ந்தார்.' அந்த நிலையை மணிவாசகர் எய்தினார். அந்த நிலையில்,

செய்காட்டுங் கழுகடவித் தில்லையுளார் பொருள் கேட்டார்கள். அவர் விரைந்து சென்று கனகசபையை அடைந்து,

இவர்தாம் பொருள் என்று,

கைகாட்டித் தம்முருவங் காட்டாமல் மறைந்தார். நடராஜப் பெருமானின் திவ்விய திருவருளில் உயிரே யன்றி ஊன் உடலும் சென்று ஐக்கியம் ஆயிற்று.

நாம் மாணிக்கவாசகர் நங்கையாய் நாயகனைக் கலந்த வரலாற்றைக் கேட்டுணர்ந்தும்,

'புவனியிற் போய்ப்பிற வாமையில்
நாள்நாம் போக்குகின்றோம்'

'நாள் உயிரீரும் வாள்' என்பதை உணருகின்றோ மில்லை. அவ்விஷயத்தில் நாம் கும்பகர்ணர்களா யிருக்கின்றோம்.

'உறங்குகின்ற கும்பகர்ண'

என்று ஒரு திருப்பள்ளி எழுச்சி கம்பரில் வருகின்றது. அப்படி ஒரு பள்ளி எழுச்சி நமக்கே நாம் பாடிக்கொண்டு 'போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர்' என்று எம் பெருமான் பாதமலரைச் சிந்திப்போமாக.

# கலியுகம் 1ஆந் திகதி

மகாபாரத யுத்தத்துக்குப் பிறகு, ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகைக்குப் போய்விட்டார். தருமபுத்திரரும் தம்பிமாரும் திரௌபதியுடன் அத்தினாபுரத்திலே அரசு புரிந்துகொண்டிருக்கின்றார்கள்.

ஒருநாள், குடியானவர்கள் இருவர் ஒரு வழக்குக் கொண்டுவந்தார்கள். யுவராஜா வீமர். அவரிடம் வழக்கும் கூறப்பட்டது. அந்த வழக்கு இது:

ஒருவர் நிலத்தை விற்றார். மற்றவர் அதனை விலை கொடுத்து வாங்கினார், வாங்கினவர், அந்த நிலத்தில் ஒரு வீடு கட்டுகிறதற்காக, அத்திபாரம் இடுவதற்கு நிலத்தை வெட்டுவித்தபோது ஒரு புதையல் வந்தது. உடனே அவர் விற்றவரை அழைத்துவந்து, 'ஐயா, இந்தப் புதையலை ஏற்றுக்கொள்ளும்; நான் உம்மிடம் நிலத்தை வாங்கினேனே தவிர அதனுளிருந்த புதையலை விலைகொடுத்து வாங்கவில்லையே' என்றார். விற்றவர்,

'நான் இந்தப் புதையலை அறியேன். எனக்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இதைத் தவிர்த்து உமக்கு நான் நிலத்தை விற்கவில்லையே. உமது அதிர்ஷ்டத்தால் இது வந்திருக்கிறது. நான் ஏற்க முடியாது. ஏற்றால், வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தையுங் கொண்டுபோகிற மாதிரி, என்னிடத்திலுள்ள செல்வத்தையும் இது அடித்துக்கொண்டு போய்விடும். அதனாலே எனது சந்ததியும் பாழ்பட்டுப் போம்' என்று ஒரு குட்டிப்பிரசங்கஞ் செய்தார். வாங்கின வருக்குக் கோபங்கூட வந்தது. 'அப்படியானால், எனது செல்வமும் போய் எனது சந்ததியும் பாழ்படலாமா?' என்றார். அப்பால் ஒருவரை ஒருவர் ஏற்கச் சொல்வதே தரும விரோதமென்று அவர்களுக்குப் பட்டது. இந்த தருமசங்கடந்தான் அந்த வழக்கு.

யுவராஜாவிடம் புதையல் ஒப்பிக்கப்பட்டது. 'நாளை அண்ணா இருக்கும் சமயம் வாருங்கள்' என்று உத்தரவிடப் பட்டது.

மறுநாள். தருமரும் தம்பிமாரும் மற்றும் மந்திரச் சுற்றத்தவர்களும் வீற்றிருக்கின்றார்கள். அக் குடியான வர்கள் இருவரும் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னமே வந்துவிட்டார்கள். யுவராஜா அவர்களுடைய வழக்கை இரத்தினச் சுருக்கமாக எடுத்துச் சொன்னார். தருமர், அன்றலர்ந்த தாமரைபோல் முகம் மலர்ந்து, மகிழ்ச்சி யாகிய தேனொழுக, அந்த இருவரையும் நோக்குகிறார். அந்த இருவரும் கண்கள் சிவந்து, ஒரே குரலில், தாங்கள் முதனாள் அப்படிச் சொல்லவில்லையென்று மறுத்தார்கள். யுவராஜா மூக்கிலே விரலை வைத்தாரோ அல்லது தலையிலே தான் கையை வைத்தாரோ தெரியவில்லை. ஆள் அகலிகை மாதிரிக் கல்லாய்ப்போனார்.

நிலத்தை வாங்கினவன் சொல்கிறான்:

ஐயா,

நான் இவரிடம் ஒரு நிலத்தை விலைகொடுத்து வாங் கினேன். அதை வெட்டியபோது, எனது அதிர்ஷ்ட

வசத்தால் ஒரு புதையல் கிடைத்தது. அந்தப் புதையல் புறநீங்கலாக என்று, நிபந்தனை பண்ணி இவர் அந்த நிலத்தை எனக்கு விற்கவில்லை. புதையல் எனக்கேயுரியது; என் சந்ததி அனுபவிக்கவேண்டியது.

விற்றவன் சொல்லுகிறான்:

ஐயா!

நான் நிலத்தை விற்றேனே தவிர, புதையலை விற்கவில்லை. அது எனது முன்னோர் எனக்கும் எனது சந்ததிக்குமாகப், பாடுபட்டுத் தேடிப் புதைத்த புதையல். அது எனக்கே உரியது. என் சந்ததி அனுபவிக்கவேண்டியது.

முறைப்பாடு முடிந்தது. முதனாள் முறைப்பாடு ஒரு விதம். அன்றைய முறைப்பாடு அதற்கு நேர் எதிர். தருமரும் அங்கேயுள்ள அனைவரும் ஒருவரை ஒருவர் நோக்கி ஆச்சரியப்படுகின்றார்கள். சிந்தனையில் ஆழுகின்றார்கள்.

ஒரேயொரு ஆள் மாத்திரம், எவ்வித ஆச்சரியமுமின்றிப் புதிய பஞ்சாங்கத்தைப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார். சகாதேவர்.

அவர்தான் சொன்னார்;

'அண்ணா,

இன்று கலியுகம் 1ஆந் திகதி'

என்று.

---

ஒருவன் எங்ஙனம் பொருளினின்றும் நீங்கினானோ, அவன் அவ்வப்பொருளினால் வரும் துன்பத்தை அநுபவித்தல் இலன்,

— நாவலர்

உ

# கந்தபுராணம்
# வைதிக சைவ பொக்கிஷம்

நமது சமயம் வைதிக சைவம். வைதிகம் வேத சம்பந்தம். சைவம் சிவசம்பந்தம்.

வித்—அறிவு. வித் என்பதிலிருந்து பிறந்தது வேதம்.

வைதிகம் அறிவு நெறி: வேதநெறி எனவும்படும். சைவம் சிவநெறி; அருள்நெறி எனவும்படும்.

அறிவு நெறியாகிய வைதிகம் சைவத்திற் சென்று முற்றவேண்டும். அங்ஙனஞ் சென்று முற்றுதவழி அவைதிகமாம்.

சைவம் வேதநெறியாகிய வைதிகத்தின்வழி வருவது. அங்ஙனம் வாராதேல் அது அசைவமாம். அசைவம் பாசண்டம் எனப்படும். பாசண்டம் சைவப் பிறழ்வு.

'இராசாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம் அழகிது' என்பது தாயுமானவர்.

வைதிகம் உடல்; சைவம் உயிர். உயிரைப் பிரிந்தவழி உடல் என்னும். உடம்பாலாய பயனைப் பெறுது உயிர் பிரிந்தவழி அவ்வுயிர் என்னும்.

**வைதிக சைவப் பிறழ்வு:**

மகாபாரத காலத்துக்குப் பிறகு கலி இரண்டாயிரத் தைந்நூற்றின் பின், உடலும் உயிரும் பிரிவதுபோல, ஒன்ருய வைதிக சைவம் பிரிந்து, பிறழ்ந்த இரு சமயங்க ளாயின. இது கலிதோறும் நடக்கும் உக தர்மம்.

வைதிகத்தைச் சொல்லும் வேதமும், சைவத்தைச் சொல்லும் ஆகமமும் இருவேறு சாத்திரங்களாயின. 'வேதம் பொது, ஆகமம் சிறப்பு' என்கின்றது திருமந்திரம். அது புறக்கணிக்கப்பட்டது.

வேத மடங்களும் ஆகம மடங்களும் தோன்றின. இவை முறையே ஸ்மார்த்த மடம், சைவமடம் எனப் பட்டன. இருமையின் ஒருமை காணவேண்டியவை, அங்ஙனம் ஆகாமல் இருவேறு திசையிற் செல்கின்றன.

**ஞான நிமித்தம் கன்மம்:**

வேதம் கன்மகாண்டம் ஞானகாண்டம் என இரு வகைப்படும். உபநிடதங்கள் ஞானகாண்டம். ஞான நிமித்தம் கன்மம். கன்மம்—கிரியை. கணிதத்துக்கு விடை காண்போர், கிரியை செய்து விடை காண்டலில் வைத்து. கன்ம ஞான சம்பந்தம் உணரத்தக்கது.

**கன்ம ஞானப் பிறழ்வு:**

பிற்காலத்தில் கன்மமும் ஞானமும் வேறுபட்டு ஒன்றை யொன்று வேண்டாததாயின. ஒன்றையொன்று வேண்டாத வழி விகன்மமும் அஞ்ஞானமுமே பேருகும். விகன்மம் —பயனற்ற கருமம்.

வேதத்தின் கன்மகாண்டத்தை ஆராய்ந்தவர் சைமினி. அவரது ஆராய்ச்சி பூர்வ மீமாம்சை எனப்படும். பூர்வம்

என்பதன் பொருள் முன். வேதத்தின் முற்பகுதி என்றவாறு. பூர்வமீமாம்சை கன்மமீமாம்சை எனவும்படும்.

வேதத்தின் ஞான காண்டமான உபநிடதங்களை ஆராய்ந்தவர் வியாசர். அவரது ஆராய்ச்சி உத்தர மீமாம்சை எனப்படும். உத்தரம்—பின். அஃதாவது வேதத்தின் பிற்பகுதியாகிய உபநிடதம்; உத்தர மீமாம்சைக்கு வேதாந்தம் பிரமசூத்திரம் என்பன வேறு பெயர்கள்.

மீமாம்சை இரண்டுஞ் சேர்ந்து ஒரு சாத்திரமேயாம். வியாசர் குரு. சைமினி சீஷர். இருவரும் கருத்தால் ஒருவர். குரு பரம்பரை பிறழ்ந்த காலத்தில் நூலாசிரியரைப் பொருள் செய்யாது உரைகாரர் மீமாம்சையாகிய ஒரு சாத்திரத்தை, இருவேறு சாத்திரங்கள் ஆக்கிவிட்டனர். பூர்வ மீமாம்சைகாரர் ஞானம் வேண்டியதில்லை என்றார்கள். உத்தர மீமாம்சையின் ஒருசார் உரைகாரர், தம்மை வேதாந்திகள் என்று சொல்லிக்கொண்டு, கன்மம் வேண்டியதில்லை என்றார்கள். பிறழ்வு பெருகியது.

**பாஷைப் பிறழ்வும் நாஸ்திகமும்:**

பிறழ்வுப் பெருக்கம் பிற்காலத்தில் ஆராய்ச்சியாகி, அறிவும் அன்புமான ஆரியம் தமிழ் என்னும் ஒருமைப் பாஷைகளைத் தொடர்பற்ற இருவேறு பாஷைகளாக்கி விட்டன. 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' என்ற அப்பர் தேவாரத்தைச் சிந்திப்பாரில்லை.

இவ்வாறுய நிலையில் உலகாயதமாகிய நாஸ்திகம் திருவவதாரஞ்செய்வதில் நூதனமேயில்லை. 'வேதம் பிறந்த தமிழ்நாடு' என்று பாடிக்கொண்டே, தமிழ் நாட்டிற் 'கடவுள் இல்லை' என்ற சிலை தலை நிமிர்ந்து நிற்கின்றது. நிற்கட்டும். இதற் கென்செய்வது. பரிகாரம் உண்டா! ஆம், உண்டு. கூறுவோம்.

பரிகாரம் :

அ 1. ஒருமைப்பாடு :

“வேதமுட னாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைக ளெல்லா
மிக்காக அத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா எடுத்து ரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டுபணும் ஞான மாகும்
ஊகமனு பவம் வசனம் மூன்றுக்கும் ஒவ்வும்”

என்கின்ற தாயுமானவர், சாத்திரங்களின் ஒருமைப் பாட்டை விளக்குகின்றது.

தாயுமானவருக்கு முன்னமே கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் அமிர்த பொக்கிஷமான கந்தபுராணத்தில், ஆரியம் தமிழ் என்னும் பாஷை ஒருமைப்பாடு உட்படச் சாத்திர ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டுகள் வாயிலாக நன்கு இனிது விளக்கஞ் செய்தருளியிருக்கிறார்.

அ. 2. வேதாகம ஒருமைப்பாடு:

‘இருட்பெருங் கடலுள் யாமத்
தெறிமருத் திடைப்பட் டாங்குப்
பொருட்பெருங் கடலாம் வேதம்
புடைதொறு மலைப்ப வின்நாள்
அருட்பெருங் கடலே யெய்த்தே
மமைந்தில துணர்வி யாங்கள்
மருட்பெருங் கடலி னீங்கும்
வண்ணமொன் றருடி யென்றார்’

(கந்த. மேரு 6)

வேதம் பொருட் பெருங் கடல். அதிலெழும் அலைகளால் மோதுண்டு, உணர்ச்சி பலதலைப்பட்டுத் துணிவு பெறாது, இறைவனருளை நாடுகின்றார்கள் முனிவர்கள்.

'முந்துறை சனக ஞதி முனிவரர் தொழுது கேட்ப
அந்தமி லாக மத்தி னரும்பத மூன்றும்' (கந். மேரு 10)

உபதேசித்தருளுவாராயினர் தக்ஷிணுமூர்த்தி. சனகாதி முனிவர்களுக்கு ஆகமோபதேசத்தால் வேதப் பொருளில் தெளிவு பிறக்கின்றது.

'வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றேதுக'

(திருமந்திரம்)

ஆ. 1. புராண மரபு:

வியாசர் இறைவனருளால் வேதங்களை உணர்ந்து, அவற்றை நான்காக வகுத்து, நான்கு முனிவர்களுக்கு உபதேசித்தவர்.

'மயலறு பயிலரே வைசம் பாயனர்
சயிமினி சுமந்துவாந் தவத்தர் நால்வர்க்கும்
வியலிருக் காதியாம் வேத நான்கையும்
உயர்வுறு தவத்தினுன் முறையின் ஓதினுன்'

(கந். பாயி. 47)

தவத்தினுன் என்றது வியாசரை. வேதம் வல்லவியாசர் வேதாகமம் வல்ல சனற்குமார முனிவரிடம் புராணங் கேட்டவர்.

'விரவிய மறைதெரி வியாத ஞமவன்
குரவனே யாஞ்சனற் குமாரன் றன்னிடை
யிருவகை யொன்பதா மியல்பு ராணமு
மரபொடு கேட்டவை மனத்துட் கொண்டபின்'

(கந். பாயி. 45)

என்பதனுல் புராணங் கேட்கும் மரபின் இன்றியமை யாமை சிந்திக்கற்பாற்று. வேதங் கைவந்த வியாசருக்குப்

புராணங் கேட்கக் குருமரபு வேண்டியதாயிற்று. புராணம் பதினெட்டு.

ஆ. 2. புராணப் பெருமை:

'ஏற்றம தாகிய மறைக்கும் யாமுனஞ்
சாற்றிய ஆகமம் தனக்கும் ஆங்கது
விற்றுற வருவது மன்று மேன்மையால்
ஆற்றவும் நமதிய லறையும் நீரதே.'

(கந். பாயி. 35)

என இறைவன் கூற்ருய் வருஞ் செய்யுளால், புராணம் வேதாகமங்களுக்கு வேறுபடாமல், சிவ பரத்துவம் பேசுவ தென்பது பெறப்பட்டது.

ஆ. 3. புராணஞ் சொல்லத் தக்கவர் சூதர்:

'வேதம துணர்தரு வியாத மாமுனி
காதல னுமெனைக் கருணை செய்திவை
ஓதுதி யாவரு முணர வென்றனன்
ஆதலின் உலகினில் அவற்றைக் கூறினேன்'

(கந். பாயி. 51)

என்கின்ருர் சூதமுனிவர்; இவை என்றது பதினெண் புராணங்களை. சீடனைப் புதல்வன் என்று கூறும் மரபு பற்றி 'வியாதமாமுனி காதலனு மெனை' என்று சூதர் தம்மைக் குறிப்பிடுகின்ருர்.

சூதரை நைமிசாரணியத்து முனிவர்கள்,

'............அருமை கண்ட அண்ணல்
செவ்விய மாணுக் கர்க்குட் சிறந்துளோய்'

என்று விளிப்பது வழக்கம். அண்ணல் - வியாசர்

வியாசரின் மாணுக்கர்களுள் புராணத்தில் விசேட திறமை படைத்தவர் சூதர். அவ்வாறே, இதிகாசத்தில் திறமை வைசம்பாயனருக்கும், கர்மகாண்டத்தில் திறமை சைமினிக்கு முண்டு.

ஆ. 4. புராணப் பயன்:

சூதர், கேளுங்கள் நைமிசாரணிய வாசிகளே, என்று புராணஞ் சொல்லும்போது எட்டாது கிடந்த வேதப் பொருள் தவங்கிடக்கும் முனிவர்களுக்கு ஆகமமாய் அண்ணிக்கும். அநுபவம் சித்திக்கும். அண்ணித்தல் என்பது அண்மைத்தாதல், இனித்தல் என இருபொருளுந் தரும். 'ஆகம மாகிநின்று அண்ணிப்பான்' என்ற திருவாசகம் சிந்திக்கத் தக்கது.

இ. 1. பிரமசூத்திரம் :

'ஏத்திடு சுருதிகள் இசைக்கும் மாண்பொருள்
மாத்திரைப் படாவெனு மாசில் காட்சியர்
பார்த்துணர் பான்மையாற் பலவ கைப்படச்
சூத்திர மானவுஞ் சொற்று வைகினன்'

(கந். பாயி. 46)

என, வியாச ரியற்றிய உத்தர மீமாஞ்சையாகிய பிரம சூத்திரத்தின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின் றது இச்செய்யுள். வேத சிரசுகளாகிய உபநிடத ஞானப் பொருளைத் துணிதற்கு உத்தர மீமாஞ்சை எனப்படும் பிரமசூத்திரமாகிய வேதாந்த சூத்திரத்தின் இன்றியமை யாமை காட்டியவாறும்.

இ. 5. இரு உபதேசங்கள் :

கந்தபுராணத்தில் இரு உபதேசங்கள் வருகின்றன, ஒன்று காசிபன் உபதேசம். மற்றையது சுக்கிரன் உப தேசம். காசிபர் தம் மக்களுக்கு உபதேசித்தது வைதிக சைவ சித்தாந்த உபதேசம். மாயையின் வேண்டுகோளின் படி சுக்கிரன் உபதேசித்தது ஏகான்ம வாதம் எனப்படும் மாயாவாத உபதேசம்.

"உற்றதோர் மேன்மை நாடி உன்னைநீ பிரம மென்றே
தெற்றெனத் தெளிதி.... ........'

என்று, சுக்கிரன் உபதேசம் வலியுறுத்துகின்றது. இந்த 'மிண்டிய மாயாவாத சண்டமாருத'ப் பொருள்தான்,

உத்தரமீமாஞ்சையாகிய வேதாந்த சூத்திரத்தில் இப்பொழுது கட்டி நடத்தப்படுகிறது.

தம்பியாகிய சிங்கன்பால், தந்தையின் உபதேசமும், தமையனுகிய சூரபன்மன்பால் சுக்கிரன் உபதேசமும் மனசிற் பதிந்து நிலைத்தன.

ஒரு சமயம் சிங்கமுகாசுரன் ஏகான்மவாதியாகிய சூரபன்மனை நோக்கி,

'வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன்'

'ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
யானும் நீயுமா யிசைத்துமென் ருலஃ தெளிதோ'
'சுத்த வாதுள முதலிய தந்திரத் தொகுதி
உய்த்து ணர்ந்திடு நீரரே ஒருசிறி துணர்வார்'

தந்திரம் – ஆகமம்.

(கந்த. சூரனமைச்சியல் 127, 128, 129)

என்றிங்ஙனம், வேதாகமோக்த வைதிக சைவசித்தாந்த மூலம் சுப்பிரமணியப் பிரபாவம் பேசுவானுயினுன். உக்தம் – சொல்லப்பட்டது. புறக்குடத்தில் வார்த்ததாயிற்று சிங்கன் உபதேசம். ஆயினும் அது வீண்போகவில்லை.

இ. 3. சூரபன்மனின் மத மாற்றம்:

ஒருநாள்,

'கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னை'

(கந். சூர. வதை 433)

உற்று நோக்குகின்ருன் சூரபன்மன். அவனது வச்சிர யாக்கை,

'வன்னிகொள் வெண்ணெ யேபோல் வலியழிந் துருகிற்று'

(கந். சூர. வதை 445)

வன்னி– அக்கினி.

'நான் இவற்கு ஆளாகி வாழுதல் வேண்டும்'

(கந். சூர. வதை 444)

என்று அவன் வாய் குழறிற்று.

'இங்கென துயிர்போ லுற்ற இளவலும் இளைய சேயும்
செங்கையில் வேலோன் றன்னைச் சிறுவனென்
றெண்ணல் கண்டாய்
பங்கயன் முதலோர் காணுப் பரமனே யாகு மென்றுர்
அங்கவர் மொழிந்த வாறுஞ் சரதமே யான தன்றே.

(கந். சூரவதை 440)

என்றுன் சூரபன்மன். சுக்கிரன் உபதேசங் குடிபோய்த் தந்தையாற் பெற்ற தம்பியின் உபதேசம் சூரபன்மாவிற் குடிகொண்டது.

### இ. 4. பூர்வ உத்தர மீமாஞ்சைகளின் உரைப்பிறழ்வு:

சுக்கிரன் உபதேசமாகிய ஏகான்ம வாதம் உத்தர மீமாஞ்சையிற் கட்டி நடத்தப்படுவது போலவே, சைமினி செய்த பூர்வமீமாஞ்சையில் ஞானத்துக்கு நிமித்தமாகாத கர்மக் கொள்கைகள் கட்டி நடத்தப்பட்டன. வெறுஞ் சித்தியையே பயனுகக் கொண்டு வேள்விகள் செய்தவர்கள் தாருகவனத்து முனிவர்கள். அவர்களின் கர்மக் கொள்கைத் தவறுகள், ததீசி உத்தரத்தில் விரித்துக் காட்டப் பட்டன. தக்கன் யாகமும் அத்தகையதே,

### இ. 5. உலகாயதம்:

சுக்கிரன் உபதேசம் போலவே வியாழ பகவானின் உபதேசமு மொன்று வருகின்றது. அது உலகாயத உப தேசம். சீவகசிந்தாமணியில் வரும் சீவகனுக்கு ஒருநாள் துறவு வந்தது போல இந்திரனுக்கும் ஆசை மிகுதியினுல், துறவு பிறந்தது. துறக்க இன்பம் அடிக்கடி பறிபோகின்றது என்பதனுல் வந்த துறவு அந்தத் துறவு. உயர்ந்த சார் பைப் பற்றியதனுல் உண்டான துறவன்று அந்தத் துறவு;

அதனாலே, வியாழபகவான் இந்திரனுக்கு உலகாயதம் போதித்துப் பொய்த்துறவைத் தடுப்பாராயினர். போதித்தோர் போதிக்கப்பட்டோன் இருவரும் உலகாயதரே யல்லர். ஆனால், இன்று, உலகாயதம் என்கின்ற ஒண்டிறற் பாம்பு, உலகம் எங்கும் படம் விரித்தாடுகின்றது. நாஸ்திகம் என்பது அதுவே.

மீண்டிய மாயாவாதமும் உலகாயதமும் அண்ணன் தம்பி.

பிறழ்வுகள் பிறந்தவாறு காட்டி, வேதாகமமாதி சாத்திர ஒருமையை எடுத்துக்காட்டுக்கள்மூலம் காட்டுவது கந்தபுராணம்.

இ. 6. ஆரியமும் தமிழும் :

கந்தபுராணத் தொடக்கத்தில் சுவாமி திருமணம் இமயத்தில் நடக்கிறது. சுவாமி மண மண்டபத்துக்கு எழுந்தருளிவிட்டார். அந்தக்கணமே முனி சிரேட்டரான அகத்தியர் பொதியத்துக்கு வருவாராயினர்.

ஆரியம் அறிவை வெளிப்படுத்தும் பாஷை. அறிவின் பயனான அன்பை வெளிப்படுத்தும் பாஷை தமிழ். இமயத்தில் ஆரியராயிருந்த அகத்தியர், பொதியத்தில் அறிவை அன்புசெய்து தமிழ்முனியாயினர். 'அருள் அன்பீன் குழவி'. இவ்வாற்றால் அன்பு அறிவீன் குழவி.

கந்தபுராண இறுதியில் திருமுருகன் திருமணம் தமிழ் முனி வாழும் பொதியச் சாரலில் நடந்தது. அத் திருமணம் அன்பினைந்திணைக் களவு மணம். அருமறை மன்றல் எட்டனுள் ஒன்றாகிய கந்தருவ மணம் போன்றது இந்தக் களவு மணம்.

'அன்பினைந் திணைக் களவியல் என்னுதலிற்றோவெனின், தமிழ் நுதலிற்று' என்கிறார் 'பொய்யற்ற கீரனார்'.

இவற்ருல் திருமணங்கள் வாயிலாக, அகத்தியர்மூலம் ஆரியம் தமிழ் என்கின்ற இருமைகளை ஒருமைசெய்து காட்டுகின்றது கந்தபுராணம்.

**பரம ஔஷதம்:**

வைதிக சைவப் பிறழ்வு எத்தனையோ கிளை விட்டுச் சாதி சமயங்களைச் சாடி, ஆரியம் வேறு தமிழ் வேறு என்கின்ற பிளவை நோயாய், நாஸ்திகமாகிப் பரிணமித்திருக்கின்றது. நோய்க்குணமறிந்து ஔஷதப் பிரயோகம் செய்ய வல்லது, அத்தியற்புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழாகிய கந்தபுராணம். கந்தபுராணம் முறையாய் நடந்த காலத்திலே எந்த நோயும் யாழ்ப்பாணத்தை எளிதில் அணுகியதில்லை.

வைதிக சைவ சித்தாந்த இலக்கியம் கந்தபுராணம்.

---

உன் உள்ளத்திலே செல்வமிகுதியால் அகந்தை தோன்றுமாயின், உன்னின் மிக்காருடைய செல்வத்தையும், வறுமை மிகுதியால் துக்கந் தோன்றுமாயின் உன்னின் இழிந்தாருடைய வறுமையையும் நினை; நினைப்பாயாகில் அகந்தை, துக்கங்கள் உன்னை எக்காலத்தும் அணுகாவாம்;

—நாவலர்.

உ

# காரைக்கால் அம்மையார்

'நாம் ஓரிடத்தில் வாழ்ந்தோம்', 'அடிக்கடி ஒருவரோ டொருவர் பழகினேம்', இக்காரணங்களினுல் எங்களுக்கிடையில் நட்பு உண்டாய்விட்டது என்று சிலர் சொல்லுகின்ருர்கள். உண்மை நட்புக்கு இவைகள் உரிய காரணங்கள் அல்ல.

ஒரு செப்பை எடுத்துக்கொள்ளுவோம். தாய்ச் செப்பும் மூடிச் செப்பும் ஓரிடத்தில் நெருங்கிப் பழகுகின்றன. சற்றே திறந்து உள்ளே பார்த்தால் நட்பின் ரகசியம் வெறும் வெட்டவெளிச்சமாயிருக்கின்றது.

'செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
உட் பகை யுற்ற குடி.'

ஒரு வீட்டில் குடியிருக்கிருர்கள்; நெருங்கிப் பழகுகிருர்கள்; சம்பாஷிக்கிருர்கள். உள்ளுக்குள்ளே கருடனும் பாம்பும். அவர்கள் நட்புச் செப்பு நட்பு.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.'

உண்மை நட்புக்கு உண்மைக் காரணம் உணர்ச்சி ஒன்றுபடுதலே.

ஒரு பிராமணப் பிரமசாரிக்குப் பிரமசரிய விரதம் பூர்த்தியாகின்றது; அதற்குரிய சடங்குகள் நடக்கின்றன. சடங்கு முடிவில் அவன் நேரே சந்நியாச ஆசிரமத்தில் பிரவேசிக்க விரும்புகிறான்; தண்டு கமண்டலங்களை எடுத்துக்கொள்ளுகிறான்; காசியாத்திரை புறப்படுகிறான்.

ஒரு பெண்ணைப் பெற்ற தந்தையும், அறிவாலும் வயசாலும் முதிர்ந்த முதியோர்கள் சிலரும் அவனைப் பின்தொடர்ந்து சென்று, "அப்பனே! அதோ நிற்கிறான் அந்தப் பெண். அவள் உனது ஒழுகலாறுகளுக்கு ஒரு சிறிதுந் தடைசெய்யாள்; உபகாரியாயிருப்பாள். உன்னைத் தொடர்ந்து உய்திபெறத் தவங்கிடக்கின்றாள்; இவளை ஏற்றுக்கொள்" என்கிறார்கள். பிரமசாரி சிந்திக்கின்றான். அவள் உணர்ச்சி அவன் உணர்ச்சியோடு ஒன்றுபட்டுக் கிடக்கின்றது. அவளைக் கைவிடுவது வேத விரோதம். பிணைப்பு ஏற்படுகிறது. சான்றோர்கள் விவாகம் செய்து வைக்கிறார்கள். பிரம்ம விவாகம்.

வேதங்களில் எட்டு விவாகங்கள் பேசப்படுகின்றன. 'அருமறை மன்றல் எட்டு எட்டு'. விவாகத்துக்கும் அடித்தளம் உணர்ச்சி ஒன்றுபடுகை. உணர்ச்சி வேறுபடுகின்ற ஒப்பந்த விவாகங்களுக்கு வேதத்தில் இடமில்லை. அவை வேதவிரோதம். அவைதிகம்.

* * *

நாம் எமது உடலுக்கு வேறாக உயிராகிய எம்மை அறியோம். இந்த நிலையில் உள்ள நாம் உயிர்க்குயிராகிய இறைவனை உணர்வது எங்ஙனம்! உயிரையோ உயிர்க்குயிராகிய இறைவனையோ இந்தக் கருவி கரணங்கொண்டு உணருதல் இயலாது. உயிரை உடலில் வைத்து ஒருவா

றுணர்வதுபோல, உயிர்க்குயிராகிய இறைவனைக் குருலிங்க சங்கமங்களில் வைத்து, எமது கருவி கரணங்களின் தூய் மைக்குத் தக்க அளவில் ஒருவாறு உணரலாம்.

ஒரு பெண் இறைவனை உணர்தற்கும் குரு லிங்க சங்க மங்களா யிருப்பவன், அவள் கொழுநனே. பெண்தன்மைக்கு அவன் ஒருவனே கதி. இவ்வாறு வேதங் கண்டது.

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'

என்றது தமிழ்வேதம். கொழுநனுக்கூடாகத் தெய்வந் தொழுகின்ற ஒரு பெண்ணுக்குக், கணவனுக்கு வேருகக் காணுவதொரு தெய்வம் இல்லை. ''திருவிழாக் காலங்களில் சுவாமி வீதியில் எழுந்தருளும்போது, மூலத்தானத்தில் வழிபாடு செய்தலாகாது'' என்ற ஆகமும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

* * *

திரௌபதி பழம் பிறப்பிலே மௌற்கல்லியர் என் கின்ற முனிவரை மணந்து அவருக்கூடாக இறைவனை இறுகப் பற்றிக்கொண்டவர். பிறகு இப்பிறப்பில் அந்தப் பிடி இன்னும் ஸ்திரப்படும் பொருட்டு, ஐவர் கணவர்களை ஒருங்கு மணக்க நேர்ந்தது. கர்மத் தொடர்பினலே அவருடைய உடம்பு ஐவர்களைத் தீண்டியது. அவருடைய உள்ளமோ இறைவன் ஒருவனையே யன்றி வேறு யாரையுந் தீண்டிற்றிலது. 'தீண்டாத கற்புடைய செழுந்திரு' என்று திரௌபதி பெண்ணுலகில் விதந்து பேசப்படுகின்ருர்.

'ஐம்பு லன்களும்போல் ஐவரும் பதிக
ளாகவும் இன்னும்வே றொருவன்
என்பெருங் கொழுநன் ஆவதற் குருகும்
இறைவனே எனதுபே ரிதயம்
அம்புவி தனிற்பெண் பிறந்தவர் எவர்க்கும்
ஆடவரின் ஆம் ஐயி னல்லால்
நம்புதற் குளதோ என்றனள் வசிட்டன்
நல்லற மனைவியே யனையாள்'

'இன்னும் வேறொருவன்' என்றது ஈசுவரனை: ஐந்து கணவர்களுக்கு ஊடாக அன்றி, நேரில் அந்த ஈசுவரனைக் காணுதற்குத் திரௌபதியின் இருதயம் உருகிக் கொண்டிருந்தது.

அம்புவிதனில் பெண் பிறந்தவர் எவர்க்கும், ஆடவரில் ஆம் ஐயின் அல்லால் - கொழுநரில் சாந்நித்தியம் ஆகின்ற அந்த ஈசுவரனிடத்தேயல்லாமல், நம்புதற்கு உளதோ - அப் பெண்கள் நம்புதற்கு—நம்பிப் பற்றுக்கோடு செய்தற்கு- உரியதொரு பண்டமும் வேறு உளதோ இல்லையே, என்று திரௌபதி தம்மியல்பில் வைத்துப் பெண்மையின் கதியைக் காட்டுகின்றார்.

பெண் ஒருவனைப்பற்றி ஒரகத் திருப்பவள், அவளுக்கு இரண்டகம் இல்லை. அவள் அகத்தில் இருப்பவன் ஒருவனே. அவைதிக உலகங்கூட ஒருபெண் ஒருவனைப்பற்றி ஒரகத் திருக்கவேண்டு மென்கின்றது. அவைதிகம் வைதிகத்தின் நிழல்தானே:

* * *

திரௌபதி பெண்ணுலகில் புறனடையானவர். அவர் யாகாக்கினியில் உதித்தவர்; அக்கினியாவார் சிவபெருமானே என்று வேதம் சொல்லுகின்றது. ஐந்து கணவர்களுக்கு மூடாக, அக்கினியான சிவபெருமானையே அவர் தீண்டி நின்றார். அவர் கற்பு ஆத்மநாயகனை யன்றிப் பிறரைத் தீண்டாத கற்பு.

காரைக்காலம்மையார் திரௌபதிக்கும் புறனடையானவர். புறனடையிற் புறனடை. சிறப்பு விதியுட் சிறப்புவிதி.

காரைக்காலம்மையார் அவதரித்து மழலைமொழி பயிலுகின்ற காலத்திலேயே, அவருடைய இருதயம், ஆத்மநாயகனாகிய ஈசுவரனையே தீண்டி நின்றது. இந்த அற்புதத்தை அம்மையார் தாம் அருளிய அற்புதத் திருவந்தாதியின் முதல் இரு அடிகளிலும் அருளிச்செய்திருக்கின்றார்.

'பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்'

அறிவு முளையாத பருவத்திலே அன்பு சிறந்து சேவடி சேர்தலாகிய வினைக்குக் காரணம் விசாரிக்க வேண்டியதில்லை; இந்த அன்பு விளைவைத்தான் நிஷ்காமிய விளைவு என்று சாத்திரங்கள் பேசுகின்றன. பசு கன்றுக்கு உருகுகின்றது; தாய்க்குப் பால் சுரக்கின்றது. இந்த விளைவுக்குக் காரணம் என்ன!

ஈசுவரன் அந்தர்யாமியாய் எம் அறிவிற் கலந்திருத்தலால், நாம் எமது முனைப்பிற் செய்யுஞ் செயலிலுங்கூட, அணுவைக் கோடி கூறிட்டு, ஒரு சிறு அளவாவது ஒரு நன்மை நம்மையறியாமலே நடந்துகொண்டிருக்கிறது.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

செய்ந்நன்றி கோறலாகிய கொடும் பாதகத்தைச் செய்து நிற்கின்றான் கோட்சே. அவனுடைய இருதயத்திற் கூட அந்தர்யாமியாகிய இறைவன் தூண்டுதலால், உயிர்கள் மீது இரக்கமோ, துஷ்டநிருத்தியங்களைச் சகியாமையோ ஏதோ ஒரு தருமம் தலைப்படலாம். அது பயன்கருதாதது; நிஷ்காமியமானது. ஆன்ம முனைப்போடு கூடிய இருள்சேர் இருவினைகளிலும், இந்தப் பரிசுத்தமாகிய நிஷ்காமியம் பிறப்புக்கள் தோறும் ஆன்மாக்கள் அறியாமலே அகத்தே விளைந்து பரமாணுவினுஞ் சிறிய பரிமாணத்தில் வளர்ந்து பெருகிக்கொண்டிருக்கின்றது. பிறப்புக்கள் தோறும் ஆன்ம முனைப்பு அடங்க அடங்க, இந்த நிஷ்காமியமானது பெருக்கெடுத்து முறுகி விளையாநிற்கும். 'தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி', 'வேகங்கெடுத்தாண்ட வேந்தனடி' வெல்லட்டும் என்கின்ற நிலை நேருங் காலத்தில், நிஷ்காமியம் உடலை மீறி, உள்ளத்தை மீறி, உயிரை மீறிப் பிரவாகிக்க முகஞ் செய்துகொண்டிருக்கும்.

'கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிற தெய்வம்'

நிஷ்காமியம் அநந்தகோடி சென்மங்களின் ஈட்டம். ஆகையினாலே, கலை ஞானங்களைக் கற்றுக் கடவுள் நிச்சயம் பண்ணுதற்குரியதல்லாதொரு பிறப்பாயினும், வேறு தெய்வத்தை நோக்காது. ஏதோ ஒன்றை நோக்கிக் கசிவுண்டாகும் காரைக்கால் தெய்வம் ''அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்'' என்கின்றது.

ஆத்மநாயகனை நேரே காணாதவழியும், நிஷ்காமியம் முறுகியதால், கருவி கரணங்கள் தம்முனைப்பிழந்து, உடலம் 'உள்ளந்தான் நின்றுச்சியளவும் உருகா' நிற்கும். 'உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா வெள்ளந்தான் பாயா' நிற்கும்.

இந்த அற்புத அன்பு நிலையைக் காளத்தியில் கண்ணப்பரிடங் கண்டோம். 'கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை' என்பது மணிவாசகம். அந்த ஒப்பற்ற அன்பு நிலையைக் காரைக்கால் தெய்வத்திடம், 'பிறந்து மொழி பயிலுங் காலத்தி'லேயே காண்கின்றோம்.

இந்த நிலையை எய்திய தெய்வத்துக்கு — ஆன்ம நாயகனைத் திருவுருவங் காணாதவழியும், ஆட்பட்ட புனிதவதிக்கு — ஏதோ எஞ்சிநின்ற பிராரப்த கன்ம விசேஷத்தாலே ஒரு பிணைப்பு ஏற்படுகின்றது. வணிகன் ஒருவன் மணஞ் செய்கின்றான். இதனாலேதான் இந்த மணம் புறனடையிற் புறனடை;சிறப்புவிதியுட்சிறப்புவிதி. உடலைப் பற்றிய கர்மக் கழிவைச் சார்ந்த மணம் இந்த மணம்,

'மாயை ஏனைப்பல சூழவும் தப்பாமே தாம் பிடித்தது சலியா'மல் 'சிந்தனை நின்றனக்காக்கி' என்ற பிரகாரம், தமது இருதயமலரை, தோன்றாத் துணையாகிய ஈசுவர னுக்கு அர்ப்பணஞ் செய்து, உடலை மாத்திரம் உலகியலுக் காக்கி, கணவனுக்கு ஆகவேண்டிய காரியங்களையும்,

இல்லுக்குரிய தர்மங்களையும் அம்மையார் ஆற்றிவந்தார். இப்படி நிகழுங் காலத்தில், ஒரு சமயம், ஆன்றல் பார்த்திருப்பவராகிய ஆன்மநாயகர், நிஷ்காமியம் அடங்காது முறுகிப் பிரவாகித்தற்கு வழிசெய்தருளினர்.

வணிகனை வர்த்தக நிலையத்திற் கண்ட ஒருவன் இரண்டு மாங்கனிகளை அவனுக்குக் கொடுக்கிறான். அவன் அவைகளை வீட்டுக்கு அனுப்பிவைக்கிறான். அங்கே ஒரு சிவனடியார் பசித்து வருகின்றார். சாதம் ஆய்விட்டது. கறியமுது ஆகவில்லை. அடியாருக்குப் பசி கடுகுகின்றது. அம்மையார் அந்தக் கனிகளில் ஒன்றுடன், அடியாரை அமுது செய்விக்கின்றார். கணவன் அனுப்பியதாயினும், கணவனுக்கு அவன் உண்பதிலும் பார்க்க நன்மை பயக்கத்தக்கதைச் செய்வது 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாத பெண்'ணுக்கேற்றதொன்றன்றோ!

பின் கணவன் வருகின்றான். உணவு அருந்துகின்றான், எஞ்சிய மாங்கனி அவனுக்குப் படைக்கப்படுகின்றது. அவன் அதன் சுவையில் ஈடுபடுகின்றான். இறைவன் தூண்டுதல்போலும்; அந்த ஒரு மாங்கனியோடு அவன் சுவை தணியவில்லை. அதனைக் குறிப்பாலுணர்ந்த அம்மையார், இறைவனை வேண்டி ஒரு கனி பெற்றுப் படைக்கின்றார். அதனை அவன் உண்டான்; நடந்ததை வெளியிட நேருகின்றது. மற்றொரு மாங்கனி கைக்கெட்டி மறைகிறது; வணிகன் அம்மையாரைத் தெய்வம் என்று அஞ்சி விலகுகிறான். இது அவன் பெருமை.

விலகிய வணிகன் வேறு விவாகஞ் செய்து வேற்றூரில் வசிக்கிறான். தெய்விக நிகழ்ச்சி யாருக்குந் தெரியாது. வருஷங்கள் பல கழிகின்றன. சுற்றத்தார்கள் அம்மையாரை அழைத்துக்கொண்டு அவன் வசிக்கும் ஊரை அணுகுகின்றார்கள். வணிகன் அறிந்து, தன் மனைவியோடும், அவ்வம்மையாரின் பெயர் தரித்த புத்திரியோடுஞ் சென்று,

உண்மையை வெளிப்படுத்தி அம்மையாரைப் பாதங்களில் வணங்குகின்றான்; அம்மையார் ஒரு புறம் ஒதுங்குகின்றார். வணிகன் எல்லாரையும் வணங்கி உய்யும்படி வேண்டு கின்றான். அவ்வளவில் அம்மையாரின் உடற்கன்மம் ஒழிந்தது.

'மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பும் மிகை'

அம்மையார் ஊன்பொதியாகிய உடலை உதறுகின்றார். பேய்வடிவம் வேண்டிப் பெறுகின்றார்.

'சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து கோணுத லின்றிச்
சதுர்இழந்து அறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா வதிசய மாகக்
கற்று மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது'

அம்மையார் விரைகின்றார்.

'ஊனைக் காவல் கைவிட் டுன்னை உகப்பார் உணர்வாரே'

'பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்'

'திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை'

'அன்றுந் திருவுருவங் காணாதே யாட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்'

என்கின்றார் அம்மையார்.

அன்று, அம்மையாருக்குப் பரத்தை மறைத்தது பார் முதற் பூதம். இன்று, ஊனைக் காவல் கைவிட்டதும், பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்; பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்றது பரிபூரணனந்தம்,

"நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதா ளிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே."

உலகம் இறைவன் பாதங்களிலே தோன்றி, அப்பாதங்களிலே ஒடுங்குகின்றது.

'போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறு மிணையடிகள்'

அம்மையார் உலகத்தைக் காணவில்லை; ஈரும் இணையடிகளைக் காணுகின்றார்.

'கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

அம்மையாரின் குணம் நிறைந்த தலை வணங்குகின்றது.

'தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது'

கவலை குடிபோன அம்மையாரின் தலை தாளைத் தலைப்படுகின்றது.

'பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகும் அவர்'

கீழ் மேலாய் மேல் கீழாகின்றார் அம்மையார். நிலமாய்த் தோன்றிய அவன்றாளை அம்மையார் தலையாற் றீண்டுகின்றார். தலையால் நடந்து திருக்கைலாசத்தில் சுவாமி சந்நிதியை அணுகுகின்றார்.

* * *

அன்றொருநாள் பத்துத்தலை இராவணன், பத்துத் தலைகளையும் நிமிர்த்திக்கொண்டு, அம்மையார் தலையாலே நடந்த கைலாசத்தைக் காலாலே நடந்தான்; அந்த

அக்கிரமச் செயலைப் பொருது உலகமாதாவாகிய உமை யம்மையார் அஞ்சிப் பதைபதைத்தார்; இவன் செயல் எப்படி முடிகின்றதோ என்று வருந்தினர். ஈன்றான் வருந் தாமல் நமக்கு வருந்த வேறு யார் இருக்கின்றார்!

அன்று அவனுக்கு வருந்திய உலகமாதா, இன்று, காரைக்காற் பிராட்டி,

'தலையினல் நடந்து சென்று சங்கர னிருந்த வெள்ளி
மலையின்மே லேறும் போது மகிழ்ச்சியா லன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுத லொருபா கத்துச்
சிலைநுத லிமய வல்லி திருக்கணேக் குற்ற தன்றே.'

காரைக்காற் பிராட்டி பரிபூரண சத்திநிபாதம் எய்தினர்; 'வாசி அருளியவை வாழ்விக்கும்'!

'அம்பிகை திருவுள் ளத்தி னதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் தலையினல் நடந்திங் கேறும்
எம்பெரு மானே ரெற்பின் யாக்கையன் பெண்ணே யென்ன
(அஃதாவது 'வா வாழ்விக்க')
நம்பெரு மாட்டிக் கங்கு நாயக னருளிச் செய்வான்'

'வருமிவள் நம்மைப் பேணு மம்மைகாண் உமையே', சிகாரமாகிய நாயகன் 'நம்மைப் பேணும் அம்மை காண்' என்று காரைக்காலம்மையைத் தமக்கு அண்ணித்து உமையே எனத் தேவியை முன்னிலைப்படுத்தி,

'வாசி யருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசி லுருவமுமாம் அங்கு'

என்ற ஐந்தெழுத் தருள்நிலையை விளக்கியவாறு.

'அருகுவந் தணைய நோக்கி அம்மையே என்னுஞ் செம்மை
ஒருமொழி உலக மெல்லாம் உய்யவே அருளிச் செய்தார்'

எம்பெருமான் காரைக்காற் பிராட்டியை ''அம்மே'' என்று கதறி அழைக்கின்றார். அவ்வாறே காரைக்காற் பிராட்டியும்,

'அங்கணன் அம்மை யேயென் றருள்செய அப்பா என்று
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்துவீழ்ந் தெழுந்தார்.'

எம்பெருமான் ''அம்மே'' என்று கதறினர்; காரைக்காற் பிராட்டி, ''அப்பா'' என்று கதறினர்; தலையீற்றுப் பசுவுங் கன்றும்,

சம்பந்தப் பெருவாழ்வு 'தோடுடைய செவி' பாடினர்; அஃதாவது அப்பாவுக்கு முன், அம்மே பாடினர். மணிவாசகர் 'அம்மையே அப்பா' என்று அன்னையை முன் அழைத்தார். காரைக்காற் பிராட்டி பழம் பிறப்புக்களில் அம்மையை அழைத்துவிட்டார்; அம்மையின் மடியில் தவழ்ந்து, ஒக்கலையில் இருந்து, இப்பொழுது, அன்னை காண்பித்த அப்பாவைக் கண்டுகொண்டார்; நேரே ''அப்பா'' என்றழைத்தார்.

'அதுவே ஆசி லுருவமுமா மங்கு' என்றவாறு. அம்மை அதாவது திருவருள், காரைக்காற் பிராட்டிக்கு வடிவம் ஆய்விட்டது.

'அவளால் வந்த ஆக்கம் இவ்வாக்க மெல்லாம்'. இந்தத் தனு கரண புவன போகங்களெல்லாம் திருவருளாகிய சத்தியால் வந்த ஆக்கங்களே. இந்த ஆக்கங்களெல்லாம், காரைக்காற் பிராட்டிக்குப் பரத்துள் மறைந்தன; சத்தியே வடிவம் ஆயினர்.

'தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடித் தாயை மறந்து
ஏயுமதே நிட்டையென்றான் எழிற்கச்சி யேகம்பனே.'

* * *

ஒரு சமயம் திருமால் திருக்கைலாசத்துக்குப் போனார்; திருமால் காவல்தெய்வம். இந்த உலகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்; பரத்தை ஒரு அளவுக்குப் பார்ப்பவர்; பார் முதற் பூதங்கள் பரத்துள் ஒடுங்கும் நிலை அவருக்கு இன்னுங் கைகூடவில்லை. இந்த நிலையில், திருக்கைலாசத்திலே சத்தியும் சிவமும் வேறு வேறாய் (பிரபஞ்ச சிருட்டி திதி சங்காரமாகிய) சூது விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

திருமாலைக் கண்டதும் சிவபெருமான், "நல்ல சமயம் வந்தாய், நாங்கள் விளையாடும் சூதாட்டத்துக்கு மத்தியட்சனாய் இரு" என்றார். சூது நடக்கின்றது; ஒவ்வொரு முறையும் சுவாமிக்குத் தோல்வி; காணுகிற பிரபஞ்சத்தில் சுவாமிக்கு வெற்றியேது. தேவிக்குத்தான் வெற்றி. திருமால் பார்த்துக்கொண்டிருக்கிறார். விளையாட்டு முடிவில், சுவாமி, தமக்கு வெற்றியென்று வீரம் பேசினார். தேவி மத்தியட்சரைக் "கண்டதைக் கண்டதைச் சொல்லு" என்றார். கண்ணனுக்குக் கண்பிதுங்கத் தொடங்கிவிட்டது. சுவாமி தோல்வியென்று சொல்லலாமா! வேதங்கள் உபநிஷதங்கள் புராணங்கள் இதிகாசங்கள்எல்லாம் சுவாமிக்கு வெற்றியே பேச, எப்படித் தோல்வியென்று பேசுவது! திருமால் கலங்கினார். தேவி நெருக்கினார். கண்டதற்கு மாறாகத் திருமால், "சுவாமிக்குத்தான் வெற்றி" என்றார். மாயாவாத வேதாந்தி, இந்தஉலகத்தைக் கண்டுகொண்டே "நான் உலகத்தைப் பார்க்கவில்லை; இது மித்தை; நான் பிரமத்தையே பார்க்கிறேன்" என்று பச்சைப் பொய் சொல்லுவான். அந்த மிண்டிய மாயாவாத சண்டமாருதத்தால், திருமாலுந் தாக்குண்டு,

அவளால் வந்த ஆக்கமாகிய உலகத்தைப் பார்த்துக் கொண்டே, உலகத்தைப் பாராதவர்போல, சுவாமிக்கே வெற்றியென்றார்.

சூரியனைக் கண்டவன், இருள் தோற்றது; சூரியனுக்கே வெற்றி என்றால் யாரும் ஆக்ஷேபிக்க முடியாது;

நள்ளிருளில் இருப்பவன், ஆகா! சூரியனுடைய பிரகாசம் என்ன! அதற்குத்தான் வெற்றி; இருள் நிலையற்றது; பொய்! என்று சொல்லுவதில் கருத்தில்லை.

தேவி திருமாலைப் பார்த்து, கண்டதிருக்கக் காணாதது சொன்ன வஞ்சகனே, நீ,

'பாராயலை கண்ணனு மாயினை பாலி னுற்றாய்
தேராத தொன்றில்லை யாவருந் தேர வொண்ணாப்
பேராதி யோன்அவை கூறினும் நீயிது பேசலாமோ
காராமெய் யென்பர் மனமுங் கரியாய்கொள் மன்னே'

'யாவையும் சத்தெதிர் சூனியம்'. அப்பெருமான் தான் வெற்றியென்றார்; அது சரி. அவர் எதிரில் பிரபஞ்ச சூது இல்லை. நீயோ பார்த்துக்கொண்டேயிருக்கின்றாய். 'யாவருந் தேர வொண்ணாப் பேராதியோன் அவை கூறி னும் நீயிது பேசலாமோ'. "நீ பாம்பாகக் கடவாய்" என்று சபித்தருளினர்.

கச்சியப்பப் பெருமான், திருமால் நிலைக்கு இரங்கி,

'ஆன்ற வைம்புல னொருவழிப் படுத்தி
ஆர்வம் வேரறுத் தையமொன் றின்றி
யூன்றி ரிந்திடி னும்நிலை திரியா
வுண்மை யேபிடித் துலகங்கண் முழுதும்
ஈன்ற வெம்பி ராட்டியை விலக்கி
எம்பி ரானையே வழிபடு மியற்கை
மூன்று தாளுடை யொருவனுக் கல்லால்
ஏனை யோர்களால் முடியுமோ முடியா'

பிருங்கி முனிவர்க்கு, சத்தி வேறு தோன்றாது, சிவமே தோன்றும் உந்நத நிலை இருந்தபடியைக் காட்டுகின்றார்.

பிருங்கிமா முனிவரின் சிவமே தோன்றும் நிலையை எடுத்தோதிய கச்சியப்பப் பெருமான்தான் காரைக்காற்

பெருமாட்டி, 'அம்மே' யென்று அழையாது, 'அப்பா' என்று அழைத்த பேசுதற்கரிய பெருநிலையை, உணர்ந்து உருகி, அதனை அருளிய சேக்கிழார் சுவாமியோடு கொண்டாடத் தக்கவர்.

உமாதேவியார் உருகி ஞானப்பால் ஊட்டிய சம்பந்தப் பெருமான், காரைக்கால் தெய்வம் தலையால் நடந்த திருவாலங்காட்டில் தாம் கால்மிதித்து நடவார் என்பாராயின், புல்லறிவாளராகிய நாமா, புழுத்தநாயினுங் கடைப்பட்ட நாமா, அப் பெருமாட்டியின் பெருமையைக் கூசாது கூறவல்லேம்.

பெரியபுராணத்தின் பெருமையை உணர்ந்து அதில் ஆராமை கொண்ட ஒரு மகான் ஆறுமுகநாவலர் அவர்கள். அவர்கள் பெரியபுராணத்தை வசனஞ் செய்து, அதற்கு ஒரு சூசனமும் உரையுஞ் செய்யக் கருதினார்கள். சூசனந் தொடங்கிக் காரைக்காலம்மையார் வரை நடந்தும் விட்டது. அப்பொழுது அவர்கள் வயசு முப்பது. அப்பால் இருபத்தாறு வருஷம் வாழ்ந்திருக்கின்றார்கள். காரைக்காலம்மையாரில் நின்றது நின்றதுதான். அதற்கும் அப்பாலும் எழுத ஆறுதரம் முயன்றார்கள். ஆறுதரமும் தீராத இடையூறு நேர்ந்தது. திருவருட் சம்மதம் இல்லை என்றே நிறுத்திவிட்டார்கள். இது அவர்கள் பெருமை. நாயன்மார் வாழ்க்கை வேறு. நம் வாழ்க்கை வேறு. கனவு நிலையில் துயில்வோர், விழிப்பு நிலையில் உள்ளவர்களைப்பற்றிச் சொல்ல முடியுமா! பிரபஞ்சத்தைப் பாராது பார்த்த நாயன்மார் நிலையை, நம் நிலையில் வைத்து, பெண்ணை ஒருவருக்குக் கொடுக்கலாமா, பிள்ளையைக் கறி சமைக்கலாமா என்று பேச எமக்கு உரிமை ஏது? எமக்கு, எம் நிலைக்கு அவை சாதகமல்ல. இதனைச் சிறிதுஞ் சிந்தியாமல் நமது தாய்த்தேசம் — பாரததேசம் நடக்கின்றது. அதைப் பார்க்க மனம் புண்ணாகின்றது.

௨

# எது சமயம்

சிவம் பங்கயத் தயன் மால் அறியா நீதி; அஃது நெருப்பு மலை; அருணாசலம். அக்கினியாவார் சிவனே என்கின்றது வேதம். நீதி என்கின்ற அக்கினிப் பிழம்பாகிய சிவத்தின் சக்தி கருணைப் பிரவாகம். அஃது அக்கினி மலையினின்றும் பிரவாகிக்கின்றது. இரங்காமல் இருக்கமாட்டாமை அதன் இயல்பு. 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சத்தி' என்பது திருவருட்பயன். கருணையாகிய சத்தி அப்பு; சிவம் அக்கினி.

ஒருநாள் சிவசத்தி யமதர்மராஜனை அழைத்து, ஓர் ஆசனத்தை அவனுக்கு நல்கி, 'ஓ தர்மராஜனே, இவ்வாசனம் நீதியாகிய சிவத்தால் தீண்டப்பட்டது; அதனால் நீதியே வடிவமானது. இதன்மீது நீ இருந்துகொண்டு, மன்னுயிர்களுக்கெல்லாம் நீதி வழங்குவாயாக' என்று ஆஞ்ஞாபித்தாள். யமன் அவ்வாஞ்ஞையைத் தலைமேற்கொண்டு, அவ்வாசனத்தில் வீற்றிருந்து, தருமனாய், நடுவனாய் நீதிபரிபாலனஞ் செய்வானாயினான்;

**நீதியில் தவருத யமதர்மராஜன்:**

ஒரு மயிர் நுனியைக் கோடி கூறிட்ட அளவுகூட அவன் நீதியில் தவறுவதில்லே. அப்படியிருந்தும் அவன் நாள் தோறும் வாங்கிக்கட்டும் திட்டுகளுக்கு அளவேயில்லே. அருமந்த குழந்தைகளே இழந்த தாய்மார், இளங்கணவரை இழந்த பெண்கள் விட்ட கண்ணீர் கடலினும் பெரிது. கொடியோனே யமன் என்று ஏசும் வழக்கமும் வந்து விட்டது.

ஒருமுறை யமதூதுவர்கள் யமதர்மராஜனே ஏசுபவர்களேயும் திட்டுபவர்களேயும் வலிந்து இழுத்துக்கொண்டு போய், அந்த நீதி என்கின்ற ஆசனத்துக்கு அருகில் நிறுத்தி, இனித் திட்டுங்கள் ஏசுங்கள் என்ருர்கள். அப்பொழுது தம்மால் இழக்கப்பட்டவர்களெல்லாம், முன் தோன்றி, தமக்கு நன்மையே செய்யப்பட்டது என்ருர்கள். நரகத்தில் இருந்தவர்கள்கூடத் தம்நன்மையின்பொருட்டே தமக்கு நரகம் விதிக்கப்பட்டது என்ருர்கள். ஏசினவர்களும் திட்டினவர்களும் நாணங்கொண்டு, நீதியாகிய அந்த ஆசனத்தை விழுந்துவிழுந்து வணங்கினர்கள்.

மார்க்கண்டேயர், நளாயினி, சாவித்திரி புறனடையானவர்கள். தவ வலியாலும் கற்பின் திண்மையாலும் ஊழையும் உப்பக்கங் கண்டவர்கள் அவர்கள், அஃதாவது விதியை வென்றவர்கள் அவர்கள்; அவர்களின் பெருமையைப் பெருக்கிக் காட்டுவதற்காக விதிவழி நின்ற யமதர்மராஜன்மீது தவறு கற்பித்துக் கூறுவதுண்டு. அஃது அவர்கள்பாற் கொண்ட ஆராமைபற்றிய உபசாரம். நடுவணுகிய யமதர்மராஜன் நீதியில் தவறுவதில்லே. 'நாயகனே தண்டித்தால் சயமன்றே' என்பது திருவாசகம். யமதர்மராஜன் தவறுசெய்து நாயகனுல் தண்டிக்கப்பட்டால், அது யமதர்மராஜன் பெற்ற வெற்றியேயாம். புறனடைச் சிறப்புவிதியின் சிறப்புப் பேசியவாறு. அது நிற்க.

**பிரபஞ்ச மூலம் என்கின்ற ஓங்காரம்:**

சிருட்டி ஆரம்பகாலத்திலே, சிவம் இருந்தபடி இருக்க, இரங்காமலிருக்க மாட்டாமையாகிய திருவருள் என்கின்ற

சிவசத்தி, சீவகோடிகளை உய்விக்க ஒப்படுமுறையில் முகஞ் செய்கின்றாள். சத்தமும் அர்த்தமுமான பிரபஞ்சமூலம் எனப்படும் ஓங்காரம் உதயமாயிற்று. பிரம விஷ்ணுக் களும் உருத்திரனுந் தோன்றி ஓங்காரத்தின் வழிப்பட்டு நின்றார்கள். உயிர்கள் தத்தம் வினைக்கேற்ற வகையில் புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்ப் பலபிரகாரந் தோற்ற மெடுத்தன. நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பு எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதம் என்ற முறையில் பிரபஞ்சம் விரிந்தது. உயிர்கள் உய்யும் வகையில் ஆட் கொண்டருளும் விளையாட்டு நிகழாநின்றது.

ஆட்கொண்டருளும் விளையாட்டுக்கு 'நள்ளிருளில் நட்டம்' என்று பெயர். நட்டம் — நாடகம். இந்த நாட கத்தை நடத்துபவள் சிவசத்தியே. சத்திசிவத்தின் வேறு காமையால், 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்' எனச் சிவத்தின்மேலேற்றி நட்டம் கூறப்பட்டது; சூரிய கிரணத்தின் தொழிலைச் சூரியன் மேலேற்றிக் கூறுவது போல. சிவசத்தியை.'இருட்டறை மூலை யிருந்த குமரி' என் கின்றது திருமந்திரம்.

'இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே.'

என்பது திருமந்திரம்.

**இரங்காமலிருக்கமாட்டாதவள் :**

குருட்டுக்கிழவன் உயிர். உயிர்கள் அறியாமையாகிய ஆணவ இருளில் குருடுபட்டுக் கிடக்கின்றன. குருட்டுக் கிழவன் குருடு நீங்கித் 'தன்னிலைமையைச்சார' மருட்டுத லாகிய நாடகத்தை நள்ளிருளில் நடத்துகின்றாள் குமரி யாகிய சிவசத்தி. அவள் நித்திய கன்னிகையாதலின் குமரி எனப்பட்டாள். அவள் இரங்காமலிருக்க மாட்டாதவ ளாதலின், மருட்டியபடி இருக்கின்றாள். சத்தமும் அர்த்

தமுமான தநு கரண புவன போகங்கள் அவன் மருட்டுக்கள். உயிர்க்கிழவன் கண்விழிக்கச் செய்யும் வித்தைகள் அவைகள். புல் முதலிய தாவர உடல்களால் ஸ்பரிச உணர்ச்சி உண்டாகிறதேயன்றி விழிப்பு உண்டாவதில்லை. பறவை விலங்கு என்கின்ற உடல்களை அவன் நல்கும் போது விழிப்பு அரும்புகின்றது. அதுகண்டு மகிழ்ந்து மேலான மனித உடலை அவன் நல்குகின்றான். உயிர்க்கிழவன் விழிக்கின்றான். ஆனால், அவன் நல்கிய மாயப் பொருள்களையே பொருளென்றெண்ணுகின்றான். அப்பொருள்கள் காரணமாக அவலக் கவலைகளில் வீழ்ந்து அழுந்துகின்றான். தான் என ஒரு முதல் உண்டு; தனக்கு உபகரிப்பதொரு தாய் உண்டு என்ற உணர்வு கைகூடுவதாயில்லை. அவ்வுணர்வைக் கூட்டுதற்கு அவன் செய்யும் உபகாரம் அநந்தம்.

அவனோ, 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை' நமது மயக்கத்தைப் பேதிப்பது அவனுக்கு நித்திய முயற்சி. உயிர்களோ உபகாரங்களைப் பெற்றுக்கொண்டு, உணர்ச்சி கைகூடியதுந் தம்போக்கிற் போகின்றன. 'தனித்துணை நீ நிற்கத் தருக்கித் தலையால் நடந்தேன்' என்கின்றார் மணிவாசகர். உயிர்கள் அவன் கொடுத்த தலையால் நடக்கத் தொடங்கியபோதும் அவ்வுயிர்களைத் 'தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பன்று.' உயிர்கள் அவன்காட்டும் வழியில் அவன் கருத்தை அறியும் முறையில் அறிந்து அவனோடு ஒத்துப்போகவேண்டியவைகள். ஆனால், அவைகள் அப்படிச் செய்வதில்லை. அவைகளுக்குப் பித்தம் என்கிறார் மணிவாசகர். அந்தோ, 'புவனியிற் போய் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம்.'

பள்ளிக்குப்போனால் கல்விப் பயனை அடையவேண்டும்; அஃதில்லாதவழிப் பள்ளிக்குப் போயும் பயன் என்னை. பள்ளிக்குப் போன நாளும் போகாத நாளே. புவனியிற் போய்ப் பிறந்தவர்கள், பிறவிப் பயனை அங்கே பெறாராயின் பிறந்து வீணே கழிந்த நாளனைத்தும் பிறவாத நாள்களேயாம். நாம் பிறந்தும் பிறவாதவர்களே என்றபடி

ஒரு சிருட்டி தொடங்கி நடக்குங் கால எல்லையில் அவள் சொல்வழியில் நடக்கும் உயிர்கள் எத்தனை? தத்தம் போக்கில் போகும் உயிர்கள் எத்தனை? உயிர்கள் தாந் தாமே தாயை விலகி வகுத்துக்கொண்ட சமய கோடிக ளாகிய வழிகளுக்கு எல்லையும் உண்டோ? ஆட்டின் பிறகே செல்லும் இடையன்போல, சீவகோடிகள் வகுத்த வழி களிலுமன்றோ, அச்சீவர்களை உய்யக்கொள்ளும்பொருட்டு, அச்சீவர்களுக்குப் பிறகே, அந்த இரங்காமலிருக்கமாட் டாதவளுந் தொடர்ந்து நடக்கின்றாள்! அவள் கருணை இருந்தபடிதான் என்னே!

அவள் சொல்வழி நின்று, அவளுக்குப் பிறகே, அவள் காட்டிய வழியில் நடந்த உயிர்கள், எடுத்த சிருட்டி காலத்திலேதானே தமது யாத்திரையை முடித்து வீடு கூடிவிடுகின்றன. தத்தம் வழியில் தாந்தாம் வகுத்த வழி யிற் செல்லும் உயிர்கள் குறித்த யாத்திரையை முடித்து வீடு கூட எத்தனைகோடி சிருட்டி காலங்கள் செல்லுமோ ஆர் அறிவார். கால்வாய்வழியே செல்லும் நீர் நேரே குறித்த இடத்தைச் சென்று சேருகின்றது. பாலைவன மத்தியில் சிதறுண்ட நீரும் ஆவியாய் எழுந்து மேகமாய் ஏதோ ஒரு காலத்தில் மழையாய் அக்கால்வாயைப் பற்றியோ வேறு பிரகாரமாயோ குறித்த இடம் வந்து சேரலாம். பாலைவனத்திற் சிதறுண்டநீரின் கதி அது. அவ்வாறுதான் அது தன் யாத்திரையை நடத்தவேண்டிய தாயிற்று. அலைந்து உலைந்து வந்து சேர்ந்த அந்த நீர், கால்வாய்வழி வந்து நேரே சேர்ந்த நீரைப் பழிக்குமானால் — உன்வழியும் என்வழியும் சமம் என்னுமானால் — அதன் அறியாமையைப்பற்றி என்ன என்பது!

**எல்லா வழிகளிலும் தாயின் அடிச்சுவடு:**

சமயகோடிகள் வகுத்த வழிகளில் தாய்சொல்வழி நின்று வகுத்த வழிகள் ஒருசிலவே. தத்தம் போக்கில் வகுத்த வழிகள் அநந்தம். எல்லா வழிகளிலும் தயாவான தாயின் அடிச்சுவடு காணப்படுகின்றது. அலைக்கின்ற

உலேக்கின்ற அநியாய வழிகளிலும் அவள் அடிச்சுவடு காணப்படுகின்றதே! இது என்ன கொடுமை! 'அம்மையே, நீ ஏன் அந்த வழியில் நடந்து மிருதுவான பாதங்களில் கொப்புளஞ் செய்து கொள்கின்றாய்' என்று வினவினுல், அந்த அம்மை, 'அவ்வழியிற் செல்வதும் என் பிள்ளை தானே, அதனைக் கைவிடுவதா? அதற்கு மலபந்தம் அதிகம். அது அப்படி அலைந்து உலைந்து வழிகாணவேண்டி யிருக்கிறது' என்பாள். 'தாயே, நீ சர்வ சக்தி வாய்ந்தவள்; அப்பிள்ளையை — துட்டப்பிள்ளையை — எடுத்து நேர்வழி யில் விடலாகாதா அம்மே' என்று வினவினுல், அம்மை சிரித்துக்கொண்டு, 'அதனுல் அப்பிள்ளைக்கு என்ன பயன்' என்பாள். அழுதும் பிள்ளை தானே வழிகாணவேண்டி யிருக்கிறது. அவள் அப்பிள்ளை வழிகாணுதற்கு ஆக வேண்டிய உபகாரங்கள் அத்தனையுஞ் செய்துகொண்டே அவனைத் தொடருகின்றாள்; அவள் கருணைகரி. அந்தப் பிள்ளை அவளைத் திரும்பி நோக்காமலே, ஏனைப் பிள்ளைகள் செல்லும் வழியைப் பழித்துக்கொண்டு, தன் போக்கிற் போகின்றது. அப்படிச் செல்வதும் நீதிதான் என்கின்றாள் அவள்.

சமய வழிகள் ஒன்றோடொன்று முரண் உறுகின்றன. ஆனுல், அவள் நோக்கில் எல்லா வழிகளும் அவரவர்க் கேற்ற முறையிலேதான் அமைந்து கிடக்கின்றன. இந் நிலையில், 'அம்மையே சமய வழிகள் அத்தனையும் ஒத்தன தாமே' என்றால், அவள் விலாவிறச் சிரித்து மௌன மோலி தரிக்கின்றாள்.

இராவணன் இருபதுக்கித் தலைகளால் நடந்து திருக்கை லாசத்தை அசைத்தான்; நெரியுண்டான்; அலறினுன். அவன் 'அல்லது' என்று வெறுத்து வருந்துவது நடந்தது. அவனுக்கு வாகீசர் இரங்கிப் புத்திமதி புகன்றார். இராவணன் சாமவேதகீதம் பாடித் துதித்தான். சிவசத்தி உருகினுள். இராவணனுக்கு நீண்டநாளும் வாளும் கிடைத் தன. அவன் 'ஆகும்' என்று விரும்புவன கிடைத்தன.

இராவணனுக்கு. அவன் 'இது ஆகும்' என்று விரும்பி ஏற்றுக்கொள்வதும், 'அது அல்லது' என்று வெறுத்துத் தள்ளுதற்குரியதும் ஓரிடத்திலிருந்து கிடைத்திருக்கின்றன. 'ஆகும்' என்பதும் 'அல்லது' என்பதும் நீதியினிடத்தே எவ்வித பிணக்குமின்றி நீதியாயே அமைந்திருக்கின்றன. இராவணன் அலறியதை 'அல்லது' என்று இரங்கிய வாகீசர், திருநாவுக்கரசராய் அந்த 'அல்லது'ம் நீதிதான் என்று உணர்கின்றார்.

**உயிர்கள் உய்யும் வகை விளையாட்டு:**

ஒன்றோடொன்று ஒவ்வாது பிணங்கும் சமய கோடிகள், ஒரு நீதியிலிருந்தே தோன்றி நடந்து பிணக்குறுகின்றன. அவை தோன்றுமிடத்தைத் தோற்றுவித்த சத்தியின் விளையாட்டை—அஃதாவது இரங்காமலிருக்கமாட்டாமையாகிய உயிர்கள் உய்யும் வகையான விளையாட்டை—உணருஞ் சமயங்கள் நீதியையே நீதியாற்கண்டு, விம்மிதமும் இரக்கமுமுற்று மௌன மோலி தரிக்கின்றன. விளையாட்டின் நீதியை உணராத சமயங்கள் தம்முட் பிணங்கிக் கலாம் விளைக்கின்றன. 'தம்முட் புணராமை கோளாம் புறன்' என்கின்றார் 'பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய் கண்ட' மெய்கண்டதேவர். தாம் பிடித்த முயலுக்குக் கால் மூன்று என்று, மற்றவற்றோடு முரணுஞ் சமயங்கள் எவையோ அவையெல்லாம் புறம்; அவற்றின் குரலை யாம் கேளாம்; எமது செவிகள் கேளா என்கின்றார் அந்தத் தேவர்; மெய்கண்டதேவர்.

'ஓது சமயங்கள்.....................
ஒன்றோடொன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாது சமயம் .................என்னில்
இதுவாகும் அதுஅல்லது எனும்பிணக்க தின்றி
நீதியினல் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம்...............'

என்கின்றார், மெய்கண்டாரின் சீடர்; அருணந்தி சிவாசாரியர். அவர் பேசும் 'ஓரிடம்' நீதியாகிய திருவருட்

சத்தி வைகுமிடம். அஃதாவது, ஆகும் என்பதும் அல்லது என்பதும் பிணக்கின்றி நீதியாய் வைகுமிடம். அந்த இடத்தே சமயகோடிகள் அனைத்தையும் நீதியென்று நீதி யாற் காண, உபகரித்து நின்றதொரு சமயம் யாதோ அதுவே சமயம்; மெய்ச்சமயம்.

**நீதியே என நீதியை உணருஞ் சமயம்:**

சமயகோடிகளுள் மற்றச் சமயங்களோடு பிணக்கின்றி, அவையும் நீதியே என்று நீதியை உணருஞ் சமயம் எத்தனை? என்பது பெரியதொரு வினா.

'ஒன்றது பேரூர் அதற்கு ஆறு வழியுள' என்கின்றார் திருமூலர். 'ஒத்தாறு சமயங்கள்' என்கின்றார் சம்பந்தர். சமயமாறினையும் வளர்க்குந் தாய் என்கின்றார் கச்சியப்பர்.

வேற்றுமை எட்டே, சுரங்கள் ஏழே என்கின்ற முறையில் மெய்ச்சமயங்கள் ஆறே என்கின்றனர் தத்துவ ஞானிகள். எப்படி ஆறாயினது என்பது ஆராய்ந்து காணற் பாலது.

சமயமாறும் ஒத்தவை என்பது சம்பந்தர் வாக்கு. ஆறும் மாறு வீறுடைத்து என்பது உமாபதி சிவாசாரியர் கூற்று. இந்த ஆறும் ஒன்றேடொன்று தொடர்புடையவை; ஆறும் அநுட்டிக்கற்பாலவை என்பது 'ஒன்றே டொன்று சென்றுறு நிலையில் ஆறும் மாறு வீறுடைத்து' என்பதனால் அறியத்தக்கது.

'மெய்தரு சைவ மாதி இருமூன்று' என அறு சமயத்துள் முதற்கண்ணது சைவம் என்கின்றார் அருணந்தி சிவம். இந்தச் சைவத்துள் ஏனை ஐந்தும் அடங்கும் என்பதும் பெரியோர் கருத்து.

இந்தச் சைவத்தை, சைவசமயமே சமயம் என்று தாயுமானவர் எடுத்தோதிப் 'பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டா' என்று தம்முட் பிணக்குறுஞ் சமயகோடிகளுள் வீழ்ந்து தடுமாறுமற் றடுக்கின்றார்.

சமயகோடிகளெல்லாம் தந்தெய்வம் எந்தெய்வம் என்று வழக்கிடுஞ் சமயங்கள்; தம்மிற் புணராத சமயங்கள். தம்மிற் புணராமையாவது, நீதியை விசாரியாமை, அப்படிப்பட்ட சமயங்களைக் 'கேளாம்புறன்' என்கிறார் மெய்கண்டார். இது மேற்காட்டப்பட்டது.

தம்மிற் புணராத சமயகோடிகளும் இந்தச் சிருட்டியிலோ இன்னும் பல சிருட்டியிலோ உய்யும்வகை கிட்டாத வழியும், ஏதோ ஒரு சிருட்டியில் உய்யும் வகை கிட்டும் வகையில், அந்தச் சர்வசீவதயாபரி, பேதித்து வளர்த்தெடுக்கின்றாள். கல்லாலின் நீழலிலே, அந்த அருட்சத்திக்கு அருகில் நின்று பார்க்கும்போது,

'வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா'

அம்மா – ஆச்சரியம்.

வேறுபடுஞ் சமயத்தில், 'விரிவிலா அறிவினர்கள் எரிவினாற் செய்த' சமயங்கள், கத்திடும் ஆன்மாக்கள் பித்தர் குணம் மேவிக் கட்டியவைகள் எல்லாம் அடங்கும். நரகத்திலே ஒரு சமயம் உற்பத்தியாயிருந்தால் அதுவுமே வேறுபடுஞ் சமயத்தில் அடங்கும். புகுந்து பார்க்கின் – பார்க்கக்கூடிய இடத்தில் நின்று பார்க்கின் – 'ஓரிடம்' என்று சித்தியார் ஓதுமிடத்தில் நின்று பார்க்கின்—புல், பூடு, புழு யாவையுமே முடிவின் மோன வாரிதியில் வயங்கக் காண்டும்.

**ஆதியும் அந்தமும் அற்ற அருஞ் சோதி:**

ஆதியும் அந்தமும் ஒன்றே. எங்கேயிருந்து உலகம் விரிந்ததோ, அங்கேதான் ஒடுக்கமும் என்க.

சித்தியார் ஓது சமயம் என்ற பாடலில் உற்பத்தித் தானமான ஆதியில் நின்று நீதியை விசாரித்து, 'ஆம்' 'அல்ல' இரண்டும் பிணக்கின்றி அமைவதைக் கண்டது.

தாயுமானவர். வேறுபடுஞ் சமயம் என்ற பாடலில் ஒடுங்குந் தானமான அந்தத்தில் நின்று, 'ஆம்' 'அல்ல' ஆகிய எல்லாம் ஓரிடத்தில் வயங்குவதைக் காட்டியது.

ஆதியு மந்தமுமில்லாத அரும்பெருஞ் சோதி, உலகுக்கு ஆதியாயும் அந்தமாயும், பங்கயத் தயனும் மாலு மறியா நீதியாயும் இருக்கின்றது. 'அந்தம் ஆதி என்மனுர் புலவர்'.

இங்ஙனங் கூறியவாற்ருல், தம் சமயமே முழுமை யாகிய உண்மை, ஏனைச் சமயங்கள் அம்முழுமையின் ஏக தேசங்கள் என்பாரும், சமயங்கள் அத்தனையும் ஒத்தன என்று சமரசம் பேசுவாரும். ஏனைச் சமயங்கள் படிகள் என்பாரும் தம்முள் பிணக்குறுவாராய்ப் புறத்தராதல் சிந்திக்கற்பாலதா மென்க.

ஒரு பொருளை ஒருவன் கயிறு என்கின்ருன். மற் ெருருவன் அரவு என்கின்ருன். பொருள் ஒன்றே. ஒன்று பொய்த்தோற்றம் என்பது தேற்றம்.

பொய்த்தோற்றத்தை உண்மையின் ஏகதேசம் என்றே, உண்மையோ டொத்த மற்ருென்று என்றே, உண்மைக்குப் படி என்றே கூறுதல் யாண்டுமின்மை தெளிக.

'செப்பரிய சமயநெறி யெல்லாந் தன்றன்
தெய்வமே தெய்வமெனுஞ் செயற்கை யான
அப்பரிசா ளருமஃதே பிடித்தா லிப்பா
லடுத்தவந்நூல் களும்விரித்தே யனுமா னுதி
ஒப்பவிரித் துரைப்பரிங்ஙன் பொய்மெய் யென்ன
வொன்றிலையொன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாஞ் சமயமுமா யல்ல வாகி
யாதுசம யமும்வணங்கு மியல்ப தாகி.'

'இயல்பென்றுந் திரியாம லியம மாதி
யெண்குணமுங் காட்டியன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தில்
அமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ.'

— தாயுமானவர்

**இறைவனை ஒத்தது மெய்ச் சமயம்:**

*வைதிக சைவம், இப்பரிசாஞ் சமயமுமாய் அல்லவாகி, மௌனமோலி சென்னியில் வைத்து, ராசாங்கத்தி லமர்வது, ஆழ்ந்து சிந்திக்கற்பாலது;*

*தந்தெய்வம் எந்தெய்வம் என்று வழக்கிடுஞ் சமய கோடிகள், தம்மிற் புணராது பிணக்குற்றவழியும், அவையெல்லாம் அங்ஙனமாதல் நீதியேயென்பதை உணர்ந்து மௌன மோலி தாங்கும் மெய்ச்சமயம், அவை அங்ஙனமாதல் நீதியே என்பதால், அவ்வச் சமயமுமாகி இருக்கின்றது. அதே சமயத்தில், அப்பிணக்குறுஞ் சமயமெல்லாம் ஏகதேசம் என்றோ, ஒத்தன என்றோ, படிகள் என்றோ கூறாது மௌனம் பூணுதலால், அச்சமயங்கள் அல்லாததாயும் இருக்கின்றது. அதனால் ராசாங்கத்தில் அமர்ந்தினிதிருக்கின்றது; அழகிது.*

*உண்மை, பொய்த்தோற்றங்களாகியும் அதேசமயத்தில் அல்லாததாகியுமிருக்கின்றது. இவ்வாற்றால் மெய்ச்சமயம் இறைவனை ஒத்தது: இறைவன் எல்லாமாய் அதே சமயத்தில் அவையல்லாததொன்றாயிருக்கின்றான்.*

## தர்மத்துக்குத் தவணையில்லை

'அன்றறிவாம் என்னாது' செய்யற்பாலது தர்மம்; இது அறத்தின் மூலம்.

"தர்மத்துக்குத் தவணையில்லை, ஞானத்துக்குத் தவணையும் இடலாம்" என்பதற்கு மகாபாரதத்தில் தருமரைப் பற்றி ஒரு நல்ல கதை வருகிறது.

அது வருமாறு:

பாண்டவர்கள் பன்னிரண்டு வருடம் வனவாசஞ்செய்து, பின்பு ஒரு வருடம் அஞ்ஞாத வாசமும் முடித்து வெளிப் பட்டுவிட்டார்கள். அஞ்ஞாத வாச காலத்தில் அவர்களைக் கண்டுபிடிக்கத் துரியோதனன் செய்த சூழ்ச்சிகள் பலிக்க வில்லை. இனி என்ன செய்வதென்று சகுனி முதலிய வர்களோடு துரியோதனன் சிந்திக்கின்றான். சிந்தனையின் பயனாக ஒரு உபாயம் கண்டுபிடிக்கப்பட்டது. சஞ்சயர் ஒரு பிராமணர்; குருகுலத்தவர்களின் குரு. அவரைத் திருதராட்டிரன் மூலம் பாண்டவர்களிடம் அனுப்ப

வேண்டும். அவர், அவர்களுக்கு வேதாந்த ஞானத்தைப் போதித்துப், பற்றற்றவர்களாக்கிக், காட்டுக்கு வலிந்து போகும்படி செய்யவேண்டும். இதுதான் அந்த உபாயம்,

துரியோதனன் திருதராட்டிரன் மனசைக் கனியச் செய்கின்றான். திருதராட்டிரன் சஞ்சயரை அழைத்து வணங்கிக் கூறுகின்றான்.

'அறத்தின் மைந்தனும் இளைஞ ரும்புவி ஆசை அற்றகல் அடவியின்
புறத்தி ருந்து தவஞ்செ யும்படி புரிவு ரைத்தருள் போயெனச்
செறுத்தி டுந்திருத ராட்டி ரன்தன சிந்தை ஒப்பன செப்பினன்
மறுத்தி லன்பெரு முனியும் மற்றவர் பாடி வீடுற மன்னினன்'

சஞ்சயர் திருதராட்டிரன் வேண்டுதலை மறுக்க முடியாதவராய்ப் பாண்டவர்கள் இருக்கும் இடத்துக்குப் போகின்றார். அங்கே பாண்டவர்களுடன் ஸ்ரீ கிருஷ்ணனும் இருக்கின்றான். தருமருந் தம்பிமாரும் சஞ்சயரை எதிர் கொண்டு வணங்கி ஆசனத்திலிருத்தி, அவர் கட்டளைப்படி, அவர் எதிரில் அமர்கின்றார்கள். கிருஷ்ணனும் முடியை அசைத்துச் சஞ்சயரை வரவேற்கின்றான். சஞ்சயர் கிருஷ்ணனுக்கு வணக்கஞ் செய்துகொண்டு, பாண்டவர்களின் க்ஷேமாதிகளை விசாரிக்கின்றார். தருமர் சூதினு விழந்த தமது பூமியைப் பழையபடி பெறுதற்குத் தாம் முயன்றுகொண்டிருப்பதைத் தெரிவிக்கின்றார். இந்தச் சந்தர்ப்பத்தில்,

'நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை'

'பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணப் பிறப்பு'

என்ற திருக்குறட் கருத்துக்களை விரித்துப்பேசி, மெல்ல மெல்ல வேதாந்த ஞானம் போதிக்கப் புகுந்து,

'பாரிலாசையும் நின்இ ராச பதத்தி லாசையும் மன்னுவெம்
போரி லாசையும் நேய மங்கையர் போக மன்பொடு புதிதுனும்
சீரி லாசையும் விட்டு நன்னெறி சேர உன்னுதி நீஎனத்
தூரி லாசை அறத்து றந்தருள் சுருதி மாமுனி சொல்லவே'

சுருதிமாமுனி — சஞ்சயர், தருமரை நோக்கி இவ்வாறு துறவாகிய ஞானத்தைப் போதிக்கத், தருமருக்குச் சிரிப்பு வந்தது. தருமர் சஞ்சயரை நோக்கிச் சொல்லுகின்றார். சுவாமி,

'என்ன றத்தினில் நின்று தெவ்வரை இருவி சும்பினில் ஏற்றினல்
பின்ன றத்தினில் நினைவு கூரும் எனக்க னன்றிவை பேசினுன்'

நம்மை வஞ்சித்தவன்பால் நமக்கு மனம் அழலுகின்றது. அதனை அடக்கமுடியாது. 'அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்.' அழற்சி தானே அடங்கவேண்டும். அதற்கு வழி, நீதி வழியில் பகைவரைப் பொருது வெல்லுதலே, அது நமக்கு இராசதருமமாய் அமைந்திருக்கிறது. அந்தத் தருமத்தைத் தவணையிட்டுவைக்காமற் செய்து முடிக்க, மன அழற்சி தணிந்து அமைதி உண்டாகும். அதன் பிறகுதான் உமது ஞான போதனையாகிய வேதாந்தம் பயன்செய்யும். அதுவரையும்,

நீர் போதிக்கும் ஞானபோதனைக்குத் தவணையிட்டுத் தான் வைக்கவேண்டும். இப்பொழுது ஞானோபதேசம் புறக்குடத்து நீராய்த்தான் நமக்குச் சித்திக்கும்.

மன்னர்கள் நிறைந்த சபையில், தீண்டாத கற்புடைய செழுந்திருவாகிய திரௌபதி கண்ணீர் சோரத், துகில் சோர நிற்கும் நிலையே நம் மனக்கண்முன் நிற்கின்றது, அதை நாம் நமது இராசதருமத்தால் நீக்கியபின்பே. உமது ஞானம் நம் மனத்திற் பலிக்கும், என்று ஞானோபதேசம் செய்யப் போந்த சஞ்சயருக்குத் தருமோபதேசம் செய்யத் தொடங்கினர் தருமர்.

இந்தச் சமயத்தில்,

'இடக்கண் ஆக வலக்கண் ஆக இரண்டும் ஒக்கும் எனுமலே
பிடர்க்க ணேமதி யான கண்ணிலி பெற்றி அல்லன பேசினன்
கடற்பெ ரும்படை கூடி நாளை அணிந்த வெய்ய களத்தினில்
அடற்க டுங்கதை யால டித்திடும் அதிச யந்தனை ஐயகேள்'

என்று, கதாயுத பாணியாகிய வீமருஞ் சஞ்சயருக்குக் கதை சொல்லத் தொடங்கினர்;

தரும சந்தர்ப்பத்தில் ஞானம் சொல்லப்போன சஞ்சயருக்கு, யார்தான் என்னதான் சொல்லார்கள். மடைத்தொழில் வல்ல வீமரும், வேதம் வல்ல சஞ்சயருக்கு முன் கதை எடுத்தார்.

இச்சம்பவங்களைக் கண்ணெதிரிற் கண்டுகொண்டிருந்த கண்ணன், கையமர்த்தி வீமரை இருத்திவிட்டுச். ''சுவாமிகளே'' என்று விளித்துச் சஞ்சயருக்குச் சொல்லுகின்றன்; சுவாமி, இந்த மண்ணர்கள், இந்த மண்ணைக் கவ்வட்டும்; அந்த விண்ணர்கள் அந்த விண்ணைக் கவ்வட்டும். பன்றிகளுக்கு முன்னே முத்துக்களை விதைக்க ஒண்ணாது சுவாமீ.

'யாம் யாதும் உரைத்தும் என்பயன்! நீ எழுந்தருள்'

என்று சஞ்சயருக்கு விடைகொடுத்து, வந்தவழிக்கு மீளும்படி அனுப்பிவைத்தான்.

தம்முடைய ஞானம் இங்கே பழுக்காது என்று எண்ணிக்கொண்டு சஞ்சயர் மீண்டார்.

ஞானம் தவணையிடப்பட்டது. தருமம் அப்படிச் செய்யப்படவில்லை.

* * *

'கிட்டாதாயின் வெட்டென மற' என்பது உலகன்னை வாக்கு. ஒருவன் எத்தனையோ வருடம் படித்துப் பரீக்ஷைக்குப் புறப்படுகின்றன். அவனுக்கு இந்த உலகத்

திலே, கைம்மையாகிய தாய்தான் ஓரேயொரு பற்றுக் கோடு. இனசனம் சகோதரம் அவனுக்கு இல்லை. தன் புதல்வன் பொருட்டே உயிர்வாழ்ந்த அவள், அன்று, அந்தப் பரீக்ஷைத் தினத்தில், திடீரென்று நோய்வாய்ப் பட்டு, உயிர் துறக்கும் நிலையிற் கிடக்கின்ருள். ஆவி, ஆக்கை அகத்ததோ புறத்ததோ ஒன்றுந் தோன்ருதநிலை. அந்தப் பிள்ளையோ பரீக்ஷையிற் சித்தி எய்துவான். பரீக்ஷையிற் சித்தி எய்திஞல், அவன் நிலையை வருணிப்பது எளிதன்று. உத்தியோகமும் சீதனமும் ஒருங்கு சேர்ந்து வரும். மாடமாளிகை கூடகோபுரம் அவனைத் தேடிவரும். பரீக்ஷைக்குத் தவணையிட்டால், பிறகு அப்பரீக்ஷை எடுக்க முடியாது. ஏனென்ருல் அந்தப்பரீக்ஷை வயசோடு சம்பந்தப் பட்டது. வயசுக்குத் தவணையிட முடியுமா? பெற்றெடுத்த தாயைப் பிரிந்து பரீக்ஷைக்குப் போஞல், பிறகு வெறும் பிணத்தைத்தான் அவன் காணமுடியும். நா வரண்டு உயிர் பிரியுஞ் சமயத்தில், ஒருசொட்டுத் தண்ணீர், தான் பெற்றெடுத்த பிள்ளை கையால் பெறக்கூடுமாஞல் அந்தத் தாய்க்கு எப்படி இருக்கும்! தன் மகன் மடியில் தலை வைத்து இறக்க நேருமாஞல், அந்தத் தாய்க்கு மரண வேதனை தோன்றுமா! இந்த நிலையில், அந்தப் பரீக்ஷார்த்தி என்ன செய்யலாம்! அவனுக்குத் தர்மம் எது! அன்று பரீக்ஷைத்தினம் என்று அன்னைக்கு அவன் வெளியிடலாமா! தர்மம் அறிந்தவன் என்ன செய்வான்! அன்னையின் ஆத் மாவுக்குச் சாந்தி செய்வதற்கு மேல் அந்தப் புதல்வனுக்கு ஒரு தர்மம் உண்டா! அந்த அன்னையின் ஆசிக்கு மேலேயும் ஒரு பாக்கியம் உண்டா!

சுவதர்மமே ஞானத்திஞும் பெரிது. இதனையே கீதை எடுத்துப் பேசியது.

அருச்சுனன் சுற்றத்தில் வைத்த பற்றிஞலே சுவதர் மத்தை மறந்து, துறவுஞானம் பேசிஞன். சுற்றப் பற்றி லும் பார்க்கத் துரியோதனுதிகள்பால் அழலும் மன அழற்சியே அதிகம்என்பதைத் தர்மமூர்த்தியாகிய கண்ணன்

அறிவான். நீதி வழியில், பகைவரைக் கொன்று குவித்த பிறகுதான் அருச்சுனன் மனக்கொதிப்பு அடங்கும். கொதிக்கின்ற மனத்துக்கும் ஞானத்துக்கும் வெகுதூரம்.

கொல்லுவதெல்லாங் கொலையல்ல. கொலையிற் கொல்லாமையும் உண்டு. கொல்லாமையிற் கொலையுமுண்டு.

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்'

கொடியவர்களை அரசன் கொல்லுதல், நெற்பயிருக்குக் களை பிடுங்கி உபகரிப்பதற்குச் சமம் என்பது இத் திருக்குறளின் கருத்து. இது கொலையிற் கொல்லாமை; தருமம். இந்தத் தருமமே, பாரத முனையில் கண்ணனால் அருச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. தருமத்தினாலேதான் மனத்தெளிவு உண்டாகும். மனந் தெளியாதவழி ஞானம் பற்றாது. கண்ணன் ஞானத்துக்குத் தலையிட்டுத், தருமம் போதித்தான்.

---

பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின், பாவம் செய்பவர்களும் இலர்; ஆதலால் பாவம் செய்பவர்களினும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்.

— நாவலர்

உ

# அர்த்தந் தெரிந்தவர்களின் தர்மமே வேறு

'தேனிருக்கு நறுமலர்த்தார்ச் சிலைவிசய னிருக்கவரைத்
திண்டோள் வீமன்
தானிருக்க மாநகுல சகாதேவர் தாமிருக்கத்
தமராய் வந்து
வானிருக்கின் முடிவான மரகதமா மலையிருக்க
வாழ்வான் எண்ணி
யானிருக்க வினையறியா இளஞ்சிங்கம் இறப்பதே
என்னே! யென்னே!'

*மகாபாரத யுத்தத்தில் இளவள ஞாயிறாய் எழுந்து பிரகாசித்த இளஞ்சிங்கேறு ஆகிய அபிமந்யு, சூழ்ச்சி வலையுள் அகப்பட்டுச் சரீர பந்தங்களைத் துறந்து ஆருயிர் நீத்தான்.*

*விஜயன் கைகளில் காண்டீபம் இருக்க, வீமன் புயங்கள் மலைபோல் இருக்க, நகுல சகாதேவர்கள் உயிரோடிருக்க, இவர்களுக்கு மேலே வேதவடிவான ஸ்ரீ கிருஷ்ணன் பச்சைப்*

*பசிய மரகத மலையாயிருக்க, தம்பாலே தர்மம் இருக்க, அபிமந்யுவா அன்றைய யுத்தத்திற் பலியாகவேண்டியவன்! என்னே! என்னே! என்று இரங்கிப் புலம்புகின்றார் தர்ம புத்திரர். வீமன் இரைந்து கதறுகிறான். விஜயன் மூர்ச்சித்து விழுந்துவிட்டான். நகுல சகாதேவர்கள் சோகிக்கின்றார்கள். எதிரிகளே ஏங்கித் திகைக்கிறார்கள். உலகமே கண்ணீர்வடிக்கின்றது. ஓரறிவுயிர்களும் உருகுகின்றன.*

*'உடரெலாம் உயிரிலா எனத்தோன்றும் உலகத்தே' ஒரேயொருவன் மாத்திரம் ஒருசொட்டுக் கண்ணீரும் விடாமல் இருக்கின்றான். அவன் துரியோதனனே யல்லன்; துரியோதனன்கூட உருகி அழுதுவிட்டான். அழாத மனித வர்க்கமே இல்லை. தேவர்களே அழுதுவிட்டார்கள். அழுகின்ற இந்த உலகத்திலே, அழாத ஒரேயொருவன் யாரோ! அந்தப் பச்சை வச்சிரமலை யாரோ!*

---

*அவன்தான், அபிமந்யுவின் தாய்மாமன்; அவன்தான், அபிமந்யுவைப் பெற்றெடுத்த சுபத்திரையின் உடன்பிறந்த தமையன்; அவன்தான், அருச்சுனனின் உயிர்த்தோழன். இனி, அவன் பெயரை உச்சரிப்போமாக. ஸ்ரீ கண்ணன், கீதாசிரியன் அவன்.*

'மாயனுந் திருமாமன்; தனஞ்சயனுந் திருத்தாதை;
வானோர்க் கெல்லாம்
நாயனும் பிதாமகன்; மற் றொருகோடி நராதிபராம்
நண்பாய் வந்தோர்;
சேயனும் அபிமனுவாம் செயத்திரதன் கைப்படுவான்
செயற்கை வெவ்வேறு
ஆயநாள் அவனிதலத்து அவ்விதியை வெல்லும்விரகு
ஆர்வல் லாரே.'

*'இப்படியா சம்பவிக்கவேண்டும்!' நான் ஏன் இந்தக் கண்ணீர்வடிக்குங் கதையைப் பாடத் தொடங்கினேன். அந்தோ!' என்று, கதை பாடிவந்த கவிஞனே, ஏடும்*

எழுத்தாணியும் கண்ணீரில் முழுகக், கதறி அழுகின்றான். ஆனால், அந்தக் கண்ணனோ, சிறிதும் அசையவில்லை. உலகம் நடக்கிற திக்கில் அவன் நடக்கவில்லை. சற்றேனும் இளகவில்லை. அப்பனே, அவ்வளவிலேகூட அமையாமல், அகத்தே அவன் களிப்புங் கொள்கின்றான் போலும்! அவனுடைய பச்சைப்பசிய முகத்திலே ஒரு ஒளி தவழுகின்றது. நுண்ணிதின் மகிழுகின்றது, அவன் முகம்.

கண்ணனுடைய முகத்தைப் பார்க்கும்போது, குறுந்தொகையிலே, 'முளிதயிர் பிசைந்த' என்ற பாட்டிலே வருகின்ற ஒரு பெண்ணுடைய முகத்தின் ஞாபகம் வருகின்றது. அந்தப் பாடடிலே,

'தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதன் முகனே'

என்பது இறுதிப் பாகம்.

தலைவி, தானே துழாவிச் சமைத்த புளிங்குழம்பைக் கண்டமாத்திரத்தேயே தித்தித்து, இனிது! இனிது! என்று சொல்லிக்கொண்டு நுகர்ந்தான். அதனாலே, முயன்றும் அடக்கிக்கொள்ள முடியாத ஒரு மகிழ்ச்சி, தலைவிமுகத்தில் எழுந்து, அவள் நெற்றியில் மெல்லத் தவழ்ந்தது.

அந்தத் தலைவியின் முகம் போலே, ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகமும் ஒளி தவழ்ந்தது. இந்தத் தேக பந்தங்களையெல்லாம் உதறித்தள்ளித், தேவகதியை அபிமந்யு அடைவதானால், அதனை ஒரு கண்ணன் தன் கண்ணாலே கண்டானேயானால், அவன் அகங்களிக்காமல், வேறென்ன செய்யமுடியும்! பித்த உலகத்தோடு கட்டி விழுந்து அழுவதற்கு, அவன் என்ன பைத்தியகாரனா?

அபிமந்யுவின் மரணத்துக்குக் கண்ணன் அழவில்லை. ஜனநாயக உலகத்தோடு சேர்ந்து, கண்ணன் கட்டிப் புரளவில்லை. அவன் உயர்ந்தோரான உலகத்தோடு ஒட்டி ஒழுகினான்.

'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொ டுயிரிடை நட்பு.'

என்ற வேதத்தின் அர்த்தந் தெரிந்தவன் கண்ணன். அவனுக்கு அர்த்தத்துக்கு வாய்தலான தர்மத்தில் சந்தேகமேயில்லை. தர்மம் முற்றுப்பெற்றவன் கண்ணன். அவன் தர்ம மூர்த்தி. தர்மத்தை நடத்துகிறவன் அவனே. அவன் தர்மத்துக்கு மேலான அர்த்தந் தெரிந்தவனா யிருப்பான். அவனுடைய அறிவு மெய்ப்பொருள் காணும் அறிவாயிருக்கும். மெய்ப்பொருள் காணும் அறிஞன், எப் பொருள் எத்தன்மைத்தாயினும் அசைவதில்லை.

அர்த்தந் தெரியாதவர்கள், தர்மம் முற்றுப் பெறாத வர்கள், அபிமந்யு புலாலுடலைக் கழற்றியதற்குக் கதறி னார்கள்; கலங்கினார்கள். அவர்களுடைய தர்மம் வேறு; அர்த்தந் தெரிந்த கண்ணனுடைய தர்மம் வேறு.

அன்றிரவு கண்ணன் அர்ச்சுனனைக் கைலாசகிரிக்கு அழைத்துச் செல்லுகின்றான். அபிமந்யுவைக் கொன்ற வனைக் கொல்லுதற்கு, நல்ல அம்பு வாங்குவதற்கு அழைத்துச் செல்லுகின்றான். சோதி மயமான கைலா சத்தை இருவரும் அடைகின்றார்கள். கைலாசத்தைக் கண்டும் அருச்சுனன் கவலை தொலையவில்லை. அவன் புத்திரசோகத்தாற் சோர்கின்றான். அப்பொழுது கண்ணன், அங்கே ஒரு ஒளி உருவம், திருக்கைலாசத்திலே சிவ பெருமான் வீற்றிருக்கும் செம்பொற்றிருக்கோயிலை நோக்கி வருவதை, அருச்சுனனுக்குச் சுட்டிக்காட்டினான். அவ்வுருவத்தைப் பார்க்கக்கூடிய கண்ணைக், கண்ணன் அருளாற் பெற்று, உற்று நோக்கினான். அபிமந்யு, கோடி சூரியப் பிரகாசத்தோடு கூடிய சோதி வடிவத்தில், திருக் கைலாசபதியைப் பூசித்தற்கு, நறுமணங்கமழும் புஷ்பங்களை, நவரத்தினம் இழைத்த பொற்றட்டில் ஏந்தி வருவதைத் தன் கண்ணிறையக் கண்டான்; காதலனைத் தேவ வடிவிற் கண்டான். கண்டதும், ஆராமை அளவு கடக்க, அந்தப் பரிசுத்த ஒளிவடிவத்தைக் கட்டியணைத்தற்கு, 'அருமை மகனே!' என்று வாய் குழற, எதிரே ஓடினான்.

அவன் கைகள் ஒளி உருவைக் கட்டியணைக்க முயன்றன. அது அகப்படவில்லை. அது சென்ற வழியிற் சென்று கொண்டிருந்தது. கண்ணை விழித்தபடி அருச்சுனன் திகைத்துநின்ருன். அவ்வடிவு சென்று மறைந்தது. அருச்சுனன் கண்கள் பழைய கண்கள் ஆயின. அப்பால் ஒன்றுந் தெரியவில்லை. இது கனவா என்று அவன் ஏங்கிஞன். இல்லை, 'நனவு' என்று கண்ணன் தேற்றிஞன். அருச்சுனனுக்குப் புத்திர சோகம் சற்றே தணிந்தது.

அர்த்தந் தெரிந்ததுந் தர்மம் வேறு ஆகின்றது.

---

நிலையில்லாத என் சரீரம் உள்ளபொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேருதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக் கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபி விருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணஞ் செய் வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர் களும் வேண்டப்படுவார்கள். ஆதலினலே, நல்லொ ழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும், இடை யரு முயற்சியும், ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம், வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக் கண விலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையுங் கற் பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்த வர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப்பிரசார கர்களாகவும் நியோகிக்கலாம்.

—நாவலர்

## தர்மார்த்தத் தம்பதிகள்

‘ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு கைந்நீட்டும்
முந்தி மேல்வீழ்ந்து
இருமகவுங் கைந்நீட்டும் மும்மகவுங் கைந்நீட்டும்
என்செய் வாளால்
பொருமியொரு மகவழுங்கண் பிசைந்தழும்மற் றொருமகவு
புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவெங் ஙனஞ்சகிப்பாள்
பெரிதும் பாவம்!’

இந்தப் பாட்டு அபர கம்பராய் விளங்கிய மகா வித்துவான் திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம்பிள்ளை பாடிய எண்ணிறந்த பாடல்களுள்ளே, உயிர்துடிக்கின்ற, சிறந்த சில பாடல்களில் ஒரு பாடல். இது குசேலோபாக்கியா நத்தில் உள்ளது. குசேலோபாக்கியாநம், மீனுட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவரும் பிள்ளையை ஆதரித்த பிரபுக்களுள் ஒருவருமான, வல்லூர்—தேவராஜபிள்ளை பெயரால்

வழங்கினாலும், மீனாட்சிசுந்தரம்பிள்ளை பாடியதே. இந்த உண்மையை டாக்டர் உ. வே. சாமிநாதையர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார். இது நிற்க.

குசேலருக்கு இருபத்தேழு பிள்ளைகள். பிள்ளைகளுக்குள்ளே மூத்தது எது, இளையது எது என்று கண்டுபிடிப்பது, குசேலரின் மனைவியாருக்கும் அரிது. பிள்ளைகளெல்லாம் வரண்டு சுருண்டு வரவரச் சிறுத்து வருகின்றார்கள். ஊண் இல்லை; உடை இல்லை; வறுமையில் வாடுகின்றார்கள் குழந்தைகள்.

'இருநிலத் தியாவர் கண்ணும் ஏற்பதை இகழ்ச்சி யென்ன
ஒருவிய உளத்தான் காட்டில் உதிர்ந்துகொள் வாரு மின்றி
அருகிய நீவா ரப்புற் றுனியம் ஆராய்ந் தாராய்ந்து
உருவஒண் ணகத்தாற் கிள்ளி எடுத்துடன் சேரக் கொண்டு'

'வந்துதன் மனைகைந் நீட்ட வாங்கிமற் றவற்றைக் குற்றி
அந்தமெல் லியல்பா கஞ்செய் ததிதிக்கோர் பாகம் வைத்துத்
தந்ததன் பங்க யின்று தவலரும் உவகை பூத்து
மந்திர மறைகட் கெட்டா மாலடி நினைந்தி ருப்பான்'

நீவாரம் - வனநெல்.

காட்டிலே கொள்வாரின்றி உதிர்ந்து கிடக்கின்ற வனநெல்லை ஒன்று ஒன்றாகப் பொறுக்கிச் சேர்த்துப் பக்குவப்படுத்திக் குற்றி, அன்னமோ அன்னப்பாலோ செய்து, காட்டிற் கிடைக்குங் காய்கள் கிழங்குகள் இலை வகைகளிற் கறி ஆக்கி, அதிதியாகிய விருந்துக்கு ஓர் பாகத்தை முன்னமே எடுத்துவைத்துவிட்டு, மிகுதியாகிய மிச்சிலை உண்டு பசிதணிந்து வாழ்க்கை நடக்கின்றது.

'செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்'

என்ற திருக்குறளைச் சிறிதே மாற்றஞ்செய்து, திருமாலடியை இடையீடின்றிச் சதா சிந்தித்திருப்பதற்கு உபகாரமாகச் சிறிது சிறிது வயிற்றுக்கும் ஈந்து, தியான

உலகில் முழுகித் திளைக்கின்றார் குசேலர். 'ஏற்ப இகழ்ச்சி' என்ற மந்திரம் பீஜத்துடன் வலிகொண்டு விளங்குவதுண்டானால், அது அங்கேதான்; அந்தக் குடும்பத்திலேதான். வற்றிச் செத்துக்கொண்டு கிடக்கின்ற சின்னஞ்சிறிய குழந்தைகள் பரியந்தம் இரப்பதென்பதை அங்கேயுள்ளவர்கள் யாரும் அறியார்கள்.

'பல்லெலாந் தெரியக் காட்டிப்
பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல ஓட்டி
மானம்என் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ
இழிவிழி வெந்த ஞான்றும்.'

குசேலருடைய மனைவியாருக்குப் பெயர் சுசீலை. நல்ல சீலம் உடையவர் என்று பொருள். சீலம்—ஒழுக்கம். இங்கே நல்லொழுக்கமாவது வாழ்க்கைத்துணை நலம். 'வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'. வளம் — அறிவுவளம், செல்வ வளம். சுசீலை, குசேலரின் இருவகை வளங்களையும் பேணித்,

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

என்ற வாக்குக் கிலக்கியமாய் வாழ்க்கை நடத்துகின்றார். குசேலரின் செல்வ வளமாவது, வறுமை வளம். குசேலருடைய 'குறியமனை வயிற்புகுமோர் எறும்பினுக்கும் ஆங்குணவு கொடுத்தற் கில்லை'.

சுசீலை தானே வனத்திற் சென்று வனநெற்களைப் பொறுக்கிச் சேர்த்துப் பதஞ்செய்து, அரிசி ஆக்கி, அதிற் கஞ்சி செய்து, அக்கஞ்சி மருந்தேயாயினும், அதில் ஒரு பாகத்தை, அதிதிகளாகிய விருந்தினரை ஓம்பும்பொருட்டு எடுத்துவைத்துவிட்டு, மிச்சிலாகிய மிகுதியைக் கணவருக்கு நிவேதனஞ் செய்து, அதன்பிறகு, எஞ்சியதைக் குழந்தைகளுக்குப் பங்குசெய்வார். சுசீலையாகிய அந்த அன்னைக்கு

வனநெற் சேகரிப்பதும் பதஞ்செய்வதும் பெரிய காரியம் அல்ல. ஆக்கிய கஞ்சியைப் பங்கு செய்வதுதான் அரிய காரியம். 'ஒருமகவுக் களித்திடும்போது ஒரு மகவு கைநீட்டும்... ...எங்ஙனம் சகிப்பாள் பெரிதும் பாவம்.'

ஆகச் சிறிய குழந்தைக்கு, பசியில் அயருங் குழந்தைக்கு, முதல் ஊட்டலாமென்றால், பெரிய குழந்தைகள் சும்மா விடுமா? 'இருமகவுங் கைநீட்டும் மும்மகவும் கைநீட்டும் என்செய்வாளால்!'

ஒருவாறு குழந்தைகளுக்கு உணவூட்டிக் குழந்தைகள் பூரிக்கத் தானும் பூரிக்கின்ற அந்த அன்னை — கணவன் தவத்துக்கு உளந் தளிர்க்கின்ற அந்த அன்னை — ஒரு வாரத்தில் ஒரு நாளாயினும் சிறிது அன்னப்பால் அருந்துவதுண்டா? அருந்துவதற்கு அன்னப்பால் எஞ்சுவதுண்டா? ஆர் அறிவார்? சுசீலையாகிய அந்த உத்தமியின் உடலில் எப்படி உயிர் தரிக்கின்றதோ! அந்த உத்தமியின் நிலை இருக்கட்டும்.

'கண்புகா இவ்வறுமை கண்டு மறையவனும்
உளம்கவற்சி யில்லை'

'கண்புகா இவ்வறுமை', கண்களால் ஒருதரம் எட்டிப் பார்க்கமுடியாத, மனசினால் சற்றே நினைக்கவும் முடியாத வறுமை அந்தக் குழந்தைகளும் அன்னையும் அநுபவிக்கும் வறுமை. சொற்களாற் சொல்லமுடியாத வறுமை அந்த வறுமை. அப்படிப்பட்ட வறுமையைக் கண்ணீர் வடித்துக் கொண்டே கவிஞர் பெருமானாகிய மீனாட்சிசுந்தரம்பிள்ளை கற்பனை செய்கின்றார்.

'அந்தோவென் வயிற்றெழுந்த பசியடங்கிற் றில்லையென
அழுமா மோர்சேய்
சிந்தாத கஞ்சிவாக் கிலையெனக்கன் னையெனப்பொய்
செப்பு மோர்சேய்
முந்தார்வத் தொருசேய் மிசையப்புகும் போதிலோர்சேய்
முடுகி யீர்ப்ப
நந்தாமற் றச்சேயும் எதிரீர்ப்பச் சிந்துதற்கு
நயக்கு மோர்சேய்.'

'அடுத்தமனைச் சிறுன்ஒருவன் இன்றுநும தகங்கறியென்
னட்டா ரென்று
தொடுத்துவினு யினனுலச் சொற்பொருள்யா ததுதானெச்
சுவைத்தன் ணுய்நீ
எடுத்துரையென் றிடுமழவுக் குரைக்கிலது செய்யெனில்என்
செய்வா மென்று
மடுத்தவ.:. தறிந்திலேன் எனமற்றெருன் றுரைத்ததனை
மறக்கச் செய்வாள்.'

'வேறுமனைச் சிறுன்அயின்ற பட்சணங்கண் டோடிவந்து
விழிநீர் வாரச்
சீறுதலி லாதவனை முகம்பார்த்தின் ஞனின்ன
தின்றுன் என்வாய்
ஊறுதலால் இப்பொழுதே செய்தளித்தி எனஉடுத்த
உடைதொட் டீர்க்குந்
தேறுதலில் சிறுமகவை எடுத்துமார் பிடையணைத்துச்
சிந்தை நோவாள்.'

*கண்ணீர் பொழிகின்ற இந்த வறுமையை நேரே கண்டும், 'மறையவனும் உளங் கவற்சி இல்லை.'*

'கல்லினுட் சிறுதே ரைக்கும் கருப்பையண் டத்து யிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும் புனத்துழாய்க் கண்ணி யண்ணல்'

*என்பதில் எட்டுணையுஞ் சந்தேகமின்றி, அத்திண்மையினுலே சற்றும் மனச்சலனம் அடையாது, கண்ணன் திருவடிகளில் மனசை இருத்தித் தவம்புரிகின்ருர் குசேலர்.*

'எண்புகாப் புகழ்அவன்றன் செயல்கண்டும்
மனைவிவிருப் பிகத்தல் இல்லை.'

*குடும்ப விஷயத்தில் குசேலர் சற்றேனும் பங்கு எடுத்துக்கொள்ளாதபோதும், வளத்தக்காளாகிய, மனைத் தக்க மாண்புடைய அந்தச் சுசீலை, அந்தத் தபோநிதியின் மீது எட்டுணையேனும் விருப்புக் குறைவதில்லை.*

*சுசீலை தமது தர்மத்தில் தவருதுநின்ருர்: அர்த்தந் தெரிந்த குசேலர் தமது தர்மத்தில் அசைவின்றி நின்ருர்.*

உ

# மக்கட் பண்பு என்னும் தமிழ்ப் பண்பு

‘இகலென்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.’ —வள்ளுவர்.

இகல்: உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும் பற்றியிருப்பதொரு பொல்லாத நோய் ‘‘இகல்’’.

இகல் என்பதன் பொருள் முரண்பாடு. இரண்டாம் ஆளுடன் ஒத்துப்போகாமை. தன் கொள்கையைச் சாதித்துக்கொண்டிருப்பது.

ஒரு இனம் மற்றொரு இனத்தோடு முரண்படும். எல்லாம் ஒரே இனமானால் ஒரு குடும்பம் மற்றொரு குடும்பத்தோடு முரண்படும். தனிக் குடும்பமானால் குடும்பத்துள் முரண்தோன்றும். நோயின் குணம் அது.

பகல்: முரண்பாடாகிய இகலுக்கு மற்றொரு பெயர் பகல். பகு + அல் = பகல். அஃதாவது பிரிந்து வாழுதல்;

ஒரு நாள் பிரியன் பிரியையாய் இருந்தவர்கள், இந்த நோய் தோன்றியதும் தனிச் சமையல் தொடங்குவார்கள்.

**பண்பின்மை:** இகல் என்றும் பகல் என்றுஞ் சொல்லப் படும் நோய்க்கு மூல வித்துப் பண்பின்மை. பண்பில்லாதவிடத்தில் இந்த நோய் திடீரென்று தோன்றும். தோன்றியதும், வற்றி உலர்ந்த காட்டில் நெருப்புப் பற்றியதுபோல் எங்கும் பரவி நாட்டைச் சாம்பர் செய்துவிடும்.

'அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.' — வள்ளுவர்.

**பண்பு:** பண்பே 'இகல்' 'பகல்'களைத் தேய்க்க வல்லது. மனிதனுக்கு இன்றியமையாதது. உயிர்போற் பேணப் படுவது. அதனாலேதான் அது மக்கட் பண்பு எனப் படுகிறது.

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என்பது வள்ளுவரின் மற்றொரு வாய்மொழி. வானம் (மழை) எவ்வாறு உலகுக்கு இன்றியமையாததோ, அவ்வாறே பண்புடையார் உலகுக்கு இன்றியமையாதவர். பண்புடையார் உயிர்வாழ்வதினாலேயேதான் இந்த உலகம் நிலைத்து வழங்கிவருகின்றது, இல்லையேல் விஞ்ஞான வேகங்கள் உலகத்தைப் பொடிசெய் திருக்கும்.

**பண்பினியல்பு:** இத்துணைச் சிறந்த பண்புதான் யாதோ? அதன் இயல்பென்ன?

'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்' என்கிறது கற்றறிந்தோர் ஏத்துங் கலித்தொகை. இங்கே பாடு என்ற சொல் விசாரஞ் செய்யற்பாலது.

பாடு—உலகப்பாடு. அஃதாவது உயர்ந்தோர் சென்ற அடிப்பாடு. உலகம்—உயர்ந்தோர். 'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்பது தொல் காப்பியம்.

உயர்ந்தோர் சென்ற காலடியை இறுகப் பற்றிக் கொண்டு அவர் சென்ற வழியிற் செல்வதே பாடறிந் தொழுகல்.

**பண்புடையோர்:** பண்புடையார், சாதாரண உலகியலையும் அறிந்து, யாவருக்கும் நன்மை பயக்கத்தக்க வகையில் தாம் மேற்கொண்ட வழியிற் செல்வர். இக்கருத்துப் பற்றியே பரிமேலழகர், ''பண்புடைமையாவது, பெருமை சான்றாண்மைகளிற் றாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்தொழுகல்'' என்றுரைத்தார்.

உலகம் உய்தற்கு ஒரேயொரு வழி பண்புடையார்ப் பேணுதலேயாகும். அறிஞர்கள் பண்புடைய பெரி யோரைச் சுட்டிக்காட்டி அப்பெரியோர் சென்ற நெறியைப் பற்றும்படி அடிக்கடி இடித்துரைப்பதன் இரகசியம் பண்புடையார்ப் பேணவேண்டு மென்ப தேயாம்.

**தமிழ்ப் பண்பு:** மக்களுக்கின்றியமையாததாகிய பண்பைத் 'தமிழ்ப் பண்பு' என்பதில் ஆழ்ந்த கருத்துண்டு.

'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு'

என்ற திருக்குறளில், பண்பின் சிறந்த அம்சம் அன்பு என்று கூறப்பட்டது.

அன்பே தமிழ்.

அன்பினைந்திணைக் களவியல் எனப்படும் இறையனு ரகப்பொரு ளிலக்கண உரை, அன்பினைந்திணைக்

களவியல் என்னுதலிற்றோ எனின், 'தமிழ்' நுதலிற்று என்றது, இவ்வாறுரைத்தவர் நக்கீரர்.

அறிவைச் சொல்வது ஆரியம்! அறிவின் விளைவும் பயனுமான அன்பினமைதியைச் சொல்லுவது தமிழ் என்பர் பெரியோர். வள்ளுவர் வேதந் தமிழ் செய்தவர், சங்கப்புலவர்கள் அன்பை ஆராய்ந்தவர்கள். அன்பின் வெளிப்பாடு தமிழ்.

ஆகவே, மக்கட் பண்பு தமிழ்ப் பண்புமாம். அன்பை உயிர்க்கும் பண்புடையாளர்கள் எங்கே பிறக்கினும் அவர்களே தமிழர்கள்.

கலை, கலாசாரங்கள் சென்று முற்றுமிடமே தமிழ்ப் பண்பு.

---

நம்முடைய சைவசமயிகள் சைவ நூல்களைக் கல்லாமையினாலும், எங்கேயாயினும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும், நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகிறது.

— நாவலர்.

உ

# திருமுறையும் நமது நிலையும்

**1. சுருக்கம் :**

உலகத்திலே மனிதர்களுக்குள்ளே சிறந்தவர்கள் பிற உயிர்களுக்கு இரங்குகிறவர்கள். அவர்கள் பிற உயிர்களின் நன்மையை விரும்புகிறார்கள்; செய்கிறார்கள். அவர்களைத் தெய்வப் பிறவிகள் என்று வணங்குகின்றோம்; வாழ்த்துகின்றோம்.

**2. மனிதனுக்கு நல்லது தெரியுமா?**

மகாபாரத முனையில் பகைவர்களைக் கொன்று குவிப்பது நல்லது அன்று என்று அருச்சுனன் கருதுகிறான். கண்ணன் அதனை மறுத்து அது உனக்கு நல்லது 'கொன்று குவி' என்று உபதேசிக்கின்றான். "கொலையிற் கொடியாரை வேந் தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்" என்கின்றான்.

ஸ்ரீராமன் தாடகையைக் கொல்லக் கூசினான்; அங்ஙனங் கூசியது அதர்மம் என்று விசுவாமித்திரர் காட்டினார்;

3. நல்லது தர்மம் ஆகாதா?

நம் மனத்திற் பட்டதை நல்லது என்கின்றோம்.

அது மற்றொன்றாயும் முடியலாம். நம் மனத்திற் பட்டது தர்மமா என்று ஆராய்ந்து தெளியவேண்டும். மனத்திற்பட்ட நல்லது வேறு; தர்மம் வேறு. அருச்சுனன், இராமன் நல்லவை என்று கருதியவைகள். தர்மந் தெரிந்தவர்களால் மறுக்கப்பட்டன.

4. தர்மம் என்றாலென்ன?

தர்மமாவது சிருட்டிகர்த்தாவின் நோக்கம் அறிந்து செய்வது.

5. சிருட்டி:

மனித உடம்பு ஒரு சிறு பூமி; உயர்ந்த சிறந்த பூமி. கருத்துச் சொற்பிரபஞ்சங்களின் கூட்டரவு இந்த உடம்பு. எண்ணங்கள் உதிக்கின்றன; அவை ஓசை வடிவில் வெளி வருகின்றன. ஓசை கருத்தைப் பற்றியிருக்கின்றது. கருத்துக் குணி; ஓசை குணம். ஓசை எழுத்தாய்ச், சொல்லாய் விருத்தியடைகின்றது. இந்த இரு பிரபஞ்சங்களாலாகிய உடம்பால் ஆத்மாக்களுக்கு அறிவு பிரகாசிக்கின்றது. ஆத்மா அறியாமையோடு கூடியது. தானே உடம்பைக் கூடமாட்டாது. உடம்பு சடம். அதுவும் ஆத்மாவைக் கூடாது. இரண்டையும் கூட்டி வைப்பதே சிருட்டி. இரண்டையும் கூட்டிவைக்கும் வல்லபம் நம் அறிவைக் கடந்தது; கடவுள். 'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு'. இதனைக் கூட்டிவைத்த கடவுளின் கருத்தறிந்து நடப்பதே தர்மம். ''அரன்றன் பாதம் மறந்து செய்யறங்கள் எல்லாம் வீண் செயல்''. ''எனக்கென்ன தெரியும். என்னிலும் இனியான் ஒருவன் உளன்'' என்கிறார் நாவுக்கரசர். அந்த இனியான் கருத்தே இனியது. அதுவே செயத்தக்கது; தர்மம்.

6. தர்மத்தை அறிவதெப்படி?

வர்ணாச்சிரம தர்மம் குரவர்களால் உபதேசிக்கப்பட்டது. வேதாங்கங்களில் சோதிடம் ஒன்று. அதனால் ஊழ் நிச்சயிக்கப்படும். ஊழையும் மன எழுச்சிகளையும் அறிந்த ஞானவான்களான குரவர்கள் செய்யத்தக்கதைச் சிந்திக்கின்றார்கள். அவர்கள் சிந்தனை தர்மம்; ஸ்மிருதி. மிருதி பிரத்தியக்ஷ அநுமான சத்தப் பிரமாணங்களுக்கு மேலானது. சுருதி மிருதிக்கும் மேலானது. அது கேட்பது. உண்மை இருந்தபடி ஓசை வடிவிற் கேட்பது.

7. ஞானவான்களாகிய குரவர்களைப் பெறலாமா?

நன்கு பெறலாம். பெறுதற்கு விருப்பம் இன்றியமையாதது. 'விரும்பு' என்கின்றாள் அன்னை. 'புலம் புரிந்துறையுஞ் செலவுநீ நயந்தனையாயின்' என்கின்றது திருமுருகு. விருப்பம் அதிகரித்தால் தவம் கைகூடும். தவத்தால் ''வேண்டிய வேண்டியாங் கெய்தும்'' தவத்தால் ''தம்முதல் குருவாய்'' உணர்த்தும் என்கின்றது சிவஞானபோதம். ''குருவாய் வருவாய் குகனே'' என்கின்றார் அருணகிரிப் பெருவாழ்வு. நமக்கு இந்த உடம்பைக் கூட்டி வைத்த முதல்வனே குருவாய் வருவான். தருமத்தை அறிய விரும்பினால் அவனால் உணர்த்தப்படும்.

8. நமது விருப்பம் என்ன?

நாம் நல்லது என்று பற்றிக்கொண்ட பற்றுக்களைத் தர்மமாக்க—கடவுள் சம்மதமாக்க — விரும்புகின்றோமா? தர்மம் இருந்தபடி என்ன? என்பதை அறிய முயலுகின்றோமா?

9. தர்மத்துக்குத் தவணையில்லை:

ஞானத்துக்குத் தவணையிடலாம்; கிட்டாதாயின் வெட்டென மறக்கலாம். கடவுள், ஆத்மா, ஞானம், நித்தியம் என்றாயினும் பெறலாம். தர்மம் இழந்தாற் பெறமுடியாது 'அன்றறிவாம்' என்னாது செயற்பாலது. தர்மந் தவறின் ஞானம் தவறும்.

10. தர்ம விசேஷம் :

தர்மம் வைதிகத் தொடக்கம் ; சமயப் பிரவேசம்: அறத்துக்கு மூலம்.

11. அறம் :

தர்மத்தில் தொடங்கி மோக்ஷத்தில் முடிவது. அர்த்த காமங்கள் இடையில் உள்ளவை. சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகல் மோக்ஷம். அர்ச்சுனனுக்குப் பொய்ச்சார்பு எது? மெய்ச்சார்பு எது? என்று கண்ணனாற் போதிக்கப் பட்டது.

12. அறத்துக்குப் பயன் :

அந்தக்கரணசுத்தி ; மனந் தூயனாதல். அறம் நான்கு வகையாக வள்ளுவரில் ஆராயப்பட்டது. ஒருவகை ஊழ். ஊழ் இருந்தபடியை அறிவது, அறமூலமாகிய தர்மம் அறிதற்குபகாரம். தர்மத்தை அறிந்து பற்றுக்களைப் பெறுகிறமுறையிற் பெறுவது இல்லறம். விடவேண்டிய வைகளை விடுகிற முறையில் விடுவது துறவறம். இரண்டும் ஒருங்கு நிகழ்வன. இரண்டுஞ் சேர்ந்தே அறம். பெறுகிற முறையிற் பெற்றுவிடுகிற முறையில் விட மனம் சாந்தி யாகும். தூய்மை உறும்.

13. மனத் தூய்மைக்குப் பயன் :

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும்"

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்"

"அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது"

மனச் சலனமற்றவனுக்கு அறிவு களங்கமின்றிப் பிர காசிக்கும். இருவகைப் பிரபஞ்ச இரகசியமுந் தெரியும். பொருள் தெரிந்தவன் ஆகின்றான். அறத்தின்வழி நின்று மனந்தூயனாய்ப் பொருள்தெரிந்தவன் பரிபூரண வைதிகன். அறிவன் ; ஆரியன்.

**14. ஆரியன் தமிழன் :**

ஒருவன் அறத்தின் வழி நின்று, அறிய வேண்டியவைகள் அனைத்தும் அறிந்து ஆரியனாதல் மாத்திரம் அமையாது. அறிந்த அறிவில் ஒட்டிக்கொள்ள வேண்டும். அந்த அறிவில் காதலாகிக் கசிய வேண்டும். கற்றல் வேறு; கற்றவழி நிற்றல் வேறு. கற்றவழி நிற்கச் செய்வது கசிவு. அதற்கு — அன்பு என்று பெயர். அறிவர்களாகிய ஆரியர்கள் — சான்றோர்கள். தாம் கண்ட அறிவைப் பயன்செய்தற்கு அன்பைச் சாதிக்கின்றார்கள். அன்புச் சாதகத்துக்குத் தமிழ் என்று பெயர். அன்பை ஏழுதிணைசெய்து அறிவுலக மாகிய பொருளையும் அதன் ஆதாரமாகிய அறத்தையும் அன்பின் தளமாக்கிச் சாதகஞ் செய்தே தமிழ். அறிவன் ஆன ஆரியன்; அன்பன் ஆதற்குத் தமிழன் ஆகின்றான்.

உயிர்களை வழிப்படுத்துங் கடவுள் 'ஆரியன் கண்டாய்'; 'தமிழன் கண்டாய்.'

தமிழ் அன்பு; அது ஆரியமாகிய அறிவின் கசிவு.

**15. 'அன்பு ஈன் குழவி' அருள் :**

அன்பு செய்தற்குரியது அருள் ஒன்றுமே, அன்பின் முதிர்ச்சி அருள். அன்பு முதிர்ந்த வழி. "அன்பு செய்தான் அருண்மய மாவன்", "ஆகமமாகி நின்று அண்ணிப்பான்" அந்த நிலை பரிபூரண கற்புநிலை. அவன் அவள் ஆகும் நிலை. சொல்திறம்பாத நிலை.

**16. ஒரு உதாரணம் :**

ஒரு நாள் சீகாழியிலே மூன்று வயசுள்ள ஒரு அழகிய ஆண் பிள்ளை பரிபூரண கற்புள்ள பெண்பிள்ளையானது. தன்வசம் இழந்தது. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கியது.

'ஏர் பரந்த இனவெள்வளை சோர' உள்ளம் பறிபோய் நின்றது. அந்தப்பிள்ளைதான் சம்பந்தப்பிள்ளை; கற்புப் பிள்ளை. 'மறுவில் கற்பின் வாணுதல்: அந்தப் பிள்ளையின் வாக்கு அருள்வாக்கு, அந்த வாக்கிலிருந்துதான் திருமுறை

யாகிய தேவகங்கை ஊற்றெடுக்கின்றது. திருமுறையின் பரிசுத்த உற்பத்தி ஸ்தானம் திருஞானசம்பந்தப்பிள்ளையின் திருவாக்கு.

### 17. திருமுறை எங்கே?

திருமுறை அருள் வாக்கு. அருள் அன்பின் முதிர்ச்சி, அன்பு அறிவின் விளைவு. அறிவு அறத்தின் பயன், அறத்துக்கு மூலம் தர்மம். அறத்தின் தொடக்கமாகிய தர்மம் என்ற புள்ளியையும் அறத்தின் முடிவான மோட்சமென்ற புள்ளியையும் இணைத்து ஒரு அற ரேகையை நீட்டினால் அந்த அற ரேகை அறத்துக்கு அப்பாலான அறிவுலகையும், அதன் விளைவான அன்புலகையும் ஊடுருவி, அருள் உலகைச் சென்று தொடும். அந்த அருள் உலகே திருமுறை உலகு. தருமத்திற் காலூன்றி ஸ்திரப் பட்டவர்கள் திருமுறையைச் சென்று சேருவார்கள்.

### 18. நாம் எங்கே?

நம்மவர்களிலே 'நல்லது செய்ய வேண்டும்; பிறர்க்குரியாளராய் வாழவேண்டும்' என்று எண்ணுகின்ற பரோபகாரிகள் 'நல்லார்வம்' என்ற புள்ளியில் வாழுகின்றார்கள். அந்த நல்லார்வ உலகம் தர்மத்துக்குக்கீழே வெகு தொலைவில் உள்ளது.

திருவருள் என்கின்ற உச்சியிலிருந்து தர்மம் என்கின்ற புள்ளி பரியந்தம் நீண்டு கிடக்கும் ரேகையைத் தர்மத்துக்குக் கீழே நீட்டினால் அது நல்லார்வ உலகத்தைத் தொடுமோ வென்பது பெரிய சந்தேகம். தொடாதபோது அந்த நல்லார்வ உலகம் அவைதிகமே. அவைதிகம் அறம் புறம். அவைதிகத்துக்கும், திருவருளாகிய வைதிக சைவத் திருமுறைக்கும் சம்பந்தமேயில்லை. நமக்குஞ் சம்பந்தருக்கும் என்ன சம்பந்தம் என்றுகூடச் சொல்லலாம்.

### 19. நமக்கு வேண்டுவது சேது பந்தனம்:

நல்லார்வ உலகத்துக்கும் தர்மத்துக்குமிடையே பெரிய கடல் கிடக்கின்றது, தர்மம் அந்தக் கரையில் இருக்கிறது.

நாம் சேதுபந்தனஞ் செய்து தர்மத்தைத் தொடவேண்டும். அதுவே முதலிற் செய்யற்பாலது. அந்தச் சேதுபந்தனம் நமது மன எழுச்சிகளாகிய கலிப்புக்களைத் தர்மத்தில் தீண்டச் செய்யுங் கலைப்பாலம் ஆதல் வேண்டும்.

தர்மத்தைத் தீண்டாத கலைப் பாலங்கள், கலா பேதத்த கடு விஷங்கள்; பயங்கரமானவைகள்; பகட்டானவைகள். 'அம்ம நாம் அஞ்சுமாறே.'

20. நாம் :

கரடியைக் கம்பளி மூட்டையெனக் கட்டியணைத்த செட்டியார் போல மனிதன் நல்லார்வங்களாகிய பற்றுக்களைத் தர்மம் என்று கட்டியணைத்துப் பின் கைவிட முடியாமல் தவிக்கின்றான். அவன் தன் கலிப்புக்களை நற்கலை செய்து, தர்மத்தைத் தீண்டுநாள் எந்நாளோ! தர்மத்திலிருந்து இராஜ பாதை திருவருளாகிய திருமுறை பரியந்தம் அமைந்து கிடக்கின்றது. தர்மத்தைத் தீண்ட முயற்சிப்பதே நமக்கு முறை; திருமுறை.

21. சுருக்கத்தின் சுருக்கம் :

அறம் பொருள்களை அடக்கியது அறிவு உலகம். அதனைப் பயன்படுத்துவது அன்புலகம். அதன் கனிவாய் உயர்ந்தது அருள் உலகம். அதுவே திருமுறை உலகம். மூன்றுலகமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ளவை. இவற்றோடு தொடர்பின்றித் தூரத்தே புறம்பாகக் கிடக்கின்றது நல்லார்வ உலகம். அதில் நல்லது செய்பவர்கள் வசித்தாலும் அது அறத்தின் தொடக்கமான தர்மத்தைத் தொடாதபோது அவைதிக உலகமே. அதன் கீழேயும் உலகங்கள் உண்டு.

நாம் வைதிக உலகத்தின் தொடக்கமான தர்மத்தைத் தொட முயற்சிக்கவேண்டும்.

---

உ

# திருமுறைக்கு முன்

1. சுருக்கம் :

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே.' உலகமாகிய உயர்ந்தோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சாதாரண உலகம் நடந்தது. இந்த நடைமுறை புண்ணிய யுகங்களின் வழங்கலாறு. வர்ணாசிரம தர்மங்கள் — விதிவிலக்குக்கள் — சட்டங்களாக வகுக்காமலே, ஆச்சிரமங்களில் குரு பரம் பரையில் நடந்துவந்தன. புண்ணிய யுகங்கள் இந்த நடை முறைக்கு வாய்ப்பானவை.

2. 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப' — தொல்காப்பியம்

ஐயர் — வேத இருடிகள். பாவந் தலைகாட்டுகிற யுகங் களிலே சற்சனர்களாயுள்ளவர்கள் நல்ல வழியில் நிலைக்கும் பொருட்டு வேதம் தெரிந்த மேலோர்கள் விதி விலக்குக ளான சட்டங்களை வகுப்பார் ஆயினர்கள்.

3. ஒரு உதாரணம்:

புராணங்களிலே சுவாமி திருக்கல்யாணம் வருகின்றது. திருக்கல்யாணங்கள் சிருட்டியாரம்பங்கள். 'தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்—பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ—பெண்பா லுகந்திலனேல்' இந்த உலகமே இல்லை. இந்தச் சரீரம் நமக்குக் கிடையாது. 'நீலமேனி வாலிழை பாகத்து—ஒருவன் இருதாள் நிழற் கீழே'தான் உலகம் தோன்றி நின்று ஒடுங்குகிறது. இந்தப் பரம இரகசியந்தான் திருக்கல்யாணம். இந்தக் கலியாண அறிவுதான் மெய்யறிவு என்கிறது, பிரம சூத்திரம். 'எங்கிருந்து இதன் தோற்றம் முதலியன' என்பது பிரம சூத்திரத்தில் இரண்டாஞ் சூத்திரம். 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பது பிரம சூத்திரக் கேள்விக்கு விடை. இந்த வேத வினவிடைகளை ஆராய்வதே வேத இருடிகளின் தவம். ஒருமுறை சிருட்டி ஆரம்பமான ஒரு திருக்கல்யாணத்தைக் கண்டு களிக்கும்படி, வேத இருடிகள் இமாசலத்திற் கூடியிருந்தார்கள்.

4. 'நடுவுநில்லா திவ்வுலகஞ் சரிந்து கெடுகின்றது
எம்பெருமான் என்ன'

— திருமந்திரம்

நடுவு நிலைமையில் நின்று வேத இருடிகள் கல்யாணந் தரிசித்தார்கள். அந்த இருடிகளைச் சாதாரண உலகம் பின்பற்றி உலக இரகசியத்தை அறியவில்லை. 'உலகத் தோடு ஒட்ட' ஒழுகவில்லை. உலகு நடுவு தவறிச் சரிந்தது. பொய்யும் வழுவும் தோன்றியது. 'நோற்றுத் தவஞ் செய்யார் நூலறியாதவர்—சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே' (திருமந்திரம்) ஆனது உலகம். 'புலம் புரிந்துறையும் செலவை' நயந்திலது சாதாரண உலகம். மனிதர் அறிவில் அன்பு இலர் ஆயினர். இது இறைவனுக்கு முறையிடப்பட்டது.

5. ''நடுவுள அங்கி அகத்திய! நீ போய்
முடுகிய வையத்து முன்னிரு என்றனே' —திருமந்திரம்

முத்திச் செல்வத்தை உடைய அகத்தியனே 'உலகம் அறிவில் அன்பு செய்ய, நடுவுநிலை கொள்ளும் பொருட்டு உதவுவாயாக' என்று உத்தரவு பிறந்தது.

6. 'வடபால்' முனி தென்பால் முனியானது:

'அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயஞ்செய் மேல்பால் அவனொடு
மங்கி உதயஞ்செய் வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள இலங்கொளி தானே'

— திருமந்திரம்

வடபால் முனியாய் அறிவு ஆராய்ச்சி செய்து ஆரியராய் ஒளிதந்த ஆரிய அகத்தியர், ஆராய்ந்து தெளிந்த அறிவில் அன்புப் பயிற்சி செய்யும் பொருட்டுத் தென்பால் முனியாய்த், தமிழ் அகத்தியர் ஆனார். ஆரியரான அறிவர்களே அன்பர்கள் ஆதற்குரியர். ஆரியம் அறிவு; தமிழ் அன்பு. ஆரிய ஓசை ஐம்பத்தொன்று. அதன் சுருக்கம் தமிழ். அதற்கு ஓசை முப்பது. ஆரியம் துவைதம்; தமிழ் அத்வைதம். ஆரியத்துக்கு இரண்டு கண்; தமிழுக்கு ஒரு கண். ''காகத் திருகண்ணுக்கு ஒன்றே மணி.''

7. அறிவுக்கு இமயமுங் கங்கையும். அன்புக்குப் பொதியமும் வையையும்:

அகத்தியர் அறிவில் அன்புப் பயிற்சியை வளர்க்கும் பொருட்டுத் தெற்கு நோக்கிப் பொதியத்துக்கு வந்தார். ஸ்ரீராமனும் தந்தை சொல்லாகிய மந்திரத்தில் அன்பு செய்து அதனை வளர்க்கப்போலும் தெற்கு நோக்கி வந்தான். அன்பின் ஐந்திணையில் பிரிவு ஒரு திணை. பிரிவுத் திணையில், பிரிந்துகொண்டே பிரியாமலிருப்பது அன்பின் சிகரம். அதைப் பயிலுதற்குச் சீதாபிராட்டி, இன்னுந் தெற்கே நமது ஈழநாட்டிற்கே வந்தாள். இராவணன்

காலத்திலே நமது ஈழநாடு தமிழ் வளங் குமுறிக்கொண்டிருந்தது போலும். தமிழுக்கே தென்மொழி யென்று பெயர். அறிவுக்கு வடக்கு ; அன்புக்குத் தெற்கு. இட விசேஷம்.

**8. அகத்தியர் ஆகிய 'ஐயர் யாத்த கரணம்' தமிழ்ச் சங்கம்:**

சங்கம் என ஒன்று தாபிக்க நேரிட்டதே பொய்யும் வழுவுந் தலைகாட்டத் தொடங்கியதைக் காட்டுகின்றது. மூன்று சங்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தாபிக்கப்பட்டன. மூன்று சங்கங்களிலும் அறிவின் விளைவான அன்பு ஏழு திணைசெய்து பலவேறு முகமாக ஆராயப்பட்டது. இடையில் உள்ள ஐந்து திணையும் கடைச்சங்கத்திற் சிறப்பாகவும் ஆராயப்பட்டன. அவ்வாராய்ச்சி அன்பினைந் திணைக் களவியல்.

**9. தமிழ்ச் சங்க வரலாறு உலக்கை தேய்ந்த வரலாறு:**

தமிழ்ச்சங்கம் வரவரத் தேய்பிறையாய், தலை—இடை—கடையாய் ஒடுங்கியது. புலவர்களின் எண்ணிக்கை—நூல்களின் தொகை—சங்கத்தின் ஆயுள் வரவரக் குறைந்து கொண்டே வந்தன. கடைச்சங்கத்துக்குப் பிறகு, உலகம் பொய்யும் வழுவுமே மலிந்து இருளடையப் போகின்றது என்பதற்குச் சங்கத்தின் தேய்வும் ஒழுக்கமும் அறிகுறி.

**10. கடைச்சங்க இறுதியில் ஒரு சம்பவம்:**

மழையின்றிப் பஞ்ச மிகுதியினால் சங்கங் குலைந்தது; பின் ஒருசமயம் பாண்டியனொருவன் சங்கத்தைக் கூட்ட முயன்றான். புலவர்களைத் தேடி ஆட்போக்கினான். போனவர்கள் 'பொருளதிகாரம் வல்லாரைத் தலைப்பட்டிலேம்' என்றார்கள்.

இந்தச் சம்பவம் பொருள் உலகுக்கும் சொல் உலகுக்கும் தொடர்பு அறுந்ததைக் காட்டுகின்றது. பொருட் பிரபஞ்சத்தின் இரகசியத்தைத் தெரிவிப்பது சொற்பிர பஞ்சம். இருவகைப் பிரபஞ்சமும் தொடர்பறுமானால்,

சிருட்டியின் நோக்கமே தெரியாது. சிருட்டியின் நோக்கத்தை அறிவதுதானே தர்மம். பயனில் சொற் பல்கு மானல் தர்மந் தலைகீழ் ஆகும்.

**11. சமண பௌத்த சங்கங்கள்:**

தர்மம் தலைகீழான ஒரு காலத்திலே தமிழ் நாடெங்கும் சமண பௌத்த சங்கங்கள் தலையெடுத்தன. தமிழ் அவர்கள் கைப்பட்டது.

**12. அவர்களோ:**

'வெஞ்சொல் தம்சொல் ஆக்கி
நின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமிலாச் சாக்கியரும் தத்துவம்ஒன் றறியார்'
— சம்பந்தர் திருவாக்கு.

சாக்கியர் — புத்தர். 'சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண் குண்டர்' என்பதும் சம்பந்தர் திருவாக்கு.

தத்துவமானது சிருட்டியின் இரகசியமாகிய தர்மத்தை அறிதல். சாக்கியர் சமணர்களுக்குக் கடவுளே இல்லை. சமணர்களுக்கு ஒரு அளவில் கடவுள் உண்டு. ஆயினும் அந்தக் கடவுளுக்குச் சிருட்டிக்கிற வேலையில்லை. அப்படி யானபோது சிருட்டியின் நோக்கமான தர்மத்துக்கும் அவர்களுக்கும் எவ்வளவு தூரம்?

'துளங்கு நெறியார் அவர் தொன்மை
வளங் கொள்ளன்மின்'

என்பது சம்பந்தர் கட்டளை. தொன்மை என்றதும் நாம் எடுபட்டு விடுவோம். அவர்கள் தொன்மை தர்ம தளத்தை விலகியது. அதனுலேதான் போலும்,

'தொன்மையவாம் எவையும் நன்ருகா'

என்ருர் உமாபதிசிவாசாரியர். தொன்மை மறுக்கலாகாத தாயினும் தர்ம விரோதமான தொன்மை விலக்கற்பாலதே.

13. தத்துவத் தெரியாமையின் விளைவு:

அன்பினைந்திணை வெறுங்காம சிருங்காரம் ஆயினது. அறம் பொருள் இன்பம் வீடு என்ற வைப்புக்கிரமத்தில் இடையன இரண்டும் நிந்திக்கப்பட்டன. தர்மந்தெரியாத கருணை அறம் எனப்பட்டது.

14. அவர்கள் துறவு சிரிப்பானது:

'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல், அதனின் அதனின் இலன்' என்கின்ற வள்ளுவர் கண்ட துறவுக்கும் பெண்களைக் கைவிட்டு ஓடுகின்ற — நிந்திக்கின்ற துற வுக்கும் வெகுதூரம்.

15. சமணம் சாக்கியம் வேதப்புறம்:

பஞ்சகாவியம் தமிழ்ப்புறம்

தமிழ் அன்பு. அது அறிவின் விளைவாய், அருள் கனி தற்கு உபகாரமானது. அறிவு தர்மத்தின் முதிர்வான அறத்தாற் சித்திப்பது. சமணசாக்கியத்தானம் நல்லார்வம். அதற்கும் தர்மத்துக்கும் வெகுதூரம். ''புத்தரொ டமணர்கள் அறவுரை புறவுரை' சம்பந்தர் வாக்கு.

16. நாலடி ஈரடிக்குச் சமமாகாது; அறப்புறமுமுள்ளது:

பதினெண்கீழ்க் கணக்குச் சமணர் சூழ்ச்சி. அப்படி ஒரு தொகுப்புச் சங்கத்தில் இல்லை.

17. பத்துப் பாட்டுத் தொகுப்பும் சங்க வரலாற்றில் இல்லை:

திருமுருகாற்றுப்படை அருள்வாக்கு, அதற்கு அரங்கேற்றமில்லை. அது திருமுறை, வள்ளுவர் நாயனார். அவர் வாக்கைச் சங்கம் துதித்தது, ஆராயவில்லை. நாயனார் வாக்கை ஆராய்வது மரபாகாது.

18. சமண செல்வாக்கு:

இன்றைய பௌத்த செல்வாக்கினும் மிக மிக அதிகம், நின்றசீர்நெடுமாறர் சமணர் ஆயினர். நாவுக்கரசர்,

தருமசேனர்; சமணகுரு. அநபாய சோழருக்குச் சிந்தாமணிப் பித்து. இந்த நிலை சமணத்தின் எல்லை கடந்த செல்வாக்கைக் காட்டுகின்றது.

19. ஒரு தீண்டாத செழுந்திருவின் கற்பைக் காக்க ஸ்ரீ கிருஷ்ணன் ஓடோடி வந்தான்:

அதுபோல ஒரு மங்கையர்க்கரசியாரின் திருமங்கலியத்தைப் பாதுகாக்கப்போலும், மாசு மறு இல்லாத ஒரு ஆத்மா இறங்க நேர்ந்தது. அந்தப் பரிசுத்த ஆத்மாதான் திருஞானசம்பந்த அவதாரம்.

பிறப்பு மலம் பற்றியது; மலம் பற்றுது கட்டளைக்கு நிகழும் அவதாரமும் உண்டு. அது சம்பந்த அவதாரம். அதனை அபர சுப்பிரமணிய அவதாரமாக ஆன்றோர் கொண்டாடுகின்றனர். பிரசித்திபெற்ற சங்கரரே சம்பந்த அவதாரத்தைத் துதிக்கின்றனர். சம்பந்த அவதாரம் திருமுறையின் அவதாரமும் ஆகும். சம்பந்தரிலிருந்தே திருமுறை ஆரம்பிக்கின்றது. சமணசாக்கிய அந்தகாரத்தைக் கிழித்து எழுந்த பன்னிரு சூரியர்களே பன்னிரு திருமுறைகள்.

20. சுருக்கத்தின் சுருக்கம்:

அறிவின் விளைவு அன்பு. அறிவு விசாரத்துக்கு வடக்கும், அன்பு விசாரத்துக்குத் தெற்கும் ஏற்றவை, வடக்கே அறிவு விசாரஞ் செய்த அகத்தியர் அன்பை விசாரித்துத் தெற்கே வந்தார். சங்கத்தோற்றம் பொய்யும் வழுவும் உலகத்தில் தோன்றத் தொடங்கியதையும், சங்க ஒடுக்கம் பொய்யிருள் உலகை விழுங்கியதையுங் காட்டும், உலகு இருள் மூடிய போதும், சிலருடைய தவ விசேஷத்தால் திருமுறை உதயமானது.

# திருமுறைப் பயன்

**சுருக்கம்**

1. அருட்டமிழ்:

*சங்கத்துச் சான்றோர்கள் அன்பைத் தமிழ் செய்தார்கள்; சம்பந்தர் அருளைத் தமிழ் செய்தார்.*

*சங்கத்தார் பொய்யடிமை யில்லாத புலவர்கள்.*

*சம்பந்தர் மெய்யடியார்.*

*நாங்கள் ஒருவரை யொருவர் நோக்கும்போது ஒருவர்* உடம்பை ஒருவர் நோக்குகின்றோம். பொய்யான உடம்புக் கூடாக மெய்யான உயிரை நோக்க முயல்கின்றோம்: பொய்யான உடம்பை நோக்காது மெய்யான உயிரை நோக்குகின்றவர்களும் இருக்கின்றார்கள். உடம்புக்கூடாக உயிரை நோக்க முயல்பவர்களுக்கும், நேரே உயிரை நோக்குபவர்களுக்கும் வேறுபாடு வெகுதூரம்.

'உலகு ஆதிபகவன் முதற்று'

ஆதிபகவனுகிய முதல்வனை இந்த உலகம் உடையது. அவனே விசாரிக்கற்பாலன். உலகத்தைப் பார்த்துக் கொண்டே அதன் முதல்வனுகிய ஆதிபகவனை விசாரிப்ப தற்கும் நேரே ஆதிபகவனைக் காண்பதற்கும் வேறுபாடு பெரிது. நேரே முதல்வனைக் காண்பவர்களுக்கு உலக பந்தமே இல்லையாம்.

பொய்ப் பொருளாகிய உலகத்துக்கூடாக மெய்ப் பொருளை விசாரித்தவர்கள், சங்கத்துச் சான்ருேர்கள். சம்பந்தர் இதோ, 'தோடுடைய செவியன்' என்று திருக் கையை உயர்த்திச் சுட்டிக்காட்டி மெய்ப்பொருளை நேரே கண்டவர்.

சங்கத்தார் பொய்க்கு அடிமையாதற்கு உடன்படாத வர்கள். அது விசேஷம். சம்பந்தர் மெய்க்கு நேரே அடிமையானவர்; மீளா அடிமை. இது மகா விசேஷம்.

சங்கத்தார் வாக்குப் பொய்யை வெறுத்து, மெய்யை ஊகித்து அதற்கு உருகிய வாசகம் அன்பு வாசகம்.

சம்பந்தர் வாக்கு மெய்ப்பொருளை நேரே கண்டு அதில் முழுகி அருளிய அருள்வாசகம். அன்பு—செங்காய்; அருள்—கனி.

2. வேறுபாடு:

மந்திர திருஷ்டாக்கள், எந்த எந்தத் தெய்வங்களுக்கு எந்த எந்த மந்திரமோ அந்த அந்த மந்திரங்களை நேரே கண்டவர்கள். மந்திரம் மறைமொழி; மந்திர திருஷ்டாக் களுக்கு மாத்திரம் மறைத்தலில்லாத மொழி. மந்திரங் களை விதிப்படி உச்சரிக்க, மந்திரார்த்தமான தெய்வம் முன்னிலைப்படும். பதத்தை—வன்னத்தை உச்சரிக்க உரிய தெய்வம் முன்னிலைப்படும் என்று சொல்லமுடியாது. வன்னம் - எழுத்து.

பொருட் பிரபஞ்சத்துக்கும் மந்திரத்துக்குமுள்ள தொடர்பு வேறு. பொருட் பிரபஞ்சத்துக்கும் பத வன்னங்களுக்கும் உள்ள தொடர்பு வேறு.

பொருட் பிரபஞ்சம் கலை, தத்துவம், புவனம் என மூன்றுவகை.

சொற் பிரபஞ்சத்தில் மந்திரம், பொருட் பிரபஞ்சத்தில் புவனத்தோடு நேர்தொடர்புள்ளது; அண்மையானது;

(மந்திரம் அநுபவக் காட்சிகளும் வேதாகம நுண்பொருள் அறிவும் பண்டை நற்றவமும் படைத்தோரால் ஆராய்ந்து நிச்சயிக்கற்பாலது; சொற் பிரபஞ்ச பொருட் பிரபஞ்ச இரகசியங்களும் தொடர்புகளும் அறியாத—அத்துவசுத்தி யில்லாத — என்போன்ற புல்லறிவாளர்களாகிய புழுத்த நாய்களுக்கும் மந்திரத்துக்கும் சம்பந்தமே யில்லாத நெடுந்தூரம்)

அருட்டமிழ் மெய்ப்பொருளுக்கு அண்மையானது; மந்திரம் போல.

அன்புத் தமிழ் (சங்கத் தமிழ்) சற்றே சேய்மையானது; ஆகவே,

பொய்யடிமை யில்லாத புலவர்கள் தமிழிலும், மெய்யடியார்களின் தமிழ் உயர்ந்தது; அது ஆகமம்; அண்ணிக்கச் செய்வது;

'நற்றமிழ்க் கின்றுணை ஞானசம் பந்தன்'

3. **முத்தமிழ்:**

'சம்பந்தன செந்தமிழ்' முத்தமிழாயினும், சங்கத்து முத்தமிழில் வேறுளது;

(அ) பொய்ப் பொருளுக்கூடாக மெய்ப்பொருளை ஊகித்து, அதனியல்பறியும் இயற்றமிழ்; அதனோடிசை

விக்கும் இசைத்தமிழ்; அதனோடு உடன்போக உடம்பட்டு நடக்கச்செய்யும் நாடகத் தமிழ் என முத்தமிழ், சங்கத்து அன்புத்தமிழ்.

(ஆ) எதில் அன்பு செய்யவேண்டுமோ அது அருள். அந்த அருளி னியல்பறியும் இயற்றமிழ்; அதனோடு இசைவிக்கும் இசைத்தமிழ்; அதனோடு ஒன்றுபட்டு நடக்கச் செய்யும் நாடகத் தமிழ் என முத்தமிழ்; சம்பந்தன் செந் தமிழாகிய அருட்டமிழ்.

**4. சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்:**

இது திருமூலர் திருவாக்கு. இந்தச் சதாசிவ தத்துவ மான முத்தமிழ் வேதம், ஞானசம்பந்தனின் நற்றமிழாகிய முத்தமிழ். மெய்ப்பொருளின் தடத்த நிலை (மற்றொன் றைச் சாராது சார்ந்து தோன்றுநிலை.) மூன்று:

அருவம்— அரு உருவம்—உருவம். இந்த மூன்று நிலையில் இடையாய அரு உருவம் சதாசிவ தத்துவம். அது உருவ தத்துவத்துக்கு மேலானது;வேதங்கள் ஆகமங்கள் தோன்று தற்கு இடமானது.

**5. சம்பந்தன செந்தமிழ் சதாசிவ தத்துவம்:**

அருட்டமிழ்; சாதாரண இயல் இசை நாடகங்களுக்கு எட்டாதது; இருவகைப் பிரபஞ்சங்களின் முடிபு எதைப் பற்றியிருக்குமோ—அதை—அந்தச் சிவசத்தியைப் பற்றி யிருப்பது. இதற்கு உதாரணம் யாழ்முரிக் கதை. திருநீல கண்ட யாழ்ப்பாணரின் இசைச் சிறப்பால் சம்பந்தன செந்தமிழ் சிறப்படைந்தது என்று அறியாமையால் சிலர் எண்ணினர். அதை யாழ்ப்பாணராற் பொறுக்கமுடிய வில்லை. யாழையே சிதைக்கச் சிந்தித்தார். அச் சந்தர்ப் பத்தில் அவர் வேண்டுகையால், யாழ் முரி பாடிப் பாண ரின் இசைக்கு அருட்டமிழ் அடங்காமை காட்டப் பட்டது.

6. சம்பந்தன செந்தமிழில்; ஒரு திருப்பாடல்:

"ஈருய் முத லொன்ருய்"

என்று தொடங்கி

"வேருய் உடன் ஆனுன்
இடம் வீழிம் மிழலையே"

என்று பூர்த்தியாகின்றது.

இப்பாடலிற் காட்டப்பட்ட மெய்ப்பொருளியல்பு, திருமுறைகள் என்கின்ற பன்னிரண்டு அடுக்கு மாளிகையின் அத்திபாரம். எப்படிப்பட்ட உண்மையைக்கொண்டதென் பதைச் சுட்டிக்காட்டுகின்றது; இந்த அத்திபார உண்மை திரண்டெழுந்ததுதான் மெய்கண்டார் அருளிய பன் னிரண்டு சூத்திரங்களால் ஆகிய சிவஞானபோதம்.

7, ஆத்மா இந்த உடம்பாய் ஒன்றுபட்டிருக்கிறது:

அதே சமயத்தில் உடம்பில் வேருயு மிருக்கிறது. உடம்பு ஆத்மாவில் வேருயிருக்க மாட்டாது. வேருனுல் பிணமாய்விடும்.

கடவுள் ஆத்மாவோடு ஒன்றுபட்டு ஆத்மாவாயிருக் கிருர். அதே சமயத்தில் வேருயும் இருக்கிருர். ஆத்மா கடவுளை விலகி ஒரு கணமாயினும் வேருயிருக்கமாட்டாது. கடவுள் ஆத்மாவாகிய நம்மோடு ஒன்ருயிருந்துகொண்டே வேருயுமிருந்து, இந்த உடம்பை உபகரிக்க முயலுகிருர்.

இப்படி ஒன்ருயும் வேருயும் நின்று நமக்கு உபகரித்த லோடு அமையாமல்,

இந்த இரண்டு நிலையிலும் அடங்காத மற்ெருரு உபகாரமுஞ் செய்கின்ருர். அந்த உபகாரத்துக்கு உடனுதல் உபகாரம் என்று பெயர். ஆத்மாவாகிய நம்மோடு நாமாயிருந்துகொண்டே உடலோடும் உடலாயிருந்து — இங்கும் இங்காய் அங்கும் அங்காய் நம்மையும் உடலையுஞ் சேர்த்துவிடும் உபகாரம் அந்த உடனுதல் உபகாரம்;

இந்த உபகாரம் மூன்றும் ஆத்மாவாகிய நமக்கு இன்றியமையாதவை. இந்த உபகாரத்தினுலேதான் நமக்கு அறிவு பிரகாசிக்க முடியும். இந்த மூன்று உபகாரங்களையும் சித்துப் பொருளாகிய நம்மையும் அசித்தாகிய சடஉலகையும் விட்டு விலகாமலிருந்துகொண்டே கடவுள் உபகரிக்கின்ருர்.

இவ்வாறு விலகாமல் மூன்று வகையாய் உபகரிக்கும் நிலைக்கு வேதாகமங்களில் 'அத்வைதம்' என்று பெயர்.

அத்வைதத்தில் அடங்கிய மூன்று வகை நிலைகளையும் வேத உபநிஷதங்கள் தனித்தனி பலவேறு முகமாக ஆராய்ந்திருக்கின்றன. இந்த மூன்று வகை நிலைகளும் ஒன்ருேடொன்று மாருடாத ஒரு மெய்ப் பொருளின் நிலையே என்று கண்டு உணர்த்திய பெருமை இந்த நில உலகத்திலே மெய்கண்டார் ஒருவருக்கே உரியது.

சம்பந்தன செந்தமிழ் வாக்காகிய மந்தர மலை கொண்டு திருமுறைகளாகிய பாற் சமுத்திரத்தைக் கடைந்து திரட்டிய வெண்ணெய், வெண்ணெய்நல்லூர் மெய்கண்டார் கண்ட அத்வைத உண்மை; மகாவாக்கிய சாரம்.

அத்வைதத்தின் ஒவ்வோர் நிலையையே முகந்து கொண்டு யானை கண்ட குருடர்போலே, எத்தனையோ சமயங்கள் எழுந்து தம்முள் மாறுபடுகின்றன.

யானையை உலக்கை என்று ஒருவன் சொன்னுலும், அப்பனே வா, உனக்கு அது அப்படித்தான் தோன்றும்; இன்னும் ஒரு தரம் தடவிப்பார்; அப்பாலேயுந் தடவு என்று உடன்படு முகமாய் எல்லாச் சமயமும் தலை வணங்கி அடங்க, அத்துவித உண்மையைக் கண்டு காட்டியவர் வெண்ணெய்நல்லூர்க் குழந்தை.

சீகாழிக் குழந்தை தொட்டுக்காட்ட வெண்ணெய்க் குழந்தை திரட்டித்தந்தது சிவஞானபோதம்.

'பொய்கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்டார்' — தாயுமானவர்.

8. சிவஞான போதம் திருமுறைப் பயன் :

சமய கோடிகள் எல்லாம் சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றுகின்ற ஒரு நடுப்புள்ளி சிவஞான போதம். சிவஞானபோதம் ஒன்றுமே கொண்டு அது திரளுதற்கு உபகாரமாய் நின்ற திருமுறைபற்றி நாம் பெருமிதம் கொள்ளலாம். உயிர் இந்த உடம்பாயும் அதே சமயத்தில் அல்லாததாயுமிருக்கும்.

உயிர் உடம்பாயும் இருக்கும். உடம்பு உயிராயிருக்க மாட்டாது.

சிவஞானபோதம் சர்வ சமயமுமாய் அதே சமயத்தில் வேருயுமிருக்கும்; உயிர்போல.

9. உச்சிக் கொப்பில் தொங்கும் மாங்கனி குளத்துள் தோன்றியது!

ஒருவன் அதற்குத் தூண்டில் இட்டான். அது வரவில்லே. ஒரு சிவஞானபோதன் உச்சிக் கொம்பரின் மாங்கனியை மறைத்தான்: குளத்துட் கனி மறைந்தது. அவ்வாறே தூண்டிற்காரனும் குளத்துட் கனியை மறைக்கப் பார்த்தான். உச்சிக் கொம்பரில் மாங்கனி மறையவில்லே. சிவஞானபோதம் உச்சிக்கொம்பரில் மாங்கனி; அது மறைய எல்லாம் மறையும்; அது அசைய எல்லாம் அசையும். மற்றவை மறைய அது மறையாது. மற்றவை அசைய அது அசையாது.

சிவஞானபோதம் தெளித்துக் காட்டிய உண்மை உச்சிக் கொம்பரிற் கனி. அது

"இப்பரிசாஞ் சமயமுமாய் அல்ல வாகி
யாது சமயமும் வணங்கும் இயல்பினது"
— தாயுமானவர்.

10. சிவஞானபோதமும் அந்த உண்மை வெண்ணெயை நல்கிய திருமுறைகளும் வேதங்கள் ஆகமங்கள் அங்கங்கள் உபாங்கங்கள் ஆகிய சர்வ சாத்திரங்களுக்குஞ் சம்மதமானவைகள்.

திருமுறைகள் எந்த உண்மையைக் கண்டெழுந்தனவோ அந்த உண்மை திரண்டெழுந்த சிவஞானபோதத்துக்கு நிகர் சிவஞானபோதமே. அகில உலகத்திலும் சிவஞானபோதம் போன்ற சமய தத்துவ உண்மை இல்லை! இல்லை! இது சத்தியம்! சத்தியம்!! முக்காலுஞ் சத்தியம்!!!

இந்த அத்வைத சத்தியத்தை நமது பாரத தேசத்து வடபாகம் திரித்து உணர்வது துர்ப்பாக்கியம். இனி அந்தத் திசைக்கு ஒரு அகத்தியர் எழுந்தருளுவாராக.

11. திருமந்திரம் அறிவுலக அருளுலக சம்மேளனம்:

அறிவு, திருவாசகமாகிய செந்தமிழில் உருகி, அன்பு முதிர்ந்து திருக்கோவைத் துறைகளில் ஓடுவதாக. இங்ஙனம் ஓடவிட்ட பொன் மூவர் தேவார கூடங்களிற் பண்பட்டு அழகிய ஆபரணங்களாய்ப் பெரியபுராண வாழ்க்கையை அலங்கரித்து, உலகம் உவப்பத் திருவிசை பெருகிப் பல்லாண்டு பல்லாண்டு சிவம் பிரகாசிக்கப் பெற்றுச் சிவமே யாகுக.

திருமுறை வாழ்க.

12. சுருக்கத்தின் சுருக்கம்!

சங்கத் தமிழ் அன்புத் தமிழ்; திருமுறை அருட்டமிழ்; சதாசிவ தத்துவமான முத்தமிழ் வேதம்; அதில் திரண்டது சிவஞானபோதம்; மகாவாக்கியங்களின் சாரமான அத்வைத உண்மை; சமய தத்துவங்கள் யாவையும் அதில் அடக்கம். 'யாவையுஞ் சத்தெதிர் சூனியம்.'

அநுபந்தம்;

அ. ஒரு உண்மைதான் பொய்த் தோற்றத்துக்குங் காரணம். கடவுளோ நிறுத்துவதோர் குணமில்லாதவர்.

அதனாலேதான் எம் மதமும் ஈசுவரனுக்குச் சம்மதம் என்பது. ''விரிவிலா அறிவினார்கள் வேறுஒரு சமயம்—எரிவினாற் செய்தாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்'' என்று அருளினார் அப்பர்.

ஆ. ஈசுரன் ஆன்மாக்களை இயக்க ஆத்மாக்கள் தம் முனைப்பில் இயங்கும் இயக்கம் வேறு.

(அதற்கு உதாரணம் காட்ட வேண்டா)

இயக்குவோனை முன்னிட்டு ஆத்மா தன் வேகத்தை அடக்கி அவனைப் பின்தொடர்ந்து இயங்கும் இயக்கம் வேறு. அதுவே சமயம்.

இ. ஆத்ம முனைப்பு ''கத்திடும் ஆன்மாக்க ளுரை கட்டு.''

---

திருக் கோயிலிலேனும், திருமடத்திலேனும், நாடோறும் இரவிலே கேட்போர் யாவரும் பயன் படும் பொருட்டு இந்த உபாத்தியாயர்களைக் கொண்டு பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கோயிற் புராணம், கந்தபுராணம் உபதேசகாண்டம், வாயு சங்கிதை முதலிய சிவபுராணங்களையும் சிவ தருமோத்தரத்தையும் படித்துப் பொருள் சொல்லு விக்கவேண்டும்.

—நாவலர்.

உ

# நாவலர் நீதிமான்

"நீதிமானே உயர் சாதிமான்" என்பது உலக அன்னை யாகிய ஔவையின் திருவுள்ளம்.

'நீதி வழுவா நெறிமுறையில்

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'

என்பது ஔவையின் வேதமொழி.

இங்கே 'இடுதல்' என்பதன் பொருள் என்னே? இடுதல் என்பதற்குக் 'கொடுத்தல்' என்று பொருள் கூறுதல் சுருங்கிய கருத்தாகும்.

"வாழ்க்கையை நீதி நெறியில் வைத்துக்கொள்ளுதல்" என்ற பொருளே விரிந்து பரந்த பொருளாகும். 'கொடுத் தல்' என்ற பொருள் அப்பொருளில் ஒரு சிறு அம்சமாய் அடங்கும். இனி, தன் வாழ்க்கையைக் கொடுத்தல் எனினுமாம்.

எவன் தன் வாழ்க்கையை, நீதி வழுவா நெறிமுறையில் வைத்துக்கொள்ளுகின்ருனே — அதற்கே அர்ப்பணஞ் செய்துவிடுகின்ருனே—அவனே எல்லா வகையிலும் உயர்ந்தோனுவான். சமய பரிபாஷையில் அவனை வைதிகன் என்பர். வைதிகம் — அறிவுநெறி. அது சமயத்தின் தொடக்கம்.

நீதிக்குப் புறம்பான வாழ்க்கையுடையோன் அவைதிகன். வைதிகனுக்கும் அவைதிகனுக்கும் இடைத்தூரம், வடக்குக்கும் தெற்குக்கும் உள்ள தூரம். வைதிகன் ஒரு நாளேக்குக் கைலாசவாசி; அவைதிகனுக்கு உரிய இடம் சொல்லவேண்டியதில்லே. 'அறிவு', கடவுள் தந்த கடவுட் சொத்து. அதனைப் பேணி வளர்க்கும் முறையில் வளர்க்க வேண்டும்.

'சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு'

என்ற குறள் ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

* * *

**நாவலர் கண்ட நீதிகள் :**

இனி, நாவலர் பெருமானிடம் செல்லுவோமாக. 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளே வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என்று தொடங்குகின்றது, நாவலர் கண்ட நீதிகளின் எண்ணிக்கை. அவற்றுள் எழுபத்தாறும் நீதி பின்வருமாறு:

(1) "நிலேயில்லாத உடம்போடு கழிவதாய சாதி உயர்ச்சியினும், நிலேயாய உயிரோடு செல்வதாய கல்வி யுயர்ச்சி உடையாரே மேன்மக்கள்" [76] என்பது.

வெறுஞ் சாதியுயர்ச்சிக்கு நாவலர் மதிப்புக் கொடுத்ததில்லே. கல்வியென்றதும் வெறுங் கல்வியை அன்று. கற்பவை கசடறக் கற்குங் கல்வியையே நாவலர் கல்வி என்றது. கல்வி உயர்ச்சி என்றது, கற்றுங்கொழுகுவதனுல் விளேயும் உயர்ச்சியேயாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மகாத்மாவின் சாதி பற்றிய கருத்தொன்று சிந்திக்கத்தக்கது.

"வருணாசிரம தர்மத்தை அங்கீகரிக்கின்றேன். ஆனால் பழைய முறையில்தான் அங்கீகரிக்கின்றேன். தற்காலத்தில் வழக்கிலிருக்கும் கெட்டுப்போன முறையிலல்ல."

['யங் இந்தியா' 6, 10, 21—தமிழாக்கம் ராஜாஜி]

என்கின்றார் மகாத்மா காந்தி.

* * *

இதைத்தானே வாழ்க்கையிற் கடைப்பிடித்தவர் நாவலர் பெருமான். இப்பொழுதைய தில்லைவாழ் தீட்சிதர்களை நாவலர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனாலே தீட்சிதர்கள் கோபங்கொண்டு ஒரு சமயம் [1869 ஆனி உத்தர தரிசனத்தில்] நாவலரைப் பச்சைப்படியே கைலாசத்துக்கு அனுப்பத் தீர்மானித்தது நடுநிலையாகிய நீதி உலகம் அறியும்.

* * *

'......... பார்ப்பான் பிறப்பு, ஒழுக்கங் குன்றக் கெடும்'

'இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்'

'நலத்தின்கண் நாரின்மை தோன்றில் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.' — வள்ளுவர்

[நலம் — நீதி. நார் — அன்பு, குலம் — சாதி]

**யாவருள்ளுஞ் சைவர் உளர்!**

(2) அ. "சாதி பெரிதோ சமயம் பெரிதோ! சிவ பதப்பேறு சிவநிந்தையை வெறுத்தவருக்கோ! சிவ நிந்தையை வெறுக்காது தழுவிய சைவகுருமார் பிராமணர் வேளாளர் என்னும் இவர்களுக்கோ! பிராமணர் முதல் யாவருள்ளும் சைவர் உண்டன்றோ!"

ஆ. "இங்கே தாழ்த்தப்பட்டவருள் சிலர் கள்ளுக் குடிப்பதை விட்டும் சிலர் மாட்டிறைச்சி தின்பதை விட்டும் திருத்தம் அடைகிறார்கள். இவர்கள் யோக்கியர்களா? எல்லாரோடுங் கூடி மாட்டிறைச்சி தின்று, சாராயம் கள் குடிக்கும் லலாட சூனியர்களாகிய வேளாளர்களும், இவர்களுக்கு அந்தியேட்டி கலியாண ஓமஞ் செய்யும் சைவ குருமார்கள் பிராமண குருமார்களும் யோக்கியர்களா?"

இ. "சாதியாசாரம், சமயாசாரம் இல்லாத எழுத்துச் சாதியினாலே பயன் யாதோ."

ஈ. "துராசாரங்கள் பூண்ட போலிக் குருமார்களை விலக்குவாரும் கண்டிப்பாரும் இல்லை. இதனாலே சைவசமய நிலை பாறுகின்றது."

இங்கே குறிப்பிட்ட [அ, ஆ, இ, ஈ] நீதிகள் நாவலர் கருத்துக்கள். நாவலர் பிரபந்தத்தில் இரண்டாங் கட்டுரை சைவ விரோதம். அதில் உள்ளவை இங்கே குறிப்பிட்டவை.

* * *

(3) மானிப்பாய் மருதடியிற் பிள்ளையார் கோயில் பிரசித்தமானது. அக்கோயிற் பூசகர் ஒருசமயம், கோயிலுக்கு வெளியிலே சனங்கள் பொங்கிப் படைத்து வழிபடுவதைத் தடுக்கும் முகமாக, அச்செயல் ஆகம விரோதம் என்று எழுதி, 'ஒரு சைவன்' என்று கைச்சாத்திட்டு ஆட்சேபித்தார். அதற்கு ஆறுமுகநாவலர், 'ஒரு நடுவன்' என்று கைச்சாத்திட்டு விடை பகர்ந்தார். அந்த விடை, "ஓர் வினாவுக்கு விடை என்ற தலையங்கத்தில், 'இலங்கை நேசன்' 1ஆம் புத்தகம் 22ஆம் இலக்கத்தில் 11-3-1877இல் வெளிவந்தது.

['நாவலரின் நீதி நெறியை அறிய விரும்புவோர், அத்தியாவசியகம் குறித்த கட்டுரையைப் பார்ப்பார்களாக' என்று, மதிப்புக்குரிய தத்துவ விசாரகர் ஒருவர் ஒரு சமயம் கூறியதுண்டு. ஆகையினாலே, அக்கட்டுரை அப்படியே இங்கே அநுவதிக்கப்படுகின்றது.]

## உண்மைச் சைவர் யார்?

"ஓர் வினு"வுக்கு விடை.

பத்திராதிபரே,

தீட்சை பெற்ற சூத்திரர் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு வெளியே பொங்கிச் சுவாமிக்கு நிவேதிப்பது சிவாகம சம்மதமோ என்று வினவிய மானிப்பாய்ச் சைவர், அந்தக் கோயிலினுள்ளே சுவாமியைத் தொட்டுப் பூசை செய்கிற பண்டாரங்களும் திருவிழாச் செய்கிற பண்டாரங்களும் என்ன சாதியாரென்று எண்ணினரோ! அவர்கள் தீட்சைபெற்ற சூத்திரர் அன்றோ? தீட்சை பெற்ற சூத்திரர் உள்ளே சுவாமியைத் தொட்டுப் பூசிக்க யோக்கியர், வெளியே பொங்கிப் படைக்க யோக்கியர் அல்லர் என்பதுதான் அவர் கருத்தோ! பண்டாரங்கள் சூத்திரரல்லர் என்பாராயின், அவர்கள் வேறெந்தச் சாதியோ! பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்னும் மூன்று சாதிகளுள் ஒரு சாதியார் என்பாராயின் அந்தப் பண்டாரங்களுக்கு உபநயனமும் பிரமகாயத்திரி உபதேசமும் வேதாத்தியயனமும் உண்டோ? இல்லை: அவர்கள் சைவர் என்பாராயின், சைவர் என்றொரு சாதி உண்டோ? சிவனை வழிபடுவோர் என்பதன்றோ சைவர் என்பதற்குப் பொருள்! பிராமணர் முதல் எல்லாச் சாதியாருள்ளும் சிவனை வழிபடுகிறவர்கள் உண்டன்றோ! ஆகவே அவர்களெல்லாஞ் சைவர்கள் தாமே: இப்படியாகவும், பண்டாரங்களை மாத்திரம் சைவர் என்பது எப்படி? தீட்சை பெற்ற சூத்திரர் என்றது புலாலுண்பவர் காணப் புசிக்கும் சூத்திரரை என்றும், சைவர் என்றது புலாலுண்பவர் காணமற் புசிக்குஞ் சூத்திரரை என்றுஞ் சொல்வாராயின், புலாலுண்பவர்களுக்குத் தீட்சை செய்கின்ற பண்டாரங்களும் அவர்கள் சீடர்களுஞ் சைவராவார்களோ! இன்னும், சைவருடைய போசனபந்தியைப் பார்த்தற்கு அயோக்கியர்கள் புலாலுண்பவர் மாத்திரந்தானே! சிவநிந்தகர், வேத சிவாகம நிந்தகர், சிவத்திரவியங் கவர்கிறவர், கொலைஞர், கள்வர், வியபிசாரஞ் செய்வோர்,

பொய்ச்சாட்சியஞ் சொல்வோர், நித்திய கருமம் விடுத்தோர், பிறன்மனையாளை விவாகஞ் செய்தவர், கைம்பெண்ணை விவாகஞ் செய்தவர், கைம்பெண் பெற்ற பிள்ளைகள், கணவனிருக்க வேறு கணவனுக்குப் பெற்ற பிள்ளைகள், இவர்களெல்லாம் சைவ பந்தியைப் பார்த்தற்கு யோக்கியர்களா! இது சிவாகம சம்மதந்தானு! புலாலுண்டல் மாத்திரம் பாவம், சிவநிந்தை முதலியவை புண்ணியமா!

கோயிலுக்கு வெளியே பொங்கிப் படைத்தலினுலே தமக்கு அல்லது தம்முடைய சுற்றத்தாருக்கு அரிசி வரவு குறைகிறதென்று மானிப்பாய் 'ஒரு சைவன்' என்பவர் பதைபதைக்கிருர் போலும்! பண்டாரங்கள், சனங்களுடைய அரிசியை வாங்கிச் சுவாமிக்கு நிவேதனத்துக்கும் அச்சனங்களுடைய பசிக்கும் உபயோகப்படுத்தாது வீடு சேர்ப்பது சிவாகம சம்மதமோ! சனங்கள் சுவாமி சந்நிதானத்திலே தாங்களே சுசியோடு பொங்கி, மந்திரத் தோடாவது, மந்திர மில்லாமல் 'பிள்ளையாரே இதை ஏற்றுக்கொள்ளும்' என்ருவது, தாங்களே பத்தியோடு நிவேதித்துத் தாங்களும் தங்கள் குழந்தைகளும் புசித்துப் பசித்துவந்த பிறருக்குங் கொடுத்து வீடு சேருவது சிவாகம சம்மதமோ! சிவாகமம் வல்லவர்கள் வாய் திறக்கட்டும். கோயிலிலே சுவாமியைத் தீண்டிப் பூசைசெய்ய உரிமையில்லாத சாதியார்கள், சுவாமி சந்நிதானத்திலே தங்கள் தங்களுக்கு விதித்த இடங்களிலே பாவனையாக அர்ச்சனை செய்து நிவேதிக்கலாமென்பது சிவாகம விதி. அதிபாதகமாகிய தேவத்திரவியாபகார முதலிய பல பாதகமுஞ் செய்கிற போலிச் சைவர்கள், அதிபாதகத்திற் ருழ்ந்த — அதிபாதக துல்லியத்திற் ருழ்ந்த—மகாபாதகத்திற் ருழ்ந்த—மகாபாதக துல்லியத்திற்ருழ்ந்த—உபபாதகத்திற்ருழ்ந்த—உபபாதக துல்லியத்துள் ஒன்ருகிய புலாலுண்டல் செய்யும் சூத்திரரில் உயர்ந்தவர்களாமோ! கெட்டி! கெட்டி!

(துல்லியம்-ஒத்தது)

யாழ்ப்பாணம், வண்ணுர்பண்ணை
11-3-1877.

இங்ஙனம்
ஒரு நடுவன்

மேன்மைகொள் சைவ நீதி;

இக்கட்டுரை இடித்துரைப்பது யாதோ? சிவதருமோத்தரம் என்னும் ஆகமத்தில் ஆறு பாதகங்கள் கூறப்பட்டிருக்கின்றன. மிக மோசமான நித்திய நரகுக்கு ஏதுவான பாதகம் அதிபாதகம்; அதிற் குறைந்த பாதகம் அதிபாதக துல்லியம். துல்லியம்—ஒத்தது. உபபாதக துல்லியம் ஆறாவது பாதகம். அதிபாதகம் மேரு மலையானால் உபபாதக துல்லியம் கிரிமலை.

அருச்சனைக்குப் பற்றுச்சீட்டுப் புத்தகம் வைத்துக், கடவுளை வியாபாரப் பொருளாக்கிப் பணஞ் சம்பாதிப்பது அதிபாதகம். அணிலடிகாரர் உபபாதக துல்லியர்.

அதிபாதக சிரோமணிகள், தம்மைச் சைவர் என்று சொல்லிக்கொண்டு உபபாதக துல்லியரைத் தாழ்த்தி அவர்கள் பூசையைப் பிள்ளையார் ஏற்றுக் கொள்ளார் என்பதை, நாவலர்பெருமான் மேற்கொண்ட 'மேன்மை கொள் சைவநீதி' ஏற்றுக்கொள்ளவில்லை.

'நீதி வழுவா நெறிமுறையில்
இட்டார் பெரியோர்
இடாதார் இழிகுலத்தோர்.'

---

சாமர்த்தியர்களாகிய ஓதுவார்களை நியோகித்து சில பிள்ளைகளுக்குத் தேவாரமும் திருவாசகமுமாகிய தமிழ் வேதத்தைப் பண்ணுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும் பழக்குவிக்கவேண்டும்;

—நாவலர்

உ

# வித்துவசிரோமணி
# பொன்னம்பலபிள்ளை

சில சமயங்களில் அர்த்தராத்திரி நேரத்திலே பொன்னம்பலபிள்ளை எழுந்து தம்மாணவர்களுள் யாரேனுமொருவரின் வீட்டுக்குப் போய் அம்மாணவரை எழுப்பி இன்ன பாட்டிலே இப்பகுதிக்கு இவ்வாறு உரைநயம் சொல்ல வேண்டும் என்பாராம். அவ்வாறு சொன்னதன் பிறகுதான் அவருக்கு நித்திரை வரும்போலும்.

அவரிடம் பாடம் கேட்பதற்குக் கால இட நியதியில்லை. வழியிலும் நடக்கும்போதும் கிடக்கும்போதும் அவர் பாடஞ் சொல்லிக்கொண்டேயிருப்பார்.

உணவு பொன்னம்பலபிள்ளையைத் தேடித் திரிவதன்றி பொன்னம்பலபிள்ளை உணவைப் பொருள் செய்து தேடிச் செல்வதில்லை; அவருடைய அருமைத் தாயார் ஒருவனிடம் உணவைக் கொடுத்தனுப்புவார். அவன் உணவுடன் பொன்னம்பலபிள்ளையைத் தேடியலைவான். எங்கேயாவது

தெரு மடக்குக்களிற் சந்தித்தால் நின்ற நிலையிற் பொன்னம்பலபிள்ளை அதனை உண்டு விட்டுத் தாம் விரும்பிய இடத்துக்குச் செல்வது முண்டு.

கம்பராமாயணத்துக்குப் பொன்னம்பலபிள்ளை உரை நயம் சொல்லும்போது சிலர் எழுதுவார்கள். எழுதியதை, மற்றொரு சமயம் அவருக்குக் காட்டினால், அவ்வுரை தம் முரையேயாயினும், அவர் அதனை ஒப்புக்கொள்ளாமல் மற்றொரு பிரகாரம் உரைநயம் விரிப்பார். காவிய உரை நயம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு கிளர்ந்துகொண்டிருக்கும். முன் சொன்னதொரு உரைநயத்தை மீண்டும் அப்படியே ஒப்பிக்கும் வழக்கம் பொன்னம்பலபிள்ளைக்கில்லை. முன் அப்படிச் சொன்னதுண்டே என்று சொல்லிப் பொன்னம் பலபிள்ளையின் சீற்றத்துக்காளான மாணவருமுண்டு. இச் சீற்றம் காவிய ரசனைச் சீற்றம். இது இரசனைமாற்ற ஏற்றம். 'அறிதோ றறியாமை கண்டற்று' எனப் பாராட்டற்பாலது இது.

பெரியபுராணம், கந்தபுராணம், பாரதம், கம்ப ராமாயணம் முதலியவைகளுக்குப் பொன்னம்பலபிள்ளை கூறிய உரைக்குறிப்புக்கள் கையெழுத்துப் பிரதிகளாய் அவருடைய மாணவ பரம்பரையி லிருந்து வருகின்றன. அவை தாய்நாட்டிலும் பரவியிருக்கின்றன. எனக்குக் கிடைத்ததொரு கம்பராமாயணக் குறிப்பை அண்ணமலைப் பல்கலைக்கழக உபவேந்தரும், ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்களுங் கேட்டுக்கொண்டபடி கம்பராமாயணப் பரி சோதனத்துக்கு உபகாரமாக மேற்படி பல்கலைக் கழகத் துக்கு அண்மையிற் கொடுத்துவிட்டேன். அக்குறிப்பின் முகப்பிற் பொறிக்கவேண்டுமென்று நான் கருதும் வசனம் இது:

''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மருகரும் மாணக்கருமாகிய வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையின் கம்பராமாயண ரசனையை எழுத்தில் எழுதி எடுக்க எடுத்த உழப்புக்களுள் கடையாயதொரு நெய்யரி இது; சிரோமணியின் கவிச்சுவை ஒழுகும் இனித்த வாய்க்கு,

அவிச்சுவை செய்யும் பாக்கியம் படைத்த

பரிசாரகர் ஒருவர்'' தமக்கியன்றவாறு முகந்த குறிப்பு இது.

இக்குறிப்பு அரை நூற்றுண்டு காலமாக என்னிடமிருந்தும் இதனை வெளியிடாமல் வைத்திருந்த காரணமும் மேற்படி குறிப்பைப் பற்றிக் குறிப்பதிலிருந்து ஊகிக்கத் தக்கது.

பொன்னம்பலபிள்ளையின் இலக்கிய குணவிசேஷத்தைச் சுருக்கமாகச் சொல்ல விரும்பினுல், ''பொன்னம்பலபிள்ளை வாங்கிய கடனைக் கொடுத்ததுமில்லை; அதனுற் கடன் கொடுத்தோர் கோபித்ததுமில்லை: தம்மிடம் ஒன்று கேட்டு வந்தவர்களுக்குப் பொன்னம்பலபிள்ளை அதனை மறுத்தது மில்லை'' என்று சொல்லலாம்.

இங்கே ஒன்று என்பது பொன் முதலிய பொருளுமாம்; காவியப் பொருளுமாம்.

பொன்னம்பலபிள்ளை ஒரு கலாவிநோதர். கலைஞர்கள் அவர் முன்னிலையில் தம் திறமைகளைக் காட்டி அவரிடம் பரிசில்களையும் பட்டங்களையும் பெறுவதைப் பெரும் பாக்கியமாகக் கருதினுர்கள்.

''செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்''

இனிக்கின்ற கதைகள், தித்திக்கின்ற இலக்கியங்கள், கருத்தைச் சிமிட்டுகின்ற சொல்லோவியங்கள் ஆகிய செவிநுகர் கனிகள், இடையீடின்றிக் கிடைக்குமாகுல், வயிறு ஒரு பண்டமன்று. உணவு மறதியாய்ப் போய்விடும். செவிநுகர் கனிகள் கிடையாத சமயங்களிலே, ஓய்வு நேரங்களிலே சிறிது சிறிது வயிற்றையும் பார்த்துக்கொள்ளல் வேண்டும். 'கதைகளை இனிக்கிறதற்கு, இலக்கியங்களை இருந்து தித்திக்கிறதற்குக் கருத்துக்களை அவிழ்க்கிறதற்கு

வயிற்றின் உதவியும் ஓர் அளவுக்கு வேண்டுந்தானே' என்கின்ற இந்தத் திருக்குறளின் அருமந்த கருத்துக்கு இனி இந்த உலகத்திலே இடமில்லைப்போலும்!

விஞ்ஞானம் கதித்த இந்த எந்திரவுலகத்திலே மனிதன் வெறும் எந்திரமாய் விட்டான்; நாயாய் அலைகிறான்; பேயாய்த் திரிகிறான். எண்சாணுடம்புக்கு வயிறே பிரதான மாய்விட்டது. உணவுப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை முதலியன இன்றைய பேச்சாய் விட்டன. இனி வருங்கால மனிதனுக்குச் சிரிப்பு வராது; அது கொட்டாவியாய் மாறிவிடும் போலத் தெரிகிறது.

இந்த நாட்டை எடுத்துக்கொள்வோம்; தூரத்துக்குப் போக வேண்டாம். சென்ற நூற்றாண்டை எட்டிப் பார்ப்போம்; அப்பொழுது இந்நாட்டவர்கள் இப்படிக் கொட்டாவி விட்டுக்கொண்டு கொள்ளிவாய்ப் பேய் போல அலையவில்லை.

மகாப்பிரபு ஆகிய வைத்தியலிங்கச்செட்டியார் தாபித்த வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலின் வசந்தமண்டபத்திலே ஆறுமுகநாவலருடைய மருகரும் வித்துவசிரோமணியும் இலக்கிய இரசிக சிகாமணியுமான பொன்னம்பலபிள்ளை, தேஞெழுக ஒழுகப் புராணத்துக்குப் பயன் விரிக்கின்றார்; கம்பராமாயணத்திலிருந்து கனிகளை வாரிச் சொரிகின்றார். மண்டபம் முழுவதும் நெருங்கியிருந்து செவிகள் நுகர்கின்றன; ஊசி விழுந்தாற் கேட்கும்.

பொன்னம்பலபிள்ளை கோயில் வசந்தமண்டபத்திலிருப்பார். அங்கேயில்லையேல் தீர்த்தக்கரையிலே காணலாம். வீட்டுத் திண்ணைகளிலே மாணவர்கள் மத்தியிலே இருப்பார். மரநிழல்களிலே பள்ளி வைப்பார். ஊர் நடுவிலே உலாவித் திரிகின்ற பயன் தரும் மரம் அவர்.

திருமாலின் திருக்கரத்தில்இருக்கும் சங்குக்குப் 'பாஞ்சசந்நியம்' என்று பெயர். அதனை ஆயிரம் வலம்புரி சூழ்ந்திருக்கும். அந்த வலம்புரிகளை அளவில்லாத இடம்புரிகள் சூழ்ந்திருக்கும் என்று வருணிப்பார்கள்.

பொன்னம்பலபிள்ளை ஒரு தேன்குடம். அதை இரசிகர்களாகிய எறும்புக்கூட்டங்கள் சதா சூழ்ந்துகொண்டேயிருக்கும். வித்துவான்கள், மாணுக்கர்கள் தொடர்ந்துகொண்டிருப்பார்கள். இந்த வைபவத்திற் பிரபுக்களும் பிறரும் தம்மை மறந்து கலந்துகொண்டிருப்பார்கள; பொன்னம்பலபிள்ளைக்குக் கொடுத்த கடனை வாங்குவதற்கு வருகின்றவர்கள் அவரைக் கடன் கேட்காமலே, அவர் வழங்குங் கனிகளைச் செவிகளால் நுகர்ந்துகொண்டு திரும்பி விடுவார்கள். அவரை எவரேனுந் துணிந்து, கொடுத்த கடனைக் கேட்டதில்லை. அந்த இடத்தில் அவர் முன்னிலையில் அந்தக் கடன் ஒரு பொருளன்று.

பொன்னல்பலபிள்ளையின் முன்னிலையில் கலைஞர்கள் வந்து வந்து குழுமுவார்கள். ஏற்ற ஏற்ற முறையில் வரிசையறிந்து மதிப்புக்கொடுப்பார் பொன்னம்பலபிள்ளை. அவர் கொடுக்கும் மதிப்புப் பல்கலைக்கழகம் கொடுக்கும் மதிப்பிலும் மேலானது. பல கலைத்துறையிலும் அவர் முன்னிலையில் வித்தியா விநோதங்கள் நடைபெறும்.

---

சாயங்காலத்திலே சிவதரிசனம் பண்ணுகிறவர்களுக்குச் சிவபக்தி விளையும் வண்ணம் ஓதுவார்களைக் கொண்டு சிவசந்நிதானத்திலே தேவாரத்தைப் பாடுவிக்கவும், சாரங்கியில் வாசிப்பிக்கவும் வேண்டும்.

—நாவலர்.

# புலவர்பெருமான்
# திரு. அ. கு. அவர்கள்

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் தந்த சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் தொல்காப்பியத்தையும் பழைய பல்காப்பியங்களையும் பதிப்பித்தலில், மூச்சு விட நேரமின்றி முயன்றுகொண்டிருந்தார். எங்கே எவர்களை எவ்வகையிற் பயன்படுத்தலாமோ, அங்கே சென்று அவர்களைப் பயன்படுத்துவதில் தாமோதரம்பிள்ளை அவர்கள் தவறுவதில்லை.

1868ஆம் ஆண்டில் தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம் பதித்தற்கு முழு உதவியையும் நாவலர் அவர்களிடம் பெற்றவர் தாமோதரம்பிள்ளை;

தாமோதரம்பிள்ளைக்குத் தாம் பதிக்கும் தொல்காப்பியத்தையும் பல்காப்பியங்களையும் மாணவர்களுக்குப் பயன்படுத்த வேண்டுமே என்கிறதோர் உள்ளுணர்ச்சி

உள்ளத்திற் குடிகொண்டிருந்தது. பிள்ளை அவர்களுக்கு மாணவர்களைக் கூட்டிப் படிப்பிக்க நேரமேது.

தாமோதரம்பிள்ளைக்குத் தந்தையார் ஊர் சிறுப்பிட்டி, தாயாரூர் ஏழாலை. சுன்னாகம் ஏழாலைக்கு அயலூர்.

1878ஆம் ஆண்டில் சுன்னாகத்திலே புலவரவர்களைக் கண்டுபிடித்தார் தாமோதரம்பிள்ளை. கறையான் புற்றுக் குள்ளே சங்கப் புலவர்களைக் கண்டு பிடிக்குந் தமிழ்த் தாமோதரம்பிள்ளைக்கு, தாயூருக் கயலூரில் புலவரவர் களைக் கண்டுபிடிப்பது பெரியதொரு காரியமா! புலவரவர் களுக்கு அப்பொழுது வயது (23) இருபத்துமூன்று. நாவலர் அவர்களின் பரிபூரண ஆசிக்கும் பாத்திரமாய் இருந்த வர்கள் புலவர் அவர்கள்.

1876இல் சி. வை. தாமோதரம்பிள்ளை ஏழாலையில் ஒரு பாடசாலை தாபித்தார். அதில் 1878இல் புலவர் அவர்களை ஆசிரியராக அமர்த்தினர்.

1901, 1ஆந் திகதி சி. வை. தாமோதரம்பிள்ளை மறைந்தார். அதன் மேலும் 1902ஆம் ஆண்டு வரை புலவ ரவர்கள் அங்கேதானே கற்பித்துக்கொண்டிருந்தார்கள். எத்தனையோ வித்துவ சிங்கங்கள் தோன்றினர்கள்.

தெல்லிப்பழை வித்துவான் சிவானந்தையர் மகா விவேகி. யாழ்ப்பாணத்து அரசஞ்சண்முகம் ஐயர். தருக்க சங்கிரகம் அன்னம்பட்டீயம், சிவஞான முனிவரின் மொழி பெயர்ப்பு. ஐயர் அதிற் பிழை கண்டுபிடித்து, அன்னம் பட்டீயத்தையும் அதன் உரையாகிய நீலகண்டீயத்தையும் வேறு பல உரைகளையும் மொழிபெயர்த்து அச்சிட்டவர். ஏழாலையில் புலவரிடம் படித்தவர் ஐயர். கணேசையரின் சகபாடி.

**புலவருக்குப் பாராட்டு:**

1879இல் நாவலர் அவர்கள் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி ஏழாலைக்குச்

சென்று மாணவர்களைப் பரீட்சித்துப் புலவர் அவர்களைப் பாராட்டிப் பரீட்சைக் குறிப்புரை ஒன்றும் வழங்கியிருக்கிறார்கள். அதன்பின் ஒரு முறை வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையும் பரீட்சை செய்து புலவரவர்களைப் பாராட்டியிருக்கின்றார்.

1902இல் வண்ணையில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில், புலவர் அவர்களைப் பயன்படுத்தும் முறையில் ஒழுங்குகள் செய்யப்பட்டன. அந்திய காலம் வரை (1922) அங்கேதானே புலவர் அவர்கள் தலைமைப் புலவராகக் கற்பித்துக் கொண்டிருந்தார்கள். புலவருக்கு உதவியாசிரியர்கள் நீர்வேலிச் சங்கரபண்டிதரின் குமாரர் சிவப்பிரகாச பண்டிதர், வடலியடைப்பு அருணாசல சாஸ்திரிகள் என்பவர்கள். இந்த இருவரும் சம்ஸ்கிருதத்தில் மகா பண்டிதர்கள்; சங்கரபண்டிதரிடம் படித்தவர்கள்.

1917ஆம் ஆண்டில் இந்துசாதனத்தில் ஒரு விளம்பரம் வந்தது. "நாவலர் பாடசாலையில் காவிய வகுப்பு" என்பது விளம்பரத்தின் தலையங்கம். தமிழ் கற்க விரும்புகிறவர்களுக்கு உண்டியும் உறையுளும் வழங்கி, வேதனமின்றிக் கற்பிக்கப்படும் என்பது விளம்பரத்தின் விசேட பகுதி. அந்த விளம்பரப் பத்திரிகையுடன், என்பாற் சிரத்தைகொண்ட நண்பர் ஒருவர், எங்கள் வீட்டுக்கு வந்து, என்னை விண்ணப்பிக்கும்படி தூண்டினார். என் தந்தையார் சிரித்தார். எனக்கு வயது பத்தொன்பது (19) நடக்கின்றது. இவ்விடத்தில் என் திவ்ய சரித்திரத்தைத் தெரிவிப்பது தளர்ந்த என் வயசுக்குப் பொருத்தமாயிருக்கும்.

பத்தாம் வயசில் அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புடன் என் படிப்பு முற்றுப்பெற்றது. அதன்மேல் காகித ஆட்டத்திலும் கவறு விளையாட்டுக்களிலும் என் கவனஞ் சென்றது. அந்த விளையாட்டுகளுக்கு எனக்குக் குருவாயமைந்தவர் பிரசித்திபெற்ற அற்புத விவேகி லோச் செல்லப்பா என்பவர். அவருக்குந் தினந்தோறும்

வழக்குகள் ஆயத்தஞ் செய்யும் வேலை இருந்துகொண்டிருக்கும். அதனைக் கவனித்துக்கொண்டிருப்பது புறம்பானதொரு ரசனை.

என் தந்தையின் ஊர் மட்டுவில், தாயார் ஊர் தனங்கிளப்பு. அது, சிருட்டிக்காலந் தொடக்கம் உலக நாகரிகம் ஏதும் எட்டிப்பாராததொரு கிராமம். எனக்குப் பன்னிரண்டாம் வயசில் தாயார் ஊரில் குடியேற நேர்ந்தது. படிப்பென்ற கதைக்கு அங்கே இடமில்லை. காகிதவிளையாட்டுக்கு மாத்திரம் அங்கேயும் போதிய வசதி இருந்தது. அதில் நான் சேர்ந்துகொண்டேன்.

என் தந்தையாருக்கு, நான் புராணம் படித்துக் கோயிலிற் பயன்சொல்ல வேண்டுமென்பது பெரிய ஆசை. தென்மராட்சியில் மூவர் ஆசிரியர்கள் வித்துவசிரோமணியிடம் படித்தவர்கள், அப்பொழுது இருந்தார்கள். அம் மூவரிடமும் முறையே என் தந்தையார் என்னை ஒப்பித்ததுண்டு. அவர்கள் வளர்ந்தவர்களுக்கு இரவில் புராண வகுப்பு நடத்துகிறவர்கள். ஒருவர் பகலிலும் நடத்துகிறவர். அவரிடம் எனக்குக் கொஞ்சம் இலக்கணமுஞ் சொல்லிவைக்கும்படி என் தந்தையார் கேட்டுக்கொண்டார். இலக்கணச் சுருக்கம் ஒன்று வாங்கப்பட்டது. அதைத் திறக்கவேயில்லை. மிஷன் பள்ளியில், ஐந்தாம் வகுப்பில் 'குசுடுதுபுறு' வருவது குற்றியலுகரம் என்று உபாத்தியாயர் எத்தனையோ முறை சொல்லியும், அந்த வகுப்பில் ஒருவருக்கும் அது வரவில்லை. அவரிடம் வாங்கின அடி இலக்கணச் சுருக்கத்தைக் கண்டதும் எனக்கு ஞாபகத்துக்கு வந்துவிடும். நான் அந்தப் புத்தகத்தைத் தொடவில்லை. வருடம் இரண்டு மூன்று கழிந்தும் என்னிடம் படிப்புப் பலிக்கவில்லை.

என் தந்தையார் மேலே குறிப்பிட்ட மூவருள் மற்றொருவரிடம் என்னைச் சேர்த்தார். அவர் மிக நல்லவர்; புராணப் பாடல்கள் போல பாட்டுக்கள் பாடுகிறவர்.

தம் குருவாகிய வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் இலக்கிய இரசனைக் கதைகளை வாயூறி வாயூறிச் சொல்லிக்கொண்டிருப்பது அவரின் பொழுது போக்கு. அவரிடம் வளர்ந்தவர்கள் இரவில் கம்பராமாயணம் படித்துவந்தார்கள். அவ்வகுப்பில் நான் சேர்க்கப்பட்டேன். நான் எங்கே கம்பர் எங்கே! எனக்கு இராமாயணம் ஆட்பாரமாயிருந்தது. படிப்புத் தொடங்க எனக்குத் தூக்கம் வந்துவிடும். இரண்டொரு வருஷமாயும் என்னிடம் எவ்வித அசைவும் பிறக்கவில்லை. அவரை விட்டுப் பிரியவும் மனமில்லை. இந்த நிலையில் அவர் மற்றொரு ஊருக்குப் போய் அங்கே தங்கியிருந்து படிப்பிக்கவேண்டியவராயினார். என் படிப்புக்கு முற்றுப்புள்ளி பிறந்தது. இந்த அளவிலாவது என் தந்தையார் என்னைக் கைகழுவிவிடவில்லை. மேலே குறிப்பிட்ட மூவர் ஆசிரியரில் மூன்றாவது ஆசிரியரிடம் சேர்க்கப்பட்டேன்; அவர் என் அன்புக்குரிய முந்திய ஆசிரியரின் வித்துவ எதிரி; அவருடைய மைத்துனர் கம்பரில் கிஷ்கிந்த காண்டத்துக்கு உரை எழுதினவர். அவர் பாரதம் கொண்டுவரும்படி சொன்னார். வில்லிபாரதத்துடன் சென்றேன். அவருடைய முதிய மாணவர்—முதன்மாணவர்—ஒருவர் அங்கே இருந்தார். என்னைக் காப்புச் செய்யுளைப் படிக்கும்படி சொன்னார். "நீடாழி" என்ற பாட்டைப் படித்தேன். படித்தபின், "எழுவாய் எடு" என்றார். 'கூர்வாமரோ' என்றேன். என்றதும் கூடாத வார்த்தைகளால் என்னை ஏசிவிட்டார் அந்த ஆசிரியர். இதுதானோ புத்தகம் சுமந்து படித்தது என்று முந்திய ஆசிரியரிலும் பாய்ந்தார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

முந்திய ஆசிரியர் சில பாடல்களுக்கு 'எழுவாய் எடுத்துப் படி' 'தியாகு' என்று தம் முதன்மாணவரான தியாகராசாவிடம் சொல்லுவார். தியாகராசா பெரும்பாலும் பாட்டின் கடைசி அடியில் கடைசிப் பாகத்தை எடுத்துப் படித்ததைப் பலமுறை நான் கவனித்ததுண்டு. அதனாலே

தான் நான் 'கூர்வாமரோ' என்று எழுவாயெடுக்க நேர்ந்தது.

**உரோசம் வந்தது:**

ஆசிரியரிடம் ஏச்சுக் கிடைத்ததேயன்றி எழுவாயெடுக்கும் வித்தை கிடைக்கவில்லை. கொஞ்சம் உரோசம் மாத்திரம் பிறந்தது. இந்தச் சம்பவம் நடந்த அடுத்த வாரத்திலேதான், என் நண்பர் ம. வே. நடராஜர் இந்துசாதனத்துடன் எங்கள் வீட்டுக்கு வந்தது.

இனி, என் தந்தையார் அப்பொழுது சிரித்ததன் கருத்து ஒருவாறு விளங்கலாம். எனக்கு விவாகம் செய்து வைப்பதென்ற கருத்துடன் அவர் இருந்தார். பெண்ணும் வீட்டிலேதானே இருந்தது. என்னை விண்ணப்பிக்கவேண்டாமென்று அவர் தடுக்கவில்லை. என்னை எடுக்கமாட்டார்கள் என்றே கருதியிருந்தார். 1917ஆம் ஆண்டு நவம்பர் மீ 12ஆந் திகதி நேர்முகப்பரீட்சை என்று நாள் குறிப்பிடப்பட்டது. நண்பர் என்னை அழைத்துச் சென்றார்.

வண்ணார்பண்ணையில் நாவலர் பாடசாலைக்கு வடகீழ்த் திசையில் ஒரு கட்டடம். அக்கட்டடத்தின் தென்பாகத்தில் விறாந்தையோடு கூடிய ஓர் அறை; மேற்குவாய்தல் அறை. அறை மத்தியில் ஒரு மேசை. மேசையின் வடக்குப் பக்கத்திலும் கிழக்குப் பக்கத்திலும் ஒவ்வொன்றாக இரு வாங்குகள் இருந்தன. வடக்குமுகமாக மனேஜர் த. கை. அவர்கள் இருக்கின்றார்கள். மனேஜர், நாவலரின் தமையனார் புத்திரர். மேற்குப் பக்கத்தில் கிழக்கு முகமாகப் புலவர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குறிப்பின்படி விண்ணப்பித்தவர்கள் அவ் வாங்குகளி லிருந்தார்கள். நானும் இருந்தேன். புலவரவர்கள் ஒவ்வொருவரையும் வினவிப் பரீட்சை நடத்தினார்கள். என் முறை வந்தது. ஒரு பாட்டுச் சொல்லும்படி கேட்டார்கள். பாரதத்தில் கடினமானதொரு பாட்டைச் சொன்னேன். புலவர் அவர்கள் என்னை ஏற இறங்கப் பார்த்தார்கள். ' கிறீஸ்தவ

பள்ளியில் படித்ததோ'' என்று கேட்டார்கள். அவ்வளவில் எனக்குப் பரீட்சை முற்றிற்று. என்னை அழைத்து வந்தவருக்குக் கலக்கம் உண்டாயிற்று. அவர் மனேஜர் அவர்களைத் தனிமையிற் கண்டு, கொஞ்சக் காலம் வைத்திருந்து பாருங்கள் என்று இரந்து கேட்டார். ஒரு மாசம் வைத்திருந்து பார்ப்போம் என்றார்கள் மனேஜர் அவர்கள். இதை அப்பொழுது நண்பர் எனக்குச் சொல்லவில்லை. கவனமாகப் படி என்று சொல்லிப் போய்விட்டார்.

இராப்பகல் ஓய்வின்றிப் படித்தேன். சூது முதலிய துர்ப்பழக்கங்கள் என்னை விலகி ஓடி மறைந்து போயின. புத்தி ஒருமுகப்பட்டது.

மறைசையந்தாதி, கலைசைச் சிலேடை வெண்பா கருத்துச் சொல்லித்தரப்படும். அடுத்த நாளைக்குப் பாட்டுக்களை ஒப்பித்துக் கருத்துச் சொல்லவேண்டும்.

நிகண்டு, நன்னூல், நான்காம் பாலபாடம், சைவ விஞவிடை, தமிழ்ப் புலவர் சரித்திரம் எல்லாம் பாடமாக்கித் தீரவேண்டும்.

சம்ஸ்கிருதபாடம்—சிறப்பாகச் சங்கரபண்டிதர் செய்த சப்த சங்கிரகத்தில் சந்தி சப்தம் முதலியன—ஒப்பிக்க வேண்டியவை.

''இலக்கணப் பிரமாணங்களால் வஸ்து சித்தியாம் என்பது நியாய சாஸ்திர சித்தம்'' என்பது சங்கர பண்டிதர் எழுதிய சைவப்பிரகாசனத்தில் முதல் வசனம். முதற் பகுதி தருக்க அளவை. அவ்வளவும் அட்சரந் தவருமல் பாடமாக்கவேண்டும். அதன்பிறகு விளக்கஞ் செய்யப்படும்.

வில்லிபாரதத்தில் இரண்டு பாடங்கள் நடக்கும்; அவற்றில் படித்த இலக்கணம் முழுவதும் பயிற்சி செய்யப் படும். திருக்குறள் பரிமேலழகர் உரை எழுத்துத் தப்பாமல் ஒப்பித்து விளக்கங் கேட்கவேண்டும்;

மூன்று மாசம் திக்குத் திசை தெரியவில்லை. தந்த வேலைகளைச் சலியாது செய்துவந்தேன். பலர் மெல்ல மெல்லக் கழன்றுவிட்டார்கள்.

நன்னூலில் சூத்திரம் உரை பரீட்சைவினு அப்பியாசம் எதுவும் விடுவதில்லை. ஆறுமாசம்வரை இலக்கணம் ஏன் படிக்கவேண்டுமென்பது எனக்குப் புலப்படவில்லை.

பாரதப் பாடல்கள் படித்த இலக்கணப் பயிற்சிக்கே உபயோகிக்கப்பட்டன. இவ்வாறு இலக்கியத்தால் இலக்கணங் காணுவதை, 'பிரேத பரிசோதனை' என்று ராஜாஜி எழுதியிருக்கிறார். நானும் அப்படி நினைத்ததுண்டு. புலவர் அவர்கள் இலக்கியத்தில் இரக்கமின்றி ஏன் அப்படித் தொடக்க காலங்களிற் செய்கிறவர்கள் என்பது பிற்காலத்தில் நன்கு புலப்படலாயிற்று.

'எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் – மொழித்திறத்தின்
முட்டறுத்த மேலோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.'

என்ற பாடலில் வரும் 'மொழித்திறத்தின் முட்டறுத்தல்' என்கின்ற முயற்சியே முதலில் நடந்தது என்பது நன்கு தெரிந்தது.

ஆறு மாசத்தின்பின், புலவரவர்களைத் தெய்வம் என்று வணங்குவதொரு நிலை உண்டானது. எந்தத் தமிழ் நூலையும் கடின இலக்கணங்களையும் படிக்க முடியுமென்ற ஒரு விழிப்புநிலை கைவந்தது. அதன்மேல் இலக்கியத்தில் பிரேத பரிசோதனை நின்றுவிட்டது. எதனையும் மனனஞ் செய்க என்று விதிப்பது மில்லை.

பூனைக்குட்டி நிலை மாறிக் குரங்குக்குட்டி நிலை நேர்ந்தது. புலவர் அவர்களைத் தொடராமல் இருக்க முடியாமை உண்டானது. வினவிப் படிக்கும் முறை

கைவந்தது. கேட்டால் விளக்கங் கிடைக்கும். இரண்டொரு வருஷத்தில் புலவர் அவர்கள் மேற்கொள்ளும் நூலுரைகளிற் பங்குபற்றி ஏவல்செய்யும் சத்தியும் வாய்த்தது. சிவஞான சித்தியாரின் அளவைப்பகுதி உரை, கல்வளை யமக அந்தாதி உரை, இராமோதந்தப் பாடல்கள் புலவர் அவர்கள் முன்னிலையில் என் கையால் எழுதியவை.

அக்காலத்துப் பெரும்புலவர்களிடம் படிக்கும் படிப்பு, அவர்களின் அறிவாற்றல்கள் சென்றவழிச் சென்றுகொண்டிருப்பதேயாம். புலவரவர்கள் முன்னிலையில் ஏதும் பட்டப் பரீட்சைகளுக்குப் படிக்கவேண்டும்; வயிறு கழுவ வழி காணவேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டாகவில்லை.

1922ஆம் ஆண்டு அவர்கள் பிரியும்போது பக்கத்திலேயே கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தேன். அவர்கள் மறைந்தார்கள். நான் கலங்கவிழ்ந்த நாய்கன் ஆயினேன்.

**புலவருக்குப் பின்:**

புலவர் அவர்களின் அந்திய காலத்தில் நடந்த பாடங்களில் சீவகசிந்தாமணி ஒன்று. ஐயர் அவர்களின் பதிப்புக்கள், ஏடுகள், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் உரைக்குறிப்புக்கள் எல்லாம் ஒருபுறத்தில் வைத்துக் கொண்டே பாடம் நடக்கும். ஒரு நாட் பாடத்தில் ஒரு பாடல் உரை கண்டால் பெரிய காரியம். பதிப்புகளிற் பிழை கண்டு பிடிப்பது ஒரு ரசனை. ''சரீரம் — இராகம்'' என்று சிந்தாமணி அநுபந்த அகராதியில் இருந்தது, ''சாரீரம்'' என்பதில் அரவு சிதல்வாய்ப்பட்டது என்றார்கள் புலவர் அவர்கள். ''சாரீரம்'' செல்லரித்துச் சரீரமாயிற்று. இந்தத் தவணையில் இவ்வளவு படித்து முடிப்பதென்ற நியதியில்லாத படிப்பு அந்தப் படிப்பு.

'கற்க கசடற' என்பதில் வருகின்ற, 'கசடு' ஆகிய மாணவரின் முட்டை அறுத்து, கற்கவேண்டியவைகளைக் கற்றற்கு வழி வகுப்பதே புலவர் அவர்களின் கற்பித்தல். அதுதான் நல்லாசிரியர்களிடம் நிலவி வந்தது.

புலவர் அவர்களுக்குப் பின் என்ன செய்வதென்று, தெரியாது கலங்கினேன். மனேஜர் அவர்கள், புலவர் அவர்களின் இடத்தை நிரப்புவது இயலாத காரியம்; உன்னால் இயன்றவாறு இந்த அறையிலிருந்து படி என்றார்கள்.

அவ்வாறே செய்தேன். புலவர் அவர்களின் நல்லாசி காலந்தோறும் நல்ல அறிவுச் சூழலை அளித்துவந்தது. அவர்கள் அருளிய அத்திபாரக் கல்வி கிடைத்தற்கரியது: என்றும் மாணவ நிலையில் வைத்து அறிவை வளர்த்தற்கு உதவி வருகின்றது.

* * *

என் தந்தையிலும் சிறந்த தந்தையாய், என்னைப் பல துறையிலும் வளர்த்தெடுத்தவர்கள், மானேஜர் ஸ்ரீமத். த. கை. அவர்கள்.

மானேஜர் அவர்களும் புலவர் அவர்களும் என்னிரு கண்மணிகள். அந்த மகான்களிடம் என்னை ஒப்பித்தவர், பரோபகார சிலர், என் ஆருயிர் நண்பர் திரு. ம. க. வே. நடராஜா,

---

ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே கல்விக்குச் சிறந்த கருவி

— நாவலர்

௨

# அளவெட்டி தந்த அறிவுச் செல்வம்

அருணோதயக் கல்லூரியில் சிலகாலம் ஆரம்பப் படிப்புப் படித்தவர் திரு. பொ. கைலாசபதி அவர்கள். 1930ஆம் ஆண்டு தொடக்கம் அவர்களுக்கு உபஅதிபர் என்ற பெயர் வழங்கி வருகின்றது. திருநெல்வேலிச் சைவாசிரியகலாசாலைத் தொடர்பால் அப்பெயர் வழங்கி வருகின்றது.

உபஅதிபர் பிறக்க முன்னமே தொட்டு அவர் பிறந்த வீட்டுக்கயலிலே, வேதாரணியத்துச் சைவ குருமார்கள் வசிக்கும் மடம் ஒன்று இருந்து வந்தது. அம்மடத்தில் வசித்த குருமார்கள், பிரசித்திபெற்ற தேவாரக் கணபதிக் குருக்களின் பரம்பரையில் வந்தவர்கள்; தேவாரப் பண் கைவந்தவர்கள். எப்பொழுதும் அந்த மடம் பண் மயமாயிருக்கும். அவ்விடத்தில் வீசும் காற்றுப் பண்ணிசை கலந்து பயன்செய்து கொண்டிருந்தது. உபஅதிபரின் தந்தை தாயார் சுவாசித்த காற்று அந்தக் காற்று. உப அதிபர் கருப்பத்திலிருந்தபோது அப்பண்ணிசைக் காற்று அவரைப் பரிசித்திருக்கும்.

குழந்தை உதயமாய்க் குருக்கள்மார் மத்தியில் அவர்கள் மடியில் தவழ்ந்து வளர்ந்து, மழலை பயின்றது. குழந்தையின் செவிகள் பண்ணிசையிலேயே ஊறிப் பயின்றவை.

'தசநாடிகளையுஞ் சுத்தஞ் செய்து. நாட்டங்களைப் பண்படுத்துவது பண்' என்று பிற்காலத்தில் உபஅதிபர் சொல்வதுண்டு.

பண்ணிசையில் வளர்ந்த குழந்தையைத் தந்தையார் ஒரு தமிழ் உபாத்தியாயர் ஆக்கும் நோக்கத்துடன் தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார். அக்காலத்திலே பிரசித்தி பெற்ற வித்துவான் சிவானந்தையரிடம் படிக்கும் ஒழுங்குஞ் செய்யப்பட்டது. வடக்கே அரசஞ்சண்முகம் என்றால் இங்கே ஒரு சிவானந்தையர். ஐயர் மிகக் கூரிய மகா விவேகி. ஐயரிடம் உபஅதிபர் படித்தது ஆங்கிலம். ஆயினும் ஐயருடன் பழக நேர்ந்ததுதான் இங்கே குறிப்பிடத்தக்க விசேஷம்;

தமிழ்ப் பள்ளியில் ஏழாம் வகுப்புப் படித்தபின் சிலருடைய தூண்டுதலால் மல்லாகம் ஆங்கில பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கே கணிதமேதையும் உள்ளத்துறவியும் சிவஞானசித்தியில் அழுந்திய அநுபவஸ்தருமான திரு. இரத்தினசபாபதி உபாத்தியாயர் ஒரு வகுப்பின் ஒரு பிரிவுக்கு ஆசிரியராயிருந்தார். அவ்வகுப்பின் மற்றொரு பிரிவில் உப அதிபர் விடப்பட்டார். சில தினங்களின் பின் எந்த உத்தரவும் பெறாமல் இரத்தினசபாபதி உபாத்தியாயரின் வகுப்பில் போயிருந்துகொண்டார் நமது உப அதிபர். அவரது தோற்றத்தையும் ஆர்வத்தையும் கண்ட அதிபரும் மற்றவர்களும் அவரை அவ்வாறே அவர் விரும்பிய வகுப்பில் இருக்க விட்டுவிட்டார்கள். 'சென்ற வழி மாறியொரு தெய்வவழி செல்வார்' என்பது திருவாதவூரர் புராணம். உப அதிபர் வகுப்புப் பிரிவு மாறியிருந்து கொண்டார். இரத்தினசபாபதி உபாத்தியாயர் ஓய்வு நாட்களில் விசேடமாகவும் இவருக்குக் கணிதம்

கற்பித்தார். அக்காலத்திலே புலோலி திரு. சு. சிவபாத சுந்தரம் அவர்களின் தொடர்பும் உப அதிபருக்குண்டா யிற்று. இத்துணையுங் கூறியதால் தவ விசேடத்தினாலே நற்சார்பு வந்தமையுமாறு நோக்கத்தக்கது. 'நற்சார்பில் வந்துதித்து' என்பது சிவஞானபோதம். இஃது இங்ஙன மாக;

1920ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகம் என்று சொல்லத்தக்கவகையில் பரமேசுவரக் கல்லூரி மிக்க கோலாகலத்துடன் தலைநிமிர்ந்தெழுந்தது. திருநெல்வேலி கல்விக்களஞ்சியமாயது. கல்விமான்களெல்லாம் அங்கே படிப்பிக்க வந்தார்கள். திரு. சு. சிவபாதசுந்தரம் அவர் களும் அங்கே கற்பித்தார்கள். 1923இல் இன்ரசயன்ஸ் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அவ்வகுப்பில் உபஅதிபர் சேர்ந்தார். திரு. சிவபாதசுந்தரம் அவர்களின் மருகர் வே. நடராஜா; அவரும் அவ்வகுப்பிற் சேர்ந்தார்.

திருநெல்வேலிச் சிவன்கோயிலுக்குத் தெற்கே மிக்க செழிப்புவாய்ந்ததொரு ஈரப்பலாத் தோட்டம் இருந்து வருகிறது. அத்தோட்டத்துள் படிப்புக் கூட்டமொன்று கூடியது. அக்கூட்டத்துக்குத் தளபதி வே. நடராஜர். அவர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்களையெல்லாம் கொண்டுவந்து சேர்த்துவிடுவார். உப அதிபரையும் அக் கூட்டத்துக்குட் கொண்டுவந்துவிட்டார். நான் வண்ணையி லுள்ள நாவலர் வித்தியாசாலையிலிருந்து அடிக்கடி ஈரப் பலாத் தோட்டத்துக்கு வந்து நடராஜருடன் தங்கிப் போவதுண்டு. முதன்முதல் நடராஜர் உப அதிபரைப் பழக்கஞ்செய்துவைத்தார். இருவரும் பழகினோம்.

நாவலரைப் பற்றியும் மாணவர் பரம்பரை பற்றியும் என்னிடம் விசாரிப்பார்; என் குறிப்புக்களை எடுத்துப் பார்ப்பார்; அவ்வளவே. அங்கே படிக்கவேண்டிய பாடங் கள் தவிர எல்லாம் பேசப்படும். உப அதிபர் ஒரு வாங்கு மூலையிலே தாமரையிலையில் நீர்போலக் குந்திக்கொண்

டிருப்பார். எல்லாரும் அடங்கியபின் இரவு பதினொரு மணிவரையில் படிக்கத் தொடங்குவார். இரவு நான்கு மணிவரை படிப்பார். அதன்மேல் படுத்துறங்குவார். நான் படிக்கத் தொடங்குவேன். எட்டு மணி வரையில் துயிலெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு சிவன் கோயிலுக்குப் போய் மிக்க ஆராமையுடன் கும்பிடுவார். அதன்பின் உணவு அருந்திவிட்டுக் கல்லூரிக்குச் செல்லு வார். அந்தக் கூட்டத்தில் அவர் ஒரு தனி மனிதர். அவரை முதன்முதற் கண்டபோது பூணூல் தரியாத ஒரு பிராமணர் என்றெண்ணினேன். அமைதி, தேஜஸ், எண்ணிக் கணக்கிடத்தக்க சிலவாகிய மயிர்களாலான குடுமி என்றிவைகள் இவ்வாறு எண்ணச்செய்தன. நட்பு வளர்ந்தது. இரண்டு வருடத்தின்பின் அங்கங்குப் பிரிந்துசெல்லலாயினோம்.

1928ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை ஆரம்பமாயது. அப்பொழுது கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நான் பயிற்சிபெற்றுக்கொண்டிருந்தேன். 1929இல் சைவாசிரிய கலாசாலையில் நியமனம் பெற்றேன். அடுத்து திரு. சி. சுவாமிநாதன் அதிபரானார். 1930இல் உப அதிபர் உப அதிபரானார். நான் பயிற்சிபெற்ற ஆசிரியன்; மதுரைச் சங்கத்துப் பண்டிதர். உப அதிபர் B. Sc. (லண்டன்). ஒருங்கு வசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ''பிரிந்தவர் கூடினாற் பேச வேண்டுமோ?''

உபஅதிபர் கிடைத்த புத்தகம் அனைத்தையும் வாசித்து முடிப்பார். அகராதிகளுந் தப்பில்லை; குந்தியிருந்து முதலிலிருந்து முடிவுபோகப் படித்துவிடுவார். அவரை ஒரு புத்தகப் பூச்சியென்று முதலில் எண்ணினேன். பின் மெல்ல மெல்ல அவர் ஒரு அன்னம் என்ற எண்ணம் உண்டானது. அதன்மேல் அவர் முன்னிலையில் புத்தகங்களை இயன்ற அளவு குவித்து விடுவேன். அவர் படித்து முடித்துவிடுவார். பின் உயிரான பகுதியை அப்படியே

எடுத்துச் சொல்லுவார். நான் வாசிக்கின்ற பழக்கத்தை மேற்கொள்ளாமல் உபாய வாழ்க்கை வாழ்ந்து வந்தேன்.

ஒருமுறை சைவாசிரிய கலாசாலைக்கு அவர் வந்த காலத்தை அடுத்து. விடுமுறை காலமொன்றில் கீரிமலைச் சிவன் கோவிலுக்கு மேற்கேயுள்ள கிருஷ்ண பிள்ளை மடத்தில் தங்கினோம். என்னிடம் வித்துவான் சுப்பையா பிள்ளை அவர்களிடம் கேட்ட விசேட இலக்கணக் குறிப்புக்களிருந்தன. அவைகளை உப அதிபருக்கு நான் சொல்ல, அவர் எனக்குக் கொஞ்சம் ஆங்கிலம் கற்பிப்பதென்று ஒழுங்கு. இந்த ஒழுங்கு ஒரு வாரத்தில் தலைகீழாயது. ஆங்கிலப்பயிற்சி என்னிடம் பலிக்கவில்லை. அதில் நூதனம் ஒன்றுமில்லை. பெரிய நூதனம் என்னவென்றால், இலக்கணம் உபஅதிபரிடம் நான் படிக்கவேண்டிய நிலை நேர்ந்துவிட்டது. இது வெறும் உபசாரம் அன்று. தமிழுலகில் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி தெரிந்த ஒரே ஒருவர் உப அதிபர் என்ற எண்ணம் எனக்கு இன்னும் உண்டு 'சமயம் இலக்கியம் பாஷை யாவற்றுக்கும் மூல உயிர்ப்புப் பொருள்' என்ற உணர்ச்சியை உபஅதிபர்பாற் காணக் கூடியதா யிருந்தது. 'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும் மருள்' என்னுந் திருக்குறள் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

1933இல் உபஅதிபரின் போக்கில் பெரிதும் மாற்றம் காணப்பட்டது. சடஉலகுக்கு அப்பாற்பட்டதும் சட உலகை நடத்துவதுமான சித்துலகத் தொடர்புடையவர் போலத் தோன்றியது. அவருக்கு அருகிலிருந்தும் சமயப் போக்கில் எனக்கு மனஞ் செல்லவில்லை. தாம் கண்டவைகளைக் கலந்து சிந்திக்க அவருக்குத் தக்க ஆளில்லாமலிருந்தது. அவ்வாறுகிய நிலையில் பழைய கணித ஆசிரியரான இரத்தினசபாபதி உபாத்தியாயரின் தொடர்பு மீண்டும் உப அதிபருக்குத் தற்செயலாக ஏற்பட்டது. உபாத்தியாயர் கீரிமலையில் துறவிகளாச்சிரமத்தில் இருந்தார். இருவர் தொடர்பும் உபாத்தியார் இறக்கும்வரை பன்

விரண்டு வருடகாலம் 'புணர்ந்தாற் புணருந்தொறும் புதி தாய்' என்ற முறையில் வளர்ந்துகொண்டிருந்தது. ஒரு நாள் கீரிமலைக்குச் சுகத்துக்குப்போன என்னை உப அதிபர் உபாத்தியாயரைக் காணச் செய்தார். அப்பொழுது நான் 'இருபா இருபஃது' என்ற நூலை அச்சிட்டுப் பரப்ப எண்ணு கின்றேன் என்றேன். உபாத்தியாயர் "என்ன அவசரமோ" என்று என்னைக் கேட்டுவிட்டார். நான் நாணித் தலை குனிந்து திரும்பிவிட்டேன்.

1940ஆம் ஆண்டு வரை நான் நெருக்கமான தொடர் பின்றி யிருந்தேன். அப்படியிருந்தும் சில புத்தகங்களில் விசேடமான பகுதிகளைச் சுட்டிக்காட்டுவார். சந்தேகமான கேள்விகளுக்கு விளக்கமான விடை தருவார்.

'உண்டிருந்து வாழ்வதற்கே
உரைக்கின்றீர் உரையீரே'

என்ற பாரதத்தில் வரும் தொடரை ஒருநாள் அவர் எடுத்துச் சொன்னார். அத்தொடர் இன்றும் என் இருதயத் தில் விளக்கந் தந்துகொண்டே யிருக்கின்றது. விசேட சம்பவங்கள் உச்சமான உரையாற்றல்கள் போதனைகள் என்றிவைகளைக் காணுந்தோறும் கேட்குந்தோறும் அவற் றின் மூல இரகசியங்களை அத்தொடர் விடுவித்துக் கொண்டே யிருக்கின்றது.

1940ஆம் ஆண்டு தொடக்கம் உப அதிபர் 'கற்பனவும் இனியமையும்' என்ற முறையில் நூல்களை வாசிப்பதை நிறுத்திக்கொண்டார். கண்மூடாமலே மூடி மௌனியாய்ச் சிந்தனையுலகில் அமிழ்ந்தியிருந்தார். அவரை அந்த நிலையில் ஒன்று கேட்டால் அவர் தம் உலகிலிருந்து இறங்கி ஒன்று சொல்லுதற்குப் பல நிமிஷம் ஆகும்

ஒருநாள் (15-10-40) மிக்க அச்சத்துடன் பேனையுங் கையுமாய்க் குறிப்புப்புத்தகத்துடன் அந்த மகானை அணுகினேன். பாஷை இரண்டென்று தொடங்கி 'ஆரியமுந் தமிழும்' என்ற பாடம் அன்று நடந்தது. அவர் எனக்கு நடாத்திய பாடம் ஆயிரத்துக்குக் குறையா. உப அதிபர் ஆயிரம் என்று ஒருவாறு ஒரு புத்தகம் தொகுக்கலாம் போலும். அவர் கூறியவற்றில் விளங்கிக்கொண்டவை எவை என்பதுதான் பெரிய கேள்வி. பெரும்பாலும் அவர் சிந்தனைகளை எட்ட முடியவில்லை. இராமானுஜத்தின் கணித முடிபுகளைக் 'ஹார்டி' என்பவர் விளங்காமலும் எழுதி வைத்திருந்தார் என்று கேள்விப்பட்டதுண்டு. பெரியவர்களிடத்து நடந்துகொள்ளும் ஆசாரத்தைத் தழுவிப் பல வருஷ காலமாக அவர் முன்னிலையில் அவர் சிந்தனைகளிலே சொன்னவைகளுள் எழுதக் கூடியவைகளை எழுதிக் கொண்டேயிருந்தேன். எனக்கு எட்டாதவைகளை ஏன் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று நான் எண்ணுவதுண்டு. 'சில விதைகளை ஒரு காலத்தில் முளைகொள்ளலாம் என்று எறிந்து விடுவதுண்டு' என்று ஒருநாள் சொன்னார். அதனாலே விளங்காதவைகளையும் ஒதுக்காமல் எழுதியதுண்டு. அவர் தொடாத துறைகளே இல்லை. இவ்வளவும் தெரிகிறது என்று சொல்லுவார். பின்பு சில தினங்களின் பின் அப்பாலும் தெரிகிறது என்று சொல்லுவார்; எப்படித் தெரிகிறது என்பதை ஆர் அறிவார்!

புத்தி அகங்காரம் மனம் மூன்றும் சுத்தப்பட்டு விருத்திப்பட்டன என்பதே என் கருத்து.

இன்றைய பிரச்சினைகள் அனைத்துக்கும் உப அதிபரின் போதனைகளில் சுத்தமான நீதியான தீர்வு உண்டு. அதனை

எடுத்துச் சொல்லுவதற்கு ஆளும் கேட்போரும் வேண்டும். அன்றிக் காலமும் இடமும் முக்கியமானவை. கேட்போரின்றிச் சொல்லுதற்குத் தகுதியின்றிச் சொல்லத் தொடங்குவது பாலைக் கமரில் உகுப்பதாகும்.

'சிலருக்கு நன்மை செய்ய விருப்பம் உண்டு. ஆனால் நன்மை செய்யத் தெரியுமா என்பதுதான் கேள்வி' என்பார் உபஅதிபர்.

'தர்மத்தில் தொடங்குவது வைதிகம். வைதிக முடிவில் சித்திப்பது சைவம். அருள் பெற்றவர்கள் தவிர கிருஷ்ணனுக்குப் பின் வைதிகத் தொடக்கமான தர்மந் தெரிந்தவர் யார் ஒருவர் இந்த உலகில் உளர்' என்று வினவுவார் அந்த மகான்.

இத்துணையுந் தொட்டுந் தொடாத வெறும் புறச் சரித்திரம்.

---

நாம் சிற்றறிவு சிறுதொழில் உடையோம் ஆதலால், முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவ புண்ணியங்களை உள்ளபடி அறிதலும், பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும் நம்மால் இயலாவாம்.

—நாவலர்

உ

# பிராசீனர் நவீனர் வகுத்த சமயங்கள்

பிராசீனர்கள் சமயங்களை அகம் புறம் என இரண்டாக வகுத்து, அகச் சமயங்களைச் சைவம் முதல் வைரவம் இறுதியாக ஆறு என்றும், அவற்றின் பிறழ்வுகளான எண்ணிறந்த சமயங்களைப் புறச்சமயங்கள் என்றுங் கொள்வர். பிராசீனம் – பழைமை.

நவீனர் சமயங்களை அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நான்காக வகுத்து, ஒவ்வொரு வகுப்பையும் ஆறு ஆறு ஆக வகுத்து, இருபத்துநான்கு சமயம் ஆக்கிச் சைவத்தை இருபத்துநான்குக்கு மேலே இருபத்தைந்தாஞ் சமயம் என்பர். அன்றி, இருபத்து நான்கு சமயங்களும் ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்தவைகள்; சைவத்தை அடைதற்குரிய இருபத்துநான்கு படிகள் என்றுங் கொள்வர்.

அவர் கொள்ளும் புறப்புறம்; உலகாயதம், மாத்திய மிகம், யோகாசாரம், சௌந்திராந்திகம், வைபாடிகம் ஆகிய நால்வகைப் பௌத்தம், ஆருகதம் ஆகிய ஆறுமாம்.

புறம்; தருக்கம், மீமாஞ்சம், ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சாரத்திரம் என்னும் ஆறுமாம்.

அகப்புறம்; பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாதசைவம் என்னும் ஆறுமாம்.

அகம்; பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்தவாதம், ஈசுர அவிகாரவாதம், சிவாத்துவிதம் என்னும் ஆறுமாம்.

பிராசீனர்கள் சைவம் முதல் வைரவம் இறுதியாகக் கொள்ளும் அகச்சமயம் ஆறனுள், சைவத்தைப் பிரித்து இருபத்தைந்தாம் சமயமாக்கி, ஏனைய பாசுபதம் முதல் வைரவம் இறுதியான ஐந்தனோடு, சங்கற்ப நிராகரணத்துள் நிராகரிக்கப்பட்ட, எண்வகைப் பிறழ்ந்த சைவங்களுள் முதற்கணின்ற ஐக்கியவாத சைவத்தைப் பாசுபதம் முதலிய ஐந்தோடுங் கூட்டி ஆறாக்கி, ஆறனையும் அகப்புறம் என்றும், எண்வகைப் பிறழ்ந்த சைவத்துள் இரண்டாவதாகிய பாடாணவாதம் முதல் ஏழாவதாகிய சிவாத்துவிதம் இறுதியான ஆறனையும் அகச்சமயம் என்றுங் கொள்வர் நவீனர்.

பிராசீனர் கொண்ட அகச்சமயம் ஆறனுள் சைவந் தவிர்ந்த ஏனைய ஐந்தும் நவீனருக்கு அகப்புறச் சமயம்.

சங்கற்ப நிராகரணத்தில் நிராகரிக்கப்பட்ட பிறழ்ந்த எண்வகைச் சமயத்துள் இடைப்பட்ட ஆறுமே நவீனருக்கு அகச்சமயம்.

சங்கற்ப நிராகரணத்தில் நிராகரிக்கப்பட்ட சமயங்கள் ஒன்பது. அவற்றுள் முதலாவது மாயாவாதம். இதனைப் புறச்சமயமாகிய ஏகான்ம வாதத்துள் ஒரு கூறு ஆக அடக்குவர் நவீனர். மிகுதி எண்வகைச் சமயத்துள் முதற்கணின்ற ஐக்கிய வாதம் நவீனரால் அகப்புறத்திற் சேர்க்கப்

பட்டது. ஏனைய ஏழனுள் முதல் ஆறும் அகம். எட்டாவது சுத்த சைவம். இதனை அகத்துள் அடக்க நவீனர் முயல்வர்.

சங்கற்ப நிராகரணத்துள் நிராகரிக்கப்பட்ட சைவப் பிறழ்வுகளை அகச்சமயம் ஆக்கப் பெருமுயற்சிகள் நடந்திருக்கின்றன:

'ஏழஞ் சிருநூ றெடுத்த ஆயிரம்
வாழுநற் சகனம் மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த அற்புதன் ஆனி
ஆரும் விழாவிற் பொற்றே ராலயத்து
ஏறு எண்மர் நிரையி லிருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட ஒருதலை முதுவெதிர் மணிசேர்
பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதிதிகழ்
மெய்கண் டவனருள் கைகண் டவர்களில்
ஒருவர் ஒருதலை மருவி இருப்ப
வஞ்சப் பிறவிக்கு அஞ்சிவந் தொருவன்
ஏதிறை அருளென ஈதெனும் மாயா
வாதியை அயலினர் மறுதலைத் தருடர
மற்றவ ரயலினர் அவருரை மறுத்துச்
சொற்றர அயலரில் அவருந் தொலைவுற்று
இன்னே யெவரும் முன்னே கழியுழி
ஆங்கய லிருந்த அருளினர் அழகிது
நீங்கள் சங்கற்ப நிராகரித் தமையென
மற்றவ ருரைத்த சொற்றரு பொருள்கொடு
வாத செற்ப விதண்டையு மேது
மோது நால்வகை உவமையுந் திகழ்தர
அருள்சேர் மாந்தர் வெருள்சே ராமல்
தர்க்கமும் விடையமுங் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே.'

சங்கற்ப நிராகரணத்தில் இப்பகுதி அதன் வரலாறு பேசுகின்ற பிரதான பகுதி. இதில் 'ஏறு எண்மர் நிரையில் இருப்ப' என்ற அடியில் 'எண்மர்' என்ற வார்த்தையும், 'இன்னே எவரும் முன்னே கழியுழி' என்ற அடியில், 'எவரும்' என்ற வார்த்தையுங் குறிப்பிடத்தக்கவை.

இவ்வார்த்தைகளில், 'எண்மர்' என்பதனை 'அறுவர்' என்றும், 'எவரும்' என்பதனை 'எழுவரும்' என்றும் பாடபேதஞ் செய்ய முயற்சி நடந்திருக்கின்றது.

'எண்மர்' என்றது ஐக்கியவாதி முதல் சைவவாதி இறுதியான பிறழ்ந்த எட்டுவகைச் சைவங்களை. 'எவரும்' என்றது வாதிக்க முன்வந்த யாவரும் என்றவாறு. யாவரும் என்றது, மாயாவாதியும் எண்வகைச் சைவவாதிகளும் ஆகிய ஒன்பதின்மரையும்.

'எண்மர்' என்பதனை 'அறுவர்' என்று பாடங்கொள்பவர்களின் நோக்கம், சங்கற்ப நிராகரணத்தில் நிராகரிக்கப்பட்ட சமயங்களுள் மாயாவாதம் தவிர்ந்தவை அறுவகையான அகச்சமயங்கள் என்று கொள்வதாயிருக்கும்.

மாயாவாதங்கள் தவிர்ந்த சமயங்கள் எட்டாயிருக்க, அவற்றை ஆறு என்று கொள்வது காண்டல் விரோதம். இங்ஙனம் எண்மரை அறுவர் ஆக்குபவர்களே 'எவரும்' என்பதனை 'எழுவரும்' என்று ஆக்க முயல்பவர். 'எழுவரும்' என்று கொள்வதன் நோக்கமும், 'எழுவரும்' என்பதில் மாயாவாதி தவிர்ந்த அறுவரும் அகச்சமயிகள் என்று கொள்வதே

*  *  *

இங்ஙனம் கூறியவாற்றால் நவீனர், அகச்சமயம் ஆறனையும், பாடாணவாத சைவம் முதல் சிவாத்துவித சைவம் இறுதியான ஆறும் என்கின்றனர்.

பிராசீனர் சைவம் முதல் வை[ண]வம் இறுதியாக ஆறும் என்கின்றனர்.

இந்த இரண்டு ஆறுகளில், எந்த ஆறு கொள்ளத்தக்கது.

*  *  *

'ஆறுவகைச் சமயத்தி லருந்தவரும் அடியாரும்
கூறுமறை முனிவர்களுங் கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தாரும்
ஈறில்பெருஞ் சோதியினுள் எல்லாரும் புக்கதற்பின்'

திருஞான சம்பந்தப் பெருமானின் திருக்கலியாணத்தைத் தரிசித்து ஆறு வகைச் சமயத்தில் அருந்தவரும் சோதியிற் பிரவேசித்தார்கள். அந்த அறுவகைச் சமயத்தவர்களும், சைவம் முதல் வைரவம் இறுதியான சமயத்தவர்களா? பாடாணவாதம் முதல் சிவாத்துவித வாதம் இறுதியான சமயத்தவர்களா?

'ஆறுவகைச் சமயத்தி லருந்தவரும்' என்ற பாடலுக்கு உரை வகுத்தவர்கள் இரண்டு வகையாகவும் வகுத்திருக்கின்றார்கள்.

சைவம் முதலிய ஆறும் பெரிய புராணத்திலும் தேவாரங்களிலும் மதிப்புப் பெற்றிருக்கின்றன. பாடாண வாதம் முதலியவற்றுக்கு அவ்வாறான மதிப்பைக் காணேம். சமயவாதிகள் இதனை ஆராயக்கடவர்.

* * *

சைவத்தை இருபத்தைந்தாம் சமயம் எனக் கொண்டு, ஏனைய சமயங்களை இருபத்துநான்காக வகுக்கின்ற நவீனர்கள், மாயாவாதத்தை ஒன்பதாம் சமயமாகக் கொண்டு அதனைப் புறச்சமயம் என்றும், சிவாத்துவிதத்தை இருபத்திநான்காம் சமயமாகக்கொண்டு, அதனை அகச் சமய உச்சமென்றும் சைவத்துக்கு மிக அண்மை என்றுங் கொள்வர்.

* * *

மாயாவாதி சிவன் மாயையால் பந்தப்பட்டுச் சீவன் ஆயினன் என்று சொல்பவன். சிவாத்துவிதி சீவனைச் சிவன் என்றும், மாயையாகிய உலகத்தைச் சிவசத்தி யென்றுங்

கொள்பவன். இன்னும், சிவாத்துவிதி உலகத்தைச் சிவசத்தி என்று சொல்ல, மாயாவாதி, சிவசத்தியைச் சடசத்தி என்று சொல்லுகிறவன். இருவரும் அண்ணனும் தம்பியும்.

இவர்கள் பாடு இப்படியிருக்க மாயாவாதியை ஒன்பதாம் படியிலும், சிவாத்துவிதியை மிகமிக உயர்த்தி உச்சப் படியாகிய இருபத்துநான்காம் படியிலும் நவீனர்கள் வைத்துத் தத்துவ ஆராய்ச்சி செய்வது ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியம்.

சமய தத்துவங்களை ஆராய்ந்த உமாபதிசிவாசாரியார் மாயாவாதியிலும் பார்க்கச் சிவாத்துவிதிக்கு அதிகம் சிறப்புக் கொடுக்கவில்லை. உமாபதி சிவாசாரியார் மாயாவாதியை நோக்கி,

'அகண்டிதம் எனநீ பகர்ந்தமை தனக்குப்
பந்தம் இதுவெனத் தந்தமை கருதில்
வானில் நடக்கும் காலினைப் பிடித்துப்
பருவிலங் கிட்ட ஒருவன்நீ யன்றே'

("பரப்பிரமம் ஒன்றாலும் கண்டிக்கப்படாமல் அகண்டிதமாயிருப்பதென்று நீ முன் சொன்னதற்கு இப்பொழுது மாயா உபாதிகளால் இப்படிப் பந்திக்கப்பட்டு நிற்குமென்று சொன்னதை விசாரித்துப் பார்க்கில், ஆகாயத்தின்கண் வியாபித்து நடக்குங் காற்றினைப் பிடித்து அங்கு இங்கு அசையாவண்ணம் பெரிய விலங்கையிட்டு வைத்தவன் நீ ஆவை") என்று கூறுகின்றார்.

அவ்வாறே, சிவாத்துவிதியை நோக்கி,

'உலகா யதனும் பூதக் கூட்டஞ்
சலமேற் கொப்புள் தகுமெனச் சாற்றினன்
தீய கருமச் சீனர்சா வகர்பிறர்
நேயம் இல்லென நிகழ்த்தினர் இலரே
காண்டல் விரோதம் நிற்பிறர் கதித்திலர்.'

("உலகாயதன் கூடப் பூதக் கூட்டமாயிருக்கிற தேகாதிப் பிரபஞ்சத்தை நீர்க்குமிழிபோல நிலை நிற்பதன்று என்று கூறினன். அப்படியிருக்கச் செய்தே நீ இப்பிரபஞ்சத்தைச் சிற்சொரூப மென்று சொன்னது அர்த்தமன்று.

புத்தர்கள் சமணர்கள் மற்றுமுண்டான சமயிகள் அனைவரும் இந்தச் சரீரத்திலே ஒரு அறிவு உண்டென்று சொல்லுவார்கள். அதனை ஒழிந்து நின்போல ஆன்மா இன்று என்பார் இலர். பிரத்தியக்ஷவிரோதம் நீ காட்டினாற்போல் அப் புறச்சமயிகளும் இவ்வாறு கூறினாரிலர்") என்று கூறுகின்றார்.

அன்றி,

'மாயா வாதப் பேயா உனக்குத்
தேவரில் ஒருவர் உண்டாக
மேவரு நரகம் விடுதலோ அரிதே'

("மாயாவாதம் என்னும் பேய்ச் சமயத்தை உடையானே உனக்கு எல்லாரும் இறந்து போய்த் தேவவர்க்கத்திலே ஒருவர் இருந்தா ராயினும் ஒருவராலும் கிட்டுதற்கு அரிதா யிருக்கும் நிரயம் உனக்கு நீங்காதென்றறி")

என்கின்ற நடையிலேதான் சிவாத்துவிதியையும் நோக்கி, உலகாயதனிலும் பார்க்க உன்னிடம் என்ன விசேடம் இருக்கின்றது! "நின் சித்தாந்தம் அவசித்தாந்தம்" என் கின்றனர்.

உமாபதிசிவாசாரியாருக்கு உலகாயதம் முதல் சிவாத் துவிதம் இறுதியாக, அதற்கு மேலே (சுத்த) சைவ வாதமும் சேர்ந்து, அகச்சமயம் ஒழிந்த எல்லாம் புறச்சமயமே.

உ

# பாரத தர்மம்

இந்து தர்மத்தின் பழைமையான பெயர் பாரத தர்மம். இந்தியா, இந்து என்ற பெயர்கள் பிற்காலத்தவை.

பாரத தர்மம் வேதம் வல்ல மகாமுனிவர்களின் வழி வழி வந்தது. தாயுமானவரில் முனித்துவ சாயலை ஒரு அளவு காணலாம்.

'வேதமுட னாகம புராணவிதி காசமுதல்
வேறுமுள கலைக ளெல்லாம்
மிக்காக அத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா யெடுத் துரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டுபணும் ஞான மாகும்'

என்கின்றார் தாயுமானவர்.

வேதாதி சமஸ்த சாத்திரங்களின் முடிந்த முடிபு,

அத்துவித ஞானம் தலைப்படுவதேயாம். தலைப்படு தற்கு வழிசெய்வதே பாரதத்தின் உத்தமோத்தம தர்மம்.

* * *

அத்துவிதம் இரண்டற்ற இரு பொருட் கூட்டரவு.

"ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றும் இரண்டும் இன்றாகாமல் இருப்பதொரு நிலை" என்கின்றது இருபா இருபஃது. அத்துவிதம் அத்வைதம் எனவும் படும்.

* * *

'பதி, பசு, பாசம் அநாதி' என்பது திருமூலர் கருத்து. பதிக்குப் பசுவோடும் பாசத்தோடும், பசுவுக்குப் பதி யோடும் பாசத்தோடும் உளவாம் அத்துவித பேதங்களை நுண்ணிதின் ஆராய்ந்தவர்கள் பாரதத்து மகான்கள்,

* * *

பசு – உயிர். பதி – உயிர்க்குயிர். பசு பதியை விட்டு விலகியிருப்பதில்லை, அநாதியிலேயே பதி பசுவோடு அத்துவிதப்பட்டிருக்கின்றது.

* * *

பதி அத்துவிதப்பட்டிருப்பது போலப் பசுவும் பதியோ டத்துவிதப்பட வேண்டியது. அத்துவிதப்படுகின்றிலது. ஒருகாலத்தில் அத்துவிதப்படலாம். அந்த அத்துவிதம் தொடக்கமுடையது. ஆகவே பதியத்துவிதம் அநாதி. பசு அத்துவிதம் ஆதி.

* * *

பசுவுக்குப் பதியோடுளதாம் அத்துவிதம் அநாதி யாகாமைக்குக் காரணம் என்னை? காரணத்தைத் தாயு மானவரிடமே விசாரிப்போமாக,

'ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினே டத்துவித மாகுநா ளெந்நாளோ'

என்று கண்ணீர் வடிக்கின்முர் தாயுமானவர்.

ஆணவம் அறியாமை இருள். அதனுடன் அநாதியி லேயே அத்துவிதப்பட்டுக் கிடக்கின்றது உயிராகிய பசு. பதிக்கும் பசுவோடுளதாம் அத்துவிதம் எப்படி அநாதியோ,

அப்படியே பசுவுக்கு ஆணவத்தோடுளதாம் அத்துவித மும் அநாதியாம்.

அதனுல், அநாதியில் தன்னேடத்துவிதப் பட்டிருக்கும் பதியோடு பசுவாகிய தான் அத்துவிதப்படுதல் இயலா தாயிற்று.

அன்றி,

ஒரு காலத்தில் அத்துவிதப்பட்டே தீரவேண்டுமென்ப தும், 'எந்நாளோ' என்று வாயூறி நிற்பதாற் புலமாம்.

* * *

பதி அத்துவிதப் பட்டிருந்தாற் போதாது; பசுவும் பதியோடு அத்துவிதப்படுதல் வேண்டுமென்பது வலி யுறுத்த வேண்டியது மிகமிக முக்கியப் பொருளாம்.

[தலைவன் தலைவிபால் அன்பு வைத்தாற் போதாது.
தலைவியும் தலைவன்பால் அன்பு வைக்க வேண்டும்.]

என்றவாறு.

* * *

பசு பக்குவப்பட்டுப் பதியோடத்துவிதப் படுதலே முடிந்த முடிபான அத்துவித தத்துவப் பரமுத்திப் பேறும்.

* * *

அநாதி நிலை கேவலம் எனவும்,

முடிந்த முத்தி நிலை சுத்தம் எனவும்,

இடையாய பக்குவப் படுநிலை சகலம் எனவும் படும்.

தாயுமானவர் கண்ணீர் வடிக்கும் நிலை சகலம்.

* * *

இருளில் முழுகிக் கேவல தசையிலிருந்த நமக்கு எப்படிச் சகலநிலை கைகூடியதென்பது பெரிய கேள்வி.

இறைவனை 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்' என்கின்றது மணிவாசகம்.

நள்ளிருள்—ஆணவ இருள். நட்டம்—நடனம். அந் நடனம் அநாதியான கேவல இருளிற் கிடந்த பசுக்களைச் சகலப்படுத்தும் நடனம். சகலம், சுத்தத்துக்கு வழி. சகலத்தைப் பயன்படுத்த எழுந்தவைகளே வேதாதி சமஸ்த சாத்திரங்களும்.

* * *

'மெய்ஞ்ஞான தாணுவினோ டத்துவிதம்' ஆதற்குக் காட்டிய ஒப்புமையை, அநாதியிலே பசுவோ டத்துவித மாயிருக்கும் பதி நிலையோடு ஒப்பிட்டும் நோக்கலாம்.

[ அவன் தானாய் அத்துவிதமானபடி மாசகன்று, தான்
அவனாய் அத்துவிதமாகுநா ளெந்நாளோ ]

என்றொரு பாடலும் புதுவது புனைந்து விளக்கம் பெறலாம்.

அவன் – பதி. தான் – பசு. கேவலத்தில் அவன் தானாய் அத்துவிதமானபடி,

—மாசகன்ற வழி. [மாசு – மல மாசு.] பசுவாகிய தான் அவனாய் அத்துவிதமாதல் வெளிப்படை.

* * *

'ஆணவத்தோ டத்துவித மானபடி'

என்ற பாடலை,

'அவன் தானாய் அத்துவிதமானபடி' என்ற புதிய பாடலோ டொப்பிட்டுப் படித்தும் பார்க்கலாம்.

'அவனே தானே ஆகிய அந்நெறி'

என்ற சிவஞானபோத சூத்திரத்தால் ஒப்புமையின் பொருந்துமாறு ஸ்திரம் ஆகலாம்.

* * *

'தோடுடைய செவி' பாடிய குழந்தையும் சிவஞான போதந் தந்த குழந்தையும் பாரதந் தந்த இரு மழலைச் செல்வங்கள்.

இரண்டாவது செல்வத்தை, 'பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்டார்' என்கின்றார் தாயுமானவர்.

முடிந்த முடிபாகிய புனித அத்துவிதத்துப் பெருமை இருந்தவாறு!

* * *

மகாமுனிவர்கள் கண்ட பாரத தர்மம் சநாதனமானது; காலத்தால் மாற்றம் அடையாதது. அதனை இங்கே எடுத்துக் கொண்ட,

அத்துவித தத்துவத்தில் வைத்து,

நமது,

'இந்து தர்மம்' விளக்கம் செய்வதாக.

௨

'மணிகொண்ட கடல்புடைகொள் இந்நாட்டில் உன்சமய
வார்த்தனமி லாமை நோக்கி,
மகிமைபெறு நின்புகழ் விளங்குவான் கருதி,இம்
மைப்பொருட் பேரு ழித்தே,
கணிகொண்ட வித்தியா சாலைதா பித்திவ்வூர்க்
கயவர்செயும் இடர்கள் கண்டும்,
கல்லூரி யதைநடாத் தப்பொருட் டுணைசெயக்
கருதுவோ ரின்மை கண்டும்,
அணிகொண்ட சாலைய தொழிப்பின ஃது துணையிகழும்
அந்நிய மதத்தர் சாலை
யாமென நினைந்தெனெஞ் சற்பகற் றுயருறல்
அறிந்துமொரு சிறிதும் அருளாத்
திணிகொண்ட நெஞ்சவினி நின்முன்யான் உயிர்விடுதல்
திண்ணநீ யறியா ததோ!
சிறியேன தன்பிலர்ச் சனைகொள்அழ கியதிருச்
சிற்றம் பலத்தெந்தை யே'!

— நாவலர் பெருமான்

அச்சுப்பதிவு: திருமகள் அழுத்தகம், சுன்னாகம்